தமிழில் சித்தமருத்துவம் – ஓர் ஆய்வு

மதுரை காமராசர் பல்கலைக்கழக பிஎச்.டி (டட்.ஈ) பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

மு. தட்சிணாமூர்த்தி,

(பதிவு எண் : 0773/2002 – பகுதிநேரம்)

மேற்பார்வையாளர்

முனைவர் வீ. மோகன்

இணைப்பேராசிரியர்

தமிழ் உயராய்வு மையம்

யாதவர் கல்லூரி

மதுரை – 625 014.

தமிழியற் புலம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை – 625 021.

பிப்ரவரி, 2008

முனைவர் வீ. மோகன், எம்.ஏ., எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
யாதவர் கல்லூரி,
மதுரை — 625 014.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

'தமிழில் சித்தமருத்துவம் – ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் மு.தட்சிணாமூர்த்தி அவர்களால் முனைவர் (பிஎச்.டி) பட்ட ஆய்விற்காக அளிக்கப்பெற்ற இவ்ஆய்வேடு என்னுடைய மேற்பார்வையில், ஆய்வாளரால் தன்னியலாகச் செய்யப்பட்டதாகும். இவ்ஆய்வின் மீது வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்படவில்லை என்று சான்று அளிக்கிறேன்.

இடம்: மதுரை-14 — மேற்பார்வையாளர்
நாள் : /02/2008 — (முனைவர் வீ.மோகன்)

மு.தட்சிணாமூர்த்தி,
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),
தமிழியற் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 625 021.

நாள்:

ஆய்வாளர் உறுதிமொழி

'தமிழில் சித்தமருத்துவம் – ஓர் ஆய்வு' என்னும் பொருளில் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச் செய்யப்பெற்றுள்ள இவ்ஆய்வு, என் சொந்த முயற்சியால் உருவானதாகும். இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்ஆய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

உறுதிக்கையொப்பம் ஆய்வாளர்

மேற்பார்வையாளர் (மு.தட்சிணாமூர்த்தி)

நன்றியுரை

'தமிழில் சித்தமருத்துவம் – ஓர் ஆய்வு' என்னும் பொருளில் முனைவர் பட்ட ஆய்வு செய்ய அனுமதியளித்த மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள என்னை முறையாக ஆற்றுப்படுத்திய மதுரை காமராசர் பல்கலைக்கழக வணிகவியல் துறைத் தலைவரும் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினருமான முனைவர் வெ.அழகப்பன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வு நிறைவுபெற வழிநடத்தி ஆய்வேட்டின் திருந்தாப் படிகளைத் திருத்திச் செம்மைபடுத்தி, ஆய்வை முழுமைப்படுத்திய மதுரை யாதவர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையத்தின் இணைப்பேராசிரியரும் எனது ஆய்வு நெறியாளருமான முனைவர் வீ.மோகன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

எனது ஆய்விற்குத் துணைபுரிந்த மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்வி ஒலிபரப்புத் துறை உதவிப் பொறியாளர் சி.முரளி அவர்களுக்கும் தமிழ் இலக்கணத்துறைப் பேராசிரியர் முனைவர் ஏ.சீனிவாசன் அவர்களுக்கும் மதுரை யாதவர் கல்லூரி வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் கே.அழகுசுந்தரம் அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

எனக்கு இவ்வுலகைக் காட்டி, எனது வாழ்வில் ஆசானாக இருந்த எனது தந்தை டாக்டர் ஆ.முருகேசன் அவர்களுக்கும் என்னுடைய அன்புத் தாயார் மு.அமராவதி அம்மாள் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது ஆய்வுப் பணிக்கு உதவிபுரிந்த அறிஞர் அண்ணா இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை வளாக, அம்பேத்கார் மத்திய நூலக நூலகர் நண்பர் திரு.தண்டாயுதபாணி அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

எனது ஆய்விற்கு உறுதுணையாக இருந்த எனது மைத்துனர் திரு.மு.பாபு அவர்களுக்கும் எனது சகோதரி சுமதிபாபு அவர்களுக்கும், ஆய்விற்கு ஊக்கமளித்த ஜனாப் ஹாஜி எம்.எஸ். அயூப் அவர்களுக்கும், சகோதரர் திரு.செண்பகராமமூர்த்தி மற்றும் சகோதரி திருமதி.ராஜி அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். இவ்ஆய்வு நிறைவுபெற முழுத்துணையாக இருந்து என்னை ஊக்கப்படுத்திய எனது துணைவியார் டாக்டர் பிருந்தாதட்சிணாமூர்த்தி அவர்களுக்கும் எனது அன்புச் செல்வன் எம்.டி.ஹர்ஷவர்த்தனன், யோகா பயிற்சியாளர் திரு.இரா.சரவணன், எனது நண்பர்கள் திரு.கா.பாலசுப்ரமணியன், திரு.அ.திலகராஜ் ஆகியோர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

இவ்ஆய்வேட்டை நன்முறையில் கணினித் தட்டச்சு செய்து கட்டமைத்துக் கொடுத்த டபுள் கிளிக் கணினி நிறுவனத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றி என்றும் உரியது.

ஆய்வாளர்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ஆ.இ.	–	ஆண்டு இல்லை
இளம்.	–	இளம்பூரணர்
உ.ஆ.	–	உரையாசிரியர்
எழுத்.	–	எழுத்ததிகாரம்
கம்ப.	–	கம்பராமாயணம்
கலி.	–	கலித்தொகை
கற்.	–	கற்பியல்
குறள்.	–	திருக்குறள்
குறுந்.	–	குறுந்தொகை
சிறுபாண்.	–	சிறுபாணாற்றுப்படை
செய்யு.	–	செய்யுளியல்
திருமந்.	–	திருமந்திரம்
திருவருட்.	–	திருவருட்பா
தொ.ஆ.	–	தொகுப்பாசிரியர்
தொல்.	–	தொல்காப்பியம்
நச்.	–	நச்சினார்க்கினியர்
நூற்.	-	நூற்பா
ப.	–	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
பதி.ஆ.	–	பதிப்பாசிரியர்

பதிற்று.	–	பதிற்றுப்பத்து
பத்து.	-	பத்துப்பாட்டு
பா.	–	பாடல்
பா.எ.இ.	-	பாடல் எண் இல்லை
புறத்.	–	புறத்திணையியல்
புறம்.	–	புறநானூறு
பொருள்.	–	பொருளதிகாரம்
மு.நூ.	–	முன்னர் சுட்டிய நூல்
மேலது.	-	மேலே சுட்டிய நூல்
உக்.	-	உக்ண்ற்ர்ழ்ள்
ட.	–	டஹஞ்ங்

உள்ளடக்கம்

இயல் - 1

சித்தர்களும் சித்தமருத்துவமும் - ஓர் அறிமுகம்

ஒரு நாடு நாகரிகத்திலும் பண்பாட்டிலும் காலந்தோறும் வளர்ச்சி பெற்று வருகின்றது. இவ்வளர்ச்சி அந்நாட்டின் அறிவு சார்ந்த கலைகள், மருத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. தமிழர்களின் நுண்கலைகளுள் ஒன்றானச் சித்த மருத்துவம் குலத்தொழிலாக வழக்கில் இருந்து வருகிறது. இம்மருத்துவத்தை வகுத்த சித்தர்கள் குறித்தும் சித்த மருத்துவம் குறித்தும் இவ்வியலில் ஆய்வு செய்யப்படுகிறது.

தமிழர்களின் கலைகள்

தமிழர்கள் அறிவுசார்ந்த கலைகளில் மிகவும் வளர்ச்சி பெற்றிருந்தனர். அதனால் அக்கலைகளை, “தமிழ் முன்னோர்கள் தங்கள் வாழ்வில் பயின்றுள்ள கலைகளை அறுபத்து நான்கு எனக் கணக்கிட்டுத் தொகுத்துள்ளனர்”[1] அவ்வாறு வகுத்துத் தொகுத்த கலைகளை இரண்டாக வகைப்படுத்தினர். அவை, 1.பயன் கலைகள் 2. நுண்கலைகள் (அல்லது) கவின் கலைகள் என்பனவாகும்.

மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பலவகைப் பொருள்களைப் படைத்துக் கொள்ள உதவுவது பயன்கலைகள் ஆகும். பிறரால் எளிதில் உணர்ந்து செயலாற்ற இயலாத வகையில் நுட்பம் உடையதும், புலன்களைக் கவர்ந்து அவற்றின் வழியாக உள்ளத்திற்கு இன்பமூட்டுவதும் நுண்கலைகள் (அல்லது) கவின் கலைகள் ஆகும்.

“நுண்கலைகள் எல்லோராலும் கையாளப்படாமல் அந்தக் கலைஞர்களின் குடும்பத்தினரால் மட்டுமே தந்தைக்குப் பின் மகன் என்ற முறையில் பரம்பரையாகக் கையாளப்பட்டு வந்தன”[2] என்று கூறியிருப்பது இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

பரம்பரையாகத் தந்தைக்கு பின் மகன் என்ற முறையில் கையாளப்பட்டு வந்த நுண்கலைகளில் ஒன்றான தமிழர்களின் மருத்துவம், சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இம்மருத்துவ முறையைச் ‘சித்த மருத்துவம்’ என்பர். இம்மருத்துவ முறை தமிழ் மொழியில் உள்ளதால் ‘தமிழ் மருத்துவம்’ என்றும் அழைக்கப்படுகிறது. “சித்தர்கள் தங்களின் நூல்களில் மருத்துவம் பற்றிய முறைமைகளையும், யோக முறைகளையும், பொன் செய்யும் முறைகளையும் (வைத்தியம், வாதம் எனும் இரசவாதம் அல்லது பொன் செய்யும் முறை; யோகம், ஞானம்) மெய்யுணர்வு பயிற்சி முறைகளையும் விரவிக் கூறுவதே பெரும்பாலும் தங்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்”[3] என்று நா.சேதுரகுநாதன், சித்தர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது இங்குச் சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

சித்தர்கள் பாடியுள்ள வாத, வைத்திய, யோக, ஞானப் பாடல்களில் தமிழ் மருத்துவக் கலையான சித்த மருத்துவத்தைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளதை அறியமுடிகின்றது.

தமிழர் மருத்துவம்

தமிழர் மருத்துவம் என்பது சித்த மருத்துவமாகும். சித்த மருத்துவம் உடல் பிணியையும், மன நோயையும் குணப்படுத்துவது மட்டுமின்றி,

உடலைப் பாதுகாக்கும் மருத்துவ முறைகளையும் செயல் முறைகளையும் கொண்டுள்ள மருத்துவம் என்பதனை,

"மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்
மறுப்பது உளநோய் மருந்தென லாகும்
மறுப்பதினி நோய் வாராதிருப்ப
மறுப்பது சாவை மருந்தென லாமே"[4]

என்னும் பாடல் வாயிலாக அறிய முடிகின்றது.

தொல்காப்பியத்தில் சித்த மருத்துவம்

'தமிழர் மருத்துவம்', 'இயற்கை மருத்துவம்', 'சித்த மருத்துவம்' என்றெல்லாம் வகுத்துக் கூறப்படுகின்ற சித்த மருத்துவத்தை வகுத்த சித்தர்களைப் பற்றித் தமிழ் நூல்களில் மிகவும் தொன்மையான நூலான தொல்காப்பியத்திலும் பல்வேறு இடங்களில் குறிப்புக்களைக் காணமுடிகிறது. இதனை,

"மறுவில் செய்தி மூவகை காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்"[5]

என்னும் நூற்பாவில் அறியமுடிகின்றது. இதற்கு விளக்கம் கூறவந்த நச்சினார்க்கினியர், 'அறிவர் என்போர் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று முக்காலத்தையும் அறிந்த பெரியோர்களான யோகிகளாய் இருந்துள்ளனர்' என்று கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.

தொல்காப்பியர் கூறும் 'அறிவர்' என்னும் சொல் சித்தர்களைக் குறிக்கும் சொல் என்பதை,

"அறிவில் அறியாமை நீங்கிய வனே"[6]

என்று திருமூலர் பாடிய திருமந்திரப் பாடலடியின் வழி அறிய முடிகின்றது.

சித்தர்கள் - அறிவர்

சித்தர்கள் என்றால் ‘அறிவர்’ என்று பொருள். அதாவது உயிர்ப்பொருளின் மூலமே ‘தான்’ என்னும் செறிவான அறிவு கொண்டு அறியாமை நீங்கிய அறிவுடைய சீவனே ‘அறிவர்’ எனப்படுவார்.

“சித்தர்கள் என்றால் அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், நுண்ணறிவு படைத்தவர்கள் என்று பொருள் கூறுவதே பொருத்தமானதாகும்”[7] என்று சாமி.சிதம்பரனார் கூறுவது இங்குச் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

“அறிவர் அறிவன அப்பும் அனலும்”[8]

என்ற பாடலடியின் வாயிலாக அறிவர் என்போர் பஞ்சபூதங்களின் செயல் மற்றும் கலப்பு விகிதாச்சார நிலைகளை அறிந்தவர்களே ‘அறிவர்’ எனக் கூறுவதைக் காணமுடிகின்றது.

சித்தர்களின் காலம்

தமிழர்கள் கொண்டுள்ள அறிவுக் கலைகளில் இன்றைய ஆராய்ச்சியாளர்களால் விளக்கப்பட வேண்டிய கலைகளில் முக்கியமானது சித்த மருத்துவக் கலையாகும். இந்தச் சித்த மருத்துவக் கலையைத் தோற்று வித்து முறைப்படுத்தியவர்களான சித்தர்கள் எந்தக் காலத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிய வேண்டியுள்ளது.

தொல்காப்பியத்திற்கும் முன்னர்

சித்தர்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முந்திய காலத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்குத் தொல்காப்பியத்தின் முந்துநூலான அகத்தியத்தில் பல்வேறு குறிப்புக்கள் காணப்படுகின்றன. சித்தர்கள் குமரி நாட்டை முதலிடமாகக் கொண்டிருந்தனர் என்பதை, "தற்போதைய பெருங்கடலின் கீழிருக்கின்ற குமரி நாட்டில் இருந்த மகேந்திர மலைதான் தமிழ் முனிவர்களின் பீடமாக இருந்தது. அங்குதான் தமிழ் மறைகள் நால்வருக்கு அருளப்பட்டன"[9] என்று எம்.எஸ்.பூரணலிங்கம் பிள்ளை கூறுவது இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

காலாங்கிச் சித்தரும் மற்றும் பிற சித்தர்களும் தன் சீடர்கள் என்பதைத் திருமூலர்,

"கந்துருக் காலாங்கிகஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழியாமே"[10]

என்று பாடியுள்ளதிலிருந்து அறியமுடிகின்றது.

திருமூலர், காலாங்கி, போகர் இவர்களில் காலத்திற்கு பிற்பட்ட தலைமுறையைச் சார்ந்தவர் போகர் ஆவார். இதை,

"ஆச்சப்பா சமாதியது வெடிக்கக் கண்டேன்
அப்பனே திருமூலர் பாட்டர் கண்டேன்"[11]

என்பதன் வழியாகப் போகர் காலத்தால் மிகவும் பிற்பட்டவர் என்பதை அறியமுடிகின்றது. அகத்தியரும் திருமூலரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

"புல்லறிவால் திருமூலர் முதற்பாட்டர்தான்
புகழான யடவிதனைக் கண்டார்தானே"[12]

என்று திருமூலரை அகத்தியர் முதற்பாட்டா (முந்தைய தலைமுறையைச் சார்ந்தவர்) என்று கூறுவதிலிருந்து காலத்தால் மிகவும் முற்பட்டவர் என்பதை அறியலாம்.

முதல் சித்தர்

பதினெண் சித்தர்களுள் முதல் குருவானவரும் காலத்தால் மிகவும் முற்பட்டவரும் தட்சிணாமூர்த்தி ஆவார். இவர் 'ஆதிசித்தர்' என்று அழைக்கப்பட்டார். போகச்சித்தர் இவரைப் பற்றி,

> "தெட்சிணா மூர்த்தியிடம் வந்தென்ன
> சத்தமுடனெல்லாரும் யொன்றாய் சேர்ந்து
> சதாசிவமே சுடரொளியே தயாளவான
> பக்தியுடனே காலாங்கி சீடனென்று"[13]

என்று பாடியதிலிருந்து அறிய முடிகின்றது. திருமூலரின் காலத்திற்கு முந்தியவரான சித்தர் தட்சிணாமூர்த்தியிடம் மருத்துவம் கற்று, அவருடன் இருந்துள்ளார் என்பதிலிருந்து திருமூலர் சமகாலத்தவர் என்பதை அறியமுடிகின்றது.

கொங்கணவர் சித்தர்

போகர் சித்தரின் சீடர் கொங்கணவச் சித்தராவார். இவர் காலத்தால் பிற்பட்ட திருவள்ளுவர் காலத்தில் வாழ்ந்தவர். இதனை,

> "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா"[14]

என்று வள்ளுவரின் மனைவி வாசுகி வினவுவதிலிருந்து கொங்கணவர் திருவள்ளுவர் காலத்தில் வாழ்ந்தவர் என்பது புலனாகின்றது. இவரும் திருமூலரைச் சந்தித்துள்ளார் என்பதனை,

"சபித்தாய் நீ கொக்கை அன்று
தனிக்கோபம் பெண்ணின் மேலே"[15]

என்பதின் மூலம் அன்று கொக்கைச் சபித்து, பெண்ணின் மேலே கோபம் கொண்டாய்; பின்னாளில் அதற்காக வருந்தினாய்; இதன் காரணம் கோபமே என்று திருமூலர் கொங்கணருக்கு அறிவுரை கூறியதிலிருந்து அறியமுடிகின்றது.

மார்கண்ட சித்தர்

மார்கண்ட சித்தர் கொங்கணச் சித்தரின் காலத்திற்குப் பிற்பட்டவர். இதை,

"காணவே திருமூலர் பாட்டரப்பா
காயாதி கற்பமதை தான்கொடுத்த
புணவே மதியமுதநிலை தானும் பூண்டு
புங்கசித்தி எட்டுடனே வழியும் கூறி
ஆணவங்கள் தானெடுங்கி மார்க்கண்டன்தான்"[16]

என்னும் அகத்தியர் பாடலிலிருந்து மார்க்கண்டர் காலத்தால் மிகவும் பிற்பட்டவர் என்றும், திருமூலரும் அகத்தியரும் சமகாலத்தவராக வாழ்ந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது.

சித்தர்களும் - இதிகாச காலமும்

சித்தர்கள் காலம் கடந்து வாழும் வல்லமை பெற்றவர்களாக இருந்துள்ளனர். அயோத்தி மன்னர் இராமன், 'தன் வனவாச காலத்தில் 'தண்டக ஆரண்யம்' எனும் வனப்பகுதியில் சித்தர்களிடம் வேதகம் கற்றுக்

கொண்டான்' என்ற குறிப்புக் காணப்படுகின்றது. காகபுசுண்டர் என்னும் சித்தர் தான் கண்ட ஊழிக் காலத்தைப் பற்றிக் கூறும்போது,

"மலை மண்ணும் மாறிவிடுங் கடலோர் காலம்
கண்ட கண்டன் தானோடுஞ் சவரைத் தாண்டி"[17]

என்றும்,

"அடிக்கடியே கடல்பொங்க மலைமண் பொங்கும்
மீழ்ந்தாரே யிதுகடந்து நெடுநாள் தோறும்"[18]

என்றும் கூறியதிலிருந்து ஊழியில் ஏற்படும் நிலைகளையும், தான் கொண்ட சித்துக்கள் வழி தான் அழியாது வாழ்வதாகவும் கூறியுள்ளார்.

இராமாயண காலத்தில் சித்தர்கள்

காகபுசுண்ட சித்தர், இராமாயண காலத்தில் வாழ்ந்த வசிட்டருக்குச் சமகாலத்தவராவார். என்பதனை,

"பண்பாய்மா னிடர்பிறக்கு மார்க்கமுகந்தி
தாங்கியே சொலவேண்டு மென்றுகேட்க
அந்தரமாய் வசிட்டருக்குச் சொல்லினேனே"[19]

என்ற பாடலால் அறியலாம். இதனின்று இராமன் இராமேஸ்வரத்தில் சைவக் கோட்பாட்டின் சின்னமான லிங்கத்தை வழிபாடு செய்ததையும் இத்திருக்கோவிலில் பதஞ்சலி சித்தர் சமாதி கொண்டுள்ளார் என்பதையும் அறியமுடிகின்றது. இம்முனிவரைப் பற்றித் திருமூலர்,

"மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரவர்
என்றிவர் என்னோ டெண்ம ருமாமே"[20]

என்பதிலிருந்து திருமூலர், பதஞ்சலி, விக்கிரமர், வசிட்டர், காகபுசுண்டர் போன்ற சித்தர்கள் இராமாயண காலத்திற்கும் முன்னரே வாழ்ந்திருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. எனவே இதிகாச காலத்திற்கு முன்பும் சைவக் கோட்பாடு இருந்திருக்கின்றது என்பதை இதன்வழி அறிய முடிகின்றது.

மகாபாரதத்தில் சித்தர்கள்

மகாபாரதத்தில் பூபாலன் கிருஷ்ணன் திருமூலரிடம், மருத்துவமும் இதர உபதேசமும் கற்றான் என்ற குறிப்பு அகத்தியரின் பெருநூல் காவியத்தில் காணப்படுகிறது. திருமந்திர உரையாசிரியர் திருமூலர் எத்தனை ஆண்டுகளேனும் உயிரோடு இருக்கும் வன்மை வாய்ந்தவர் என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து சித்தர்கள் மகாபாரதக் காலத்திற்கும் முற்பட்டவர்கள் என்பதனை அறிய முடிகின்றது.

சித்தர்களும் – சோழ, பாண்டியர்களும்

சோழர் காலத்தில் தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள சிவலிங்கம் நிலைநிறுத்தும் காலத்தில் அது நிற்காது போக, அங்கு அசரீரியாகக் கருவூரான் கையால் சிவலிங்கம் நிலைநிறுத்தப்படும் என்று கூறியது. இதனை அறிந்த சித்தர் போகர், ஒரு காகத்தின் கழுத்தில் ஓலை வைத்துக் கருவூரார்க்குத் தூதனுப்பச் சிவலிங்கத்தை நிலை நிறுத்தியதாகக் கோவில் வரலாறு உள்ளது. இதிலிருந்து சித்தர்கள் சோழர் காலத்திற்கும் முற்பட்டவர்கள் என்பதனை அறிய முடிகின்றது.

பாண்டியர் காலத்தில் அகத்தியருக்குச் சீடரான சுந்தரானந்தர் கல்யானைக்குக் கரும்பு கொடுத்து உண்ணச் செய்து சித்து விளையாட்டுக் காட்டியது. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சிலைகளாக இன்றளவும் காணப்படுகின்றது. இக்கோவிலில் இன்றும் கல்யானைக்குக் கரும்பு கொடுக்கும் நிகழ்ச்சி ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சித்தர்கள் காலம் கடந்து வாழும் தன்மையையும், அதற்கேற்ப உடலையும் பெற்றுள்ளனர் என்பதை,

> “பழக்கமுள்ள கூடுவிட்டு கூடுபாய்வார்
> பாய்ந்தவருள் காலமட்டு மிகுந்துவாழ்வார்,
> முழக்கமுடன் பின்புவந்து தன்சரீரம்
> முழைந்து கொள்வார் தன்சரீரம் தப்பிப்போனால்
> இலக்கமுள கற்பமது சாப்பிட்டேதான்
> இனிமையுடன் சடலமதைப் பெலஞ் செய்வாரே”[21]

என்று கருவூர்ச்சித்தர் பாடியுள்ளார். அதாவது, சித்தர்கள் கூடுவிட்டுக் கூடுபாயும் ஆற்றலைக் கொண்டிருந்தனர் என்பதையும் உடலை அழியாது நிலைக்குமாறு பக்குவப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் படைத்தவராகவும் வாழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

சைவக் கோட்பாடு

சித்தர்கள் கொண்டிருந்த சைவக் கோட்பாடு இன்றும் மக்களிடம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இதை, சித்தர்கள் கொண்டிருந்த சைவக் கோட்பாடு பற்றி “சைவம்தான் உலகிலேயே மிகமிக மூத்ததும் இன்னும் வாழ்கின்றதுமான கோட்பாடாகும்”[22] என்ற மேற்கோள் குறிப்பிடுகின்றது.

சித்தர்கள் சைவ நெறிபூண்டு சிவனை முதற்கடவுளாக வழிபட்டு வந்தனர் என்பதும் இங்குச் சுட்டத்தக்கது.

'மரணத்தை வென்ற மகான்' என்ற தலைப்பில் 'பாபா' என்ற சித்தரைப் பற்றி "பாபாவிற்கு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய நிலைகள் இன்றி, பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்கிறார். தனது சீடர்கள் அழைக்கும்போது ஒளிவடிவமாக வந்த உடல்வடிவில் மாறி காட்சி தருவார்"[23] என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

"இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி"[24]

என்னும் திருமூலர் பாடலின் மூலம் சித்தர்கள் என்றும் அழியாத உடலையும் உயிரையும் கொண்டு, மரணமில்லாமல் காலங்கடந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதை அறிய முடிகின்றது.

சித்தர்களைப் பற்றிச் சுவாமி ஈசுவரப்பட்டா எனும் சாது தம் நூலில், "சித்தன்நிலை கொண்டு உலகநிலை அறிவது மட்டுமல்லாமல் இவ்வுலகில் உதித்த உயிரணுக்களின் தன்மை அறிந்து, அந்நிலை கொண்டு ஒவ்வொரு உயிர் அணுக்களுக்கும் என்நிலை கொண்டு வாழ்ந்திட்டால் நல்நிலை பெறலாம் என்பதையும் அறிந்து எதனுடன் எதைச் சேர்த்தால் எந்நிலை கொண்ட மாற்றங்கள் ஏற்படும் என்பதையெல்லாம் உணர்ந்துள்ளனர். இவ்வுலகிற்குச் சித்தர்களினால்தான் பலவகையான மூலிகைகளை அறிந்து இன்று நமக்கு வைத்திய முறையையே வழியமைத்துத் தந்துள்ளவர்கள்"[25] என்று கூறுவதிலிருந்து, சித்தர்கள் உயிர்ப் பொருள் மூலத்தினை அறிந்து அதன் இயக்க முறைகளை அடிப்படையாகக் கொண்டுத் தமிழ்ச் சித்த மருத்துவத்தை வகுத்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது.

பிரபஞ்சங்கள்

மனிதர்கள் மரணமடைவதையும் பிணிப்படுவதையும் உற்பத்தியையும் பருவங்களையும் பிரபஞ்ச மாற்றங்களையும் கண்ட சித்தர்கள் இவற்றின் மூலங்களை ஆய்வு செய்தனர். இம்மாற்றத்தை அறிய விரும்பியச் சித்தர்கள் பிரபஞ்சத்தை இரண்டாகப் பிரித்தனர். அவை: 1.பிரபஞ்ச மூலம் அல்லது உயிர்ப்பொருள் மூலம், 2.மூலத்தின் பிறவடிவம் அல்லது உலகியல் வடிவம் என்பனவாகும்.

பிரபஞ்சமூலம் அல்லது உயிர்ப்பொருள் மூலம்

புலனறிவு உலகத்தின் அடிப்படையாக விளங்கும் பொருளைக் காண்பதே பண்டைப் பெரியோரது கருத்தும் விருப்பமுமாகும் என்பதிலிருந்து, சித்தர்கள் உயிர்ப்பொருள் மூலம், அதன் இயக்கம், செயல் பற்றி ஆராய்ந்தார்கள் என்பதை அறிய முடிகின்றது. உயிர்ப் பொருளின் மூலம் மேன்மை கொண்டு இருந்ததை அறிந்து, அதைப் பற்றிய ஆய்வையும் சித்தர்கள் மேற்கொண்டனர் என்பதனை,

“தூலம் அதில் சூட்சமம் தான் துலங்கி நிற்கும்”[26]

என்ற பாடலடியிலிருந்து, உடலிலே உயிர்ப்பொருள் மூலத்தன்மையுள்ளதை அறிந்து, உடலை அடிப்படையாகக் கொண்டே உயிர்ப் பொருளின் மூலத்தை ஆராய்ந்துள்ளனர். இதை,

“உடம்பர் அழியில் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞானக் சேரவு மாட்டார்”[27]

என்று திருமூலர் பாடலடியின் வாயிலாக உடல் அழிந்தால், உயிர்ப் பொருள் மூலத்தின் கூறான உயிர் அழிந்து விடும் என்பதை மக்களுக்கு உணர்த்தினர்.

சித்தர்களும் - பஞ்சபூதங்களும்

உயிர்ப் பொருள் எல்லையற்ற ஆற்றலையும் வலிமையையும் கொண்டது. வரைமுறையில்லாத நிலைக் களனையும் கொண்டுள்ளது எனும் அறிவினையும் சித்தர்கள் அறிந்திருந்தனர். 'ஆதிபடைத்தனன் ஐம்பெரும் பூதம்' என்ற திருமந்திர அடிகளிலிருந்து, உயிர்ப்பொருள் மூலமான ஆதிப்பொருளே பஞ்ச பூதங்களான ஆகாயம், காற்று, தீ, நீர், மண் என்று மாற்றமடைந்துள்ளதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். பஞ்ச பூதங்களைப் பற்றி,

> "கொள்ளுமிச் சுடந்தான் பஞ்சபூதியக் கூறாய் நிற்கும்
> அள்ளிலை வேற்கா னேனே பிருதிவி லப்புத் தேயு
> விள்ளரும் வாயு மானம் விளம்பிய பூத மைந்தாம்"[28]

என்ற பாடலின் மூலம் உடலும் பஞ்சபூதக் கூறாக உள்ளதையும் அறிந்திருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. சித்தர்கள், உடலின் பஞ்சபூத இயக்கத்தை அறிந்திருந்தனர் என்பதை,

> "தான்முத லாகுமீசன் றந்திடு முடம்பின் றன்மை
> ஆனது தொண்ணூற் றாறு தத்துவ வியக்கமாகும்
> வான்வளி னனீர் மண்ணால் வகுத்திடு பஞ்சபூதம்"[29]

என்பதன் வழியாகச் சித்தர்கள் உடல் இயக்கத்தைத் தொண்ணூற்றாறு பிரிவாக வகுத்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

சித்தர்களும் சித்தமருத்துவமும்

சித்தர்கள் தாங்கள் கொண்டிருந்த உயிர்ப்பொருள் பற்றிய ஆய்விற்கு உடல்முக்கியம் என்பதையறிந்து உடலைப் பிணியிலிருந்து பாதுகாக்கும் வல்லமையும் பெற்றிருந்தனர் என்பதை,

"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"[30]

என்று உடம்பைக் காக்கும் மருத்துவ முறைகளையும், உடலைக் காத்துப் பிணியின்றி வாழ்வதற்கான வழிகளையும் கண்டறிந்தனர் என்பதைத் திருமந்திரப் பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

உடலை வருத்தும் பிணிகளையும் மரணத்தை ஏற்படுத்தும் பிணிகளையும் மனத்தில் ஏற்படும் நோய்களையும் போக்கி, மனிதன் ஆரோக்கியம் நிறைந்தவனாக வாழ விரும்பினான். இதை,

"மருத்துவ மென்ன வகுத்துளோங் கேளு
அகத்தினி லறிவு அண்டிடும் போதில்"[31]

என்று மச்சமுனிவர் பாடலின் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

சித்தமருத்துவ மூலப் பொருட்கள்

சித்தர்களால் வகுக்கப்பட்ட சித்த மருத்துவத்தில் மருந்துகள் செய்வதற்குத் தேவையான பொருட்களை "உலோகங்கள், உபரசங்கள், உப்பு மற்றும் இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு, வேதக செயல்முறைகளைக் கொண்டிருந்தனர்"[32] என்று கூறுவதிலிருந்து, இயற்கை மூலப் பொருட்களையே மருந்துகள் செய்வதற்குச் சித்தர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

சித்த மருத்துவத்தில் மருந்து மூலப் பொருட்களின் கலப்பில் மாற்றம் ஏற்படுவதை,

"காரம் விட்டால் உருக்கினம் போச்சு
வீரம் விட்டால் நீற்றினம் போச்சு"[33]

இயற்கைப் பொருட்களை எப்படி மருந்தாக்கம் செய்யலாம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"கோனெற்ற கருநெல்லி கருத்த நொச்சி
கானென்ற கருவீழி கருத்தவாழை"[34]

எனும் பாடலில் சித்த மருத்துவத்திற்குத் தேவையான நெல்லி, நொச்சி போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளதை எஸ்.பி.இராமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சித்தமருத்துவத்தில் பிணிகள்

மனிதர்களுக்கு ஏற்படும் பிணிகளை,

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"[35]

என்ற குறள் வாதம் (வளி), பித்தம் (அழல்), கபம் (குற்றம்) எனும் தோடங்களே தன் அளவில் மாறுபடும் போது பிணி ஏற்படுவதைக் குறிப்பிடுகின்றது. இந்த அடிப்படையில் பிணியின் அளவையும், அதன் தன்மையையும் அறிந்து கொள்ள,

"தரணியுள்ள வியாதிகளை யட்டங்கத்தால்
தானறிய வேண்டுவது ஏதோனென்னில்
திரணியதோர் நாடி கண்கள் சத்தத்தோடு"[36]

பிணியாளரின் நாடி, கண்கள் என்று எட்டுவிதமான சோதனைக் களங்களை வகுத்து, நோய்களையும் பிணிகளையும் அவற்றிற்கான காரணங்களையும் அறிந்திருந்தனர் என்பதை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

பிணிகளின் வகைகள்

சித்த மருத்துவத்தில் பிணிகளைச் சிசுப் பிணிகள், ஆண்களின் பிணிகள், பெண்களின் பிணிகள், பொதுப் பிணிகள் என பலபிரிவுகளாகச் சித்தர்கள் பிரித்துள்ளனர். காலத்தின் அடிப்படையிலும் சில பிணிகள் தோன்றுகின்றன என்பதையும் அவர்கள் கண்டறிந்திருந்தனர். குளிர்காலத்தில் ஏற்படும் பிணிகளைப் பற்றி,

"துன்று குளிர் தோலின் துளைமெய்யில் - மன்னுபல"[37]

எனப் பருவகாலத்தினால் ஏற்படும் பிணிகளையும், உணவு மாறுபாட்டால் ஏற்படும் பிணிகளையும் வகுத்துள்ளனர் என்பது இங்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சித்தர்கள் பிணிகளை வகுத்ததுடன் கீழே வீழ்தல், அடிபடுதல், எழும்பு முறிவு, தசை கிழிதல், இரணம் போன்றவற்றையும் அறிந்து கூறியுள்ளனர். இதனை,

"அண்ணலே உலகத்தில் வாழும் மாந்தர்
ரடி காயம் விழுதாலும் விண்ணடியில்
பிணையற்று வீழ்தலாலும் விழுந்த நீசி"[38]

என்ற பாடலடிகளால் அறியலாம். தமிழர்கள் வாள், வேல், ஈட்டி போன்ற இரும்பு ஆயுதங்களைக் கொண்டு போர் புரிந்த காலத்தில் போரில் ஏற்படும் விழுப்புண்களையும் வகைப்படுத்தியுள்ளனர். இதனை,

"இரும்புசுவை கொண்ட விழுப்புண் நோய்தீர்த்து"[39]

என்ற புறநானூற்றுப் பாடலின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

சித்தர்களும் மருத்துவமும்

சித்தர்கள், மனிதர்களுக்கு உடலில் ஏற்படுவது பிணி என்றும், மனத்தில் ஏற்படுவது நோய் என்றும் இரண்டாகப் பிரித்துள்ளனர்.

> "பிணிக்கு மருந்த பிறமன் அணியிழை
> தன்நோய்க்குத் தானே மருந்து"[40]

என்று திருவள்ளுவர் பிணிகளை உடல்பிணி, மனநோய் என வகுத்துள்ளது இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது. உடல் பிணிக்கு - மருந்து, மருத்துவம், பயிற்சி என்றும், மனநோய்க்கு - பராமரிப்பு, அரவணைப்பு, மருந்து, மருத்துவம் என வகைப்படுத்தி அவற்றை இரண்டாகச் சித்தர்கள் வகுத்துள்ளனர். அவை,

1. அகமருத்துவம் - உள்மருந்து முறைகள்
2. புறமருத்துவம் - வெளிமருந்து முறைகள்

என்பனவாகும். இவ்விரு மருத்துவ முறைகளையும் இங்கு விரிவாக ஆய்வு செய்யப்படுகின்றது.

அக மருத்துவம்

உட்கொள்ளும் 32 வகையான மருந்துகளையும் துணை மருந்துகளுடன் (தேன், துளசிச்சாறு போன்றவை) முறை அறிந்து உண்டால்தான் முழுமையான தீர்வு காண முடியும் என்று அகமருத்துவம் குறித்துச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். அக மருத்துவத்தும் பற்றிக் குறிப்பிட்டுள்ள சித்தர்கள் புற மருத்துவ முறைகளையும் வகுத்துத் தந்துள்ளனர்.

புற மருத்துவம்

சித்தர்கள் எந்த நேரத்தில் புறச் சிகிச்சை அளிக்க வேண்டும், யாருக்குப் புறச்சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதையும் தெளிவாக முறைப்படுத்திக் கூறியுள்ளனர். புறமருத்துவத்தில் நரம்பு குத்தும் சிகிச்சை, அறுவைச்சிகிச்சை போன்ற சிகிச்சை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை,

"களவுறு நரம்பு குத்தல் கருவிக - ளாடல் காலை
ளவுறு கொம்பு வைத்தங் குதிலும் - வாங் கல்மதியம்"[41]

எனும் பாடல் உணர்த்துகின்றது.

சித்த மருத்துவத்தில் அறுவைச் சிகிச்சைக்குரிய இன்றியமையாதக் கருவிகள் குறித்து,

"சிரல் பெயர்த் தன்ன நெடுவள் ஊசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்"[42]
"வெங்கலக் குழலும் ஈயச் சலாகையுவ்
காயக்கோலுங் கண்கத்தி தண்டும்"[43]

ஆகிய பாடல்களின்வழி அறுவைச்சிகிச்சைக் கருவிகளின் விபரம் அவற்றின் எடை, அளவு, உருவம், நீளம் மற்றும் அகலம் குறித்துத் தெரிவித்துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

சித்த மருத்துவத்தில் மன - உடற்பயிற்சிகள்

உடலில் ஏற்படும் பிணிகளுக்கும் பிணிகள் ஏற்படாமல் தடுக்க அகமருத்துவத்தையும் புறமருத்துவத்தையும் வகுத்தச் சித்தர்கள் மனநோய்களைப் பற்றியும் உடற்பயிற்சிகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். இதனை,

"தாங்காத பயத்தினாலே நோய் பதினெட்டுந்தான்"[44]

என மன நோயினைப் பதினெட்டு வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. மனத்தில் ஏற்படும் நோய்களுக்கும் உடலில் ஏற்படும் நோய்களுக்கும் மருத்துவம் கூறியதுடன் உடற்பயிற்சி ஆசனங்களையும் இதரப் பயிற்சிகளையும் மனப்பயிற்சியான தாரனை, தியானம் போன்றவற்றையும் வகுத்துள்ளார். மனத்தை ஒருமுகப்படுத்துவதற்குச் சித்தர்கள் சில பயிற்சிகளையும் கூறியுள்ளனர். இதனை,

"இயம நியமமே எண்ணிலா ஆதனம்"[45]

எனும் திருமந்திரப் பாடல்வரியின் மூலம் அறிய முடிகின்றது. இப்பாடல் வரியின் மூலம்,

1. இயமம் (தீயசெயல்களை விலக்கல்)
2. நியமம் (நற்செயல்களை இயற்றல்)
3. ஆசனம் (இருக்கை நிலை)
4. பிரணாயாமம் (மூச்சுப் பயிற்சி)
5. பிரத்தியாகாரம் (எண்ணம் ஒருமித்தல்)
6. தாரணை (எண்ணத் தொடர்நிலை)
7. தியானம் (எண்ணக் குவித்தலில் நிலைத்தல்)
8. சமாதி (உயிர், மனம் தனித்தல்)

ஆகிய செய்திகளை நாம் அறிந்து கொள்ளமுடிகின்றது. இதனை எட்டுவித யோகம் (அட்டாங்கயோகம்) என்றழைத்தனர். சித்தர்களின் இந்த எட்டுவகையானப் பயிற்சிகளை மூன்று வகைக்குள்ளும் அடக்கிக் கூறலாம். அவை:

1. உடல்வழிப் பயிற்சிகள்
2. மனவழிப் பயிற்சிகள்

3. உடல் மனவழிப் பயிற்சிகள் என்பனவாகும். இவற்றை இவண் விரிவாக காணலாம்.

1. உடல்வழிப் பயிற்சிகள்

உடல்வழிப் பயிற்சியின் செயல்பாடுகளை மேலும் மூன்று வகைப்படுத்தலாம். அவை 1.உடல் ஒழுக்கம் 2. உடல் பயிற்சிக்கான ஆசனங்கள் 3. உடற்பயிற்சிக்கான சுவாசப் பயிற்சி ஆகியவையாகும். இவை பற்றி இவண் விளக்கிக் காட்டப்படுகின்றது.

1. உடல் ஒழுக்கம்

அடக்கமாயிருத்தல், சினம் தவிர்த்தல், புலால் தவிர்த்தல் போன்றவை உடல் ஒழுக்கமாகும். இவ் ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தால் வாழ்வில் நினைத்த பலனைப் பெற்றுவிட முடியும் என்பது சித்தர்களின் நம்பிக்கையாகும்.

2. உடல்பயிற்சிக்கான ஆசனங்கள்

சித்தர்கள் உடல்பயிற்சிக்கான ஆசனங்களாகச் சுகாசனம், வீராசனம், பத்மாசனம், வச்சராசனம், சிங்காசனம் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளனர். இவற்றை உடல் நலம் பெறப் பயன்படுத்துவதன் மூலம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளமுடியும் என்பது சித்தர்களின் நம்பிக்கையாகும்.

3. உடல் பயிற்சிக்கான சுவாசப் பயிற்சி

சுவாசம் உடலின் இயக்கமாகும். சுவாசம் சீராக ஓடிக் கொண்டிருத்தல், அதற்கான பயிற்சி, சுவாசச் செயலில் ஏற்படும் உணர்வைக் கவனித்தல் போன்றவையும் இதிலடங்கும். இது உடலைப் பேணுவதற்காகச் செய்யப்படும் பயிற்சியாகும்.

ஐஐ. மனவழிப் பயிற்சிகள்

மனவழிப் பயிற்சிகள் மனத்தில் ஏற்படும் அழுத்தங்களைக் குறைப்பதற்கும் குழப்பங்களைத் தவிர்ப்பதற்கும் ஆழ்ந்த தூக்கத்திற்காகவும் செய்யப்படுபவையாகும். மனதை என்றும் கட்டுப்பாட்டிற்குள் வைத்தக்கொள்ள இந்தப் பயிற்சிகள் உதவுகின்றன. இந்த பயிற்சிகளைச் சித்தர்கள் கடைப்பிடித்து வந்துள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மனவழிப் பயிற்சியை 1. மன ஒழுக்கம் 2.மனப் பயிற்சி என்று வகைப்படுத்தலாம்.

1. மன ஒழுக்கம்

மன ஒழுக்கம் என்பது மனத்தைக் கட்டுக்குள் வைத்துக்கொண்டு தீயசெயல்களைச் செய்யாதிருத்தலாகும். தீய சிந்தனைகளே தீய செயல்களுக்கு அடிப்படை என்பதால் தீய சிந்தனை தரும் காட்சிகளைப் பார்ப்பதையும் தீய செயல்கள் செய்வதைத் தவிர்ப்பதையும் மன ஒழுக்கம் குறிப்பிடுகின்றது.

2. மனப்பயிற்சி

மனத்தை ஒருமுகப்படுத்த மேற்கொள்ளும் பயிற்சியே மனப்பயிற்சியாகும். சுவாசத்தைக் கவனித்தல் வழி மனத்தை ஒருமுகப்படுத்தலே மனப்பயிற்சியாகும். ஆரம்பத்தில் மனத்திற்குப்

பயிற்சியளித்தல் கடினமானது. ஆனால் பழகிக் கொண்டுவிட்டால் எளிதில் மனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடலாம் என்பது சித்தர்களின் நம்பிக்கையாகும்.

ஐஐஐ. உடல், மனவழிப் பயிற்சிகள்

உடல், மனவழிப் பயிற்சிகள் என்பது உடலாலும் மனத்தாலும் செய்யும் பயிற்சியாகும். இதனை, 1.மனத்தை ஒருமித்துக் கவனித்தல், 2.மனத்தைக் குவித்தலில் நிலைப்படுத்துதல், 3. மனத்தை அகத்திலும் புறத்திலும் நிலைப்படுத்துதல் என்று மூன்று நிலைகளில் வகைப்படுத்தலாம்.

1. மனத்தை ஒருமித்துக் கவனித்தல்

மனத்தைக் குவித்து, உடலுள்ளும், வெளியிலும், உணவிலும் பல்வேறு செயல்களிலும் கவனித்தல் நிலையே மனத்தை ஒருமித்துக் கவனித்தல் ஆகும். வாழ்விற்குத் தேவையான செயல்களை நாம் கவனத்துடன் செய்ய வேண்டியதை இது உணர்த்துகின்றது.

2. மனத்தைக் குவித்தலில் நிலைப்படுத்துதல்

மனத்தை ஒருமுகப்படுத்தி உடலுள்ளும், வெளியிலும், செயலிலும், உடல் இயக்கத்திலும் தொடர்ந்து கவனித்து வருதல் மனத்தைக் குவித்தலில் நிலைப்படுத்துதலாகும்.

3. மனத்தை அகத்திலும் புறத்திலும் நிலைப்படுதல்

ஒரு நிலைப்படுத்திய மனத்தை உலகியல் பொருட்களின் மீதும் இறைநிலை மீதும் செலுத்துதல் ஆகும். உடல் பிணிகள் மட்டுமின்றி, மனநோய்களும் குணமாகி மனிதன் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் வாழவேண்டும் என்ற நோக்கில் இதைச் சித்தர்கள் வகுத்துள்ளனர்.

சித்த மருத்துவத்தில் உணவுகள்

மனிதனுக்கு நோய்கள் பல்வேறு காரணங்களால் உருவாகின்றன. இதில் உணவு முறை முக்கியக் காரணமாக அமைகின்றது. உணவு கூடி குறைவதற்கு ஏற்ப, நோய்க்கேற்ப மருத்துவ முறைகளைச் சித்தர்கள் வகுத்துள்ளனர். உணவுகளிலும் சுவைகளிலும் பஞ்சபூத அடிப்படை இருப்பதை,

"மண்ணுடனே புனல்தீக்கால் முறையாகச்
சேர்ந்திட்டால் வருமாம் இனிப்புத்"[46]

எனும் மருத்துவத் தனிப் பாடல்வரிகள் காட்டுகின்றன. இதில், நீர், தீ, காற்று இவற்றை முறையான அளவுப்படி சேர்க்கப்பட்ட சேர்க்கையே இனிய சுவை என்று கூறப்பட்டுள்ளது. அதேபோன்று எவ்வகைப் பிணியாளர்கள் எவ்வகை உணவினை உட்கொண்டால் விரைந்து குணமாகும் என்பதனை,

"வாதத் தோர்க் கேற்ற வற்றல் வழுத்திடும் வண்மை கோண்மின்"[47]

என்பது வாதப் பிணிக்கான உணவாகவும்,

"சொலத்தா முலர்த்திக் கறிகொள்ளச் சூழும் பித்தர் இன்பமாமே"[48]

என்பது பித்தப் பிணிக்கான உணவாகவும்,

"இன்பந்தருநற் கானகறியிசையுங் கபத்தோர்க் கியம்பிடுவன்"[49]

என்பது கபப் பிணிக்கான உணவாகவும் வகுத்துள்ளனர்.

மேற்கண்ட பாடல்களின் மூலம் எவ்வகைப் பிணியாளர்களுக்கு எவ்வகை உணவு கொடுக்க வேண்டும் என்று முறைப்படி வகுத்துக் கூறியுள்ளதை அறிய முடிகிறது.

பொதுவான சில உணவுகளை அனைவரும் உட்கொண்டால் நோய் வராமல் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும் என்பதையும், அவ் உணவுகளில் கீரைகளே முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை,

"உண்பவர்கின்பமான கறிவகையுவந்த கேண்மின்
கண்டெளி பொன்னாங் காணி கறிசிறு கீரையப்பை"[50]

எனும் பாடலிலிருந்து அறிய முடிகின்றது. பொன்னாங்கண்ணிக்கீரை, சிறுகீரை, அப்பைக்கீரை போன்றவற்றை உண்டால் எந்நோய் உள்ளவர்களும் நலமாக வாழலாம் என்பதை எடுத்துரைக்கிறது. சைவ உணவு மட்டுமின்றி அசைவ உணவு பற்றியும் சித்தர்கள் வகைப்படுத்திக் கூறியுள்ளனர். இதனை,

"வண்மைவா ரணம்வெள் ளாடுமயில்முய லுடும்பு சிட்டு"[51]

என்ற பாடலில் வெள்ளாடு, மயில், முயல், உடும்பு, சிட்டுக்குருவி போன்றவற்றை அசைவ உணவிற்காகப் பயன்படுத்தலாம் என்று கூறியுள்ளனர். இருப்பினும் அசைவ உணவு வகையில் சித்தர்கள் சில கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தனர்.

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்"[52]

என்ற குறள் ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவினைத் தவிர்க்க வேண்டும் என்பதையும், எவ்வகையான உணவினை உட்கொள்ள வேண்டும் என்பதையும் எடுத்துரைத்துள்ளது. இதுபோன்ற வகைப்பாட்டைச் சித்தர்களும் வகுத்துள்ளனர் என்பதை அவரது உணவுமுறைப் பாகுபாடுகள் காட்டுகின்றன.

சித்த மருத்துவத்தில் நலவாழ்வு

அதிகளவு உணவு உண்பதால் ஏற்படும் துன்பங்களையும் உடல் ஆரோக்கியத்தையும் பற்றிக் குறிப்பிட்டுள்ள சித்தர்கள் உண்ணும் அளவையும் முறைப்படுத்தியுள்ளனர். இதனை,

> “திருத்தமாய்ப் போசனங்கள் செய்திடு முறையைக் கேளாய்
> பருத்தவுந் தியினை நான்கு பங்கது வாகக் கொண்டே”[53]

எனும் பாடல் வயிற்றின் கொள்ளளவில் பாதி உணவும், கால்பாகம் நீரும், மீதி கால்பாகம் ஏதுமின்றி இருப்பதும் நலம் என்று உணவு உண்ணும் முறையில் கடைப்பிடிக்க வேண்டிய நலவாழ்வு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதன் தம் வாழ்வில் தினசரி கடைப்பிடிக்க வேண்டியவைகளாகச் சித்தர்கள்,

> “பாலுண்போ மெண்ணெய் பெரின் வென்னீரிற் குளிப்போம்
> பகற்புணரோம் பகற்றுயிலோம் பயோதரமு மூத்த
> திண்ண மிரண்டுள்ள சிக்க லடக்காமற்
> பெண்ணின் பா லொன்றைப் பெருக்காம லுண்ணுங்கா
> நீர்சுருக்கி மோர் பெருக்கி நெய்யுரக்கி உண்பவர்தம்”[54]

என்னும் பாடலில் பால் போன்ற உணவினை உட்கொள்வதும், எண்ணெய் தேய்த்துக் குளிப்பதும், பகற்பொழுதில் புணர்தலும், உறக்கமும் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றனர். தினமும் முறைப்படி கழிக்க வேண்டிய நீர், மலம் ஆகியவற்றை அடக்காமல் கழிப்பதும், பெண்ணிலிருந்து காமத்தை அதிகம் நுகர்வதும் உடலுக்குத் தீமை பயப்பதாகும். காய்ச்சிய நீரையும், தயிரை மோராக்கியும் சாப்பிடுதல் மிகவும்

இன்றியமையாததாகும். இவ்வாறு உண்டு வந்தால் பிணியானது இவர்களை நாடாது என்பதைச் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனையே வள்ளுவரும்,

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு"[55]

என்ற குறளின் மூலம் வலியுறுத்துகின்றார். இவ்வாறு உணவு முறைகளைக் கடைப்பிடித்தால் உடல் பிணியை மட்டுமின்றி மனப் பிணியையும் நீக்கி நலவாழ்வு வாழலாம் என்று நலவாழ்வு பற்றிச் சித்தர்கள் கூறியுள்ளது இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

சித்த மருத்துவ வரலாறு

தமிழ்நாட்டின் வரலாற்றினை இன்னும் தெளிவுற வரையறை செய்ய இயலாத நிலையில் தமிழ்நாட்டில் தோன்றிய 'தமிழ்மருத்துவம்' எனும் சித்தமருத்துவத்தின் வரலாற்றைக் கணிப்பதில் சிக்கல்கள் தோன்றுவது இயற்கையே. இருப்பினும் சித்த மருத்துவம் பற்றிப் பல தமிழறிஞர்கள் பல நூல்களை எழுதியுள்ளனர். நீ.கந்தசாமிப் பிள்ளை எழுதிய, 'ஏண்ள்ற்ர்ழ்ஹ் ர்ச் நண்க்க்ட்ஹ ங்ஹக்ண்ஞ்ண்ய்ங்' இந்திய மருத்துவக் கழகத்தால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழ் மருத்துவக் கலையின் முழுவரலாற்றையும் இந்நூலும் பிறநூல்களும் தெளிவுறுத்துவதாக அமையவில்லை எனலாம்.

திராவிடர்களும் - சித்த மருத்துவமும்

சித்தர்கள் தாங்கள் பாடிய பாடல்களில் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைப் பற்றியும் அதன் தத்துவங்களைப் பற்றியும் பாடியுள்ளனர்.

இப்பாடல்கள் சித்தர்கள் சைவ நெறி பூண்டு சிவனை முதற் கடவுளாக வழிபட்டு வந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

சித்தர்கள் வகுத்த சைவ சித்தாந்தத்தைப் பற்றி அறியும்போது, சைவம்தான் உலகிலேயே மிகமிக மூத்ததும் இன்னும் வாழ்கின்றதுமான கோட்பாடாகும் என்பது பல்வேறு அறிஞர்களின் கருத்தாகும் “சைவசித்தாந்த தத்துவம், திராவிட அறிவு நுட்பத்திறன் மிகத் தேர்ந்த படைப்பாகும்”[56] என்ற ஜி.யு.போப் கருத்து இங்கு நோக்கத்தக்கதாகும். இதன் மூலம் சித்தர்களின் தத்துவம் திராவிடர்களின் காலத்திற்கும் முந்தியது எனக் கருத முடிகின்றது.

திராவிடர்கள் குமரிக் கண்டத்தில் வாழ்ந்தவர்கள் என்பது வரலாறாகும். திராவிடர்களின் நாகரிகத்தைப் பற்றி அலெக்சாண்டர் கோண்ட்ராடோவ், “மிக உயர்ந்தநிலை நாகரிகத்தை எய்தியிருந்த மனிதர்களே வசித்து வந்த இடம் இந்தியப் பெருங்கடலில் இருந்த ஒரு பெரிய நிலப்பரப்பான லெமூரியாவாகும்”[57] என்றுக் கூறுவதிலிருந்தும் இமயம் தோன்றுவதற்குப் பல ஊழிகளுக்கு முன்பே தற்போதைய பெருங்கடலின் கீழிருக்கின்ற “குமரிநாட்டில் இருந்த மகேந்திர மலைதான் தமிழ் முனிவர்கள் வாழ்ந்த இடம்”[58] என்று எம்.எஸ்.பூரணலிங்கம் கூறுவதிலிருந்தும் அறியமுடிகின்றது. எனவே, தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் திராவிட காலமான லெமூரியர் காலத்தில் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட மருத்துவம் எனக் கருத முடிகின்றது.

சித்தமருத்துவம் குருவிற்குப் பின் சீடர் என்ற முறையில் கற்பிக்கப்பட்டது. இதனை,

"திட்டமுடன் எந்தனுக்கு உபதேசங்கள்
சிறப்புடனே போதிக்கத் தொழுதிட்டேனே"[59]

என்ற பாடல் வாயிலாக போகச் சித்தர் குருவிடம் மருந்து முறைகளைக் கற்பிக்க வேண்டுவதை அறியமுடிகின்றது. மேலும், இதனைக் கொங்கணவச்சித்தர்,

"கேளப்பா மூலருக்கா லாங்கி பிள்ளை
கொடியான காலாங்கி மாந்தர் போகர்"[60]

எனும் பாடலில் சீடரைத் தன் பிள்ளைபோல் பாவித்து வந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

இதிகாசத்தில் சித்தமருத்துவம்

மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக் காலங்களிலும் சித்தமருத்துவம் இருந்திருக்கின்றன என்பதை "இராமன் வனவாசத்தில் இருந்த போது 'தண்டகாரண்யம்' எனும் வனத்தில் சித்தர்களிடம் சித்த வேதகம் கற்றுக் கொண்டான்"[61] என்று கூறப்படுகிறது. மகாபாரதத்தில் பூபாலன் கிருஷ்ணன் திருமூலரிடம் மருத்துவம் கற்றுக் கொண்டான் என்ற குறிப்பும் காணப்படுகின்றது. "இராவணேஸ்வரன் என்னும் இலங்கை அரசன் மருத்துவ நூல்கள் பல இயற்றியுள்ளார்"[62] எனக் கண்ணையாயோகி கூறுகின்றார். எனவே இதிகாச காலத்திலும் சித்த மருத்துவ முறைகளைப் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

சித்த மருத்துவமும் மொகஞ்சதரோ ஹரப்பாவும்

அலெக்சாண்டர் கோண்ட்ராடோவ் என்பவர், "திராவிடர்கள் தெற்கிலிருந்து புலம் பெயர்ந்து சென்று மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகங்களின்

முன்னோடிகளாகவும் அவற்றை நிர்மாணித்தவர்களாகவும் இருந்தனர்"[63] எனக் குறிப்பிடுகின்றார். மொஹஞ்சதாரோ - ஹரப்பா அகழ்வாய்வில் கிடைக்கப் பெற்றச் சில பொருட்கள் இன்னும் சித்த மருத்துவத்தில் உள்ளன என்பதை, "அகழ்வாய்வில் கிடைக்கப் பெற்ற மான்கொம்பு, சிலாசத்து, பவளம் போன்ற பொருட்கள் இன்றளவும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன"[64] என்று திருநாவுக்கரசு கூறுகின்றார். எனவே, அக்கால மக்கள் சித்த மருத்துவக் கலையை நன்கு அறிந்திருந்தனர் என்பதையும், தெற்கிலிருந்து மொகஞ்சதாரோ, ஹரப்பா வரை சித்தமருத்துவம் சிறப்புப் பெற்றிருந்துள்ளது என்பதையும் அறியமுடிகின்றது.

தொல்காப்பியத்திலும் சித்த மருத்துவம் பற்றியக் குறிப்புக்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. இதனை,

"வேம்பும் கடுவும் போல"[65]

என்ற நூற்பாவின் வழியாகத் தொல்காப்பியர் காலத்தில் வேம்பும், கடுகும் மருந்தாகப் பயன்பட்டிருந்தன என்பதையும் நோயும் அதற்கான மருந்தும் வகுக்கப்பட்டிருந்தின என்பதையும் அறிய முடிகின்றது.

சங்க இலக்கியத்தில் சித்த மருத்துவம்

சங்க இலக்கியத்திலும் சித்த மருத்துவம் பற்றியக் குறிப்புக்கள் இருந்துள்ளதைப் பல்வேறு இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன.

கார்மேகனாரின் கொங்கு சதகம் (பா.92) அந்நாட்டு மன்னனின் கற்பிணிப் பெண் பிரசவ வேதனையில் இருந்தார். அங்கிருந்தோர் அப்பெண்ணிற்கு பிரசவம் பார்க்க இயலாத நிலையில் சிசு உள்ளதாக

மன்னனிடம் கூறினர். இதனை அறிந்த மன்னன் கற்பிணி வேதனை கண்டு சுகப் பிரசவம் பார்ப்போருக்கு பரிசு என்று பறை அறிவித்தான். இது கேட்ட மங்கலை என்னும் மருத்துவகுல மகள் அரண்மனை சென்று சுகப்பிரசவம் செய்து, தாயையும் சேயையும் பாதுகாப்பாகக் காப்பாற்றி மன்னனை மகிழ்வித்தாள் எனப் பாடியிருப்பதிலிருந்து, முற்காலத்தில் பிரசவ முறைகளில் சிகிச்சை மருத்துவக் குலத்தாரால் சரியாகக் கையாளப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகின்றது.

சங்ககாலத்தில் போர் என்பது வீரத்தைத் தெரிவிக்கும் ஒரு கலையாகவே இருந்தது. அவ்வாறு போரில் விழுப்புண்பட்ட வீரனுக்கு மருத்துவர்கள் மருந்து தடவி ஊசி கொண்டு தையலிட்டனர் என்ற செய்தி பதிற்றுப்பத்து 5ஆம் பத்தில் காணப்படுகின்றது. குலசேகர ஆழ்வாரும்,

> “வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
> மாளாத காதல் நோயாளன்”[66]

என்று ஆழ்வார் திருமொழிப் பாடலில் பாடியிருப்பதும் சித்த மருத்துவத்தில் அறுவைச் சிகிச்சையுடன் சுடுதல் மற்றும் தீய்த்தல் என்னும் சிகிச்சை முறையையும் பின்பற்றியுள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது.

சிறுபஞ்ச மூலத்தில் தலைவலி, பைத்தியம், காசநோய், மூலம் போன்ற பிணிகளைப் பற்றியக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. சிறுபாணாற்றுப்படையிலும்,

> “சிக்கர் சிதடர் சிதலை போல வாயுடையார்”[67]

எனும் பாடல் வரி இதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

"கருஞ்சிரங்கு வெண்டொழுநோய் கல்வழி - சயம்"[68]

என்ற ஏலாதிப் பாடலில் கருஞ்சிரங்கு, சிறுநீரகக்கல்வலி போன்ற பிணிகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உடல்பிணி பற்றி நற்றிணை 136வது பாடலிலும், மனநோய் பற்றிக் கலித்தொகை நெய்தற்கலியின் 22வது பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சங்ககாலச் சித்த மருத்துவர்கள் உடல்பிணி, மனநோய் பற்றி ஆழ்ந்த அறிவு கொண்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

கல்வெட்டுக்களில் சித்த மருத்துவம்

கி.பி.6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை மன்னர்களின் ஆதரவால் சித்த மருத்துவம் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. கி.பி.7ஆம் நூற்றாண்டில் சோழர்காலத்தில் தஞ்சை 'திரைமூர்நாடு' என அழைக்கப்பட்டது. இங்கு 'மருத்துவக்குடி' எனும் ஊர் இருந்தது. இவ்வூரைச் சேர்ந்த மருத்துவக்குடி 'சடையர்' என்பவர் திருக்குரங்காடு துறை மகாதேவன் கோயிலுக்கு விளக்கு எரிக்க எண்ணெய் தானம் செய்தார் என்று திருக்குரங்காடுதுறைக் கல்வெட்டு கூறுகின்றது.

பாண்டிய நாட்டு மன்னன் அரசவை அவைக்களங்களில் குறிப்பிடத்தக்கவராக இருந்தவர் சாத்தன் கணபதி ஆவார். மருத்துவக் குலத்தில் தோன்றிய இவர், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் ஒரு பகுதியையும் ஸ்ரீ தடாகத்தையும் (லட்சுமி தீர்த்தமாக இன்று உள்ளது) எடுத்துக் கவனித்து வந்தார் என்று திருப்பரங்குன்றம் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. எனவே, மருத்துவக் குலத்தைச்

சார்ந்தவர்கள் அரசவையில் மருத்துவர்களாகவும், அமைச்சர்களாகவும் விளங்கியதுடன் ஆலயத் திருப்பணிகளையும் செய்துவந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

சோழ மன்னர்களும் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்காக நிலங்களைத் தானமாக வழங்கியுள்ளதாக முதலாம் இராச இராச சோழனின் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் செய்தத் தானங்களில் 'வைத்திய போகம்', 'வைத்திய விருத்தி' என்ற பொதுமருத்துவத்திற்காகவும், சல்லிய போகம், சல்லிய விருத்தி என்ற அறுவை மருத்துவத்திற்காகவும் நிலங்களைத் தானமாக வழங்கி, சித்த மருத்துவத்தைப் போற்றிப் பாதுகாத்தனர் என்பதை அறியமுடிகின்றது. சித்தர்களால் வகுக்கப்பட்ட சித்த மருத்துவத்தைக் காலங்காலமாக மக்கள் பின்பற்றி வருகின்றனர். இம்முறையைப் பின்பற்றுவோர் குறைந்தாலும் இன்றும் இம்முறையைப் பின்பற்றுவோர் உள்ளனர். சித்தமருத்துவர்களும் சித்தமருத்துவ முறையை மக்களிடம் தொடர்ந்து கொண்டு செல்கின்றனர்.

முடிபுகள்

- ✍ சித்தநிலை என்பது அறிவை அறிவால் அறிந்து மனிதனின் அடுத்தகட்ட பரிணாமத்தை அடைவதாகும். சித்தர்கள் மேற்கொண்ட மருத்துவ முறைகள் சித்த மருத்துவமாகும். இம்மருத்துவம் 'தமிழ் மருத்துவம்' என்றும் அழைக்கப்படுகிறது.
- ✍ சித்த மருத்துவம் உடல் பிணியையும், மனநோயையும் குணப்படுத்தி, உடலைப் பாதுகாக்கும் மருத்துவச் செயல் முறைகளைக் கொண்டுள்ள மருத்துவ முறையாகும்.
- ✍ சித்தர்களைப் பற்றியும் அவர்களின் மருத்துவ முறைகளைப் பற்றியும் குறிப்புகள் தமிழ் இலக்கண நூலானத் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றது. இவற்றுள் சித்தர்கள் 'அறிவர்' என்ற பெயரால் குறிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.
- ✍ சித்தர்கள் எனப்படுவோர் அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள், பேரறிவு படைத்தவர்கள், நுண்ணறிவு படைத்தவர்கள் என்பதையும் பஞ்சபூதச் செயல் மற்றும் கலப்பு விகித்தாசார நிலைகளை அறிந்தவர்கள் என்பதையும் அறியமுடிகிறது.
- ✍ சித்தர்கள் பலரும் பல்வேறு காலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சில சித்தர்கள் ஒரே காலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அறிய முடிகின்றது.

- ✍ பதினெண் சித்தர்களுக்கு முதல் சித்தராகவும், குருவாகவும், காலத்தால் மிகவும் முற்பட்ட சித்தராகவும் விளங்குபவர் சித்தர் தட்சிணாமூர்த்தி என்னும் சித்தராவார். இதனைப் போகர் சித்தர், கொங்கணவச் சித்தர் ஆகிய சித்தர்களின் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

- ✍ போகர் எனும் சித்தரின் சீடர் கொங்கணவச்சித்தர் என்றும், இவர் திருவள்ளுவர் காலத்தில் வாழ்ந்தவர் என்றும் பல்வேறு சித்தர் பாடல்களின் மூலம் அறிய முடிகின்றது. இவருக்குப் பிற்பட்டவர் மார்க்கண்ட சித்தராவர் என்பதையும் சித்தர் பாடல்களின் வழி அறியமுடிகின்றது.

- ✍ சித்தர்கள், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாச காலத்திலும் வாழ்ந்துள்ளனர் என்பதைச் காகபுசுண்ட சித்தர் மற்றும் அகத்தியரின் பாடல்கள் வழி அறியலாம்.

- ✍ சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் காலத்திலும் சித்தர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது பற்றிக் கருவூர்ச் சித்தரின் பாடல் வழியும், சுந்தரானந்தர் பாடல்களின் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

- ✍ சித்தர்கள் என்றும் அழியாத உடலையும் உயிரையும் பெற்று மரணமில்லாமல் காலங்கடந்து வாழ்ந்து வருகிறார்கள் என்ற குறிப்பு சித்தர்களின் சைவ சித்தாந்தப் பாடல்களில் காணப்படுகின்றது.

- ✍ உயிர்ப்பொருள் மூலமான ஆதிப் பொருள் பஞ்சபூதங்களின் மூலப் பொருளாகவும், பஞ்சபூதங்களான ஆகாயம், காற்று, தீ, நீர், மண் ஆகியவற்றைப் படைத்துள்ளதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர். மேலும் உடல் பஞ்ச பூதக் கூறாக உள்ளது என்பதையும் அவற்றின் இயக்கத்தினையும் அறிந்திருந்தனர்.

- ✍ உயிர்ப் பொருள் மூலத்தைப் பற்றிய ஆய்விற்கு உடல் முக்கியம் என்ற நோக்கில் உடலைப் பிணியிலிருந்து பாதுகாக்கும் வல்லமையைச் சித்தர்கள் பெற்றிருந்தனர் என்பதை அவர்களின் பாடல்கள் உணர்த்துகின்றன.

- ✍ வாதம், பித்தம், கபம் என்று சொல்லக் கூடிய முத்தோடங்கள் தன்னளவில் மாறுபடும் போது பிணிகள் உண்டாகின்றன. அப்பிணிகளின் அளவு, தன்மை ஆகியவற்றையும் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

- ✍ சித்தர்கள், உடலில் ஏற்படுவதைப் பிணிகள் என்றும், மனத்தில் ஏற்படுவதை நோய்கள் என்றும் வகுத்துள்ளனர். இவற்றிற்குரிய மருத்துவ முறைகளை அக மருத்துவம், புற மருத்துவம் என்றும் பகுத்துள்ளனர்.

- ✍ சித்த மருத்துவத்தில் மனநோய்களைப் பற்றியும், உடற்பயிற்சிகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ள சித்தர்கள், இமயம், நியமம், ஆதனம், பிரணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் எட்டுவகைப் பயிற்சி முறைகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர்.

இதை உடல்வழிப் பயிற்சிகள், மனவழிப் பயிற்சிகள், உடல் மனவழிப் பயிற்சிகள் என்று மூன்று வகைக்குள் அடக்கியுள்ளனர்.

- ✍ பிணிகளும் நோய்களும் தோடங்களால் மட்டுமின்றி, உணவு முறைகளாலும் பிற காரணங்களாலும் கூடிக் குறைவதையும், அதற்கான மருத்துவ முறைகளையும் சித்தர்கள் அறிந்திருந்தனர். எந்தப் பிணியுடையவர்கள் எந்த உணவினை உட்கொள்ள வேண்டும் என்பதையும், எந்தக் காலத்தில், எந்த அளவு உட்கொள்ள வேண்டும் என்பதையும் முறையாகப் பகுத்துக் காட்டியுள்ளனர்.

- ✍ சித்தர்கள் சைவ நெறிபூண்டு சிவனை முதற் கடவுளாக வழிபட்டு வந்தனர். தமிழ் மருத்துவ முறையான சித்த மருத்துவம் லெமூரியர் காலத்தில் சித்தர்களால் தோற்றுவிக்கபட்ட மருத்துவம் என்ற குறிப்பிலிருந்து சித்தர்கள், திராவிட காலத்திலும் வாழ்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

- ✍ திராவிடர்கள் மொஹஞ்சதாரோ, ஹராப்பா நாகரிகங்களின் முன்னோடிகளாக இருந்துள்ளனர். இவ் அகழ்வாய்வில் கிடைக்கப் பெற்ற மான்கொம்பு, சிலாசத்து மற்றும் பவளம் போன்ற பொருட்கள் சித்த மருத்துவத்தில் இன்றும் பயன்படுத்துவதிலிருந்து மேற்கண்ட நாகரிகத்தில் சித்த மருத்துவம் கையாளப்பட்டிருந்தது என்பதை அறிய முடிகின்றது.

- ✍ சங்க காலத்தில் சித்த மருத்துவமும், சித்த மருத்துவ அறுவை முறைகளும் கையாளப்பட்டிருப்பதைச் சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புக்கள்

1. கந்தசாமி முதலியார் (தொ.ஆ), வைத்திய மூலிகையகராதி, ப.271.
2. ந.ய.நன்க்ஷழ்ஹம்ஹய்ண்ஹய், ய.த.ஙஹக்ட்ஹஸ்ஹய் (ங்க்), ஏங்ழ்ண்ற்ஹஞ்ங் ர்ச் ற்ட்ங் பஹம்ண்ப்ள் நண்க்க்ட்ஹ ஙஹக்ண்ஸ்ரீண்ய்ங், ட.90.
3. நா.சேதுரகுநாதன், (உ.ஆ), யூகிபிடிவாதம் 1000, ப.11.
4. ஈழ்.நட்ஹய்ம்ன்ஞ்ஹஸ்ங்ப்ஹழ், நண்க்க்ட்ஹழ்ள் நஸ்ரீண்ங்ய்ஸ்ரீங் ர்ச் கர்ய்ஞ்ண்ய்ண்ற்ஹ் ஹய்க் ஓஹப்ல்ஹ ஙஹக்ண்ஸ்ரீண்ய்ங் ர்ச் ஐய்க்ண்ஹ, ட.95.
5. தொல். பொருள். நச். புறத். நூற். 74.
6. திருமந். பா.1981.
7. சாமி.சிதம்பரனார், சித்தர் கண்ட விஞ்ஞானமும் தத்துவமும், ப.28.
8. திருமந். பா.2537.
9. சூரியன் கா.பாண்டியன், தெட்ஷிணி (தமிழாக்கம்) மறைக்கப்பட்ட மரபுச் செல்வங்கள், ப.127.
10. திருமந். பா.132.
11. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), போகர் 7000, 2ஆம் காண்டம், பா.761.
12. எஸ்.பி. இராமச்சந்திரன், (பதி.ஆ.), அகத்தியர் பெருநூல் காவியம் 12000, பா.951.
13. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., பா.748.
14. எஸ்.பி. இராமச்சந்திரன், (பதி.ஆ.), சித்தர் வரலாறு, ப.86.

15. மேலது, கொங்கணவர் வாதகாவியம் (மூன்றாம் காண்டம்), பா.213.

16. மேலது, அகத்தியர் பெருநூல் காவியம் 12000, பா.963.

17. எஸ்.பி.இராமச்சந்திரன், (பதி.ஆ.), காகபுசுண்டர் பெருநூல் காவியம் 1000, பா.314.

18. மேலது, பா.313.

19. மேலது, பா.7.

20. திருமந், பா.129.

21. எஸ்.பி.இராமச்சந்திரன், (பதி.ஆ), கருவூரார் வாத காவியம் 700, பா.302.

22. சூரியன். கா.பாண்டியன், மு.நூ., ப.25.

23. ஞானமணி, மாதஇதழ், மே, 2002, ப.10.

24. திருமந். பா.142.

25. சுவாமி ஈசுவரபட்டா, சத்தியத்தின் சக்திநிலை, 2ம்பாகம், ப.14.

26. சாமி.சிதம்பரனார், மு.நூ., ப.123.

27. திருமந். பா.704.

28. இரா.தியாகராாசன் மற்றும் பிறர், (பதி.ஆ.), அங்காதிபாதம், (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.46.

29. மேலது, பா.21.

30. திருமந். பா.704.

31. மு.சௌரிராஜன், மச்சமுனி நாயனார் 800, பா.38.

32. டி.வி.சாம்பசிவம் பிள்ளை, டி.வி.எஸ்.அகராதி, (3ஆம் பாகம்), பக்.2123-2127.

33. வி.பாலராமையய்யா, வாதவைத்தியத்துக்காதி (முதற்பாகம்), ப.86.

34. எஸ்.பி.இராமசந்திரன், (பதி.ஆ.), கற்பநூல்திரட்டு, (போகர்கற்பம்), பா.190.

35. குறள். 941.

36. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், குணவாகடத்தின் வைத்தியசாரம், பா.25.

37. இரா.தியாகராசன் மற்றும் பிறர், மருத்துவத் தனிப்பாடல்கள், (பழநி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.85.

38. ஆ.இராசாமணி (தொ.ஆ), அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி 1200, பா.9.

39. புறம். 180.

40. குறள். 1102.

41. டி.எஸ்.அமிர்தலிங்கம் பிள்ளை (தொ.ஆ), அகத்தியர் நயன விதி 500, பா.8.

42. பதிற்று, 5ஆம் பத்து, பா.2.

43. டி.எஸ்.அமிர்தலிங்கம்பிள்ளை (தொ.ஆ), மு.நூ., (அகத்தியர் சஸ்திராயுதவிதி, அகவல் பாடல்), பா.138.

44. டி.மைக்கேல், (பதி.ஆ.), அகத்தியர் கிரிசநிதானநூல், பா.1.

45. திருமந். பா.534.

46. இரா.தியாகராாசன், மற்றும் பிறர், மருத்துவத் தனிப்பாடல்கள், (பழநி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டு குழு), பா.139.
47. மேலது, அங்காதிபாதம், பா.149.
48. மேலது, பா.157.
49. மேலது, பா.158.
50. மேலது, பா.178.
51. மேலது, பா.182.
52. குறள். 946.
53. இரா.தியாகராாசன் மற்றும் பிறர், மு.நூ., (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.351.
54. முனுசாமி முதலியார் (தொ.ஆ), நோயில்லா நலவாழ்வு, ப.1.
55. குறள். 944.
56. சூரியன் கா.பாண்டியன், மு.நூ., ப.25.
57. சூரியன் கா.பாண்டியன், மு.நூ., ப.17.
58. சூரியன் கா.பாண்டியன், மு.நூ., ப.39.
59. கந்தசாமி முதலியார் (தொ.ஆ.), போகர் 7000, 2ஆம் 1000, பா.330.
60. அரு.ராமநாதன், சித்தர்பாடல், கொங்கணவர் ஞானம் முன் 100, பா.10.
61. டி.வி.சாம்பசிவம் பிள்ளை, மு.நூ., ப.2088.
62. ஜி.கண்ணையா யோகி, ஆன்மீகப் படைப்புகள், 5ஆம் பாகம், ப.60.
63. சூரியன் கா.பாண்டியன், மு.நூ., ப.21.
64. க.த.திருநாவுக்கரசு, சிந்துவெளி தரும் ஒளி, ப.84.

65. தொல். பொருள். இளம். செய்யுள். நூ.417.

66. நாலாயிர திவ்விய பிரபந்தம், குலசேகராழ்வார், 691.

67. சிறுபாண், பா.74.

68. ஏலாதி. பா.56.

இயல் - 2

சித்தர்களின் இயல்புகளும் தத்துவங்களும்

சித்தர்கள் காலம் கடந்து வாழக் கூடிய தன்மை கொண்டவர்களாக இருந்தனர். மனிதன் பிறவிப் பயனை அடைந்து பிரபஞ்ச மூலம் பற்றி அறிய வேண்டுமென்றால், அதற்கு இந்த உடல் உள்ள போதே முயற்சி செய்ய வேண்டும். உடலை இழந்துவிட்ட பிறகு உயிருக்கு இடம் கிடையாது என்பதை உணர்ந்து அதற்குரிய முயற்சிகளைச் சித்தர்கள் செய்தனர். இதனை,

> "உடம்பர் அழிந்தால் உயிரர் அழிவார்
> திடம்படு மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"[1]

எனும் திருமந்திரப் பாடலின் வாயிலாக உணரலாம். இதுபோன்றத் தத்துவங்களையும் சித்தர்களின் இயல்புகளையும் ஆராய்வதே 'சித்தர்களின் இயல்புகளும் தத்துவங்களும்' எனும் இவ்வியலின் நோக்கமாகும்.

உயிர்ப் பொருளின் மூலம்

உயிர்ப்பொருளின் மூலம் எது என்பதையும் உடல் எப்பொருளின் மூலம் என்பதையும் அறிய விரும்பிய சித்தர்கள், இவற்றின் வளர்ச்சி, முதுமை, நரை, பிணி போன்றவற்றையும், இவற்றில் மாற்றங்களைச் செய்யும் அடிப்படை எது என அறியவும் முற்பட்டனர். இதன் விளைவாகத் 'தமிழ் மருத்துவம்' எனும் சித்த மருத்துவத்தையும் யோகப் பயிற்சிகளையும் கண்டறிந்தனர். தாங்கள் அதனை அனுபவித்து நரை, பிணி, மூப்பு ஆகியவற்றை வென்று மனிதனின் அடுத்த பரிணாமத்தை அடைந்தவர்களாகச் சித்தர்கள் வாழ்ந்தனர்.

சித்தர்களின் பரிணாம வளர்ச்சி

சித்தர்கள் தங்களின் பரிணாம வளர்ச்சியினால் தாங்கள் விரும்பினாலொழிய என்றும் அழியாத உடலையும், உயிரையும் பாதுகாக்கும் செயல் முறைகளை அறிந்திருந்தனர். இதனை "சித்தர்கள் சாகாத நிலையைப் பெற்றவர்கள்; அழியாத உடம்பைப் பெற்றவர்கள்; உடலை அழிந்துபோகாமல் காக்கும் வழியை அறிந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் வானமார்க்கமாகச் செல்லும் சக்தியுண்டு, முக்காலங்களையும் அறியும் ஞானம் உண்டு; பலவிதமான அற்புதங்களைச் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள்"[2] என்று சாமி. சிதம்பரனார் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பாம்பாட்டிச் சித்தர் தம் பாடல்களில் சித்தர்களின் சிறப்பைப் பற்றியும் அவர்தம் வல்லமைப் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். இந்த உலகத்தில் பெரியது என்று கருதும் பொருளை மிகவும் நுண்ணியதாகவும், நுண்ணியது என்று கருதும் பொருளை மிகவும் பெரியதாகவும் ஆக்கும் வல்லமை பெற்றிருந்தனர். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றும் வல்லமையும் பெற்றவர்கள் என்றும் சித்தர்களின் இயல்பைக் கூறுவர். பிரபஞ்சத்திலேயே நாங்கள் தான் எல்லாம் என்று சொல்லும்படியாக, பிரபஞ்சத்திற்கே நிகரான காரியங்கள் செய்யும் வல்லமையும் பெற்றிருந்தனர் என்றும் குறிப்பிடுவர்.

சித்தர்களின் கலைகள்

பொதுவாகத் தமிழர்களின் கலைகள் அறுபத்துநான்கு என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றிற்கு மேலான ஒரு கலையாகச் சாகாக் கலையையும் அறிந்திருப்பதுடன் மனத்தில் பற்றில்லாது வாழும் தன்மையும் கொண்டிருந்தனர். பிரபஞ்ச உயிர்ப்பொருள் மூலத்தைக்

குருவாகக் கொண்டவர்கள் சித்தர்கள் என்றும் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன.

சித்தர்களின் இயல்புகள்

சித்தர்கள் காற்றில் உலாவும் தன்மையையும் நீரில் மிதக்கும் இயல்பினையும் நெருப்பில் குளித்துவரும் தன்மையையும் எதனையும் ஆக்கும் அழிக்கும் தன்மையையும் கொண்டு விளங்கினார்கள். தெளிந்த மனத்தில் உயர்ந்த அறிவும் பிரபஞ்ச ஆற்றலை இயக்கும் வல்லமையும் கொண்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. சித்தர்களின் இவ்வியல்புகளைத் தாங்கள் கொண்டிருந்த பயிற்சியின் வெற்றியாகக் கருதினர். அவர்கள் அடைந்திருந்த சித்துக்களைப் பற்றி,

''தானே அணுவுஞ் சகத்துதன் நொய்ம்மையும்
மானாக் கனமும் பரகாயத் தேகமும்''[3]

என்று திருமூலர் தம்பாடலில் குறிப்பிட்டிருக்கின்றார். இவை முறையே, நுண்மை அடைதல் 'அணிமா' என்றும், மிகப் பருமை அடைதல் 'மகிமா' என்றும், மென்மை அடைதல் 'இலகிமா' என்றும், விரும்பியது எய்தல் 'பிராத்தி' என்றும், நிறைவுண்மை அடைதல் 'பிரகாமியம்' என்றும், ஆட்சியனாதல் 'ஈசத்துவம்' என்றும், கவர்ச்சி 'வசித்துவம்' என்றும், விண்தன்மை 'கரிமா' என்றும் எண்வகைச் சித்திகளை அடைந்திருந்தனர்.

எண்வகை சித்திகளும் - விளக்கங்களும்

சித்தர்கள் 'அட்டமா சித்திகள்' எனப்படுகின்ற எண்வகைச் சித்திகளையும் அவற்றின் விளக்கங்களையும் தெளிவாகக் கூறியுள்ளனர். அவை வருமாறு;

நுண்மை அடைதல்

அணுவைக் காட்டிலும் மிகவும் சிறிய உருவிலே உலாவும் ஆற்றல் பெற்றிருப்பது நுண்மை அடைதலாகும்.

மிகப்பருமை அடைதல்

மலையினும் பெரிய உருப் பெற்று நிற்கும் ஆற்றல் பெற்றிருக்கும் தன்மையே மிகப்பருமை அடைதல் என்னும் சித்தியாகும்.

மென்மை அடைதல்

உடம்பைக் கனமாக இல்லாமல் மிக இலகுவாக வைத்துக் கொள்வதும், நீரிலும் சேற்றிலும் அழுந்தாமல் காற்றுப்போல் விரைந்து செல்லும் தன்மை அடைதலே மென்மை அடைதல் எனும் சித்தியாகும்.

விரும்பியது எய்தல்

தான் எதை விரும்பினாலும் எதை நினைத்தாலும் அவைகளை அடையும் ஆற்றல் பெற்றிருப்பது விரும்பியது எய்தல் என்னும் சித்தி வகையாகும்.

நிறைவுண்மை

தன் நினைப்பின் வல்லமையாலும், தன் ஆற்றல்களாலும் எல்லாவற்றையும் படைக்கும் ஆற்றல் கொண்டவர்களாக விளங்குவது நிறைவுண்மை எனும் சித்துவகையினைப் பெற்றவராவர்.

ஆட்சியனாதல்

எல்லோரும் தம்மை வணங்கும் படியான தெய்வத் தன்மையைப் பெற்றிருக்கும் ஆற்றலைப் பெறுவதே ஆட்சியனாதல் என்பர். இதனைச் சிவன்தன்மை அடைதல் அல்லது ஈசாத்துவமாதல் என்பர்.

கவர்ச்சி

உலகம் முழுவதையும் தன் வசப்படுத்தி நடத்தும் ஆற்றலைப் பெற்றிருப்பவர்கள் கவர்ச்சி என்னும் சித்தியைப் பெற்றவராவர்.

வின்தன்மை

ஐம்புலன்கள் நுகரும் நுகர்ச்சி இன்றி அவற்றுடன் தொடர்பில்லாமல் இருக்கும் ஆற்றல் பெற்றிருப்பதாகும். இவைகளே எண்வகைச் சித்திகளாகும். இதனை 'அட்டமா சித்திகள்' என்பர். இவ்வெண்வகைச் சித்துக்களையும் பெற்றவர்களையே 'சித்தர்கள்' என்பர்.

சித்துக்களின் வகைகள்

சித்தர்கள் தாங்கள் அடைந்திருந்த சித்துக்களை இரண்டு வகையாக உள்ளடக்கிக் கூறியுள்ளனர். அவை:

1. உடல் வழிச் சித்துக்கள் - உடல் வழிப் பரிணாம வளர்ச்சி

2.மனவழிச் சித்துக்கள் - மனவழிப் பரிணாம வளர்ச்சி என்பனவாகும்.

1. உடல் வழிச் சித்துக்கள் (உடல்வழிப் பரிணாம வளர்ச்சி)

எட்டுவகையான சித்திகளுள் முதல் மூன்றும், உடல் வழிச் சித்துக்களாகும். அவை:

- அணுவினும் நுண்மை வடிவு பெற்று நிற்றல்
- மலையினும் மிகப்பெரிய வடிவு பெற்று நிற்றல்
- சேறு முதலியவற்றில் அழுந்தாமலும் காற்றில் நடக்கும் இயல்பும், மெல்லிய வழுவுடனும் நிற்றலாகும் எனும் இம்மூன்றும் உடம்பால் எய்துவனவாகும்.

2. மனவழிச் சித்துக்கள் (மனவழிப் பரிணாம வளர்ச்சி)

அட்டமா சித்திகளுள் பிற்கூறிய ஐந்தும் மனவழிப் பரிணாம வளர்ச்சி என்று கூறுகின்ற மனவழிச் சித்துக்களாகும். அவை,

- மனத்தால் நினைத்தவற்றை நினைத்தவாரே பெறுதல்.
- மனத்தால் நினைத்தவற்றைப் படைத்து அவற்றோடு நின்று விளையாடல்
- உயர்ந்தவர் எனக் கருதப்படுபவர், தன் ஆணையின் மூலம் பிறர் வணங்கத்தக்க நிலையைப் பெறுதல்.
- உலகம் முழுவதையும் தன்வயமாக்குதல்.
- ஐந்து புலன்களில் நுகர்ச்சியின்றி இருத்தல்

எனும் இவ்வைந்தும் மனத்தால் எய்துவனவாகும்.

சித்தர்களின் சிறப்புக்களையும் இயல்புகளையும் பற்றிக் கருவூர்ச் சித்தர். தமது பாடலில்,

"உரியபடி கூடுவிட்டுக் கூடுபாய்ந்தால்
உலகத்தில் சித்தருக்கு வழக்கமாமே"[4]

என்று கூறுவதிலிருந்து, சித்தர்கள் கூடுவிட்டுக் கூடுபாயும் வழக்கம் உள்ளவர்கள் என்பதை அறிய முடிகின்றது. இதனையே, "கோரக்கச் சித்தர் பாம்பு கடித்து இறந்த ஓர் இடையர் உடலில் புகுந்து வாழ்ந்துள்ளார்"[5] என்று எஸ்.பி.இராமச்சந்திரன் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே சித்தர்கள் தன் ஆத்மாவை உடல்விட்டு உடல்மாற்றி வாழும் தன்மை கொண்டவர்களாக விளங்கியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

சித்தர்கள் அவ்வாறு உடல்விட்டு உடல்மாறும் காலத்தில் கற்ப மருந்துகள் உட்கொண்டு உடலை அழியாத நிலைக்குப் பக்குவப்படுத்திக் கொள்வார்கள் என்பதை,

"இலக்கமுள கற்பமது சாப்பிட்டேதான்
இனிமையுடன் சடலமதை பெலஞ்செய்வாரே"[6]

என்னும் பாடல் வரிகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

சித்தர்கள் கொண்டிருந்த இந்தச் சித்துக்களின் மூலம் உடலை அழியாத காயகற்பத்தின் மூலம் பேணிக் கொண்டதுடன் தாங்கள் விரும்பும் பொழுது பிரபஞ்ச இயக்கத்தில் கலப்பதும், தாங்கள் விரும்பியபடி பிரபஞ்ச இயக்கத்தை இயங்கச் செய்யும் வல்லமையும் கொண்டிருந்தனர் என்பதை,

"நீரா யிரமும் நிலமாயி ரத்தாண்டும்
பேராது காயம் பிராநந்தி யானையே"[7]

என்ற பாடல் வரிகளின் மூலம் ஆயிரம் ஆண்டுகள் நீரிலும் மண்ணிலும் புதையுண்டிருந்தாலும் அழியாத உடலையும் பெற்றிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.

அணுவைக் காட்டிலும் சிறிய உருவாதல் போன்ற சித்துக்களின் மூலம் நுண்மையிலும் நுண்மையாக உயிர்ப்பொருள் மூலத்தினிடையிலும் வாழும் வல்லமை கொண்டிருந்தனர் என்பதை,

"பிரபலமாய் ஆவியுடல் அழியா துன்னிச்
சீர்பெறவே ஞானசித்து நீயு மாகிச்
செகமதிலே சிவன் சக்தியூடே வாழ"[8]

எனும் பாடல்வரிகள் காட்டுகின்றன. அதே போன்று சித்தர்கள் நரை, திரை, மூப்பு இன்றி இளமைத் தோற்றத்துடன் இருந்தனர் என்பதையும்,

"வண்ணமுடன் காயாதி கொள்ள வேண்டும்
வளமான மூப்புதிரை யகற்ற வேண்டும்"[9]

என்ற அகத்தியர் கருத்தும் இங்குச் சுட்டிக்காட்டத் தக்கதாகும். மேலும்,

"அஞ்சியுகத்தி லழியாமற் காயந்தான்
மிஞ்சிய கற்பம் விளம்பினே நூற்றெட்டு"[10]

என்ற சித்தர் பாடலும் சித்தர்களின் இயல்பு நிலை குறித்து எடுத்து உரைக்கின்றது.

பிரபஞ்ச இயக்கம்

சித்தர்கள் உடலின் செயல்பாடுகளையும் இயக்கங்களையும் புரிந்ததுபோல் பிரபஞ்ச இயக்கத்தின் இரகசியத்தையும் இயக்கத்தையும் புரிந்து கொண்டவர்கள். இதை,

"நேரப்பா அண்டமொடு பிண்டம் ரெண்டும்
நேர் அறிந்து கொண்டவனே சித்தன் சித்தன்"[11]

என்று சட்டை முனிச் சித்தர் கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சித்தர்கள் சமாதி கொண்ட கோவில்கள்

சிவயோகம் இருக்கும் இடங்களே சித்தர்கள் சமாதி கொண்ட கோவில்களாகக் கரூவூர்ச் சித்தர் குறிப்பிடுகின்றார். இதனை,

"காரப்பா கலியுகந்தான் போகுமட்டு
கண்மூடிச் சிவயோகங் கண்டார்பாரே"[12]

என்ற பாடலிலிருந்து அறிய முடிகிறது. எந்தச் சித்தருக்கு எங்கெங்கு சமாதி கொண்ட கோவில்கள் உள்ளன என்பதையும் இவர் எடுத்துரைத்துள்ளார்.

1. திருமூலர் - சிதம்பரம்
2. இராமதேவர் - அழகர்கோவில்
3. மச்ச முனி - திருப்பரங்குன்றம்
4. போகர் - பழனி
5. கொங்கணவர் - திருப்பதி
6. இடைக்காடர் - திருவண்ணாமலை

என்று கூறுவதிலிருந்து சிவயோகத்தில் உள்ள திருக்கோவில்களே மிகவும் புகழ் பெற்றத்தலமாக விளங்குவதிலிருந்து சித்தர்களின் சமாதி இருக்கும் இடங்களை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

சித்தர்களும் - யோக முறைகளும்

சித்தர்களின் முக்கிய நோக்கமான உயிர்ப்பொருள் மூலம் பற்றி அறியும் ஆய்விற்கும், பிரபஞ்சம் பற்றிய ஆய்விற்கும், சித்துநிலை அடைவதற்கும், மன ஒருமைப்பாட்டிற்கும், மனவழிச் சித்துக்களில் வெற்றி பெறுவதற்கும் பயிற்சி பெற்றிருந்தனர். அத்துடன் யோகப் பயிற்சி முறையை வகைப்படுத்தி அப்பயிற்சியில் வெற்றியும் கண்டனர். சித்தர்கள் தாங்கள் கடைப்பிடித்து வந்த பயிற்சி குறித்து,

"அறிவில் அணுக அறிவது நல்கிப்
பொறிவழி யாசை புகுத்திப் புணர்ந்திட"[13]

என்று திருமூலர் கூறியுள்ளதிலிருந்து, அறிவுவழி மனப் பயிற்சியையும், உடல் வழிப் பயிற்சியையும் மேற்கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. சித்தர்கள் கையாண்ட இந்தப் பயிற்சியினை,

"இயம நியமமே எண்ணிலா ஆதனம்"[14]

என்னும் திருமந்திரப் பாடலின் வழி அறியலாம். இப்பாடலின் வழி இயமம், நியமம், ஆதனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று எட்டு விதமானப் பயிற்சிகளைச் சித்தர்கள் பிரித்துள்ளதை நாம் அறிய முடிகின்றது.

பயிற்சிகளின் வகைகள்

சித்தர்கள் வகுத்த எட்டு விதமானப் பயிற்சி முறைகள் பின்வரும் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. அவை,

1. இயமம் - விலக்கல் (பதினொன்று உட்பிரிவுகள்).
2. நியமம் - ஏற்றல் (பத்து உட்பிரிவுகள்).
3. ஆதனம் - இருக்கை (பத்து உட்பிரிவுகள்).
4. பிரணாயாமம் - சுவாச இயக்கம் (மூன்று உட்பிரிவுகள்).
5. பிரத்தியாகாரம் — தொகைச் செயல் (ஆறு உட்பிரிவுகள்).
6. தாரணை - தொடர்ச் செயல் (ஆறு உட்பிரிவுகள்).
7. தியானம் - தொகைத் தொடர்ச் செயல் (பத்து உட்பிரிவுகள்).
8. சமாதி - தனித்தல் (ஐந்து உட்பிரிவுகள்).

என்பனவாகும். இப்பயிற்சி முறைகளைத் திருமூலர் பாடல்களிலிருந்தும், கொங்கணவர் பாடல்களிலிருந்தும் அறிய முடிகின்றது. பிரபஞ்ச இயக்கத்தில் தமது பரிணாமச் சித்து நிலையை அடைவதை,

> "சாட்சி எங்கும் நானாகிச் சீவனாகிச்
> சகல சராசரமாகித் தாண்டி நின்று
> காட்சியொன்றி னுள்ளாகிப் புறம்பாகி"[15]

என்ற பாடலில் சித்தர்கள் முக்கால மாயையைத் தவிர்த்துத் தாமே பிரபஞ்ச மென்றும் பிரபஞ்சமே தாம் என்றும் நிலை கொண்டிருந்தனர். இதனை, "இயற்கையில் பலவான நிலையில் உள்ளதும் இப்பலவற்றையும் கண்டு இவற்றின்மேல் இவற்றை வாழவைக்கும் நிலை என்ன? என்பதை உணர்ந்து, இந்நிலையின் வளர்ச்சியின்

மூலம் அறிந்திட்ட இம்மூலத்துடன் சென்றடையும் செயலில் கலந்தால்தான் இன்றையப் படைப்புக்களைப் போன்ற பல புதிய படைப்புகளை இயற்கையில் படைக்க வல்ல ஆற்றலுக்கு வழிபெறச் செல்கிறான் சித்தன்"[16] என ஈசுவரப்பட்டா குறிப்பிடுகின்றார்.

'அறிவு' என்பது தெளிவு பெற்ற நிலையே என்பதைத் திருமூலர் திருமந்திரத்தில்,

"ஞானிக் குடன்குண ஞானத்தில் நான்குமா
மோனிக் கிவையொன்றுங் கூடாமுன் மோகித்து"[17]

என்றுக் குறிப்பிடுகின்றார். மேலும் 'அறிவன்' என்ற சித்தன் நான்கு அறிவு நிலைகளைக் கொண்டிருப்பான். அவை,

1. அறிவில் அறிதல் - புலன்கள் வழி அறிதல்
2. அறிவில் ஆய்வு - அறிதலில் விசாரணை
3. அறிவில் தெளிவு - விசாரணையில் தெளிவு
4. அறிவில் இயக்கம் (அ) செயல் - தெளிவில் செயல் என்பனவாகும்.

சித்தர்களின் அறிவுரைகள் (சித்தாந்தம்)

சராசரி மனிதனாகப் பிறந்த சித்தர்கள், பல அறிய தொடர் பயிற்சிகளின் மூலம், பிறர் வணங்கத்தக்க, உன்னதமான உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். இந்நிலையை அனைவரும் அடையவேண்டும் என்ற நோக்கில் தங்கள் சித்தாந்தங்களைப் பாடல்களாகப் பாடியுள்ளனர்.

சித்தர்கள் கொண்டிருந்த இந்தப் பாடல் சிந்தனைகளைச் சாதாரண மனிதர்களால் தொடர்ந்து செய்துவர இயலாது என்பதை அறிந்தனர். எனவே, சாதாரண மனிதரும் மகிழ்ச்சியான வாழ்வு வாழவும் அதன்வழி அன்பு கொண்ட சமுதாயம் அமைந்திடவும் விரும்பினார்கள். தாங்கள்

விரும்பிய அன்பு கொண்ட அமைதியான சமுதாயம் உருவாக, தனி மனித உடல் ஒழுக்கம் மற்றும் மன ஒழுக்கம் அவசியம் என்ற சித்தாந்தத்தைக் கருத்தில் கொண்ட சித்தர்கள் தங்களின் நோக்கத்தை,

"கஞ்சா புகை குடியாதே வெறி
காட்டி மயங்கியே கட்குடியாதே
அஞ்ச உயிர் மடியாதே"[18]

என்று கடுவெளிச் சித்தரும் திருமூலரும் ஒருமித்த கருத்தைக் கொண்டு பாடியுள்ளனர். எனவே இவை போன்றத் தீயப் பழக்கங்களை விட்டுவிட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர்.

பிற உயிருக்குத் தீங்கு செய்தல் கூடாது என்ற நோக்கிலும் பிணியை அதிகரிக்கச் செய்யும் உணவுகளில் புலால் முதன்மையானது; அதனால் புலால் உண்போரைச் சித்தர்கள் கீழோர் என்று கூறி அவற்றை விடுத்தனர் என்பதை,

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரே"[19]

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

பாதகமான செயல்களைச் செய்யக்கூடாது எனவும், பொய் மற்றும் களவுகளில் ஈடுபடுதல் கூடாது எனவும் சித்தர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். இதனை,

"கூடிய பொய்களைச் சொல்லாதே பொல்லாக்
கொலை களவு கள் செய்யாதே"[20]

என்று கொங்கணவச் சித்தர் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சுற்றத்தார்களை வெறுப்படையச் செய்வதும் பிறர் துன்பத்திற்குக் காரணமாவதும் தன்னை அழிப்பதுமான கொலை, களவு, போதை, காமம்,

பொய் கூறல் ஆகியவற்றை நீக்கி வாழவேண்டும் என்றுச் சித்தர்கள் பாடியுள்ளனர். மேலும் காமம் கட்டுக்கடங்கியதாக இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர் தமது குறளில் குறிப்பிட்டுள்ளார்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ அன்ற ஒழுக்கு"[21]

என்று கூறுவதற்கு முன்னரே,

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்"[22]

என்றுத் திருமூலர் திருமந்திரத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். பிற சித்தர்களும் பிற்கால ஞானிகளும் பிறபெண் காமம் வேண்டாம் என்ற சித்தாந்தத்தையே தெளிவுறுத்துகின்றனர் என்பதும் இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

சித்தாந்தம்

பொதுவாகச் சித்தாந்தம் என்பது 'அறிவுரை' கூறுதலாகும். சித்தர்களின் சித்தாந்தம் என்பது அன்பு கொள்ளுதல் ஆகும். இந்த அன்பினை,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே"[23]

என்னும் திருமந்திரப் பாடலின் மூலம் பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவதே சிவநிலை என்பதையும், அன்பும் சிவமும் வேறுவேறல்ல என்பதையும் அறிய முடிகின்றது. எனவே உலகில் அன்புதான் இன்றியமையாதது என்பதை இப்பாடல் சுட்டிக்காட்டுகின்றது.

மக்கள் அனைவரும் ஒழுக்கம் தவறாமல் வாழவேண்டும் என்பதனையும் சித்தர்கள் வலியுறுத்தியுள்ளனர். புலால் உண்ணுதல், பொய், சூது, கொலை, போதை, கூடாக்காமம் முதலியவற்றைத் தவிர்த்தும் ஏழைகளை ஆதரித்தும் அவர்களுக்கு உணவளித்தும் வாழவும் வலியுறுத்துகின்றனர். அத்துடன் மனஒழுக்கமும் உடல் ஒழுக்கமும் கொண்டு அமைதியான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற சித்தாந்தத்தையும் எடுத்துரைத்துள்ளனர்.

சித்தர்களின் தத்துவங்கள்

சித்தர்கள் உயிர்ப் பொருளின் மூலம் பற்றியும் உலகியல் வடிவான உடல் பற்றியும் அறிந்திருந்தனர். பிரபஞ்ச இயக்கத்தில் அசைகின்ற, அசையா பொருள்கள் மீதும் பிற உயிரினங்களிலும் ஒரே வகையான மூலப் பொருள்கள் உள்ளதை உணர்ந்தனர். அம்மூலப் பொருளே அனைத்திற்கும் மூலம் என்பதையும் உணர்ந்திருந்தனர். அதனால்தான், “பண்டைய காலத்தில் முதலாக எழுந்தது உயிர்ப்பொருளாகும். புலனறிவு உலகத்தின் ஆதாரமாகும் பொருளைக் காண்பதே பண்டைப் பெரியோரது கருத்தும் விருப்பமும் ஆகும்”[24] என்பதிலிருந்து உயிர்ப் பொருளின் மூலமே முதல் என்பதை அறிய முடிகின்றது.

உயிர்மூலத்தின் பிரிவுகள்

சித்தர்கள் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட மூலத்தை இரண்டாகப் பிரித்தனர். அவை: 1.உயிர்ப்பொருள் மூலம் 2. உயிர்ப்பொருள் மூலத்தின் தொகுப்பாகிய உலகியல் வடிவான ‘உடல்’ என்பனவாகும். சித்தர்கள் முதலில் உயிர்ப்பொருள் மூலத்தை ஆய்வு செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். இந்த ஆய்வின் வழி உலகியல் வடிவமான

உடலைப் பற்றியும் ஆய்வு செய்தனர். இதனை, “எடுத்துக் கொண்ட ஆய்விற்குரிய பொருள் மிக்க மேன்மை உடையதாக விளங்கியது. இந்த நிலையில் வெறும் பூதஉலகிலான ஆதாரப் பொருட்களை நாடுவதாக இல்லை. அறிசெயலின் பண்பினை அறிவதே புலமையாளரது முதன்மைச் செயலாக இருந்தது”[25] எனும் த.கோவேந்தனின் கருத்தின் மூலம் சித்தர்களின் ஆய்வு நிலையை, மனநிலையை அறிய முடிகின்றது. உயிர்ப்பொருளின் மூலத்தைப் பற்றிச் சித்தர்கள் பலர் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

“அங்கையிற் கண்ணாடி போல ஆதிவத்துவை
சோதி மயமான பரிசுத்த வத்துவை”[26]

என்று பாம்பாட்டிச் சித்தரும்.

“சிறந்த பராபரமாகி யெங்குந் தானாய்”[27]

எனக் காகபுசுண்ட சித்தரும் பாடியிருப்பதிலிருந்து உயிர்ப்பொருளின் மூலத்தைச் சித்தர்கள் வத்து (பொருள்), ஆதிவத்து, பராபரம், பராபரை, பரம்பொருள், ஆதிநாதாக்கள், ஆதிபகவான், முச்சுடர் என்று பல பெயர்களில் அழைத்துள்ளனர். இவையே அனைத்திற்கும் ‘ஆதி’ என்பதால் இப்பொருள்களை ‘ஆதி’ என்று பொதுப் பெயரிட்டு அழைத்தனர் என்பதை சித்தர்களின் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

ஆதியின் சிறப்பு

சித்தர்கள் தங்கள் ஆய்வில் கண்டறிந்த உயிர்ப்பொருள் மூலமான ஆதியைப் பற்றி,

“நானறிந் தப்பொருள் நாடாவிட மில்லை
வானறிந்த தங்கே வழியுற விம்மிடும்”[28]

எனும் திருமந்திரப் பாடலின் வாயிலாகச் சித்தர்கள் அறிந்த உயிர்ப்பொருள் மூலமான ஆதியானது எங்கும் நிறைந்து உள்ளது; வானில் அது விம்மிப் பெருகிக் கொண்டுள்ளது என்று உணர்ந்தனர். இதை,

"பொங்கிநின் றான்புவ னாதிபதி புண்ணியன்"[29]

எனும் திருமந்திரப் பாடல் வாயிலாக அறிய முடிகின்றது.

ஆதியானது எங்கும் நின்று எதனுடனும் தானே காட்சிப் பொருளாக நின்று, தன்நிலையில் இனங்கி, பினங்கி, முன்னும், பின்னும் மேலும், கீழும் எல்லா இடங்களிலும் கலந்தும் தானாகவே எல்லாவுமாக உள்ளதையும் சித்தர்கள் கண்டறிந்தனர். இதனை,

"இனங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பினங்கிநின் றான்பின்முன் னாகி நின்றானும்"[30]

என்ற திருமந்திரப் பாடலின் மூலம் அறிய முடிகின்றது. பஞ்சபூதங்களைப் படைத்து அதனுள் ஆதி தன்னை மறைத்துள்ளது என்று சித்தர்கள் நம்பினர். இதை,

"பாரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதல் பூவே"[31]

எனும் பாடலின் மூலம் அறிய முடிகின்றது. ஆதியானது உலகத்தையும், பருவங்களையும் அழிவையும் மறைப்பையும் உற்பத்தியையும் செய்து வருவதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்ற குறிப்பும் திருமந்திரத்தில் காணப்படுகின்றது. அத்துடன்,

"உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்"[32]

எனும் திருமந்திரப் பாடலும் சித்தர்களின் தத்துவத்தை எடுத்துரைக்கின்றது. மண்ணுடன் சேர்ந்தால் மண்பூதமாகவும், நீருடன் சேர்ந்தால் நீர்பூதமாகவும் கலந்து கொள்ளும் தன்மையும் ஆதிக்கு உள்ளதையும் கண்டறிந்தனர். உடலும் உடல் இயக்கமும் ஆதியை அடிப்படையாகக் கொண்டதேயாகும். இப்பிரபஞ்சத்தில் எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்யும் தன்மையும், இதன் அசைவில் தன் கூட்டத்தை இணைத்து, பிரபஞ்சக் காட்சிப் பொருள்களை எல்லாம் படைப்பதும் ஆதியே எனக் கண்டனர். இதை,

“உற்று வனைவான் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியை”[33]

எனும் பாடல் வரிகளும் உணர்த்துகின்றன.

ஆதியின் செயல்களும் - சிறப்பும்

ஆதி எட்டுவிதச் செயல்களைக் கொண்டுள்ளதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். இதனை வள்ளுவரும்,

“கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை”[34]

என்னும் குறளில், கோள்கள் இருக்கும் பிரபஞ்சத்திலும் உடலின் இயக்கத்திலும் ஆதியின் எட்டுவிதமான செயல்களைக் குறிப்பிட்டுள்ளார். திருமந்திரத்திலும் எட்டு வகையான செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை,

“அன்பும் அறிவும் அடக்குமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்திலமூ அமர்ந்து நின்றானே”[35]

என்ற பாடலின் மூலம் அறியலாம். இந்த எட்டுவிதமான செயல்கள் எவை என்பன கீழே தரப்பபட்டுள்ளன. அவை:

1. அன்பு - அசைதல் - நடனம் - ஆதிநிலை
2. அறிவு - ஓசை - நாதம் - ஆதியின் ஓசை
3. அடக்கம் - காத்தல் - நடத்தல் - பருவம்
4. இன்பம் - இணைதல்- கவர்ச்சி - ஈர்த்தல்
5. இன்பக் கல்வி - உற்பத்தி - விந்து - ஆதித் தொகுப்பாகிப் பிற பொருட்களாகத் தோன்றுதல்
6. காலம் - காத்தல் — மறைத்தல்- காட்சிப்பொருளில் மறைதல்
7. ஊழி - அழித்தல் - பிரிதல்-காட்சிப்பொருள் சிதைந்து ஆதியாகப் பிரிதல்
8. முன்புறுநிலை -தன்நிலை - தனித்தல் - மீண்டும் ஆதிநிலை

என்பனவாகும். இவ்விளக்கங்களின் மூலம் ஆதி எட்டுவித இயக்கமாகச் செயல்படுவதை அறிய முடிகின்றது. எனவே, ஆதியின் தோற்றச் செயல்களான படைத்தல், அளிப்பு, காத்தல், அழித்தல் என்ற செயல்களையும், உணரும் செயல்களான அசைதல், ஓசை, இணைதல், பிரிதல் ஆகிய நான்கு செயல்களையும் கொண்டு எட்டுச் செயல்களையும் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. இந்த எட்டுச் செயல்களும் கீழே விளக்கப்படுகின்றன.

1. ஆதியும் அசைவும்

ஆதியானது பூதங்கள் ஐந்திலும் அண்ட சராசரத்திலும் உயிர் சீவன்களிலும் ஊழியிலும் சகலத்திலும் தன்னைத்தானே அசைத்துக் கொண்டு ஐம்பூதங்களையும் அசைத்து இயக்குகின்றது என்பதனை,

“ஆதிபரன்ஆட அங்கை கனலாட”[36]

“அசைவல் உலகம் அதுஇதுவாமே”[37]

"தானே உலகில் தனிநடந்தானே"[38]

ஆகியப் பாடல் வரிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

2. ஆதியும் - ஓசையும்

தனித்த ஆதியானது தானே மூலமாக, ஆதிக் கூட்டமாக, காட்சிப் பொருளாக நின்று அசைந்து கொண்டிருப்பதைக் கண்டறிந்த சித்தர்கள்,

"அறைகின் றருள்தரும் அங்கங்கள் ஓசை"[39]

"தீதில் பரையதன் பால்திகழ் நாதமே"[40]

ஆதியிலிருந்து நாதம் எனப்படும் ஓசை ஏற்படுவதைக் கண்டறிந்துள்ளனர் என்பதை இத்திருமந்திரப் பாடலடிகள் காட்டுகின்றன.

3. ஆதியும் - உற்பத்தியும்

ஆதியானது அசைந்து கொண்டும், அசைவின் வழி ஓசை கொண்டும் இருப்பதை அறிந்தத் திருமூலர் அதைப்பற்றிப் பதிவு செய்யவும் தவறவில்லை. இதை,

"ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்"[41]

எனும் பாடல் வரியின் மூலம் பதிவு செய்துள்ளார். அசைவு, ஓசை என்ற செயலுக்கு ஆதிக்கூட்டமே காட்சிப் பொருளாக உற்பத்தியாவதைக் கண்டறிந்தார்.

4. ஆதியும் - இணைதலும்

ஆதி தானே அசைந்தும், தன்னுள் ஓசையைக் கொண்டும் தானே கூட்டமாகக் கூடி காட்சிப் பொருளாக மாறுவதையும் உணர்ந்த சித்தர்கள்,

"உருவின்றி யேநின் றுருவம் புணர்க்குங்

கருவின்றி யேநின்று தான்கரு வாகும்”[42]

என்று படைப்பில் தனது சுயஉருவத்தை மறைத்து, கூட்டு நிலையில் வேறு காட்சிப் பொருளாக நின்று, தானே எல்லா உருவங்களுக்கும் கருவாக இருந்து செயல்பட்டதைத் திருமூலர் கண்டறிந்துள்ளார்.

5. ஆதியும் - காத்தலும்

சித்தர்கள் தங்கள் ஆய்வில், உற்பத்திப் பொருள்கள் ஒன்றுடன் ஒன்று கூட்டமாக இணைவதைக் கண்டறிந்தனர். இதை,

“புகுந்துநின் றான்உட லாய்உயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே”[43]

“தானொரு காலந்த தனிச்சுட ராய்நிற்குந்
தானொரு கால்ச ண்டமளாருத மாய்நிற்குந்”[44]

என்ற குறிப்பிட்டுள்ளனர். எப்பொருளுக்கும் உயிர்த்தன்மை உண்டு; அப்பொருளின் பொதுத்தன்மையைக் காத்து நிற்பது ஆதியேயாகும். இந்த ஆதியானது உடலாகவும், உயிராகவும், அறிவாகவும், இயக்கமாகவும், அக்கினியாகவும், காற்றாகவும், மழையாகவும், பருவமாகவும், அதன் பயன்களாகவும் இருந்து உலகைக் காக்கிறது என்பன போன்ற செய்திகளைத் திருமந்திரத்தின் பாடல்களிலிருந்து நாமறிய முடிகின்றது.

6. ஆதியும் மறைத்தலும்

சித்தர்கள் ஆதிப்பொருள் இயக்கத்தில் ‘காத்தல்வழி மறைத்தல்’ எனும் செயலையும் கண்டறிந்துள்ளனர். இதனை

“தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்

தன்னின் மறைந்தது தன்கர ணங்களே"[45]

என்றும்,

"பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதற் பூவே"[46]

என்றும் பாடியிருப்பதிலிருந்து, உலகப் பொருட்களாகத் தோன்றுவது ஆதியின் கூட்டுத் தொகுப்பே ஆகும். இதில் ஆதிப்பொருள் மறைந்துள்ளது என்பதை இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

7. ஆதியும் - ஊழியும்

ஆதிப்பொருள் கூட்டமாகி, பொருட்களாகக் காட்சி தருவதையும் அப்பொருளின் கூட்டாக உள்ள ஆதிகளின் தொகுப்பியக்கமானது இறுதிநிலை என்பதனையும் கீழ்க்காணும் பாடல்வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

"உலைதந்த மெல்லரி போலும் உலகம்
மலைதந்த மானிலந் தான் வெந்ததுவே"[47]

"சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்
உய்த்தசங் சாரம் பரன்அருள் உண்மையே"[48]

ஆதி தான் படைத்தவற்றைத் தானே அழிக்கும் வல்லமை கொண்டுள்ளது. பொருளின் காட்சித் தோற்றமும், அழிவும் ஒவ்வொரு இமைப்பொழுதும் நிகழ்ந்து கொண்டிருப்பதைச் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர் என்பதை இந்தப் பாடல்களின் வழி நாம் அறிய முடிகிறது.

8. ஆதியும் - பிரிதலும் (முன்புறுநிலை)

ஆதியானது தனது தொகுப்புத் தோற்றத்தின் காரணத்தால் பொருட்களாகத் தோன்றுகிறது. அப்பொருட்களின் கூட்டம் அழிவின் இறுதியில் என்ன நிலை ஏற்படுகிறது என்பதைத் திருமூலர்,

"பாழே மதலா எழும்பயிர் அப்பயிர்
பாழாய் அடங்கினும் பண்டைப்பாழ் பாழாகா"[49]

"கழிகின்ற வுள்ளே கருத்தற நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலு மாமே"[50]

என்று காட்சிப்பொருள் கழிந்தாலும், அதன் மூலமான ஆதி கழியாத பொருளாக உள்ளது என்றுக் குறிப்பிட்டுள்ளார்.

ஆதியின் வடிவமும் - இயல்பும்

ஆதி என்னும் பொருள் அழிவில்லாதது, கூட்டமாக நின்று காட்சிப் பொருளாகத் தோன்றி இப்பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து தெரிவது என்று அறிந்திருந்த சித்தர்கள் ஆதியின் வடிவம் அமைப்புப் பற்றியும் அறிந்திருந்தனர்.

"நோக்க அரியவன் காண்
நுண்ணியரில் நுண்ணியன் காண்"[51]

என்று கண்களால் காண இயலாதபடி மிகவும் நுண்ணியப் பொருட்களைக் காட்டிலும் மிகவும் நுண்ணியதாக ஆதி உள்ளது என்பதை அறிய முடிகின்றது. சித்தர்கள் ஆதியின் உட்தோற்றத்தைப் பற்றியும்,

"அடுக்கு தாமரை ஆதி யிருப்பிடம்"[52]

"நாடிகள் மூன்று நடுவெழு ஞானத்து"[53]

எனும் பாடல்வரிகளின் மூலம் பதி, பசு, பாசம் என்பவற்றில் பதியும், பசுவும் கருவாக இருக்க, பாசமானது தான்கொண்ட மூன்று சுற்றுப்பாதைகளில் ஓடிக்கொண்டுள்ளது. இந்தத் தோற்றம் அடுக்குத்

தாமரைபோலும் காணப்படுகின்றது. அத்துடன் ஆதி மூன்று பாகங்களாக உள்ளதையும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர். அவை,

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்"[54]

என்றுத் திருமந்திரம் குறிப்பிட்டுள்ளது. சித்தர்கள் கண்டறிந்த இம்மூன்று பொருட்களும் ஆதியில் எவ்வாறு அமைந்துள்ளன. என்பதனை,

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாமே"[55]

என்று ஆதியிலுள்ள மூலப் பொருட்களில் 'பதி' என்ற சிவமானது கருப்பொருளாக நடுவில் உள்ளதாகவும், இக்கருப்பொருளைப் பதியுடன், பசு என்ற சக்திப் பொருள் கலந்து தோன்றினாலும் இவை தனியாகவே உள்ளதையும், பாசப்பொருள் பதி, பசுப் பொருட்களுக்குச் சிறிது இடைவெளியுடன் உள்ளதையும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர். தங்கள் கண்டறிந்த இம்மூன்று பொருட்களும் எவ்வாறு ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கின்றன என்பதை,

"சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா"[56]

என்று திருமந்திரம் குறிப்பிட்டுள்ளது. பதி, பசு என்ற இரு பொருட்களும் சூரியனைப் போல ஒளி கொண்டும், காந்த சக்தி கொண்டு சுழன்றும் உள்ளன. அத்துடன் ஆதியின் உள் இயக்கத்தைப் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர்; அவற்றில் உள்ள சுடரையும் அறிந்திருந்தனர் என்பதை,

"செந்தீக் கலந்துட் சிவனென நிற்கும்
முந்திக் கலந்தங் குலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே"[57]

எனும் திருமூலரின் திருமந்திரப் பாடல் குறிப்பிட்டுள்ளது. ஆதியில் உள்ள 'சுடரி'ன் முக்கியத்துவம் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதை இது காட்டுகிறது.

பாசம் எனும் பொருள் செந்நிறச் சுடரும், ஓசையும் கொண்டு மிகப்பெரிய ஆற்றலைக் கொண்டிருப்பதையும் சித்தர்கள் கண்டறிந்தனர். பாசமானது பதிபசு என்ற கருப்பொருட்களைச் சுற்றி ஒளியும் இருளும் கலந்து நீள்வட்டமாக ஓடிக்கொண்டிருப்பதையும் அறிந்திருந்தனர். பதியும் பசுவும் ஆதிக்குள் கருப்பொருளாக உள்ளதையும் சித்தர்கள் கண்டறிந்திருந்தனர்.

ஆதியும் – ஐம்பூதங்களும்

ஆதிப்பொருளின் வெளித்தோற்றம், உள்தோற்றம் இவற்றைக் கண்டு வகுத்த சித்தர்கள்,

"பரமாய சக்தியுள் பஞ்சமாபூதம்
தரமாறில் தோன்றும் பிறப்பு"[58]

"வெளிகால் கலைப்பு மேவுமண் ணின்ற
தளியா கியதற் பரங்கா ணவன்றான்
வெளிகால் கலைப்பு மேவுமண் ணின்ற
வெளியாய சக்தி யவன்வடி வாமே"[59]

என்று ஆதிப்பொருளின் 'வெளி' என்ற ஆகாயத்தையும் 'கால்' என்ற காற்றையும் 'கனல்' என்ற நெருப்பையும் 'அப்பு' என்ற நீரையும், 'மண்' என்ற உருவத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளதையும் கண்டறிந்து கூறியுள்ளனர்.

பஞ்சபூதங்களும் – தன்மைகளும்

பஞ்சபூதங்களின் தன்மைகள் பற்றியும் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர். அதனால் முதலில் மண்பூதம் பற்றியும் அதனைத் தொடர்ந்து பிற பூதங்கள் பற்றியும் இங்குக் காண்போம்.

மண்பூதம்

இது கடினத் தன்மை உடையது; கண்களால் காணக்கூடியது; விரலால் தொட்டு உணரக்கூடியது; நாற்றம் உள்ளது என்று சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நீர் பூதம்

கண்களால் காணக் கூடியது; சுவைக்கும் தன்மையுள்ளது; தொட்டால் ஒட்டி உணரும் தன்மையுள்ளது என்று நீர் பூதத்தின் தன்மை குறித்து எடுத்துரைத்துள்ளனர்.

நெருப்புப் பூதம்

நெருப்புப் பூதம் கண்களால் காணக்கூடியது, வெப்பவழி உணரக் கூடியது என்று இப்பூதத்தைச் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

காற்றுப் பூதம்

காற்றுப் பூதம் மெய்யில் உராய்தலில் உணரப்படுவது என்று இப்பூதம் பற்றிச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகாய பூதம்

ஆகாய பூதம் கேட்டல்வழி உணரப்படுவது (வெட்டவெளி, இடைவெளி) என்று இப்பூதம் பற்றிச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே, பஞ்சபூதத் தன்மை அடிப்படையில் ஆதியைச் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதை சித்தர்களின் மேற்கண்ட விளக்கங்கள் குறிப்பிடுகின்றன.

ஆதியும் மண்பூதமும்

ஆதி என்பது ஒரு பொருள். அது இயல்பாகக் கண்களால் நோக்க இயலாதபடி மிகமிக நுண்ணியது. இப்பொருளுக்குக் கருவாகப் பதி, பசு என்னும் பொருட்களே உள்ளன. அவற்றுடன் பாசம் துணைப்பொருளாக உள்ளது. இப்பொருள்கள் மண்பூதத் தன்மையான தொடுதலிலும், பார்த்தலிலும் உட்பட்டு உருவத்துடன் கடினத் தன்மையும் கொண்டிருந்தது என்பதை சித்தர்கள் அறிந்திருந்தனர்.

ஆதியும் நீர்பூதமும்

வெப்பமான பொருள் தன் இடத்தைவிட்டு நகர்ந்ததும் அவ்விடத்தில் வெப்பக்குறைவு ஏற்படும் பொழுது, அவ்விடத்தில் குளிர்ச்சி ஏற்படுவது இயற்கையின் இயல்பு. அதுபோலப் பாசச் சுடர்களின் ஓட்டப்பாதையிலும்,

“வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை”[60]
“மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாஞ்”[61]

என்று ஆதிப்பொருளினுள் உள்ள பதி, பசு என்ற கருப்பொருளுக்கும், வன்னி என்ற பாசப்பொருளுக்கும் இடையில் ‘வாரணம்’ என்ற குளிர்ச்சி உள்ளதையும்; இந்தக் குளிர்ச்சி நீர்த்தன்மை கொண்டு உள்ளதையும்; தன்னிலை பிறழாமல் ஆதிகொண்ட நீதிக்குள் இருப்பதையும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஆதியும் – காற்றுப் பூதமும்

காற்றுப் பூதமானது உணர்தல் தன்மை மட்டும் கொண்டதாகும். இப்பூதம் தன்வலிமைக்குட்பட்ட பொருள்களை நகர்த்துவதற்கும் நெருப்புப்

பூதம் சுடர்விட்டு எரிவதற்கும் அடிப்படையான தன்மைகளைக் கொண்டிருப்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர். இதை,

"ஓமப் பெருஞ்சுடர் உள்ளெழு நுண்புகை
மேவித் தமுதொடு மீண்டது தானே"[62]

"பரந்துஞ் சுருங்கியும் பார்புனல் வாயு
நிறைந்த வளியொடு ஞாயிறு திங்கள்"[63]

என்று ஆதிகொண்ட சுடர்பொருளில் இருந்து மெல்லிய புகை என்ற காற்று வருவதையும், காற்றுப் பூதம் இருந்தால்தான் சுருங்கி விரிய இயலும் என்ற அடிப்படையில் அங்குக் காற்றுப்பூதம் உள்ளதையும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆதியும் - நெருப்புப் பூதமும்

நெருப்புத் தான் உள்ள இடத்தை வெப்பத்தால் அல்லது சுடர்வழிப் பிரகாசத்தைத் தந்து பார்க்கும்படியான தன்மையைக் கொடுக்கிறது. நெருப்புப் பூதம் பார்த்தலில் ஒளியையும், உணர்த்தலில் வெப்பத்தின் தன்மையினையும் கொண்டது. இதனை,

"சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம்
எரிகொண்ட ஈசன் எழில்வடி வாமே"[64]

என ஓடிக் கொண்டிருக்கும் பாசமானது எரிந்து கொண்டே ஓடுவதையும், செந்நிற நெருப்புத் தன்மையுடன் உள்ளதையும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆதியும் - ஆகாய பூதமும்

ஆகாய பூதம் என்பது வெட்ட வெளியாகும். இது எதையும் தன்னுள் கொள்ளும்படி வியாபிக்கும் தன்மை கொண்டது. இதனை,

"மேவித் தமுதொடு மீண்டது தானே"[65]

"தங்களின் மேவிச் சடங்கு செய்தாரே"[66]

எனும் பாடல் வரிகளின் வாயிலாக, பாசம் எனும் பொருள் தன் ஓடுபாதையில் ஓடுவதற்கு வெட்டவெளி உள்ளதையும், கருப்பொருளுக்கும் பாசப் பொருள்களுக்கும் இடையில் இடைவெளி உள்ளதையும் அறிய முடிகிறது. இதன் அடிப்படையில் ஆதியானது வெட்டவெளி என்ற ஆகாயப் பூதத்தின் தன்மையைக் கொண்டுள்ளது என்பதையும் அறிய முடிகின்றது.

சித்தர்கள் கண்டறிந்த ஆதி என்னும் பொருள் பஞ்சபூதத்தின் அடிப்படையில்தான் உள்ளது. ஆதியே பஞ்ச பூதங்களின் உற்பத்தி மூலமாக உள்ளது என்பதை,

"ஆதி படைத்தான் ஐம்பெரும் பூதம்"[67]

எனும் பாடலின் வழியாக அறிய முடிகின்றது. ஆதியின் வடிவம், இயல்பு, சிறப்பு பற்றித் திருமூலர்,

"அயலும் புடையும் எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய் வம்யாது மொன்றில்லை"[68]

என்றுக் குறிப்பிட்டுள்ளார். அதாவது உயிர்ப்பொருளின் மூலமான ஆதியைத் தவிர வேறு சக்தியோ, படைப்பாளியோ இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை என்பதைச் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பஞ்சபூதமும் - உடலும்

பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் ஆதியான பஞ்சபூத அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளன என்பதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். இக்கருத்தையே தொல்காப்பியமும்,

"மண்டினிந்த நிலனும்

நிலமேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலை இயதீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரம் பூதத்தியற்கை”[69]

என்னும் நூற்பா மூலம் எடுத்துரைத்துள்ளது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பிரபஞ்சத்தில் பஞ்ச பூதங்களைக் கண்டறிந்த சித்தர்கள் உடலையும்,

“கொள்ளுமிச் சடந்தான் பஞ்சபூதியக் கூறாய் நிற்கும்
அள்ளிலை வேற்கா னேனே பிருதுவி யப்புத் தேயு
விள்ளரும் வாயு மானம் விளம்பிய பூத மைந்தாம்”[70]

என்று மண், நீர், தீ, காற்று மற்றும் ஆகாயம் ஆகியப் பஞ்ச பூதக் கூறுகளை வகுத்துள்ளனர்.

மண்பூதமும் – உடலும்

‘அப்பனே பிரிதிவியின் கூறுதான் மைந்தா’ என்று உடலின் முடி, எலும்பு, தோல், நரம்பு ஆகியவற்றை மண்பூதத்தின் கூறு என்றே சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்பதையும் இவண் அறியத்தக்கது.

நீர்பூதமும் – உடலும்

‘பாரப்பா அப்புடைய கூறு சொல்வேன்’ என்று உடலின் நீர், உமிழ்நீர், சிறுநீர், உதிரம், விந்து, மூளை மற்றும் எலும்புச்சோறு என நீர்பூதத்தின் கூறாகச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நெருப்புப் பூதமும் – உடலும்

‘கேளப்பா தேய்விட கூறுகேளு’ என்று உடலின் பசி, நித்திரை, எண்ணம், பயம் மற்றும் சோம்பல் என நெருப்புப் பூதத்தின் கூறினைச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காற்றுப்பூதமும் – உடலும்

'தானான வாய்வினுட கூறுகேளு' என்று உடலின் நடத்தல், ஓடல், இருத்தல், கிடத்தல் மற்றும் எழுதல் எனும் செயல்களைக் காற்று பூதத்தின் கூறாகவும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகாய பூதமும் – உடலும்

'கூறான ஆகாசக் கூறு தன்னை' என உடலின் செயலான குரோதம், லோபம், மோகம், மதம் மற்றும் மாச்சிரியம் எனும் மனம் தொடர்பான செயல்களை ஆகாய பூதத்தின் கூறாக வகைப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

உடலும் – தத்துவமும்

பஞ்சபூத அடிப்படையில் உடலையும், உடல் கொண்ட செயல்களையும் பிரித்தச் சித்தர்கள் உடலைப் பற்றி மேலும்,

> "விரிந்து நின்ற தத்துவத்தின் விபரங்களைக் கேட்டேன்
> கூறுள்ள பதிபசு பாசத்தைக் கேட்டேன்
> குறிப்பு மிக நன்றெனவே கூர்ந்து நாதன்
> சீருள்ள பதிபசு பாசத்தினாலே
> திரண்டதடா தத்துவத் தின்செனைக் கூறு"[71]

என்று ஆதிகொண்ட பதி, பசு, பாசப் பொருட்களால் ஆன பஞ்சபூதம் உடலாகவும் உயிராகவும் உருவாகியுள்ளதை அறிந்திருந்தனர். உடலையும் உடல்கொண்ட இயக்கத்தையும் தத்துவம் என்ற நோக்கில்,

> "தான்முத லாகுமீசன் றந்திடு முடம்பின் றன்மை
> ஆனது தொண்ணூற் றாறு தத்துவ வியக்கமாகும்
> வான்வெளி யனனீர் மண்ணாய் வகுத்திடு பஞ்சபூதம்
> ஆனவை யாதியான தத்துவ மறைத லுற்றாம்"[72]

எனும் பாடலில் உடம்பானது தொண்ணூற்றாறு விதமான இயக்கம் கொண்டது என்றும் இந்த இயக்கம் பஞ்சபூதங்களின் அடிப்படையில் உள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பஞ்ச பூதங்களினால் உருப்பெறும் நமது உடலைச் சித்தர்கள் தொண்ணூற்றாறு பாகங்களாக வகுத்து அவற்றின் இயக்கங்களைக் கீழ்க்காணுமாறு வகுத்துள்ளனர். அவை வருமாறு:

1. பஞ்ச பூதங்கள் - 5

அ). மண் - முடி, எலும்பு, தோல், நரம்பு, சதை
என திடப் பொருளாகவும்

ஆ). நீர் - உமிழ்நீர், சிறுநீர், விந்து, மூளை, மச்சை
என திரவப் பொருளாகவும்

இ). தீ - பசி, நித்திரை, எண்ணம், பயம், சோம்பல்
என உணறும் செயலாகவும்

ஈ). காற்று - நடத்தல், ஓடல், இருத்தல், கிடத்தல், எழுதல்
எனச் செய்யும் செயலாகவும்

உ). ஆகாயம்- வஞ்சம், கோபம், மதம், மோகம், மாச்சரியம்
என அறிதல் செயலாகவும்

பிரித்துள்ளனர்.

2. பொறி - 5, (அறிதலுக்கான உறுப்புகள்)

அ. மெய், ஆ. வாய், இ. கண், ஈ. மூக்கு உ.செவி

3. தன் மாத்திரைகள் 5, (அறிவு இயக்கம்)

அ. செவி -	ஆகாயம் -	விசும்பு -	ஒலி அறிவு
ஆ. மெய் -	காற்று -	வளி -	உணர்வு அறிவு

இ. கண் - தீ - அழல் - காட்சி அறிவு

ஈ. நாக்கு - நீர் - குற்றம் - ருசி அறிவு

உ. மூக்கு - மண் - நாற்றம் - நுகர்ச்சி அறிவு

4. கர்மேந்திரியம் - 5, (புலன்களின் இயக்கம்)

அ. வாய் - ஆகாயம் - பேசுதல் - ஓசை

ஆ. கால்கள்- காற்று - நடத்தல் - அசைவு

இ. கைகள் - அனல் - எடுத்தல் - விடுத்தல்

ஈ. எருவாய் - நீர் - மலம் - கழித்தல்

உ. கருவாய் - மண் - பூதாதி - உற்பத்தி

5. கரணம் - 4 (அக இயக்கங்கள்)

அ. மனம் - எண்ணங்கள் - வாயு

ஆ. அறிவு - சிந்தனை - தீ

இ. நினைவு - நினைத்தல் - நீர்

ஈ. முனைப்பு - செயல் - மண்

6. உயிர் - 1 (இயக்க மூலம்)

அ. உயிர்ப்பொருள் - பூதாதி உலகியல் உருவத்தில்

7. தாதுக்கள் - 7 (உடல் அமைப்பு மூலங்கள்)

அ. சாரம் ஆ. செந்நீர் இ. ஊண் ஈ. கொழுப்பு

உ. எலும்பு, ஊ. மூளை எ.விந்து.

8. ஆகாயம் - 5 (உடல் உள் இயக்கம்)

- இரைக்குடல் - அன்னப்பை - காற்று
- சீரணக்குடல் - சிறுகுடல் - தீ
- நீர்க்குடல் - சிறுநீரக உறுப்பு - நீர்
- மலக்குடல் - பெருங்குடல் - மண்
- விந்துக்குழல் - விந்துப்பை - ஆகாயம்

9. கோசங்கள் - 5 (உடல் பகுப்பு)

- உணவுடம்பு - ஏழு தாதுக்களால் ஆனது
- வளி உடம்பு - வாயுவின் இயக்கம்
- மனவுடம்பு - மனம் இயக்கம்
- அறிவுடம்பு - புத்தி மனஇயக்கம் சேர்ந்தது
- இன்ப உடம்பு - மகிழ்வு, முன் இயக்கங்களுடன் கூடியது.

10. பண்புகள் - 3 (குணங்கள்)

- அ. அமைதி - ஆகாயம் - அருள்
- ஆ. தைரியம் - தீ - ஊக்கம்
- இ. சோம்பல் - மண் – பயம்

11. ஈடான — 3 (பற்றுகள்)

- அ. பொருட்பற்று - தீ - பொருளாசை
- ஆ. புதல்வர் பற்று - மண் - பிள்ளைகளின் பால் ஆசை
- இ. உலகப்பற்று - ஆகாயம் - உலகவிவகார ஆசை

12. மலம் - 3 (இயல்புகள்)

- அ. ஆணவம் - மண் - நான், எனது என்ற செயல்கள்
- ஆ. மாயை - காற்று - அறியாமை
- இ. கர்மம் - தீ - நன்மை, தீமை

13. மண்டலம் - 3 (தொகுப்பு இயக்கம்)

- நெருப்பு இயக்கம் - மூலாதாரத்திற்கு இருவிரல் அளவுக்கு மேல்
- இருதய இயக்கம் - இருதயத்தில்
- அமுத இயக்கம் - தலை உச்சி

14. இராகம் - 8 (அறிவறியாச் செயல்கள்)

- காமம் - ஆசை
- குரோதம் - பழிவாங்கும் செயல்
- உலோபம் - கஞ்சம், ஈயாமை
- மோகம் - கவர்ச்சி
- மதம் - செருக்கு
- மாச்சர்யம் - உட்பகை
- இடும்பை - பிறரை இகழ்தல்
- அகங்காரம் - தன்னை உணராத நிலை

15. அவத்தை – 5

- நனவு - பொறி-5, புலன்-5, கரணம்-4, இவற்றின் வழிச்செயல்கள்
- கனவு - பொறி-5, புலன்-5, இவற்றின் வழிச் செயல்கள்
- உறக்கம்- பொறி-5, புலன்-5, கரணம்-4, உயிர்-1 இவைவழிச் செயல்கள்
- பேருறக்கம் — பொறி-5, இயக்கத்தில் மனம், நாடியில் அடங்கல்
- உயிர்ப்படக்கம் - மனம் உயிரில் ஒடுங்குதல்.

16. ஆதாரம் - 6 (மனம் அறிவறிதலின் செயலிடங்கள்)

அ.	மூலாதாரம் -	கருவாய், எருவாய் இடைப்பகுதி -	மனம், உயிர், உணர்வு, எண்ணம் வழிச் செயல்கள்
ஆ.	சுவாதிட்டானம் -	நாடி -	மனம், உயிர், உணர்வு, எண்ணம் வழிச் செயல்கள்
இ.	மணிபூரகம் -	மேல்வயிறு -	மனம், உயிர், உணர்வு, எண்ணம் வழிச் செயல்கள்
ஈ.	அனாதகம் -	மார்பு -	மனம், உயிர், உணர்வு, எண்ணம் வழிச் செயல்கள்
உ.	விசுத்தி -	மிடறு -	மனம், உயிர், உணர்வு, எண்ணம் வழிச் செயல்கள்
ஊ.	ஆக்கினை -	புருவமத்தி -	மனம், உயிர், உணர்வு, எண்ணம் வழிச் செயல்கள்

17. நாடிகள் - 10 (இரத்த ஓட்டத் துடிப்பு இயக்கம்)

- ♦ இடகலை - வலதுகால் பெருவிரல் முதல் மூக்கு இடதுதுளை வரை
- ♦ பின்கலை - இடதுகால் பெருவிரல் முதல் மூக்கு வலது துளை வரை
- ♦ சுழுமுனை - மூலாதாரத்தைத் தொடர்ந்து புருவமத்தி வரை
- ♦ சிங்குவை - உண்ணாக்கில் விழுங்கச் செய்யும் துடிப்பு
- ♦ புருடன் - வலது கண்ணில்

- ♦ காந்தாரி - இடது கண்ணில்
- ♦ அத்தி - வலது காதில்
- ♦ அலம்புடை - இடது காதில்
- ♦ சங்கினி - மர்மஸ்தானத்தில்
- ♦ குகு - அபானத்தில்

18. வாயு — 10 (காற்று இடங்கள் - நிறம்)

- ♦ உயிர்காற்று - நுரையிரல் - நீலநிறம்
- ♦ மலக்காற்று - மலக்குடல், மலவாய் - பச்சை நிறம்
- ♦ தொழிற்காற்று - நரம்பு மண்டலம் - வெண்மை நிறம்
- ♦ ஒலிக்காற்று - வயிறு மற்றும் விந்துப்பை - மின்னல் நிறம்
- ♦ நிரவுக் காற்று - நாடிமுதல் கால்கள் வரை - புட்பராக நிறம்
- ♦ விழிக்காற்று — கண்கள் - பொன்னிறம்
- ♦ இமைக்காற்று - இமைகள் - வெளுப்பு நிறம்
- ♦ தும்மற் காற்று - நாசி மற்றும் நாவு - கருப்பு நிறம்
- ♦ கொட்டாவிக் காற்று - மார்பு முதல் குதம் வரை - படிக நிறம்
- ♦ வீங்கற் காற்று - உடல் முழுவதும் - நீலநிறம்

19. தோடம் - 3 (நோய் மற்றும் பிணி மூலம்)

- வாதம் (வளி-கால்) - இதன் அளவு ஒரு மாத்திரை, நாபி முதல் பாதம் வரை கருமை மற்றும் கருநீல நிறம், வரட்சித் தன்மை.
- பித்தம் - (ஆழல்) - இதன் அளவு அரை மாத்திரை, இருப்பிடம் நாபிக்கு மேல் கண்டம் வரை, பச்சை, மஞ்சள் மற்றும் பசுமை நிறம், வெப்பத் தன்மை.

- கபம் (குற்றம்) – நாடியில் இதன் அளவு கால் பாகம், இருப்பிடம் கண்டத்திற்கு மேல் உச்சி வரை, வெண்மை நிறம், குளிர்ச்சித் தன்மை என்று உலகியல் வடிவான உடலைச் சித்தர்கள் தொண்ணூற்றாறு பாகங்களாகப் பிரித்து அவற்றின் இயக்கத்தையும் வகைப்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

உடலைத் தொண்ணூற்றாறு பாகங்களாகப் பிரித்து அதன் இயக்கத்தை உடல் இயக்கம், உயிர் இயக்கம், உடல் உயிர் இயக்கம் என்று மூன்றாகப் பிரித்துள்ளனர். இவற்றின் அடிப்படையில் சித்த மருத்துவத்தை,

1. உடலுக்கான மருத்துவம்
2. மனத்திற்கான மருத்துவம்
3. உடல் மற்றும் மனத்திற்கான மருத்துவம் எனச் சித்தர்கள் வகுத்துள்ளதும் இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

உடலியல் பற்றிய ஆய்வில் ஐம்பூதங்களையும் இரண்டாக வகுக்கலாம். அவை,

1. இயக்கு பூதங்கள்
2. இயங்கு பூதங்கள் என்பனவாகும். இவற்றுள்,

இயக்கு பூதங்களாக - காற்று, தீ மற்றும் நீர் ஆகியனவும்

இயங்கு பூதங்களாக - மண், ஆகாயம் ஆகியனவும் உள்ளடங்கியுள்ளன. இந்த அடிப்படையில் பஞ்சபூதங்களை, இயக்கவழி பகுத்து உணரலாம். பூதங்கள், பிற பூதங்களுடன் கலந்தும், தனித்தும் இயங்குவதையும் கண்டறிந்த சித்தர்கள் தோடமான பிணிமூலத்தை ஐந்தாக வகுத்தனர். அவை:

1. ஆகாயம் - மேக தோடம் - குருநாடி
2. காற்று - வாத தோடம் - வாதநாடி
3. தீ - பித்த தோடம் - பித்தநாடி
4. நீர் - கபதோடம் - கபநாடி
5. மண் - கிரந்திதோடம் - பூதநாடி

என்பனவாகும்.

தோடமும் உடலும்

உடலானது மண்பூதத்தின் கூறாகவும், உடலின் இயக்கங்கள் பிற நான்கு பூதங்களின் கூறுகளாகவும் உள்ளதைச் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர். பூதங்களில் காற்று, தீ, நீர் என்ற மூன்று பூதங்களின் செயல்களின் முறையே வாதம், பித்தம், கபம் என்ற தோடங்களும் பிற தோடங்களும் தன்னிலையில் மாறுபட்டு அளவில் மிகுந்தும் குறைந்தும் கரு உருவாவதைக் கண்டறிந்தனர்.

தனித்தோட உடல்கள்

தனித்தோட உடல்கள் எனப்படுபவை வாத உடல், பித்த உடல், கப உடல் என்னும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

கலப்புத்தோட உடல்கள்

வாத பித்த உடல், வாதகப உடல், பித்தவாத உடல், பித்த கப உடல், கபவாத உடல், கபபித்த உடல் என உடல்களையும் சித்தர்கள் பல வகைப் படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

சித்தர்கள் கண்டறிந்த தோட உடல் என்பது மாதா, பிதா, உறவு காலத்தில் உள்ள தோடநிலைகளுக்கும். மாத, பிதா, உடல்வழித் தோட நிலைகளுக்கும் உள்ள அடிப்படையிலே தோட உடல்கள் உருவாவதையும் கண்டறிந்துள்ளனர்.

தோடம் கூடுதலும் - குறைதலும்

சித்தர்கள், தோடங்களை ஐந்தாகப் பிரித்ததுடன், அவற்றுள் மூன்று இயக்கு தோடங்களான வாதம், பித்தம் மற்றும் கபம் ஆகியவை தன் அளவில் கூடிக் குறைவதால் பிறதோடங்களில் பிணி மற்றும் நோய் ஏற்படுவதைக் குறிப்பிட்டுள்ளனர். இதை,

> “மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று”[73]

என்று குறள் குறிப்பிடுவதையும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

1. வாதம் எனும் வாயுவும் - செயலும்

வாயுவைப் பொதுவாகப் பத்தாகப் பிரித்து அவற்றின் செயல்களைத் தாதுக்களுக்கு வலிமை தருதல், சுவாசம், குருதிச் சுழற்சி, கழிவுகள் வெளியேற்றுதல், பஞ்சேந்திரியங்களின் வழி உணர்வுகளையறிதல், உடலை அசைத்தல், உண்ட உணவைத் தக்க முறையில் செறித்தல், பிரித்தல், கழித்தல், கருப்பிண்டம் அசைவு உண்டாக்கல், நிலை நிறுத்தல் போன்றவையாகக் குறிப்பிட்டுள்ளனர். மேலும் பதினான்கு வேகங்களின் வழி மலம், நீர், கண்ணீர், கொட்டாவி, ஏப்பம், தும்மல், சிரித்தல், அபானவாயு வெளியேற்றம் போன்றவற்றை வெளியேற்றும் வாதம் தன் அளவில் குறைந்தும் கூடியும் பிணி செய்யும் என்பதையும் சித்தர்கள் வகுத்துள்ளனர்.

பித்தம் எனும் தீயும் - செயலும்

சித்தர்கள் பித்தத்தை ஐந்தாகப் பிரித்து அவை கொண்ட செயலுக்கு ஏற்ப,

> ‘‘ஆக்கல் வண்ணாரி யாற்றாலங்கி யென் றொளித்தீ

நோக்கழலாம் பித்தமைந்தை நூதனமா"[74]

என்று எடுத்துரைத்துள்ளனர். அதாவது 1. ஆக்கல், 2. வண்ணஎரி, 3.ஆற்றலங்கி, 4. ஒன்றொளித்தீ 5.நோக்கழல் என்று ஐந்து பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். ஐந்து பிரிவுகளாகப் பிரித்து அவற்றின் இயக்கங்களையும் குறிப்பிட்டுள்ளனர். உடலுக்குத் தேவையான வெப்பத்தைத் தரும் பித்தநீர், செரிமான நீர் இவற்றுக்குக் காரணமாகி, உணவைச் செறிக்கவைப்பது, உடலை வளர்ப்பது, பிண்டத்தை உருவாக்குவது போன்றத் தன்மைகளையும் நோய்களையும் சித்தர்கள் அப்பிரிவுகளின் மூலம் அறிந்திருந்தனர்.

கபம் எனும் நீரும் செயலும்

கபம் எனும் சிலேத்துமத்தையும் சித்தர்கள் ஐந்தாகப் பிரித்துள்ளனர். இதனை,

"அளியையம் நீர்ப்பியைய மாஞ்சுவைகா ணையம்
தெளிந்த நிறைவையம் தேர்ந்து - அளிந்திடா"[75]

என்ற பாடல் வரிகளின் வாயிலாக அளியையம் (காற்று), நீர்ப்பியையம் (நீர்), சுவை காணையம் (தீ), நிறைவையம் (ஆகாயம்), ஒன்றியையம் (மண்) என ஐந்தாக வகுத்துத் தொகுத்துள்ளனர்.

பஞ்சபூதங்களும் - தோடங்களும் - பிணித் தொகுப்பும்

சித்தர்கள் பஞ்சபூதங்களில் இயக்கு பூதங்கள், இயங்கு பூதங்கள் என வகைப்படுத்தினர்.

இயக்கு பூதங்கள்

வாதம், பித்தம், கபம் என்ற முத்தோடங்களே உடலை இயங்கச் செய்து, உடலுக்குத் தேவையான உணவுப் பொருட்களைச் செறிக்கச் செய்வது முதல் கழிவுகளை வெளியேற்றுவது வரை அனைத்துச் செயல்களையும் செய்கின்றன. இவை காற்று, தீ, நீர் எனும் இம்மூன்று பூதங்களின் இயக்கம் என்று கருதியதுடன் இச்செயல் வழிப் பூதங்களை இயக்குப் பூதங்கள் என்று சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இயங்கு பூதங்கள்

பூதாதி வடிவ உடல் கொண்ட காற்று, வெப்பம், நீர் இவை தன்னிலை இழந்தாலும் தன்னளவில் கூடினாலும் உடலின் இயங்கு பூதங்கள் பிணிக்கும் நோய்க்கும் ஆட்படுகின்றன. இயங்கு பூதமான ஆகாயம், மண் இவை இரண்டும் தன்னளவில் கூடினாலும் குறைந்தாலும் ஊனம் உடலிலும் மனத்திலும் ஏற்படும் என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

இயக்கு பூதத் தோடங்கள் - தனித்தோடங்கள்

வாதத் தோடம்	- காற்று	- வாதநாடி
பித்தத் தோடம்	- தீ	- பித்தநாடி
கபதோடம்	- நீர்	- கபநாடி

இயக்குபூதத் தோடங்களும் - தொந்தத் தோடங்களும்

வாதப்பித்தத் தோடம் - காற்று + நெருப்பு	= வாதப்பித்தநாடி
வாத கபத் தோடம் - காற்று + நீர்	= வாதகப நாடி
பித்தவாதத் தோடம் - நெருப்பு + காற்று	= பித்தவாதநாடி
பித்த கபத் தோடம் - நெருப்பு + நீர்	= பித்தகபநாடி
கபவாதத் தோடம் - நீர் + காற்று	= கபவாத நாடி
கபப்பித்தத் தோடம் - நீர் + நெருப்பு	= கபப்பித்த நாடி

என்று இயக்குத் தோடங்களைச் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

இயங்குபூதத் தோடங்கள் - தனித்தோடங்கள்

மேக தோடம் - ஆகாயம் - குருநாடி
கிரந்தித் தோடம் - மண் - பூதநாடி

என்று இயங்குபூதத் தோடங்களைச் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

இயக்குபூதம், இயங்கு பூதங்களின் கலப்புத் தோடங்கள்

அசையும் (இயக்கு) பூதங்களான காற்று (வாதம்), தீ (பித்தம்), நீர் (கபம்) இம்மூன்றும் இயங்குவதாலே உடற் செயல்கள் மற்றும் மனச் செயல்கள் நடைபெறுகின்றன. இவ்வியக்கங்களின் அடிப்படையை மூலமாகக் கொண்டே ஆகாயம், மண் எனும் அசையாத (இயங்கு) பூதங்களான உடலும், மனமும் இயங்குகிறது.

மேகவாதத் தோடம் - ஆகாயம் + காற்று = குருவாத நாடி
மேகபித்தத் தோடம் - ஆகாயம் + நெருப்பு = குருபித்தநாடி
மேக கபத் தோடம் - ஆகாயம் + நீர் = குருகபநாடி
மேகபூதத் தோடம் - ஆகாயம் + மண் = குருபூதநாடி
பூதவாதத் தோடம் - மண் + காற்று = பூதவாதநாடி
பூதபித்தத் தோடம் - மண் + நெருப்பு = பூதபித்தநாடி
பூதகபத் தோடம் - மண் + நீர் = பூதகபநாடி
பூதமேக தோடம் - மண் + ஆகாயம் = பூதகுருநாடி

என்று வகைப்படுத்தி, இவற்றுள் மேகபூதக்கலப்புப் பிணியிலும் மேகக்கபக் கலப்புப் பிணியிலும் விரைந்து மரணம் ஏற்படுவதையும் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இவற்றிற்கான அடிப்படை தோடநிலைகளையும், காரணங்களையும்,

"வாதமலாது மேன கெடாது - வளர்பித்தந்

தீதிலாது சத்தியாடாது - சேத்துமத்தின்
கோதமலாது விக்கலெடாது – குடற்தன்னில்"[76]

என்று வாதமே உடல் இயக்கப் பாதிப்புக்குக் காரணம் என்றும் கபத்தோட கேடு ஏற்பட்டால் விக்கல் முதல் குறியாக வரும் என்று மூலகாரணத்தையும் பிணிகளின் வளர்ச்சி நிலைகளையும் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது.

பிணிகளும் - தொகுப்பும்

சித்தர்கள் 4400க்கும் மேற்பட்ட பிணிகளைக் கண்டறிந்துள்ளனர். இதனை,

"நானடா நாற்பத்து நாலு நூறு
நயமுடனே நாற்பத்து எட்டு ரோகம்
...."[77]

என வாதம் எண்பத்து நாலு, பித்தம் நாற்பத்து எட்டு, கபம் தொண்ணூற்றாறு, தனுர் வாயு முன்னூறு, சயம் ஏழு, பெருவயிறு எட்டு, சூலை இருநூறு, பாண்டு பத்து என்பன போன்று பிணிகளை வகைப்படுத்தி அவற்றின் உட்பிரிவுகளையும் வகைப்படுத்தியுள்ளனர். அவ்வாறு பொதுப்பிணிகளை வகுத்ததுடன் உறுப்புகளில் ஏற்படும் பிணிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். இதை,

"கனிகொள் வாயிற் பதினெட்டக் காணூறு
இனியநாசி யிருப்பதேழாஞ் செவி
பிணி வரைம்பத் தாறெனப் பேசினார்"[78]

எனும் அங்காதிபாதம் நூலில் சித்தர் அகத்தியர் விளக்கியுள்ளார். வாயில் ஏற்படும் பிணிகள் பதினெட்டு என்றும் நாசியில் ஏற்படும் பிணிகள் இருபத்தேழு என்றும் செவியில் ஏற்படும் பிணிகள் ஐம்பத்தாறு என்றும் வகுத்துக் காட்டியுள்ளார். சித்த மருத்துவம் உறுப்புவழி பிணித் தொகுப்புகளையும் விளக்கியுள்ளார்.

சித்தர்கள் ஆதிப் பொருள்வழி பஞ்சபூதத்தையும், பஞ்சப் பூதவழி உடலையும் வகுத்துள்ளனர். அதன் அடிப்படையில் பிணிகளைப் பஞ்சபூதங்களின் வழியாக வாதப் பிணிகள், பித்தப் பிணிகள், கபப் பிணிகள், கிரந்திப் பிணிகள், மேகப் பிணிகள், தொந்தப் பிணிகள், உளநோய்கள் என்று வகைப்படுத்திச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

முடிபுகள்

- ✍ சித்தர்கள் காலம் கடந்து வாழக்கூடிய தன்மை கொண்டவர்களாக விளங்கியுள்ளனர். பிரபஞ்ச மூலத்தினைப் பற்றி அறிய உடல் உள்ள போதே முயற்சிக்க வேண்டும் என்பதே சித்தர்களின் தத்துவம் எனலாம்.

- ✍ உயிர்ப் பொருளின் மூலம் எது என்பதையும் உடல் எப்பொருளின் மூலம் என்பதையும் அறிய விரும்பியச் சித்தர்கள் அதன் வளர்ச்சி, முதுமை, நரை, பிணி போன்றவற்றையும் அவை செய்யும் மாற்றங்களையும் கண்டறிந்திருந்தனர்.

- ✍ சித்தர்கள் சாகாத நிலையைப் பெற்றவர்கள்; அழியாத உடம்பைப் பெற்றவர்கள்; உடலை அழிந்து போகாமல் காக்கும் வழியை அறிந்தவர்கள்; இவர்கள் முக்காலங்களையும் அறியும் ஞானம் உள்ளவர்கள் என்பதிலிருந்து சித்தர்களின் பரிணாம வளர்ச்சியை அறிந்து கொள்ளமுடிகிறது.

- ✍ கலைகளை அறுபத்து நான்கு என வகுத்தச் சித்தர்கள் அதற்கும் மேலாகச் சாகக் கலையையும் அறிந்திருந்தனர். பற்றில்லாது வாழும் தன்மை கொண்டு, பிரபஞ்ச உயிர்ப்பொருள் மூலத்தைக் குருவாகக் கொண்டவர்கள் சித்தர்கள் என்பதையும் சித்தர்களின் பாடல்கள் தெரிவிக்கின்றன.

- ✍ சித்தர்கள் காற்றில் உலாவவும் நீரில் மிதக்கவும் நெருப்பில் குளிக்கவும் எதனையும் ஆக்கவும் அழிக்கவுமான தன்மையைப்

பெற்றிருந்தனர். அத்துடன் தெளிந்த மனது, உயர்ந்த அறிவு, பிரபஞ்ச ஆற்றலை இயக்கும் வல்லமை ஆகியவற்றையும் கொண்டிருந்தனர் என்பதையும் அவர்களின் பாடல்களின் மூலம் அறிய முடிகிறது.

- ✍ நுண்மை, மிகுபருமை, மென்மை, விரும்பியதெய்தல், நிறைவுண்மை, ஆட்சியனாதல், கவர்ச்சி, வின்தன்மை என்னும் எண்வகைச் சித்திகளான அட்டமாசித்திகளைப் பற்றிச் சித்தர்கள் நன்கறிந்துள்ளனர். இதனை, உடல்வழிச் சித்துக்கள், மனவழிச் சித்துக்கள் என்னும் இரண்டு பிரிவுகளில் அடக்கியும் கூறியுள்ளனர்.

- ✍ சித்தர்கள் உடலின் செயல்பாடுகளைப் பற்றியும் அவற்றின் இயக்கங்களைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். இவர்கள் பிரபஞ்சத்தின் இரகசியத்தையும் இயக்கத்தையும் புரிந்திருந்தனர். சிவயோகம் இருக்கும் இடங்களே சித்தர்கள் சமாதி கொண்ட கோவில்களாகக் கருதினர்.

- ✍ சித்தர்கள் அறிவுவழி மனப் பயிற்சியும், உடல்வழிப் பயிற்சியும் கொண்டிருந்தனர் என்பதையும் அவர்களின் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

- ✍ பிற உயிர்களுக்குத் தீங்கு செய்தல் கூடாது என்று வலியுறுத்திய சித்தர்கள், அதனால் புலால் உண்போர் கீழோர் எனக் குறிப்பிட்டுள்ளனர். புலால் உண்பது பிணியை அதிகரிக்கச் செய்யும் என்றும் பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் செயல்களைச் செய்யக்கூடாது; பொய் மற்றும் களவுகளில் ஈடுபடுதல் கூடாது

எனவும் தமது பாடல்களில் வலியுறுத்திக் கூறியுள்ளனர். இவை சித்தர்களின் சித்தாந்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ✍ சித்தர்கள் உயிர்ப் பொருளின் மூலம் பற்றியும் உலகியல் வடிவான உடல் பற்றியும் அறிந்திருந்தனர். பிரபஞ்ச இயக்கத்தில் அசையும் பொருள்கள், அசையாப் பொருட்கள் மற்றும் பிற பிரபஞ்சப் பொருள்கள் அனைத்திலும் ஒரே வகையான மூலப் பொருள் உள்ளதை உணர்ந்திருந்தனர்.

- ✍ உயிர்ப்பொருளின் மூலத்தை, ஆதிவத்து, பராபரம், பரம்பொருள், ஆதிநாதாக்கள், ஆதிபகவான், முச்சுடர், ஆதி என்று பலபெயர்களில் அழைத்தனர். இருப்பினும் இப்பொருளை ‘ஆதி’ என்று பொதுப் பெயரிட்டு அழைத்து வந்தனர்.

- ✍ ஆதியானது எட்டுவிதமான செயல்களைக் கொண்டுள்ளது என்பதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். பிரபஞ்சத்திலும் உயர் சீவன்களிலும் ஊழியிலும் பிற அனைத்திலும் தன்னைத்தானே அசைத்துக் கொண்டு, அதன்வழி ஐம்பூதங்களையும் அசைத்து இயக்கும் தன்மையுடையது ‘ஆதி’ எனச் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- ✍ படைத்தல், அளித்தல், காத்தல், அழித்தல் ஆகியச் செயல்களைச் செய்யும் தன்மையுடையது ‘ஆதி’ என்று சித்தர்கள் அறிந்திருந்தனர். உணரும் செயல்களான அசைதல், ஓசை, இணைதல், பிரிதல் ஆகிய நான்கு செயல்களையும் செய்யக் கூடியது ஆதி என்பதையும் சித்தர்களின் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

- ✍ ஆதியின் வெளித் தோற்றம், உள்தோற்றம் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர். பஞ்சபூதங்களான வெளி எனும் ஆகாயத்தையும், கால் என்ற காற்றையும், கனல் என்ற நெருப்பையும், அப்பு என்ற நீரையும், மண் என்ற உருவத்தையும் ஆதி தன்னகத்தே கொண்டுள்ளதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- ✍ ஆதியை இயல்பாகக் கண்களினால் நோக்க இயலாது. இது மிகவும் நுண்ணியது. இப்பொருள் பதி, பசு, பாசம் என்று கூறப்படுகிறது. பாசம் என்பது பதி, பசுவின் துணைப் பொருள்களாகும்.

- ✍ பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் ஆதியான பஞ்ச பூதங்களின் அடிப்படையில் படைக்கப்பட்டது என்பதைச் சித்தர்கள் உணர்ந்திருந்தனர். அத்துடன் உடலையும் பஞ்ச பூதங்களின் வழி, மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியப் பூதக் கூறுகளாக வகுத்துள்ளனர். உடலின் முடி, எலும்பு, தோல், நரம்பு ஆகியவற்றை மண்பூதத்தின் கூறு என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

- ✍ ஆதியானது பதி, பசு, பாசப் பொருட்களால் ஆன பஞ்சபூதமாகும். இது உடலாகவும் உயிராகவும் உள்ளது. உடம்பானது தொண்ணூற்றாறு விதமான இயக்கம் கொண்டது என்றும் இவ்வியக்கம் பஞ்ச பூதங்களின் அடிப்படையில் உள்ளது என்றும் சித்தர்கள் தங்களின் பாடல்கள் வழி உணர்த்தியுள்ளனர்.

- ✍ தோடங்களான உடல்களை வாத உடல், பித்த உடல், கப உடல் என்று மூன்று பிரிவுகளாகச் சித்தர்கள் பிரித்துள்ளனர். கலப்புத் தோட உடல்களை வாதப்பித்த உடல், வாதக்கப உடல், பித்த வாத உடல்,

பித்தக்கப உடல், கப வாத உடல், கப பித்த உடல் என்று சித்தர்கள் வகுத்துக் கூறியுள்ளதையும் அவர்களின் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

✍ பஞ்ச பூதங்களை வகுத்தச் சித்தர்கள் இயக்கு பூதங்கள், இயங்கு பூதங்கள் எனப் பகுத்தறிந்துள்ளனர். காற்று, தீ, நீர் எனும் இம்மூன்று பூதங்களும் இயக்கும் பூதங்கள் என்றும், இவை தன்னளவில் கூடினாலும் குறைந்தாலும் பிணி ஏற்படும். ஆகாயம், மண் இவை இரண்டும் இயங்குபூதங்கள் எனவும் இவை தன்னளவில் கூடினாலும் குறைந்தாலும் ஊனம் போன்ற குறைபாடுகள் ஏற்படும் என்பதையும் சித்தர்கள் பகுத்தறிந்துள்ளனர்.

அடிக்குறிப்புகள்

1. திருமந். பா.704.
2. சாமி. சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம், ப.27.
3. திருமந். பா.629.
4. எஸ்.பி.இராமசந்திரன் (பதி.ஆ.), கருவூரார் வாதகாவியம் 700, பா.301.
5. எஸ்.பி. இராமச்சந்திரன், (பதி.ஆ.), சித்தர் வரலாறு, ப.249.
6. மேலது, பா.302.
7. திருமந். பா.702.
8. இரா.தியாகராசன் மற்றும் பிறர், (பதி.ஆ.), எழுநூற்றொகுதி, (நமநாச திறவுகோல்), (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நூல் வெளியீட்டுக் குழு), பா.23.
9. எஸ்.பி.இராமசந்திரன், (பதி.ஆ), அகத்தியர் பெருநூல்காவியம் 12000 3ம் பகுதி, பா.411.
10. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், (திருமூலநாயனார் நாடி), பா.50.
11. வி.பலராமய்யா (தொ.ஆ), முப்புகுரு, (சட்டைமுனிபாடல்), ப.6. (பா.எ.இ.).
12. எஸ்.பி.இராமசந்திரன் (பதி.ஆ.), கருவூரர் வாதகாவியம் 700, பா.304.
13. திருமந். பா.1768.
14. மேலது, பா.534.
15. எஸ்.பி.இராமசந்திரன் (பதி.ஆ.), கொங்கணவர் வாதகாவியம் 3000 (முதல்காண்டம்), பா.527.
16. ஈசுவரபட்டா, சத்தியத்தின் சக்திநிலை (2ம் பாகம்), ப.1032.

17. திருமந், பா.1446.
18. சாமி. சிதம்பரனார், மு.நூ., ப.91.
19. திருமந். பா.242.
20. அரு.இராமநாதன், சித்தர்பாடல் (கொங்கணச் சித்தர் பாடல்), பா.91.
21. குறள், 148.
22. திருமந். பா.244.
23. திருமந். பா.257.
24. த.கோவேந்தன், சைவமும் வைணவமும், ப.67.
25. மேலது, ப.67.
26. அரு. இராமநாதன், சித்தர் பாடல் (பாம்பாட்டிச் சித்தர்), பா.14.
27. அரு. இராமநாதன், சித்தர் பாடல் (காகபுசுண்டர்), பா.371.
28. திருமந். பா.2983.
29. மேலது, பா.2977.
30. மேலது, பா.28.
31. மேலது, பா.2251.
32. மேலது, பா.430.
33. மேலது, பா.403.
34. குறள். 9.
35. திருமந். பா.402.
36. மேலது பா.2705.
37. மேலது, பா.428.
38. மேலது, பா.881.
39. மேலது, பா.422.

40. மேலது, பா.368.
41. மேலது, பா.371.
42. மேலது. பா.2796.
43. மேலது, பா.398.
44. மேலது, பா.401.
45. மேலது, பா.2250.
46. மேலது, பா.2251.
47. மேலது, பா.408.
48. மேலது, பா.411.
49. மேலது, பா.415.
50. மேலது, பா.742.
51. அரு.இராமநாதன், சித்தர்பாடல்கள் (பட்டிணத்தார் பாடல்), பா.38.
52. திருமந். பா.1120.
53. மேலது, பா.1082.
54. மேலது, பா.154.
55. மேலது, பா.2372.
56. மேலது, பா.161.
57. மேலது, பா.506.
58. நாயராயண வேலுப்பிள்ளை, ஔவை குறள். பா.2.
59. திருமந். பா.2425.
60. மேலது, பா.23.
61. மேலது, பா.1625.
62. மேலது, பா.1067.

63. மேலது, பா.2419.

64. மேலது, பா.1625.

65. மேலது, பா.1067.

66. மேலது, பா.1167.

67. மேலது, பா.432.

68. மேலது, பா.9.

69. தொல். பொருள். இளம். புறத். நூற். 2.

70. இரா.தியாகராசன் மற்றும் பிறர், அங்காதிபாதம், (பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நூல் வெளியீட்டுக் குழு), பா.46.

71. ந.தெ.சிகாமணி முதலியார், அகத்தியர் பரிபூரணம் 1200, பா.38.

72. இரா.தியாகராசன் மற்றும் பிறர், மு.நூ., பா.21.

73. குறள். 941.

74. இரா.தியாகராசன் மற்றும் பிறர், மருத்துவத் தனிப்பாடல்கள், (பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நூல் வெளியீட்டுக் குழு), பா.62.

75. மேலது, பா.66.

76. ம.சண்முகவேலன், சித்தமருத்துவ நோய்நாடல் நோய் முதல் நாடல் திரட்டு, ப.340. (பா.எ.இ.).

77. கந்தசாமிமுதலியார், (தொ.ஆ), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்த்திரம், இரத்தினச் சுருக்கம் ஐந்நூறு, பா.12.

78. மேலது, பா.104.

இயல் – 3

சித்தமருத்துவத்தில் பேறுகாலமும் பிணிப்பகுப்பும்

தமிழர்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் கூறும் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியமாகும். தமிழர்களின் சித்த மருத்துவ அறிவைப் பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. இதிலிருந்து தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழ் மருத்துவமான ‘சித்த மருத்துவம்’ இருந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. பெண்களுக்குரிய மருத்துவ முறைகளில் சித்தர்கள் ஆழ்ந்த அறிவுடையவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது. அந்தவகையில் சித்த மருத்துவத்தில் வகுக்கப்பட்டுள்ள கரு அமைதல், பேறுகாலம், குழந்தைப் பிறப்பிற்குப்பின் வருகின்ற நோய்கள் போன்றவற்றைப் பற்றி ஆராய்வதாகச் ‘சித்த மருத்துவத்தில் பேறுகாலமும் பிணிப்பகுப்பும்’ என்னும் இவ்வியல் அமைகின்றது.

தொல்காப்பியத்தில் கருவும் பேறுகாலமும்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே பெண்களின் பூப்பு மற்றும் கருவுறும் காலம் பற்றியச் சிந்தனைகள் இருந்துள்ளன. அதனால்தான் தொல்காப்பியரும் இதுபற்றி,

“பூப்பின் புறப்பா டிராறு நாளும்
நீத்தகன்றுரையார் என்மனார் புலவர்”[1]

என்று நூற்பா வகுத்துள்ளார். ஒரு பெண்ணுக்குப் 'பூப்பு' எனும் 'ருது' பட்ட காலத்தில் இருந்து சிலநாட்கள் கழித்துக் கருக் கொள்வதற்குத் தகுதியானவள் என்பதைக் குறிப்பிடுகின்றது.

பூப்புக்காலம் என்பது மூன்று அல்லது ஐந்து நாட்கள் கொண்ட காலமாகும். இக்காலத்தில் சுகாதாரம் கருதிப் பூப்பெய்திய பெண்ணைத் தனியறையில் இருக்கச் செய்வர். அத்துடன் புணர்தலையும் தவிர்க்க வைப்பர். பெண் பூப்பெய்திய காலத்திலிருந்து பதினாறு நாட்களுக்குள் கணவன், மனைவி என இருவரும் புணர்ந்தால் அவள் கருக்கொள்வாள் என்று இந்நூற்பாவின் வழி நச்சினார்க்கினியர் தமது உரையில் எடுத்துரைத்துள்ளார்.

சித்த மருத்துவப் பாடல்களில் பெண்கள் பூப்பெய்திய காலத்திலிருந்து பதினாறு நாட்கள் கருப்பை தாமரை போன்று மலர்ந்திருக்கும் காலம்; கருக்கொள்ளும் காலம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதை,

"ஆண்மையென்று மங்கையர்கள் பூர்க்குங்கா
லன்றுமுதல் பதினாறு நாளுமந்த"[2]

என்ற பாடலின் மூலம் பெண்கள் இக்காலங்களில் கருக்கொள்வதற்கு வாய்ப்புள்ள காலமாகச் சித்தர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

கரு உருவாக்கம்

கருஉருவாகும் காலத்தில் கரு எவ்வாறு உருவாக ஆரம்பிக்கின்றது என்பதை, ஆணின் விந்துக் கிருமியானது, பெண்ணின் சினை முட்டையில் புகுந்து அதைச் சினைப்படையச் செய்கின்றது. இதனை,

"விரையான விந்துவிட கிருமியப்பா

விதமான நாதமுடன் சேர்ந்து கொண்டு
சிறையாக அதைசினைப் பிக்கும்பாரு"[3]

என்ற அகத்தியச் சித்தர் பாடல் எடுத்துரைத்துள்ளது. அறிவியல் வளர்ச்சியடையாத காலத்திலேயே சித்தர்கள் பெண்ணின் கரு வளர்ச்சியடையும் நிலையை எடுத்துரைத்துள்ளதை அறிய முடிகின்றது.

கருக்கொண்டுள்ள சினை முட்டையானது எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர். இதனை,

"உறையான குப்பையில் சுக்கிலம் பாய
வுத்தமனே சுரோணிதந்தா ணுறைந்து கொள்ளும்
கறையாகப் பாய்ந்தவெளி தமருபோலக்
கழற்கொடிக் காய்ப் போற்றிரண்டு"[4]

என்று சினைப்பட்ட சினைமுட்டையானது விந்துக் கிருமியைத் தன்னுள் கொண்டு, உறைந்து கொண்டு கழற்சிக் கொடியுடன் உள்ள காய் போல் வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றது எனும் அகத்தியரின் இப்பாடல் இக்கருத்தையே "கழற்சியிலுள்ள வித்துபோன்று கருவும், கழற்சிக்காய் தோடு போல் கருவைச் சுற்றி மெல்லிய சவ்வுகளும் மூடப்பட்டுள்ளது"[5] என்கிறார் அனந்த நாராயண ஐயர்.

உண்மைக் கர்ப்பம்

ஒரு பெண் கொண்ட கரு உண்மையானதா அல்லது பொய் கர்ப்பமா என்பதைக் கருக் கொண்டவரின் நாடித் துடிப்பானது குண்டலப் புழுப்போல் ஊறிச் சென்றால் அவள் கொண்டிருக்கும் கரு உண்மையானது என்பதை அறியலாம். இதனை,

"காரிகை தமக்குப் பிள்ளை கருப்பையைப் பற்றி நின்றார்

கூறியவாத நாடி குண்டலப் புழுப்போ லூறும்''[6]

எனும் பாடலின் மூலம் உண்மைக் கர்ப்பத்தை நாடிவழி அறிந்து கொள்ளமுடியும் என்பதைச் சித்தர் பாடலின் வழி புரிந்து கொள்ளமுடிகிறது.

பொய்க் கர்ப்பம்

பொய்க் கர்ப்பம் என்பது ருது கருப்பையில் தேங்கி வெளியேறாத காரணத்தால் உண்டாகிறது. அவ்வாறு பொய்க் கர்ப்பம் கொண்ட பெண்ணின் வாதநாடி வெடித்துச் சிதறிப் பாய்ந்து செல்வதுபோல் உணரலாம் என்பதனை,

''மாதர்கை பிடித்தபோது வந்திடும் வாதநாடி
தீதுற வெடித்துப் பாய்ந்து சிதறியே கிளம்பி நின்றார்
பேதை தன் வயிற்றினுள்ளே பெருகு சுரோணித மேதங்கி''[7]

எனக் கூறுவதிலிருந்து, சித்தர்கள் கருக்கொண்ட பெண்ணின் நாடித்துடிப்பை அடிப்படையாகக் கொண்டு கர்ப்பத்தின் பொய், உண்மை நிலைகளை அறியும் முறைகளை வகுத்துள்ளதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

கருவில் குழந்தையறிதல்

கருவில் உள்ள சிசுவானது ஆணா, பெண்ணா அல்லது அலியா என்பதை அறிவதற்குப் புணர்ச்சிக் காலத்தில் நாசியின் வலது துளையில் சுவாசம் நடந்தால் ஆணாகவும், நாசியின் இடது துளையில் சுவாசம் நடந்தால் பெண்ணாகவும், நாசியின் இரு துளைகளிலும் சுவாசம் நடந்தால் அலியாகவும் குழந்தை பிறக்கும் என்பதை,

''ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்''[8]

என்ற திருமந்திரப் பாடலின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும்,

"குழவியும் ஆணாம் வலத்து வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்து வாகில்
குழவியும் இரண்டாம் அபாணன் எதிர்க்கில்
குழவியும் அலியாகுங் கொண்டகால் ஒக்கில்"[9]

எனும் பாடலிலும் ஆண், பெண், அலி என்ற கருவளர்ச்சியைக் கணித்துக் கூறியுள்ளார். உறவுக்காலத்தில் அபாணவாயு மேல் நோக்கி வந்தால் இரட்டை குழந்தை உண்டாகும் என்ற செய்தியையும் திருமூலர் சுட்டிக்காட்டியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளின் உருவத் தோற்றம்

புணர்ச்சிக் காலத்தில் சுவாசத்தை அடிப்படையாக கொண்டு பிறக்கும் குழந்தை குட்டை, முடம், கூன் என்ற நிலைகளில் உருவாகும் என்பதையும் அக்காலத்திலேயே சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதை,

"பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படின் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லை பார்க்கிலே"[10]

என்ற திருமந்திரப் பாடல் குறிப்பிடுகின்றது. இதில், உட்செல்லும் சுவாசமானது குறைந்தால் சிசு உயரமின்றியும், சுவாசம் இளைத்தால் முடமாகவும், சுவாசம் நடுப்படின் கூனாகவும் குழந்தை உருவாகும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சுவாசக் கணிப்பு என்பது தந்தைக்கு மட்டுமே என்றும் தாய்க்கு இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது இங்குச் சுட்டிக் காட்டத்தக்கது.

குழந்தையின் உடல் வளர்ச்சி

தந்தையின் சுவாசத்தைக் கொண்டு கருவில் உருவாகும் சிசுவின் உடல் வளர்ச்சியினை அறிந்த சித்தர்கள் கருக் கொண்ட பெண்ணின் உடலில் கழிவுகள் மிகுவதைக் கொண்டு, அவர்களின் சிந்தனையையும் புலன்களான கண், வாய் இவைகளின் செயல்களையும் சித்த மருத்துவத்தில் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர். கருவளர்ச்சிக் காலத்தில் உருவாகக் கூடிய தசநாடிகள் சரியான இடங்களில் உருவாகாவிட்டால் ஏற்படும் நிலைகளை,

"இடைகலையுஞ் சுழிமுனையுஞ் சேராடிலும் வேறாய்
இன்ப மிடனுங் கூனாய் குருடாய் முருடு மொன்டியு மாகுமாண்டே"[11]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தசநாடிகளால் இடகலை, பின்கலை, சுழிமுனை ஆகியவைச் சரியாக உருவாகாவிட்டால் கூன், குருடு, முடம் ஆகிய குறைபாடுடன் சிசுவின் உடல் வளர்ச்சி இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். சிங்குவை, புருடன் எனும் நாடிகள் இரண்டும் சரியாக உருவாகாவிட்டால் செவி கேட்புத்திறன் இன்றியும், இமைகள் சிமிட்டாத தன்மையும், காந்தாரி, அத்தி எனும் நாடிகள் இரண்டும் சரியாக உருவாகாவிட்டால் செவி கேட்புத் திறன் இன்றியும், மூக்குவாசனை அறியாத நிலையும் உருவாகும் என்றும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"பிரிவான மருத்துவத்தின் விவரம் முற்றும்
பிலமாக கருத்தோன்றி வளரும் நேர்மை
தெரியவே சொல்லுகிறேன் நன்றாய் கேளு
தெளிவாக அதனுடைய ரூபமெ ல்லாம்"[12]

எனக் கருத்தோன்றுதல் முதல் கருவின் வளர்ச்சி உருவ விபரங்களையும் மிகவும் ஆழ்ந்து தெளிவாகச் சித்தர்கள் வகுத்துள்ளதை அறிய முடிகின்றது.

கருவுக்கு உண்டாகும் துன்பம்

கரு சினைப்பட்டதும் பத்துமாத காலம் வளர்ச்சியுண்டாகிறது. இந்தப் பத்துமாதக் கால வளர்ச்சியில் கருவிற்கு உண்டாகும் துன்பங்களை மாணிக்கவாசகர்,

"ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்"[13]

என்ற தமது திருவருட்பா பாடலில் முதல் திங்களில் திரண்டு பருமனாவதிலும் பிழைத்தும் இரண்டாம் திங்களில் கருப்பையில் நிலை பெறுவதிலும் பிழைத்தும் மூன்றாம் திங்களில் கருப்பை சுரோணித பிரவாகத்திலிருந்து பிழைத்தும் நான்காம் திங்களில் கருப்பை வாய் சுருங்குவதிலிருந்தும் பிழைத்தும் என்று கருப்பையில் ஏற்படும் மாற்றங்களிலிருந்தும் அத்துன்பத்திலிருந்து கரு பிழைத்து சிசுவாக உண்டாவதையும் விளக்கியுள்ளார்.

கருப்பையில் கரு வளரும்போது அதில் ஏற்படும் மாற்றங்களை அறிந்த சித்தர்கள்,

"சுருக்கான கருப்பந்தான் பெருப்ப தாலே
மல்லுகின்ற கருப்பையின் கழுத்தோ வப்பா
மகத்தான ரூபந்தான் விகார மாகும்"[14]

என்ற பாடலின் வழி, ஒவ்வொரு மாதத்திலும் பெண்ணின் கருப்பையில் ஏற்படும் மாற்றங்களையும், இதில் உள்ள 'உதயசலம்' என்ற நீர் தன்னளவிலிருந்து குறைவதையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

முழுவளர்ச்சியடைந்த கரு

முழுவளர்ச்சியடைந்த கருவானது கருப்பையில் எவ்வாறு இருக்கும் என்பதை,

"சொல்லுகிறேன் தலைகீழம் கால்கள் மேலுந்தான்

சொகுசான கைகள் கட்டி மார்போ டப்பா
வல்வினையா யணைந்திருக்கும் வண்மை பாரு
வாகான முழங்கால்கள் முடங்கிக் கொண்டு"[15]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிசுவின் சிரசுப் பகுதி கருப்பைவாய் நோக்கிக் கீழ்பக்கமும், கைகால்கள் மார்போடு கட்டிக் கொண்டும், கால்கள் முடங்கிக் கொண்டு பாதங்கள் ஒன்றின்மேல் ஒன்றாயும், முதுகும், தலையும் முன்புறமாகவும் தாடைப்பகுதி மார்போடு அணைத்தபடியும் உள்ள சிசுவை முழுவளர்ச்சியடைந்த சிசுவாகச் சித்தர்கள் கருதினர்.

சில சிசுக்களின் நாபிக்கொடி அந்த சிசுவின் கழுத்தைச் சுற்றி இருப்பதையும் அதன் காரணத்தைப் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர். இதனை,

"சொல்லுகிறேன் சிலவேளை கொடிதானப்பா
சிசுவினுட கழுத்தைத்தான் சுற்றிக் கொண்டிருக்கும்
வகையானவிதற்கு காரணந்தான் கேளே
கேளடா நீண்டா நீண்ட கொடியாவ தாலும்
கொடியான பணிக்குட நீர் மிகுதலாலும்
நாளடா இவ்வித மாகுங்குஞ் சொன்னேன்"[16]

என்று குறிப்பிட்டுள்ளனர். அதாவது நாபிக்கொடி நீண்டு வளர்வதாலும் பணிக்குடநீர் அதிகமாக இருப்பதாலும் சிசுவின் கழுத்தைச் சுற்றி நாபிக்கொடி சுற்றும் காரணத்தையும் அறிந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.

கர்ப்பிணிப் பெண்ணின் உடல் மாற்றங்கள்

ஒரு பெண் கருக்கொண்டிருக்கும் போது உடலில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களைப் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர். அவை பற்றி,

"அழகான ஸ்திரிகளுக்கு கருத்தான் தோன்றில்

ஆகின்ற குறிகள்தான் அனேக முண்டு
அதற்குள் சிலகுறியை அறையக் கேளு"[17]

என்று குறிப்பிட்டுள்ளது. பாடலில் கருவுற்ற பெண்ணிற்குத் திண்பண்டங்களில் மிக விருப்பம் ஏற்படும். உடல் வசீகர நிலையும், சிறுநீர் கழித்தலில் மாற்ற நிலையும் வாந்தியும் ஏற்படும். உமிழ்நீர் பெருகுவதும், மார்புகள் விம்மி வலிப்பதும், நாள்கள் செல்லச் செல்ல வயிறு கொஞ்சம் கொஞ்சமாகப் பெருத்து வருவதுமான பல மாற்றங்கள் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஏற்படும் பிணிகள்

கர்ப்பிணிப் பெண்கள் தங்களுக்கு ஒத்துக்கொள்ளாத சில உணவு வகைகளை உண்பதால் அவர்களுக்குக் 'கர்ப்பசன்னி' எனப்படும் முத்தோட பிணி உண்டாவதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர். அதன் காரணத்தைக் குறிப்பிடும் பொழுது,

"பாருமே பெண்டான பச்சுடம் பாங்காலம்
பாருமனுபோகக் தனிக்காடி யுண்ணுதல்
ஆறுக்குமாப்பண்ட மாகாது மாங்கனி
கோருமே கொண்டிற் கொண்டிடுஞ் சன்னியே"[18]

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் மூலம் புளித்த காடி உணவு, மாவுப் பொருள்கள், புளித்த மாங்காய் போன்ற பொருள்களை உட்கொள்வதால் இப்பிணி ஏற்படுவதையும் இப்பாடலின் வழி சித்தர்கள் தெரிவித்துள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்கள் விரும்பி உண்ணும் உணவு

கர்ப்பிணிப் பெண்கள் தாம் விரும்பி உண்ணும் உணவினைப் பற்றியக் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. இதனை,

"......... பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர்"[19]

என்ற குறுந்தொகைப் பாடலின் மூலம் கருக்கொண்ட பெண் புளியங்காயை விரும்பி உண்ணுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று கருக்கொண்ட பெண் மண்ணையும் விரும்பி உண்பாள் என்பதனை,

"வயாருறு மகளிர் வேட்டுகின் அல்லது
பகைவர் உண்ணார் அரும் மண்ணினையே"[20]

என்ற புறநானூற்றுப் பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

சித்த மருத்துவத்தில் பேறுகாலம்

நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் பேறுகாலத்தில் தனக்குப் பிறக்கும் குழந்தை நன்றாகவும் குறைவின்றியும் பிறக்க வேண்டும் என்று இறைவனிடம் கை தொழுவாள் என்பதனை,

"கடுஞ்சூல் மகளிர் பேணி கைதொழுது"[21]

என்னும் பாடல் அடியின் மூலம் அறிய முடிகின்றது. எனவே, பேறுகாலம் என்பது மிகவும் வேதனையானது என்பதைச் சங்ககாலப் பெண்கள் உணர்ந்திருந்தனர். இக்கருத்தையே சித்தர்கள் பேறுகால மருத்துவமுறை பற்றிக் கூறும் பொழுது,

"கேளடா வேதனை தான் பிறக்குஞ் சொன்னேன்
கெடிதான அதற்குத்தான் பேரைக் கேளு
நாளடா பிரசவவாயு பிரசூதவாயு என்றும்

நலமான இடுப்புவலி பிரசவ வேதனைதா னென்றும்"[22]

என்று பேறுகால வேதனையைக் கூறுவதுடன் அதனை, பிரசவவாயு, பிரசூதவாயு, இடுப்புவலி என்று அழைத்துள்ளதையும் அறிய முடிகின்றது.

பிரசவத்தின் நான்கு முறைகள்

கர்ப்பிணிப் பெண்களுக்கான பிரசவ முறைகளை நான்கு வகையாகப் பகுத்தறிந்துள்ளனர். அவை;

1. கிரமப் பிரசவம்
2. வேதனை பிரசவம்
3. கிரமாதீதப் பிரசவம்
4. விபரீதப் பிரசவம் என்பனவாகும்.

இனி இவற்றைப் பற்றிக் கீழே எடுத்துரைக்கப்படுகிறது.

1. கிரமப் பிரசவம்

பிரசவ வலி ஏற்பட்ட அறுபது நாளிகைக்குள் எந்தச் சிரமும் இல்லாமல் பிரசவம் உண்டாவது கிரமப் பிரசவம் எனப்படும்.

2. வேதனைப் பிரசவம்

பிரசவ வலி ஏற்பட்டு அறுபது நாழிகைக்கு மேல் வலி மிகுந்து ஆயுதங்களின் உதவியுடன் பிரசவம் ஆவது வேதனைப் பிரசவம் ஆகும்.

3. கிரமாதீதப் பிரசவம்

சிசுவின் தலை வெளிப்படாமல் புட்டம், கை அல்லது கால் முதலில் வெளித் தோன்றுவது கிரமாதீதப் பிரசவம் ஆகும்.

4. விபரீதப் பிரசவம்

மிகுந்த வேதனையுடன் இரட்டைப் பிள்ளைகள் பிரசவமாவது இவ்வகையான பிரசவ முறையாகும். வேதனையின் அடிப்படையிலும் சிசுவின் உறுப்பு வெளிப்படுவதை அடிப்படையாகவும் கொண்டு பிரசவ முறைகளை மேற்கண்டவாறு நான்காகப் பிரித்துள்ளனர் என்பது இங்குச் சுட்டிக் காட்டத்தக்கது. மருந்து முறைகளை மிகவும் நுணுக்கமாகவும் கவனமாகவும் சித்தர்கள் கண்டறிந்தள்ளனர் என்பதை நாமறிந்து கொள்ளமுடிகிறது.

கருக்கொண்ட பெண்ணின் கருப்பை விரிந்து பிள்ளைப்பேறு நடப்பதை,

“பருதியாய் பிரசவநோய் தான் ஆரம்பித்து
பக்குவமாய் கருப்பையின் வாய்தா னப்பா
அறுதியாய் பூரணமாய் திறக்கு மட்டும்
அப்பனே முதல்பா தம்என்று பேராம்”[23]

எனும் பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் விளக்கத்தின் மூலம் மூன்று விதங்களில் கருப்பை விரிவதை அறிய முடிகின்றது. அதாவது, கருப்பையின் வாய் பூரணமாய் திறப்பதை முதல் பாதம் என்றும், முதலில் குருதி வெளிப்படுவதை இரண்டாம் பாதம் என்றும், நஞ்சு என்னும் கழிவு வெளித் தோன்றுவதை மூன்றாம் பாதம் என்றும் வகுத்துள்ளது

மனங்கொள்ளத்தக்கதாகும். கடினமான பிரசவம் பற்றியும் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளதை,

"நேரான சிசுவினுட சிரந்தா னப்பா
நிச்சயமாய் பிரண்டிருந்தால் பிரசவந்தானும்
பேரான கஷ்ட முண்டாம் பாரு
பலமான அதற்குவகை சொல்லக் கேளு"[24]

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன. இப்பாடலின் மூலம் சிசுவின் தலை மாறி இருந்தாலும், தாயின் இடைக்குழி குறுகி இருந்தாலும் சிறுநீர் பை நிரம்பி இடைக்குழி அடைக்கப்பட்டிருந்தாலும் கடினமான பிரசவம் ஏற்படும் என்பதை நாம் அறிய முடிகின்றது.

சித்த மருத்துவத்தில் உறுப்பியலும் - பிணியும்

சித்த மருத்துவ நூல்களில் உடல் உறுப்புகளின் விபரங்களைப் பற்றியப் பல்வேறு பாடல்கள் பாடப்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. தண்டு வடத்திலிருந்து பிரியும் நரம்புகள் ஆசனம் வரையும் இருபக்கமும் பிரிந்து அந்த நரம்புகள் உடலோடு பரவி நிற்பதை,

"தரணியோர் தனக்கெல்லாம் முள்ளந்தண்டின்
தக்கயிரு புறந்தனினும் மணிக் கோர்வையாக
இரணமுள்ள சிரசிலிருந்து மூலமான
கீழான ஆசனத்தின் வரையிலப்பா
சரடாக நீண்டுடின் சரீரத்தோடு"[25]

என்று கூறுவதிலிருந்து உடலில் நரம்பு மண்டலத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவைச் சித்தர்கள் கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

நரம்பு மண்டலத்தின் வகைகள்

மனித உடலில் உள்ள நரம்பு மண்டலம் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதை,

"நல்வினை செயல் இந்திரிய நரம்பு ஒன்றும்
நலமான சலனத்தின் நரம்பு ஒன்றும்
தொல்வினை செய் ஒற்றுணர்வு நரம்பு ஒன்றும்
தோகையர்க்கும் இப்படியே இருக்குதென்றே"[26]

என்று வகைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளார். ஓசை, உணர்வு, உருவம், சுவை, வாசனை இவற்றின் உறுப்புகளான காது, மெய், பார்வை, ருசித்தல் மற்றும் வாசனை நுகர்தல் என்னும் ஐவகைச் செயல்களைச் செய்யும் நரம்புகளை 'இந்திரிய நரம்புகள்' என்றும், மன எண்ணத்திற்கேற்றபடி இயங்கும் நரம்புகளைச் 'சலன நரம்புகள்' என்றும், உறுப்புக்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புண்டாக்கிச் செயல்படுத்தும் நரம்புகளை 'ஒற்றுணர்வு நரம்புகள்' என்றும் பகுத்துள்ளதைக் காணமுடிகின்றது.

இதயம்

உடலின் இயக்கத்திற்கு உயிர் நாடியாக இருப்பது இதயம். இதயத்தின் சிறப்பு மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர். இதை,

"பூணடா இதயந்தான் சதைக ளாலே
பொங்கமுடன் ஏற்பட்டு தாமரை மொட்டென"[27]

எனும் பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன. இதயத்தின் வடிவம் தாமரை மொட்டு போன்றும் அவற்றுள் நான்கு அறைகள் கீழிரண்டு, மேலிரண்டாக

இருப்பதையும் அறிந்துள்ளனர். அறைகளை மேலும் கீழுமாகத் தடுத்திருக்கும் சவ்வுகளைக் கபாடமென்றும், அந்த நான்கு அறைகளையும் இடது சடரம், வலது சடரம் மற்றும் இடது சிரவம், வலது சிரவம் என மேலறைகளையும், கீழறைகளையும் பகுத்துக் கொண்டிருந்ததை அறிய முடிகிறது.

குருதி சுழற்சி முறை

உடல் உறுப்புகளைப் பகுத்து ஆராய்ந்ததுடன் அவற்றில் குருதியின் சுழற்சி முறை பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர். சுத்தக் குருதியை உடல் முழுவதும் கொண்டு சேர்க்கும் குருதிக் குழலை,

"மனமான நாடியது இதயத்தின்
மக்களுட இடதுபக்கந் தண்ணில்தோன்றி
எங்குமே ஓடுகின்ற நாடிக்குள்ளே
இதமாக ஓடுகின்ற ரத்தமப்பா
பொங்கியே இந்திர கோபந்தனைப் போல
புகழாக சிவந்திருக்கும் புதுமை பாரு"[28]

என இதயத்தின் இடது பக்கத்திலிருந்து உடல் முழுவதும் நாடிவழியாகச் சுத்தமான குருதிச் சுழற்சி நடைபெறுவதையும் சுத்தமான குருதி இந்திர கோபம் எனும் பூச்சியைப் போல் சிவந்து இருக்கும் என்றும் கூறியுள்ளனர். அந்தப் பூச்சியை விவசாய நிலங்களில் காணலாம். அதன் தோற்றம் எட்டுக்கால் பூச்சி போன்றும் கோவைப்பழம் போன்ற சிவந்த நிறமும் கொண்டது. எனவே, இந்தப் பூச்சியை உவமையாகக் கூறுவதிலிருந்து சராசரி எளியவரும் சுத்தக் குருதி நிறத்தை உணரும்படி பாடியுள்ளதை அறிய முடிகின்றது.

சுத்தக் குருதியானது அசுத்தம் அடைந்தபின் கருப்பாக இருக்கும் என்பதைப் பற்றி,

"சொல்லுகிறேன் சிவந்து ரத்தம் கருத்து அய்யா
சீர்கெட்டுப் போன பின்பு
வல்விசைசெய் இதயத்தின் வலதுபக்கம்
வளமாகக் கொண்டு செல்லும் குழல் தனக்கே
செல்லுகின்ற நாளங்கள் என்று பேராம்"[29]

என்ற பாடல், கெட்ட குருதி கருப்பாக இருப்பதையும் அது சுழற்சியின் இதயத்தின் வலப்பக்கத்தை அடைவதையும் அசுத்த குருதியை இதயத்திற்குக் கொண்டு செல்வது நாளங்கள் என்றும் கூறுகின்றது. எனவே, சித்தர்கள் உடல் உறுப்புகள், உடல் உறுப்பு இயக்கங்கள் பற்றி ஆழ்ந்த அறிவு கொண்டவர்கள் என்பதை அறிய முடிகின்றது.

உறுப்புகளின் உட்பிரிவுகள்

மனித உடலின் ஒவ்வொரு உறுப்பின் உட்பிரிவுகளைப் பற்றி ஆராயும்போது,

"கன்றான கருவிழியும் வெள்விழியி னோடு
கருவான இமையுடனே கடைக்கண் ணென்றும்
முக்கியமாய் விழிமத்தியில் ஆறுசதைதா னுண்டு
புனிதமுள்ள வெள்ளைச்சவ்வு கருத்த சவ்வாம்"[30]

என்று இப்பாடல் கண்களின் உட்பகுதியைக் கருவிழி, வெள்ளைவிழி, இமை, கடைக்கண் என உறுப்புகளைப் பகுத்து, விழியின் மத்தியப் பாகத்தில் ஆறு பிரிவுகள் உள்ளதையும் அவற்றில் வெள்ளைச் சவ்வு, கருத்த சவ்வு மற்றும் பார்வைக்கான சவ்வு போன்ற ஏனைய மூன்று

சவ்வுகளும் உள்ளன என்றும் கூறுகின்றது. சித்த மருத்துவத்தை வகுத்தச் சித்தர்கள் உடலில் நுண் உறுப்புகள் முதல் ஏனைய உறுப்புகள் அனைத்தையும் பகுத்துப் பார்த்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இக்கருத்தை வலியுறுத்தும் வண்ணமாக உடல் உறுப்புகளின் பிரிவுகளைத் தொல்காப்பியர்,

"உந்தி முதலா முந்துவளி தோன்றி
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி"[31]

என்ற நூற்பாவில் உந்தி, தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு மற்றும் அண்ணம் ஆகிய உடல் உறுப்புக்களைப் பற்றிக் கூறியுள்ளது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களில் மட்டுமின்றி, சீவக சிந்தாமணி போன்ற காப்பிய இலக்கியங்களிலும் உடல் உறுப்புகளைப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. வளி (வாதம்), பித்து (பித்தம்) ஐ (கபம்) என்று சித்த மருத்துவத் தோடங்களைப் பற்றிக் கூறுவதுடன், வாத, பித்த, கபம் ஆகிய முத்தோடங்களைப் பற்றியும், ஊன், எலும்பு, ஈரல், மூளை, குடல், தோல் மற்றும் நரம்பு எனவும் உறுப்புகளைப் பற்றிச் சீவகசிந்தாமணி கூறுவதை,

"குரைவளி பித்தோ டையே
யேதஞ்செய் மலங்க ணெய்தோ
றிறைச்சி யென் பீருண்மூளை
கோதஞ்செய் குடர்கள் பின்றோ
னரம்பொடு வழம்பி தென்றான்"[32]

என்றப் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது. எனவே, தமிழ்ச் சித்த மருத்துவ முறையில் காணப்படும் உறுப்பியல், தொல்காப்பியர் காலத்திற்கு முன்னும் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பதை உணர முடிகின்றது.

பாலர் பிணிகள்

குழந்தைகள் கருவில் உருவாகியது முதல் பிணிக்கு ஆட்படுவதையும் பிறந்த பின்பும் சில குழந்தைகள் பிணிக்கு ஆட்படுவதையும் சித்தர்கள் 'பாலவாகடம்' (குழந்தை மருத்துவம்) என்று பெயரிட்டு அழைத்தனர். இவற்றில் குழந்தைகளுக்கு வரும் நோய்கள் பற்றி,

> "பத்தான பாலருக்குப் பிறந்த நோய்கள்
> பாரிலுள்ளோர் தானறியப் பகரக்கேளாய்
> முத்தான சூலைகணை கிரந்திநோய்கள்
> முடிவிலவை ஒவ்வொன்றும் பதினெட்டாம்
> சித்தான மாந்தமுடன் சுரமுந்தோடம்
> சிறப்புடனே ஒவ்வொன்றும் இருபதாகும்"[33]

என்ற பாடலில், குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலில் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது சூலை 18, கணை 18, கிரந்தி 18, மாந்தம் 20, சுரம் 20 வகை என அவற்றைப் பிரித்து வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு நோய்கள் ஏற்படுவது பற்றிச் சித்தர்கள்,

> "பிறந்தநாள் பிள்ளைக்குத் தானே தன் தாயார்
> பிதாவலே சிசுவுக்கு மேலே தோன்றும்"[34]

என்று குறிப்பிட்டுள்ளனர். குழந்தைக்குப் பிணி பெற்றோராலும், பருவகாலத்தினாலும், தாய் கொண்ட உணவு வழியும், பாரம்பரியம், வசிப்பிடம், சூழல் இவற்றை அடிப்படையாகக் கொண்டும் உண்டாகும்.

பொதுவாகக் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களை இரண்டு வகைப்படுத்தினர். அவை: 1.புறக் காரணப் பிணிகள், 2. அகக் காரணப் பிணிகள் என்பனவாகும்.

1. புறக்காரணப் பிணிகள்

கருவிலிருந்த சிசு பேறுகாலத்திற்குப் பிறகு மாற்றுப் புறச் சூழல் காரணமாக ஏற்படும் நோய்களையும் அவற்றின் குணம் குறிகளையும் முறையே, **“**சிசு சீறியமுதல் விக்கல், பொருமல், உப்புசம், பால் எதிரெடுத்தல், கொட்டாவி, பால்குடியாமை**”**[35] என வகுத்துள்ளனர்.

சிசு பிறந்த மூன்றாம் மாதம் முதல் ஒரு ஆண்டிற்குள் ஏற்படும் நோய்களையும் புறக்காரணத் தோடம் என வகுத்த சித்தர்கள், அப்பிணிகளைப் பட்சிப்பிணி, பறவைப் பிணி, புள் பிணி, எட்சிப் பிணி, எச்சில் பிணி, பெண்பிணி, ஆண்பிணி, தேரைப் பிணி எனப் பிணிகளையும் சில உட்பிரிவுகளையும் வகுத்துள்ளனர். இப்பிணிகளின் பொதுக் குணங் குறிகளாக வயிறு பொருமுதல், நீராக மலம் கழிதல், துர்நாற்றம், உச்சியில் பள்ளம், துர்வாடை, கண் குழிவிழுதல், உடல் சுருங்கிக் கழுத்து நீண்டு மெலிதல், பால் குடியாமை போன்றவை ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

2. அகக் காரணப் பிணிகள்

அகக் காரணங்கள் என்பது தாய்ப்பால் அல்லது உணவுவழி குழந்தை உடலினுள் உள்ள இயக்கம் பாதிக்கப்பட்டு, அதன்வழி ஏற்படும் பிணிகளை,

"சித்தான மாந்தமுடனே சுரமுந்தோடம்
சிறப்புடனே ஒவ்வொன்றும் இருபதாகும்
எத்தாலே வந்ததென்று கேட்பாயாகில்
இளமாதர் முலைப்பாலால் விளைந்த நோயே"[36]

என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலின் மூலம் மாந்தம் (செரியாமை) முதலான பிணிகள் தாய்ப்பால் மற்றும் உணவுகள் வழித் தோன்றும் பிணிகள் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாந்தப் பிணிகள்

சித்தர்கள் மாந்தப் பிணிகளைச் சிறப்புக் குணம், குறிகள் அடிப்படையில் வாத மாந்தம், பித்த மாந்தம், கப மாந்தம், விட மாந்தம் என முப்பத்தொரு வகையாகப் பிரித்துக் கூறுவர். அவற்றின் குணம் குறிகளை,

"மாந்த நோயில் வரும்பொதுத் தன்மைகள்
வாய்ந்த பலவகை வழுத்தல் கேளாய்"[37]

என்று கூறுவதிலிருந்து, உடலில் வெப்ப நாற்றம், சுரம், வியர்வை, சுறுசுறுப்பு இன்மை, மயக்கம், கண்விழிச் சிவப்பு, மிரண்டு பார்த்தல், வீறிட்டு அழுதல், பயந்து இருத்தல், குளிர்ந்த உடல், ஈனக்குரல், காற்றுடன் நீர் கலந்த பேதி, பசியின்மை, வாந்தி, வயிற்றில் வாயு நிரம்பி பொருமிக் கொள்ளுதல், வயிறு வலியால் வீறிட்டு அழுதல் எனச் சிசுக்களின் மாந்தப் பிணிகள் வகுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

கணப்பிணிகள்

கணப்பிணி என்பது கருவில் சிசு உள்ள போது கருப்பை வெப்பம் மிகுந்த நிலையில் இருப்பதாகும். இதை, “சீரே புணர்ச்சிக் காந்தலதுஞ் சிறந்தகர்ப சூடுமுதல் என்று மாந்தப் பிணியில் குழந்தையின் உடலில் வாத, பித்தம் தன்னளவில் மிகுந்து, கபம் தன் அளவில் குறைதலின் காரணத்தால் கணப்பிணி உண்டாகிறது. இப்பிணி குழந்தையின் மூன்று வயது முதல் ஏழு வயது வரையில் ஏற்படுவதாகும். இதன் சிறப்பு, குணம், குறிகளின் அடிப்படையில் வாதக் கணம், பித்தக் கணம், கபக் கணம், மாந்தக்கணம், நீர்க்கணம், பிரளிக்கணம், ஊதுக்கணம் என்பன போன்ற இருபத்து நான்கு வகையாக வகுத்துள்ளனர்.”[38]

கணப் பிணியின் பொதுக் குணம், குறிகளை,

“ஒடுங்கியே வாயுலந்து தண்ணீர் கேட்டும்
உண்மையாய் மலபேதி வழும்பாய் வீழும்”[39]

என்ற பாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வயிற்றுவலி, நாவேக்காடு, மேல் மூச்சு, இருமல், உடல் வெப்பமாதல், தொண்டைக் கமறல், வயிறு கழிதல், உடல் வறட்சி ஆகியவை கணப்பிணியின் அறிகுறிகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கரப்பான் பிணி

தாய், தந்தை வழி ஏற்படும் பிணிகளில் கரப்பான் பிணியும் ஒன்று எனலாம். இவை ஒவ்வொன்றும் பதினெட்டு வகையுடையன எனலாம். இதை,

“முத்தான சூலைகணை கிரந்தி நோய்கள்
முடிவுலவை ஒவ்வொன்றும் பதினெட்டாம்”[40]

என்ற பாடலடியால் அறியலாம். கரப்பான்களை, வாதக் கரப்பான், பித்தக் கரப்பான், கபக் கரப்பான், அரிகரப்பான், ஊதுகரப்பான், சூலைக் கரப்பான்,

வெடிகரப்பான் என்பன போன்ற பதினெட்டு வகையான கரப்பான் பிணிகளைச் சித்தர்கள் அறிந்துள்ளனர். இவற்றின் பொதுக் குணங்களாக அரிப்பு, புண், தோல் தடிப்பு, சொரிதலில் நீர்வடிதல், தோல் வெடிப்புகளிலிருந்து தேன் போன்று நீர் வெளிப்பட்டுப் பரவுவதால் கருப்பாகவும், சிவந்தும் (தோலில்) கரப்பான்கள் தோன்றும்.

அக்காரப் பிணி

அக்காரம் என்னும் இப்பிணி பித்த அதிகரிப்பால் உள் உறுப்புகளில் வெப்பத்தை உண்டாக்குகிறது. இதன் அறிகுறிகளாக உதட்டின் இருபக்க ஒட்டுகளில் வெள்ளையாகவும் புண்ணாகியும் இருக்கும். இப்பிணியைச் சிறப்புக் குணக் குறிகளின் அடிப்படையில் சூலியக்காரம், நீலியக்காரம், சோதியக்காரம், வீழியக்காரம் என்று பெயரிட்டு இப்பிணி வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சுரப்பிணி

சுரப்பிணியானது வாதம், பித்தம், கபம், தன்னளவில் கூடிக்குறைவதாலும் உணவு, பருவம் இவற்றின் அடிப்படையாலும் ஏற்படுகிறது. இதன் உட்பிரிவுகளை,

> “உரைத்தோமே பாலருக்குச் சுரவகுப்பு
> உடல்காயு ஆமசுரம் உறுதிமெத்த”[41]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது, வாதசுரம், பித்தசுரம், கபசுரம், மாந்தசுரம், கணச்சுரம் என்பன போன்ற முப்பத்து மூன்று வகையான பிணிகளை உள்ளடக்கியது சுரப்பிணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் இருபதுவகைப் பிணிகள் தாய்ப்பால் மற்றும் உணவு வழி உண்டாகிறது என்பதையும் விளக்கியுள்ளனர்.

சன்னிப்பிணி

குழந்தைகளுக்கு முத்தோடங்கள் எனும் வாதம், பித்தம், கபம் மூன்றும் தன்னளவில் மாறுபட்டுக் கலப்பதால் தோன்றும் பிணி சன்னிப்பிணியாகும். இதன் பொதுக் குணக் குறிகளாகக் கண்கள் மேல் நோக்குதல், உடல் நடுக்கம், மூர்ச்சை, கை, கால்கள் குளிர்ந்திருத்தல், மலம் காற்றுடனும் சளியுடனும் கழிதல், மலம் கருப்பாயிருத்தல், பால் குடியாமை, உணவு உட்கொள்ளாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். மாந்தச் சன்னி, ஆமச்சன்னி, மாந்தகனச் சன்னி, கோராமச் சன்னி, தாந்தீரகச் சன்னி என்று சிறப்புக் குணக் குறிகளின் அடிப்படையிலும் சன்னிப் பிணியை வகைப்படுத்தியுள்ளனர்.

கழிச்சல் பிணி

குழந்தைகளுக்குக் கழிச்சல் என்னும் பிணி, மிகுந்த பித்தம், வாதம் மற்றும் கபத்துடன் கலப்பதினால் உண்டாவதாகும். இப்பிணியின் பொதுக் குணம், குறிகளாக, வயிறு பொருமல், மலம் காற்றுடன் பீச்சியடித்துக் கழிதல், துர் நாற்றம், மலம் எண்ணெய்ப் பசையுடனிருத்தல், கைகள், கால்கள் குளிர்ந்திருத்தல் போன்றவை ஏற்படும். இவற்றின் குணம், குறிகளின் அடிப்படையில்,

> “சொல்லுகிறேன் கழிச்சல்வகை தோடம் தன்னைச்
> சுழி மாந்தக் கழிச்சலைச் செப்பலாகும்”[42]

என மாந்தக் கழிச்சல் மூன்று வகையாகவும், கணக் கழிச்சல் மூன்று வகையாகவும், ஆமக்கழிச்சல் எட்டு வகையாகவும் எனக் கழிச்சலைப் பதினான்கு என வகைப்படுத்தியுள்ளது சுட்டிக்காட்டத்தக்கது.

வலிப்புப் பிணி

குழந்தைகளுக்கு வலிப்புப்பிணி உதாணவாயுவிலும் சமான வாயுவிலும் பித்த வாதம் அதிகரிக்கும் பொழுது உண்டாவதைச் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் இதன் பொதுக் குணம், குறிகளாகக் கை, கால் வெட்டி இழுத்தல், முறுக்குதல், பற்கிட்டுதல், வாயில் நுரைத் தள்ளுதல் போன்ற குறிகளைக் கொண்டிருக்கும். இவற்றின் சிறப்புக் குணங்களாக வயிறு பொருமுதல், அசீரணமாதல், மலம் கழியாதிருத்தல், மிகுந்த சுரம் ஏற்படுதல் போன்றவை ஏற்பட்டிருக்கும் என்பர்.

ஊதல், பாண்டு, காமாலைப் பிணிகள்

உடலில் பித்தம் குறைந்து வாதம் மிகுதலில் தோன்றும் இப்பிணிகளின் சிறப்புக் குணங்களை ஆறாக வகைப்படுத்தியுள்ளனர். இதன் பொதுக்குணங்களாக உடல் வெளுத்தல், உடல் வீக்கம், பசி இன்மை, உடல் அசதி, வறட்சி, இளைப்பு, மஞ்சள் நிற மலம், சிறுநீர், வெள்ளை நிற மலம், வயிற்றுவலி, கண் வெள்ளைவிழி மஞ்சள் நிறமாகுதல் போன்றவற்றைச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மூலப் பிணிகள்

குழந்தைகளுக்கு ஆசன வாயில் வெப்பம் (பித்தம்) அதிகரிப்பதால் மூலப்பிணி தோன்றுகிறது. இதனை,

"நீரும் அபானத்தில் நின்று பொரி கொண்டு
சேரும் மூலத்தில் சூடுவுண்டாகும்"[43]

என்று கூறுவதிலிருந்து அறியலாம். ஆசனவாய்க் கடுப்பு, வலி, இரத்தம் வடிதல், வெடிப்பு, மலம் கழியாமை போன்றவை இப்பிணியின் பொதுக் குணம் குறிகளாகும். இப்பிணியின் சிறப்புக் குணங்களாக மூல ரத்தக் கணம், முக்கல், வயிற்றுக் கடுப்பு, இரத்தக் கடுப்பு, சீதக்கடுப்பு, அதிசாரபேதி, கிராணிக் கடுப்பு, கீழ்மூலம், அடித்தள்ளுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தோடவகுப்புப் பிணிகள்

தோடவகுப்புப்பிணிகள் குழந்தை பிறந்த முதல் பன்னிரெண்டு வருடங்கள் வரை வருவதாகும். இப்பிணியின் பொதுக் குணங் குறிகளாக மலம் கழிச்சல் தண்ணீர் போன்றும், அழுகிய முட்டை நாற்றத்துடனும் தலை உச்சியில் துர்நாற்றத்துடனும் சிறு பள்ளம் போன்றவை உண்டாகும். முதல் வருடம் இப்பிணி உண்டானால் காளி தோடம் என்றும், இரண்டாம் வருடம் உண்டானால் உத்திரபதித் தோடம் என்றும் மூன்றாம் வருடம் உண்டானால் பத்திரகாளித் தோடம் என்றும் பன்னிரெண்டு வருடங்கள் வரை உண்டாகும் பிணிகளை எடுத்துரைத்துள்ளனர்.

இளம்பிள்ளை வாதப் பிணி

குழந்தைகளுக்கு உண்டாகும் பிணிகளில் மிகவும் கொடிய பிணி இளம்பிள்ளை வாதப் பிணியாகும். இப்பிணியினை,

"வாதமடா இளம்பிள்ளை வாதங் கேளாய்
வண்மையுள்ள கால்கள்தா னசைவற்றுப் போகும்
நீதமுடன் குழந்தைகளுக்கே இந்த ரோகம்
நிச்சயமாய்க் காணுமென நினைவாய் சொல்லு"[44]

என்ற அகத்தியர் பாடலால் அறியலாம். இதை, தண்டுவடப் பகுதியில் ஏற்படும் பாதிப்பால் பாதம் சுரனையற்றும் கொஞ்சம் கொஞ்சமாக அசைந்து கால்கள் செயலிழந்து போகும்படியான வாதப்பிணி என்று கூறுவர்.

அம்மைப் பிணி

இப்பிணி 'வைசூரி' எனவும் அழைக்கப்படுகிறது. இப்பிணியானது உடல் கொண்ட மிகு பித்தத்தினால் உண்டாகிறது என்பதனை,

"பார்த்துவசூரி நூல் தொகுப்பை பண்பாய் மாந்தர் தானறிய
கோர்த்து தேகச் சூடனைத்துங் குறிப்புங் குணமும் சாத்தியமும்"[45]

எனும் பாடல்வரிகளால் அறியலாம். பாலம்மை, பனை முகரி அம்மை, வரகு திரி அம்மை, கொள்ளம்மை, கல்லம்மை என்பன போன்ற பத்து வகையான அம்மைப் பிணியினைச் சித்தர்கள் அறிந்துள்ளனர். மிகு பித்தத்தால் உண்டாகும் இந்த அம்மைப்பிணி பிற தோடமான வாதம், கபம் ஆகியவற்றுடன் கலந்தால் ஏற்படும் பிணிகளை வைசூரி கிரந்தி, வைசூரி அதிசாரம், வைசூரி சீதகடுப்பு, வைசூரி இரத்தபேதி எனவும் பிரித்துள்ளனர்.

மகளிர் பிணிகள்

தமிழர்கள் தொன்மைக் காலந்தொட்டே மகளிர் உடல் நலம், மகளிர் மருத்துவம் பற்றி அறிந்திருந்தனர். அவ்வகையில் சித்த மருத்துவத்தில் பெண்களுக்கு ஏற்படும் பிணிகளைப் பற்றியும் அவர்களின் உடல் நலம் பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ருதுப் பிணி

ருது எனும் கழிவு இரத்தமானது மாதம் ஒரு முறை மூன்று முதல் ஐந்து நாட்கள் வெளிப்படுவதாகும். இவற்றின் அளவு மிகுந்து வெளிப்பட்டால் அவற்றை 'பெரும்பாடு' என்று அழைப்பர். இதனை,

"மையூருங் கண்ணாட்கு மகத்தான பெரும்பாடாம்
கொய்யூருந் தண்டினிற் கொப்பளிக்கு மிரத்தம்"[46]

என்ற பாடல் வரிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. இவற்றைச் சாதாரணப் பெரும்பாடு, அசாதாரணப் பெரும்பாடு, கழலை, கட்டிகள், சினைப்பாதைப் பிணி என்று வகைப்படுத்துவர். இதனைச் சிறப்புக் குணம் குறிகள் அடிப்படையில் வாத, பித்த, கப, தொந்தப் பெரும்பாடுகள் எனவும், பசியின்மை, அதிகக் கழிவு இரத்தம், உடல் சோர்வு, யோனி வேக்காடு, துர்நாற்றம், படபடப்பு, கட்டியாக ருது வெளிப்படுதல் போன்றவை இவற்றுள் பொதுக் குணங்குறிகளாகவும் வகைப்படுத்தியுள்ளனர். பெண்களின் ருது காலத்திற்கு முன்பிருந்தே அடிவயிறு, இடுப்பு போன்ற பகுதிகளில் வலியுண்டாகி ருது வெளிப்படும் இது 'சூதகவலி' எனப்படும். இதனை,

"கேளுமே சூதகத்தி லக்கினி வாய்வு
கெடுத்துவிடு மாதவிடாய் கட்டிப்போகும்."[47]

என்ற பாடல் வரிகளால் சூதகவலியினைப் பற்றி அறியமுடிகிறது.

யோனி ரோகம்

பெண்களின் யோனியில் ஏற்படும் பிணிகளை வாதயோனிரோகம், பித்த யோனி ரோகம், கபயோனி ரோகம், குருதியோனி ரோகம் என்பன

போன்று இருபது வகைகளை இதனுள் அடக்கிக் கூறுவர். வாதயோனிரோகத்தில்,

"சொல்லவே வல்குலிலே வாயுதங்கி
சொற சொறத்துச் சர்மமது கறுத்து காணும்"[48]

என்றுப் பெண் உறுப்பில் வாதத் தன்மை கூடி வறட்சி ஏற்பட்டுச் சொற, சொறப்பு ஏற்பட்டுத் தோல் கருத்துக் காணப்படும். இதே போன்று குருதியோனிரோகத்தில்,

"திறமான வுபத்திரவ மதிகங் காணும்
தெளியாத ரத்தமுடன் சீழ் நீர்ப்பாய்ச்சல்"[49]

எனும் போது உபாதை (துன்பம்) அதிகமாகி இரத்தம் கட்டியாகவும், சீழுடனும் நீர்போலும் வெளிப்படும் என்பதைக் குறிக்கின்றது.

கருப்பையில் ஏற்படும் பிணிகள்

பெண்களுக்குக் கருப்பையில் ஏற்படும் பிணிகளைக் கர்ப்ப சூலை, ருது சூலை, சூல் மகோதரம், மாமிச மகோதரம், கர்ப்பவிப்புருதி எனப் பொதுவாக வகைப்படுத்திக் கூறுவர். இவற்றில் கர்ப்பவிப்புருதி பற்றி,

"கூறிடவே கெர்ப்பவிற் புருதிதானும்
குருதிஅதுபோல் வயிற்றினிலே சூதங்கட்டும்"[50]

எனும் பாடல் வரிகளால் அறிய முடிகிறது. பெண்களுக்குக் கருக்காலத்தில் தோன்றும் பிணிகளாக, கர்ப்பசுரம், கர்ப்ப நீரடைப்பு, கர்ப்ப நீர் சுரப்பு, கர்ப்பக் கல்லடைப்பு, வயிற்றுப் பொருமல், வலி, பிரசவத்தின் சுவாசகாசம் போன்றவற்றைக் குறிப்பிடுவர். இவை தவிர, அம்மை, வாந்தி, பேதி, முறைசுரம், வாதசுரம், ஈரல் பிணி, வெள்ளைப் போக்கு, சயம், விடசூல்

வாந்தி, தீவிர வாந்தி, வீக்கம், புரதநீர், சூட்டுவலி போன்ற பிணிகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதையும் எடுத்துரைக்கின்றனர்.

பெண்களின் மார்பகப் பிணிகள்

பெண்களின் மார்பகங்களிலும் சில வகையான பிணிகள் ஏற்படுகின்றன என்பதை,

> "மாதுகேள் முலைக்காம்பு புற்றுவளர் முலைக்கிரந்தி குத்துத்
> தீதொரு பிளவை சொக்கத் தசுகுனி பலவுந்தீர"[51]

எனும் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. பெண்களின் மார்பகங்களில் மார்பகப் புற்று, மார்பகக் கட்டி, காம்பு வெடிப்பு போன்ற பிணிகள் ஏற்படுவதாகச் சித்தர்கள் பகுத்துக் காட்டியுள்ளனர். பெண்களுக்கு உண்டாகும் மலட்டுப் பிணிகளைப் பற்றி,

> "பாரப்பா பெண்மலடாய் கர்ப்பக் கோளின்
> பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாயக் கேளு"[52]

என்று சுத்த மலடு, கதலி மலடு, காக மலடு, கன்ம மலடு என்று மலடு குறித்த வகைகளை நான்காகச் சித்தர்கள் பிரித்துக் காட்டியுள்ளனர். இவற்றில் சுத்த மலடுகள் தவிர ஏனைய மலடுகள் கருவுண்டாகிப் பின் மலடாவதைக் குறிப்பதாகும். சுத்த மலட்டினை,

> "புகழுகிறேன் முதல்தரந்தான் மலடியென்ற
> பூவைக்கு கருக்குழிதான் விளக்கமற்று"[53]

என வாதமலடு, பித்த மலடு, கப மலடு, அலகை மலடு அல்லது தொந்த மலடு, வறட்சி மலடு, வாயு மலடு எனப் பல பிரிவுகளாகச் சித்தர்கள் பகுத்துக்காட்டியுள்ளனர். சித்த மருத்துவத்தில் பெண்களின் பூப்பு முதல்

மலடு வரையுள்ள பிணிகளைச் சித்தர்கள் நன்கு அறிந்துள்ளனர் என்பதை மேற்கண்ட பாடல்களின் மூலமும் விளக்கங்களின் மூலமும் அறிய முடிகின்றது.

தாது பலகீனம்

மனித உடலானது இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, மச்சை, எலும்பு, விந்து அல்லது சுரோணிதம் என்னும் ஏழு தாதுக்களால் ஆனதாகும். தாதுக்களில் ஏற்படும் பலகீனம் பலவிதமான பிணிகளை உண்டாக்குவதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். இவ்வகைப்பிணிகளைச் சித்தர்கள் இரண்டாகப் பிரிப்பர். அவை. 1. உடல்வழித் தாது பலகீனம், 2. மனவழித் தாது பலகீனம் என்பனவாகும்.

1. உடல்வழித் தாது பலகீனம்

உடல் கொண்ட ஏழு தாதுக்களும் தன்னளவில் கூடிக் குறைவதால் ஏற்படும் உபாதை உடல்வழித் தாது பலகீனம் எனப்படும். இவற்றில் இரசத் தாது குறையும்போது விந்து நீர்த்தல், விதைப்பையில் வாயு, ஈரல் பிணி, வயிறு பொருமல் ஆகியவை ஏற்படுகின்றன. இரத்தத்தாது குறையும்போது, படபடப்பு, கிறுகிறுப்பு, ஈரல் வீக்கம், சோகை, பாண்டு வழி விந்து குறைவு, விந்துக் குழல் அடைப்பு, அதிகப் பித்தத்தால் விந்து சூடாகுதல் ஆகிய பிணிகள் ஏற்படுகின்றன. இறைச்சித் தாதுக் குறைவால் முன் பிணிகளுடன் உறுப்புச் சுருக்கம், விரைப்பின்மை ஆகியவை ஏற்படுகின்றன. கொழுப்புத்தாது குறைவால் விந்து விரைந்து வருதல், விந்துக் குளிர்ச்சி, ஈரல் உலர்தல், சிறுநீரக வேக்காடு, தண்டுவடப் பிணிகள் போன்றவை உண்டாகின்றன. எலும்புத்தாது குறைவால் விந்து உற்பத்திக் குறைவு,

விந்தில் உயிர்க்கிருமியின்மை, விந்து வெளிவராமை, விந்து சூடு போன்ற பிணிகளும் மச்சைத்தாது குறைவால் மூளைப் பலகீனம், மனவழிக் காமம் குறைவு, எழுச்சியின்மை, விந்து உற்பத்தி இன்மை, மேகச் சூடு போன்ற பிணிகள் ஏற்படுகின்றன.

தாதுக்கள் ஒவ்வொன்றும் முறையே இரசம் உணவிலிருந்தும். இரத்தம் உணவுச் சாரத்திலிருந்தும் மாமிசம் இரத்தத்திலிருந்தும், கொழுப்பு மாமிசத்திலிருந்தும் எலும்புக் கொழுப்பிலிருந்தும் மச்சை எலும்பிலிருந்தும் விந்து மச்சையிலிருந்தும் உற்பத்தியாகித் தாதுக்களாகப் பரிணாமம் அடைகின்றன.

உடல்வழித் தாதுக்களின் கூடுதல் நிலை

தாதுக்களில் இரத்தத்தாது கூடினால் விந்துக் கொழுமை, எழுச்சிக் குறைவு, விந்துக் குளிர்ச்சியும் தூக்கமும் உண்டாகும். இரத்தத்தாது கூடினால் முன்குறிகளுடன் துருதுருப்பும், மதமதப்பும் உண்டாகும். மாமிசத் தாது கூடினால் விந்துக்குழல் அடைப்பு, சினைக்குழல் அடைப்பு, விந்துக் குறைவு, உறுப்புப் பருத்தல் ஆகியன உண்டாகும்.

கொழுப்புத் தாது கூடினால் விந்துக் கொழுமை அதிகரித்தால் விந்துக் குளிர்ச்சி, உறுப்பில் வலுவின்மை, விந்துக் குழல், சினைக்குழல் அடைப்பு ஆகிய பிணிகள் ஏற்படும்.

மச்சைத் தாது கூடினால் மிகுகாமம், மிகு விந்து உற்பத்தி, விந்து அடிக்கடி கழிதல் ஆகியவை ஏற்படுகின்றன. எலும்புத் தாது கூடினால் எலும்பு வளர்ச்சி, விந்து அதிகரித்தல், விந்துத் தாது கூடினால் உள் ஒளி

கூடுதல். உடல் வெப்பம் கூடுதல், முக மலர்ச்சி, மிகு காமச் சிந்தனை ஆகியன உண்டாகும் என்பதைச் சித்தர்கள் வகுத்துள்ளனர்.

கழிவுத் தாதுக்கள்

தாதுக்களில் கழிவுத் தாதுக்கள் என மலம், சிறுநீர், வியர்வை, ஆகியவற்றை வகுத்துள்ளனர். இவை மிகுதல், குறைதலினால் தாதுவழிப் பலகீனம் உண்டாகும் என்பதையும் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கழிவுத் தாதுவழிப் பலகீனம்

மலத்தாது கழிவுக் குறைந்தால் வயிறு பொருமல், கை, கால் வலி, சோர்வு, தூக்கமின்மை வழி விந்து சூடு போன்றவை ஏற்படும். சிறுநீர் கழிவுத் தாது குறைந்தால் அடிவயிற்றில் வீக்கம், உப்புமேகம், கால்கள் அதைப்புப் பிணிகள் வழி விந்து குளிர்தல், விந்துக் குழல் அடைப்பு, சினைக்குழல் அடைப்பு, விந்து வெட்டைப் பிணி ஆகியவை உண்டாகும். வியர்வைத் தாதுக் கழிவு குறைந்தால் விந்து நாற்றம், கருவுண்டாக்கும் தன்மை குறைதல் போன்ற பிணிகள் உண்டாகும். மலத்தாதுக் கழிவுக் கூடினால் பித்தம் வாதத்துடன் கூடி விந்து குறைந்தும் நீர்த்தும் விடும்; விந்தும் விரைந்து வெளிவரும் அத்துடன் விந்துக் குழல் புண், எரிச்சல் வலி, ஆசனவாய் எரிச்சல், மனப் பயம் போன்ற பிணிகளும் ஏற்படும். சிறுநீர் கழிவுத் தாது கூடினால் உடல் அசதி, உடல்வலி, விந்து சிறுநீருடன் கலந்து வெளிப்படுதல், புணர்ச்சி உறுப்புச் சுருக்கம், தூக்கமின்மை, உடல் சூடு கூடுதல், விந்துக் குழல் ஆகிய பிணிகள் ஏற்படும். வியர்வைக் கழிவுத் தாது கூடினால் பலகீனம், அசதி, தூக்கம், உடலில் திரவச் சத்துக் குறைதல் போன்ற பிணிகள் உண்டாகும் என்பதையும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர்.

உறுப்புவழித் தாதுப் பலகீனம்

உடல் உறுப்புகளில் பிணிகள் உண்டாவதால் அதன் இயக்கத்தின் அடிப்படையில் தோடங்களில் பிறழ்தல் ஏற்பட்டுத் தாதுக்களில் பலகீனம் உண்டாவதை அறிய முடிகின்றது. ஈரல் பிணிகள், இதயப் பிணிகள், சிறுநீரகப் பிணிகள், மூளைப் பிணிகள், தண்டுவடப் பிணிகள் போன்ற பிணிகள் தாதுக்களின் பலகீனத்தால் உண்டாகின்றன.

ஈரல் பிணிகளில் ஏற்படும் தாது பலகீனத்தால் செரிமானமின்மை, வயிறு உப்புசம், மலபந்தம், கழிச்சல், விந்து நீர்த்தல், விந்து விரைவில் வெளிவருதல், விந்துக் குழல் எரிச்சல் போன்ற பிணிகளுடன் தாதுக்களில் பலகீனம் உண்டாவதையும் அறிய முடிகின்றது.

விபத்து வழி தாதுபலகீனம்

அடிபடுதல், வாகன விபத்து, பிற விபத்துக்கள், கீழே விழுதல், தாக்குதல் ஆகிய நிகழ்வுகளால் உடல் உறுப்புகள் தாக்கப்படுகின்றன. இரத்தத்தாது வீணாதல், எலும்புத் தாது முறிவு, இரத்தத்தாதுத் துண்டிப்பு, வர்மத் தலங்கள் அடிபட்டுத் தாதுக்களில் ஏற்படும் சிதைவால் பலகீனங்கள் ஏற்படுவதை,

"கேளப்பா தடியடிகள் படுவதாலும்
கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்
வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்"[54]

எனும் பாடல் வரிகளில் காட்டுகின்றன. உடலில் அடிபடுதல், குத்து, வெட்டு, தாதுக்களின் இயக்கப் பாதிப்புகளின் வழி தாதுக்களில் சிதைவு, முறிவு,

பலகீனம் போன்ற செயல்கள் உண்டாகித் தாதுக்கள் பலகீனம் அடைவதை அறிய முடிகின்றது.

மனவழித் தாது பலகீனம்

மனவழித்தாது பலகீனம் விந்துத் தாதுவில் மட்டுமல்லாது, உடலில் அனைத்துத் தாதுக்களிலும் ஏற்படும் வாத, பித்த, கப பிறழ்தலின் காரணத்தாலும் விபத்துவழி, பிணிகள் வழி, தாதுக்களின் உற்பத்திக் கூடி, குறைவதாலும், வாதம், பித்தம் தன்னளவில் மிகுந்தாலும், கபம் தன்னளவில் குறைந்தாலும் இம்மூன்றும் கலந்தும் செயல்பட்டாலும் எண்ணத்தின் மூலச் செயல்கள் மாறுபடும். மனத்தில் பயம், ஆர்வமின்மை, இயலாமை, மகிழ்ச்சியின்மை போன்ற நோய்கள் ஏற்படும். இந்தத் தாது பலகீனம் என்பது ஆண், பெண், அலி எனும் மூன்று வகுப்பினருக்கும் ஏற்புடையதாகும் என்பதையும் சித்தர்கள் விளக்கியுள்ளனர்.

அலித் தன்மை

அலித் தன்மை என்பது பிறவி வழியும், பிறவழியும் உண்டாவதைச் சித்தர் திருமூலர்,

> “குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கில்”[55]

என்று குறிப்பிட்டுள்ளார். புணர்ச்சிக் காலத்தில் தந்தை கொண்ட சுவாசமானது நாசியின் இருதுளைகளிலும் உட்சென்று வெளிவந்தால் கருத்தரிக்கும் சிசுவிற்கு அலித்தன்மை உண்டாகும் எனக் கூறியுள்ளதை அறிய முடிகின்றது.

"சுழிகலையு மாறினதால் லிரண்டு மானாம்
விதித்திலகுஞ் சந்திரனில் வாயு சேர்ந்தால்
விகற்பமில்லா பெண் இரண்டு முதிக்கலாகும்
கதித்திலகும் பலபலவாய் நிற்ற தனால்"[56]

எனும் பாடல் இக்கருத்திற்கு மேலும் அரண் சேர்ப்பதாய் அமைந்துள்ளது.

சிசு வளர்ச்சிக் காலத்தில் தாய் கொண்ட உணவு மற்றும் தாயின் உடல் பிணி காரணமாகக் கருவில் உள்ள சிசுவிற்கும் அலித் தன்மை உருவாகலாம் என்பதை,

"சுந்தரவலம்புருடன் சங்குனிரெண்டதுஞ் சேராதாகில் - இந்த
மைந்தனிடதுதாள் வாய்தாதுலிங்கம் குறையுமாண்டே"[57]

எனும் பாடலில் குறிப்பிட்டுள்ளார். கருவில் உள்ள சிசுவானது வளர்ச்சிக் காலத்தில் தசநாடிகளில் புருடன், சங்குனி இரண்டும் உரிய இடத்தில் உற்பத்தியாகாவிட்டாலும், பிற இடங்களில் கலந்தாலும் ஆண் உறுப்பு அதிகமாக உணர்வற்று உள் அடங்கிவிடும். புருடன், சங்குனி எனும் நாடிகள் முறைப்படி சேர்ந்து செயல்படாவிட்டாலும் அலித் தன்மை ஏற்படும் என்று கூறுவதையும் அறிய முடிகிறது.

விபத்துவலி அலித் தன்மை

விபத்துவழித் தாதுக்களில் சிதைவு உண்டாவதுடன் நரம்பு மண்டலம், தசைகள் பாதிப்படைவதும், மனநோய் உண்டாவதையும் உடலில் வர்ம இடங்களில் அடிபடுவதன் வழி அலித்தன்மை உருவாகலாம் என்பதையும்,

"முன்பின்னாய் முறையீடு சதவு வெட்டு
அடியான குத்துடனே மொழிவிட் டேகல்
அசைவற்ற சவ்வகன்றல் ஆக்கைத் தென்றல்
கொடிதான ஆக்கை குன்னல் நீர் கொள்ளல்"[58]

என்ற பாடலின் மூலம் அறியமுடிகின்றது. மேற்கூறிய காரணங்கள் வழி சித்தர்கள் சித்த மருத்துவத்தில் கரு உருவாகும் காலத்தில் தந்தை கொண்ட சுவாச வழி அலித் தன்மையும், தாய் கொண்ட உணவு மற்றும் பிறகாரணங்களின் வழி அலித் தன்மையும், சிசு பிறந்து வளரும் காலத்தில் ஏற்படும் விபத்துவழி அலித் தன்மையும் உண்டாகும் என்பதை ஆராய்ந்தறிந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

சித்த மருத்துவத்தில் உளநோய்

உளநோய் என்பது சித்த மருத்துவத்தில் 'கிரிசை நோய்' என அழைக்கப்படுகிறது. மனத்தில் உண்டாகும் எண்ணச் சிதறல்கள், மன அழுத்தம், பைத்தியம் போன்ற நோய்களே உளநோய் அல்லது மனநோய் எனக் கூறுவர், இந்நோயினைப் பற்றி,

"தீருமிந்த கிரிச மதின் வரலாறின்னும்
செப்புகிறேன் வாத கோபத்தினாலும்
பாரு பித்தம் சேற்பமுடன் திரிதோடத்தால்
பாரமாய் கோபத்தால் காமத்தாலும்
சேரு கரையில் பதவி விசனத்தாலும்"[59]

என்ற பாடல் தெரிவித்துள்ளது. பித்தம் தன்னிலையில் அதிகரித்தாலும், அதிகக் கோபத்தினாலும் மன அழுத்தத்தினாலும் மிகு காமத்தினாலும் பயத்தினாலும் பதவியினாலும், பொருள் ஈட்டுதல் கவலையினாலும் மனநோய் உண்டாக வாய்ப்புள்ளதை இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

உளநோயின் பிரிவுகள்

உளநோயின் பிரிவுகளைப் பற்றிப் பேசும் போது ஏறத்தாழ பதினெட்டு வகையாகச் சித்தர்கள் பிரித்துள்ளனர். இதனை,

"தாங்கியே பித்தம் மீறிதலை தனில் விடங்கள் மேவி
இங்கிதமான மூளை இதழுடன் சோரைவற்றி
கங்கில் பூதமைந்தும் கலங்கியே ஒன்றாய்
சேர்ந்து பங்கமா பயித்தியம் பதினெட்டு"[60]

என்ற பாடலின் வழி வாத கிரிசம், பித்த கிரிசம், கப கிரிசம், அனல் கிரிசம், எரிச்சல் கிரிசம், நாதவிந்து கிரிசம், பூதக் கிரிசம், நீர்க் கிரிசம், மோகினிக் கிரிசம், கல்லெறிக் கிரிசம், கும்பிடு கிரிசம், முனங்குக் கிரிசம், அருள் கிரிசம், மருட்டுக் கிரிசம், முடக்கிரிசம், வளக் கிரிசம், நீர்க்குடி கிரிசம், மயானக் கிரிசம் என்ற பதினெட்டு கிரிசமும் தோடவழி, பயவழி, பொருள்வழி, பதவி வழி உளநோய் உண்டாவதைச் சித்தர்கள் அறிந்துள்ளனர்.

உளநோயின் பொதுக் குணம் குறிகளாக ஆடுதல், பாடுதல், துப்புதல், சினங்கொள்ளுதல், தொடர் பேச்சு, கீழே படுத்தல், கை தட்டுதல், விழித்துப் பார்த்தல், காரணமின்றி சிரித்தல், ஓடுதல், கண் சிவந்து இருத்தல், ஆடைகளைக் கிழித்தல், துரத்துதல், ஆகாயம் பார்த்தல் போன்ற பல குணம் குறிகளைக் கொண்டுள்ளது கிரிசை என்னும் உள நோய் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சித்த மருத்தவத்தில் புற்றுப் பிணிகள்

உடல் தாதுக்களை அழித்து வளரும் ஒரு வகை நச்சு வளர்ச்சியே புற்றுப்பிணி எனப்படும். சித்த மருத்துவத்தில் புற்றுப் பிணியைப் பற்றி,

"வாதமாய்ப் படைத்து பித்த
வன்னியாய் காத்து
சீதமாய்த் துடைத்து"[61]

என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாதுக்களைக் காக்கும் தோடமான பித்தம் குறைந்து வாதம் தன்னளவில் அதிகரித்துக் கபத்துடனும், மேகத்துடனும், கிரந்தியுடனும் கலந்து உடல் முழுவதுமோ, ஒரு உறுப்பிலோ அல்லது ஒரு தாதுவிலோ பரவும்போது பரவிய இடத்தில் புற்றுப் பிணி ஏற்படுகிறது. உடலில் புற்றுப்பிணி உண்டாகும் இடத்தைப் பொருத்தே, சித்தர்கள் புற்றுப் பிணிகளின் பெயரை வைத்துள்ளனர் என்பதை,

> “ஓமே நீ குறிப்புற்று மற்றபுற்று
> ஒளிவாள் இறப்புற்று கண்ணப் புற்று”[62]

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன. புணர்ச்சி உறுப்பில் புற்றுப் பிணி உண்டானால் குறிப்புற்று என்றும் கண்ணத்தில் உண்டானால் கண்ணப் புற்று என்றும் சித்தர்கள் கூறியுள்ளனர். அதேபோல் புணர்ச்சி உறுப்பில் ஆணுக்குப் புற்று என்றால் லிங்கப்புற்று என்றும் பெண்ணுக்கு புற்று என்றால் யோணிப் புற்று என்றும், புற்று உண்டாகும் பெயரைச் சேர்த்துப் புற்றுப் பிணி வகுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

சிகிச்சை முறை

புற்றுப் பிணி ஏற்பட்டோருக்குச் சிகிச்சை முறையால் மருத்துவம் அளிக்கப்பட்டது என்பது சித்தமருத்துவத்தில் காணப்படுகின்றது. இச்சிகிச்சைக் கருவிகளாகப் பொன்சுட்டுக் கருவி எனும் ஆழிச்சுட்டுக் கருவியும், பொட்டுச் சுட்டக் கருவியும் கொண்டு புற்றுப் பிணியின் இடத்தைச் சுட்டுத் தீய்த்து மருத்துவம் செய்துள்ளனர். இதே சிகிச்சை முறையைக் கம்பர்,

"உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்து அதன் உதிரம் ஊற்றி
சுடலுறச்சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்"[63]

என்னும் பாடல்வரிகளின் மூலம் (சுடலுற சுட்டு) சுட்டு தீய்த்துப் பின் மருந்து கொண்டு சிகிச்சை செய்துள்ளது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

உடலுறுப்புகளும் – பிணிகளும்

சித்தர்கள் உடலுறுப்புக்களில் ஏற்படும் பிணிகளைப் பல்வேறு வகைகளாகப் பிரித்துள்ளனர். இதனை,

"கனிகொள் வாயிற் பதினெட்டுக் காணும்
இனிய நாசி யிருபத்தே ழாஞ் செவி
பிணிவ ரைம்பத் தாறெனப் பேசினார்"[64]

என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாயில் தோன்றும் பிணிகள் பதினெட்டாகவும், நாசியில் தோன்றும் பிணிகள் இருபத்தேழாகவும், செவியில் ஐம்பத்தாறு வகையான பிணிகளும், கண்ணில் தொண்ணூற்றாறு வகையாகவும், பிடரியில் பத்துவகையாகவும், கழுத்தில் முப்பத்திரண்டு வகையான பிணிகளும் தோன்றுவதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

கண்ணில் ஏற்படும் பிணிகள்

கண்ணில் ஏற்படும் பிணிகள் தொண்ணூற்றாறு எனச் சித்தர்கள் வகுத்துள்ளனர். இவற்றுள்,

"ஓமடா வெள்விழியின் நோய்தா னொன்று
உத்தமனே அதன் வகுப்பு இருபதுமே யாகும்"[65]

எனும் பாடலில் வெள்விழியின் பிணிகள் இருபது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது தவிர, கருவிழிப் பிணிகள் நாற்பத்தைந்து, இமைப்

பிணிகள் பதினாறு, குமுதம், கடைக்கண் பிணிகள் பதினைந்து என்று கண்ணில் ஏற்படும் பிணிகளை மேலும் வகைப்படுத்திக் காட்டியுள்ளனர்.

இதயத்தில் ஏற்படும் பிணிகள்

சாதாரணமாக இருப்பவர்களுக்குத் தோன்றும் தமரகவாதம் எனும் பிணியானது திடீரென மார்புவலி உண்டாகி, மயக்கம் தோன்றி, பேச்சு இல்லாமல், மார்பு அடைத்ததுபோல் தோன்றுவதையும், அப்பிணியின் பெயரையும் சித்தர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்,

"காணடா மாரடைப்பு ரோகத்திற்கு
கனமான தமரகவாத மென்றும்
பூணடா தமரகவாயு வென்றும்
பொல்லாத இதயத்தின் ரோகமென்றும்
சானடா ருத்திரவாயு வென்றும்"[66]

எனும் பாடலில் மாரடைப்பைத் தமரகவாதம், தமரகவாயு, இதயரோகம் மற்றும் ருத்திரவாயு என்றும் அழைத்தனர். இப்பிணியானது சிலருக்கு மரணத்தை உண்டாக்கும் என்பதையும் சிலருக்கு மூன்றாவது முறை மரணத்தை உண்டாக்கும் என்பதையும் அறிந்திருந்தனர்.

இதனை,

"பண்பாக சிலருக்கு ஓரிரண்டு வேளை
கூறாக வந்தபின்பு கொல்லா விட்டால்
கொத்தவளே பின்னாலே கொல்லும் பாரு"[67]

என்ற பாடல் வரிகள் வாயிலாக இதயத்தின் பிணிகளைப் பற்றிச் சித்த மருத்துவம் சரியாக வகுத்துள்ளதை அறிய முடிகின்றது.

மூளைப் பிணிகள்

மூளையில் ஏற்படும் கட்டிகள், வேக்காடு, நீர்கோர்த்தல் போன்ற பிணிகளைப் பற்றி,

"அப்பனே மூளையின் சவ்வு மேலே
ஊன்றியே கட்டிகள் தானுண்டா வதாலும்
பண்படா மூளைக்கும் மூளைச் சவ்வுக்கும்
பண்பாகத் தாபனமே கண்டத னால்"[68]

என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூளையில் உண்டாகும் பிணிகளையும், கட்டி, வேக்காடு, அமுத மூளை வளி குணம், அமுத மூளை அழல் குணம், அமுத மூளை ஐய குணம், அமுத மூளை வறட்சிப் பண்பு என்று மூளையில் ஏற்படும் பிணிகளைப் பகுத்துக் கூறுவர்.

சித்த மருத்துவத்தில் நுட (எலும்பு) மருத்துவம்

பல்வேறு விதமாக வகுக்கப்பட்டுள்ள சித்த மருத்துவ முறைகளுள் ஒடிவு, முறிவு எனும் எலும்பு மருத்துவ முறையும் ஒன்றாகும். இது 'நுட மருத்துவம்' என்றும் அழைக்கப்படுகிறது. எலும்புகளில் ஏற்படும் பிணிகளை,

"அண்ணலே உலகத்தில் வாழும் மாந்த
ரடி காயமுறு விழுவதாலும் விண்ணடியில்
பிணையற்று வீழ்வதாலும் விழுந்த நீசி"[69]

என்றுச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். நுடமானது அடிபடுவதாலோ, தாக்குவதாலோ, விபத்துக்களினாலோ, பிற காரணங்களினாலோ எலும்புகள் பாதிக்கப்படுகிறது. எலும்புகளில் ஒடிதல், மூட்டுகள் விலகிக் கொள்ளுதல், சிதைதல் வழி எலும்புகளின் இயக்கம் பாதிக்கப்படுதலும் இவ்வகை நோயைச் சேர்ந்தவையே ஆகும்.

எலும்பு முறிவின் வகைகள்

எலும்பில் ஏற்படும் ஒடிவு, முறிவுகளைப் பொதுவாக எட்டு வகையாகப் பிரித்துக் கூறுவர். அவையாவன,

1. சாதாரண முறிவு, 2. கலப்பு முறிவு, 3. சிக்கலான முறிவு, 4.நொறுக்கப்பட்ட முறிவு, 5. எலும்பு முறிந்து மற்ற எலும்புடன் மாட்டிக் கொள்வது, 6. பச்சைக் கொம்பு முறிவு, 7. தன்னில் தானே முறிவு, 8.பள்ளம் ஏற்படும் முறிவு என்பனவாகும். இவற்றுள் தன்னில் தானே முறிவு, பச்சைக் கொம்பு முறிவு இரண்டும் அகக் காரணத்தாலும் பிற முறிவுகள் புறக் காரணத்தாலும் ஏற்படுபவையாகும்.

உடலில் உள்ள அனைத்து எலும்பு மூட்டுகளிலும் இரு காரண வழி ஏற்படும் எலும்பு விலகல், சவ்வு கிழிதல், சவ்வுத் தொய்வு, மூட்டு நழுவுதல், மூட்டு ஒதுங்குதல், மூட்டு அகட்டுதல், மூட்டு நொறுங்குதல், மூட்டுச் சிதைதல் என்று எட்டு வகையாகப் பகுத்துள்ளனர். மேலே கூறப்பட்ட எட்டும் எழும்பு முறிவால் ஏற்படுவதாகும். அடுத்துக் கூறப்பட்டுள்ள (எலும்பு விலகல்...) எலும்பு மூட்டுகளிலும் ஏற்படுவதாகும்.

"நாமப்பா விரட்டிலை போல் நீரேற்று
நடுங்கிய உள்ளங்கால் பெருவிரலில்
ஓமப்பா விரட்டிலைபோல் கரகவைத்து
உணர்ந்துமே சாகுமடா உசந்த மாட்டாய்
வாமப்பா மயக்கமது கூடியே உண்டாம்"[70]

எனக் குதிங்காலில் குதிரைமுக எலும்பு முறிவில் ஏற்படும் குணம் குறிகள் கடுகடுத்து நச்சுநீர் போல வேதனை தரும். பெருவிரலும் உள்ளங்காலும்

உணர்விழக்கும்; தலை சுற்றும்; காலில் வீக்கம் ஏற்படும் என்று எலும்பு நோய்கள் பற்றி மிகவும் துல்லியமாகச் சித்தர்கள் தெரிவித்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

முடிபுகள்

- ✍ சித்தர்கள் பெண்களுக்குரிய மருத்துவ முறைகளில் ஆழ்ந்த அறிவு படைத்தவர்களாக விளங்கினர் என்பதைச் சித்தர்களின் பாடல்கள் அறிய முடிகின்றது.

- ✍ சித்தர்கள் பெண்களுக்குரிய முக்கிய மருத்துவமான கருத்தரிப்பினைப் பற்றி நன்கறிந்துள்ளனர். ஒரு பெண்ணின் கரு உண்மையானதா அல்லது பொய்யான கர்ப்பமா என்பதை அறியும் முறை தெரிந்திருந்தனர். கருக்கொண்டவளின் நாடித் துடிப்பானது குண்டலப் புழுப்போல் ஊறிச் சென்றால் அவள் கொண்டிருக்கும் கரு உண்மையானது என்று சித்தர்கள் அறிந்துள்ளனர். பொய்யான கர்ப்பமானது வாதநாடி வெடித்துச் சிதறிப் பாய்ந்து செல்வது போல் உணரும் தன்மையுடையது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

- ✍ கருவில் உள்ள சிசுவானது ஆணா, பெண்ணா அல்லது அலியா என்பது புணர்ச்சிக் காலத்தில் ஆணின் சுவாசத் தன்மையைப் பொருத்து அமையும் என்பதைச் சித்தர்கள் பாடல்களிலிருந்து அறிய முடிகின்றது. உட்செல்லும் சுவாசம் குறைந்தாலும் அல்லது சுவாசம் கூடினாலும் குட்டை, முடன், கூன் என்ற நிலையில் குழந்தை பிறக்கும் என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- ✍ கரு சினைப்பட்டதும் பத்துமாத கால வளர்ச்சியில் கரு உண்டாகும் போது ஏற்படும் துன்பம் பற்றியும் அக்கருவில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் ஒவ்வொரு மாதத்திலும் அவற்றின் வளர்ச்சியினைப்

பற்றியும் துல்லியமாகச் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

- ✍ முழுமையான வளர்ச்சியடைந்த கரு, கருப்பையில் எவ்வாறு இருக்கும் என்பதையும் சில சிசுவின் நாபிக் கொடியானது அந்தச் சிசுவின் கழுத்தைச் சுற்றியிருப்பதற்கான காரணத்தைப் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- ✍ கருவுற்ற பெண்ணின் உடலில் தோன்றும் மாற்ற நிலையும், திண்பண்டங்களில் மிக விருப்பமும் உமிழ்நீர் பெருகுவதும் மார்புகள் விம்மி வலிப்பதும் வயிறு கொஞ்சம் கொஞ்சமாகப் பெருப்பதும் கர்ப்பிணிப் பெண்ணின் மாற்றங்களாகச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- ✍ கர்ப்பிணிப் பெண்கள் சில உணவு வகைகளை உண்பதால் கர்ப்பச் சன்னி எனப்படும் முத்தோடப்பிணி உண்டாகும். இந்நோயானது, புளித்த காடி உணவு, மாப்பண்டங்கள், புளித்த மாங்காய்கள் போன்றவற்றால் ஏற்படும் என்பதையும் சித்தர்கள் அறிந்துள்ளனர்.

- ✍ பேறுகாலம் என்பது மிகவும் வேதனையானது என்பதையும் அதனைப் பிரசவ வாயு, பிரசூதவாயு, இடுப்பு வலி எனவும் பெயரிட்டுச் சித்தர்கள் அழைத்தனர்.

- ✍ கிரமப் பிரசவம், வேதனைப் பிரசவம், கிராமதீதப் பிரசவம், விபரீதப் பிரசவம் என்று பிரசவத்தின் நான்கு முறைகளையும், பிரசவ வலி

ஏற்பட்டது முதல் எத்தனை நாளிகைக்குள், எந்த முறையில் பிரசவம் மேற்கொள்ளவேண்டும் என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- ✍ கர்ப்பிணிப் பெண்ணுக்கு எப்பொழுது கடினமான பிரசவம் ஏற்படுமென்றால் சிசுவின் தலை மாறி இருந்தாலும், தாயின் இடைக்குழி குறுகி இருந்தாலும், சிறுநீர்ப் பை நிரம்பி இடைக்குழி அடைக்கப்பட்டிருந்தாலும் இவ்வகையான பிரசவம் ஏற்படும் என்பதை அறிந்துள்ளனர்.

- ✍ உடலில் உள்ள உறுப்புகளின் தன்மை பற்றியும் அவற்றில் ஏற்படும் பிணிகள் பற்றியும் அறிந்த சித்தர்கள் நரம்பு மண்டலத்தினை இந்திரிய நரம்புகள் என்றும், சலன நரம்புகள் என்றும், ஒற்றுணர்வு நரம்புகள் என்றும் பிரித்துள்ளதைச் சித்தர்களின் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

- ✍ உடல் உறுப்புகளின் உட்பிரிவுகளைப் பற்றிக் கூறியுள்ள சித்தர்கள், விழியின் மத்தியப் பாகத்தில் ஆறு பிரிவுகள் உள்ளதையும், வெள்ளைச் சவ்வு, கருத்தச் சவ்வு, பார்வைக்கான சவ்வு, மற்றும் ஏனைய மூன்று சவ்வுகளும் உள்ளன என்றும் கூறியுள்ளனர். இதன் மூலம் சித்தர்கள் நுண் உறுப்புகள் முதல் ஏனைய உறுப்புகள் அனைத்தையும் பகுத்தறிந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

- ✍ குழந்தை, கருவில் உருவாகியது முதல் பிணிக்கு உட்படுவதையும், பிறந்த பின்பும் சில குழந்தைகள் பிணியினால் துன்பப்படுவதையும்

சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். குழந்தை மருத்துவ முறைக்குப் பாலவாகடம், குழந்தை வைத்தியம் என்று சித்தர்கள் பெயரிட்டு அழைத்தனர்.

✍ குழந்தைகளுக்கு ஏற்படும் பிணிகளாக மாந்தப் பிணி, கணப் பிணி, கரப்பான் பிணி, அக்காரப் பிணி, சுரம்பிணி, சன்னிப் பிணி, கழிச்சல் பிணி, வலிப்புப் பிணி, ஊதல், பாண்டு, காமாலைப் பிணி, மூலப் பிணி, தோடவகுப்புப் பிணி, இளம்பிள்ளை வாதப் பிணி, அம்மைப் பிணி போன்ற பிணிகளைப் பற்றியும் அவை ஏற்படுவதற்கான காரணங்களைப் பற்றியும் சித்தர்கள் பகுத்தறிந்துள்ளனர்.

✍ ருதுப் பிணி, சூதக வலி, யோனி ரோகம், கருப்பையில் ஏற்படும் பிணிகள், மார்பகங்களில் ஏற்படும் பிணிகள் போன்றவை பெண்களுக்கு ஏற்படுபவையாகும். இப்பிணிகள் எந்தெந்தப் பெண்களுக்கு எந்தெந்தக் காலத்தில் ஏற்படுகின்றன என்பதைப் பற்றியும் சித்தர்கள் பாடல்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

✍ மனித உடலானது இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, மச்சை, எலும்பு, விந்து அல்லது சுரோணிதம் ஆகிய ஏழு தாதுக்களினால் ஆனது. இவ்உடல் பலகீனம் அடைவதால் தாதுக்களில் ஏற்படும் பலகீனம் பற்றியும் சித்தர்கள் தங்களின் பாடல்களில் விளக்கிக் கூறியுள்ளனர்.

- ✍ உடல்வழித் தாதுக்களான மச்சைத்தாது, எலும்புத்தாது, விந்துத் தாது போன்ற தாதுக்களின் கூடுதல் நிலையின்போது முறையே மிகுகாமம், விந்து அதிகரித்தல், உடல் வெப்பம் கூடுதல் மற்றும் மிகு காம சிந்தனையும் உண்டாகும் என்பதைச் சித்தர்கள் வகுத்துள்ளனர்.

- ✍ உடல் உறுப்புகளில் பிணிகள் உண்டாவதால் அதன் இயக்கத்தின் அடிப்படையில் தோடங்களில் பிறழ்தல் ஏற்பட்டுத் தாதுக்களில் பலகீனம் உண்டாவதை அறிய முடிகின்றது. இதனால் ஈரல் பிணிகள், இதயப் பிணிகள், சிறுநீரகப் பிணிகள், மூளைப் பிணிகள், தண்டுவடப் பிணிகள் போன்ற பிணிகள் தாதுக்களின் பலகீனத்தால் உண்டாகின்றன என்பதையும் சித்தர்களின் பாடல்கள் வழி அறியமுடிகின்றது.

- ✍ மனவழித்தாதுப் பலகீனம் என்பது விந்துத் தாதுவில் மட்டுமல்லாது, உடலில் அனைத்துத் தாதுக்களிலும் ஏற்படும் வாத, பித்த, கப பிறழ்தலின் காரணத்தாலும், இந்தத் தாது பலகீனம் ஆண், பெண், அலி எனும் மூன்று வகுப்பினருக்கும் ஏற்புடையதாகும் என்பதையும் சித்தர் பாடல்கள் சுட்டியுள்ளன.

- ✍ விபத்துவழி தாதுக்களில் சிதைவு உண்டாவதால் நரம்பு மண்டலம், தசைகள் பாதிப்படைதல், மனநோய் உண்டாதல், உடலில் வர்ம இடங்களில் அடிபடுவதால் அலித் தன்மை உருவாதல் இயல்பு என்று சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- ✍ உளநோய் என்பது மனத்தில் உண்டாகும் எண்ணச் சிதறல்கள், மன அழுத்தம், பைத்தியம் போன்ற நோய்களே உளநோய் அல்லது மனநோய் எனக் கூறுவர். இதனைக் ‘கிரிசை நோய்’ என்று சித்தர்கள் குறிப்பிடுகின்றனர். இந்உளநோயினைப் பதினெட்டு வகையாகப் பிரித்துக் கூறுவர்.

- ✍ கண்ணில் ஏற்படும் பிணிகளை, வெள்விழியில் ஏற்படும் பிணிகளை இருபது வகையாகவும், கருவிழிப் பிணிகளை நாற்பத்தைந்து எனவும், இமைப் பிணிகளைப் பதினாறு எனவும், குமுதம், கடைக்கண் பிணிகள் பதினைந்து என்றும் தொண்ணூற்றாறு வகையான பிணிகளைச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- ✍ எலும்புகளில் ஏற்படும் பிணியானது அடிபடுவதாலோ, தாக்குவதாலோ, விபத்துக்களினாலோ, பிறகாரணங்களினாலோ நரம்புகள் பாதிக்கப்படும். எலும்புகளில் ஒடிதல், மூட்டுகள் விலகிக் கொள்ளுதல், சிதைத்தல் வழி எலும்புகளின் இயக்கம் பாதிக்கப்படுதல் போன்ற காரணங்களால் எலும்புகளில் பிணி ஏற்படுகிறது என்று சித்தர்கள் அறிந்திருந்தனர்.

அடிக்குறிப்புகள்

1. தொல். பொருள். நச். கற். நூ.187.
2. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், வல்லாதியின்நாடி, பா.33.
3. சி.பி.சாமி, (தொ.ஆ.), அகத்தியர் குணவாகடம், பா.1195.
4. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., குணவாகடத்தின் வைத்தியசாரம், பா.16.
5. அய்ய்ஹய்க் சஹழ்ஹஹ்ஹய்ஹ ஐஹ்ங்ழ், அய்ர்றங் ர்ய் உம்க்ஷழ்ண்ர்ப்ர்ஞ்ண்ஓீஹப் இர்ய்ஓீங்ல்ற்ள் ர்ச் ஹய்ஓீண்ஹய்ற் ஐய்க்ண்ஹய் நங்க்ண்ஓீண்ய்ங், ட.15.
6. கந்தசாமி முதலியார், தொ.ஆ., மு.நூ.ப. பா.22.
7. மேலது, பா.23.
8. திருமந். பா.462.
9. மேலது, பா.466.
10. மேலது, பா.464.
11. மா.வடிவேலு முதலியார் (உ.ஆ.), ஞானவெட்டியான், பா.254.
12. சி.பி.சாமி (பதி.ஆ.), மு.நூ., பா.1194.
13. திருவருட், பா.13.
14. சி.பி.சாமி, (பதி.ஆ.), மு.நூ., பா.1219.
15. மேலது, பா.1211.
16. மேலது, பா.1231.
17. மேலது, பா.1236.

18. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., திருமூலநாயனார் நாடி, பா.95.

19. குறுந். 287.

20. புறம். .20.

21. பத்து. பா.6.

22. சி.பி.சாமி. (பதி.ஆ.), மு.நூ., பா.1248.

23. மேலது, பா.1254.

24. மேலது, பா.1367.

25. மேலது, பா.812.

26. மேலது, பா.776.

27. மேலது, பா.851.

28. மேலது, பா.816.

29. மேலது, பா.838.

30. மேலது, பா.601.

31. தொல். பொருள். எழுத். நூற். 33.

32. சீவகசிந்தாமணி, பா.1583.

33. சி.பி.சாமி, (பதி.ஆ.), மு.நூ., பா.8.

34. கந்தசாமி முதலியார் (தொ.ஆ.), பாலவாகட திரட்டு 1200, பா.24.

35. மேலது, பா.9.

36. சி.பி.சாமி (பதி.ஆ.), மு.நூ., பா.8.

37. பொன்.குருசிரோன்மணி, பாலவாகடம், பா.5.

38. பி.இரத்தினநாயக்கர் அன் சன்ஸ், (தொ.ஆ.), ஆத்மரட்சாமிருதம் எனும் வைத்திய சாரசங்கிரகம், பா.56.

39. பொன்.குருசிரோன்மணி, மு.நூ., பா.4.

40. சி.பி.சாமி (பதி.ஆ.), மு.நூ., பா.8.
41. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ், (பதி.ஆ.), ஆத்மரட்சாமிருதம் எனும் வைத்தியசாரசங்கிரகம், பா.108.
42. மேலது, பா.123.
43. முனுசாமி முதலியார் (தொ.ஆ.), கைமுறை குழந்தை வைத்தியம், பா.82.
44. சி.பி.சாமி, (பதி.ஆ.), மு.நூ., பா.141.
45. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ், (பதி.ஆ.), மு.நூ., பா.142.
46. மேலது, பா.35.
47. மேலது, பா.41.
48. பு.மு.வேணுகோபால், மகளிர் மருத்துவம், ப.137.
49. மேலது, பா.139.
50. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் (பதி.ஆ.), மு.நூ., ப.40.
51. இரா.தியாகராசன், மற்றும் பிறர், வர்மவிதி (இரட்சைவிதி), (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), ப.48.
52. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ், (பதி.ஆ.), மு.நூ., பா.25.
53. மேலது, பா.26.
54. எஸ்.இராசாமணி, வர்மபரிகாரங்களும் சிகிச்சை முறைகளும், ப.3.
55. திருமந். பா.466.
56. மா.வடிவேலு முதலியார் (உ.ஆ.), மு.நூ., பா.237.
57. மேலது, பா.255.

58. சூ.இராசாமணி, (தொ.ஆ.), அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி 1200, பா.83.
59. டி.மைக்கேல் (பதி.ஆ.), அகத்தியர் கிரிசநிதான நூல், பா.13.
60. மேலது, பா.83.
61. இரா.தியாகராாசன் (தொ.ஆ.), தேரையர் மருத்து பாரதம், பா.2.
62. குப்புசாமி நாயுடு (தொ.ஆ), புலிப்பாணி வைத்தியம் 500, பா.254.
63. பூவண்ணன், கம்பராமாயணம், யுத்தகாண்டம், கும்பகர்ண வதைப்படலம், பா.146.
64. இரா.தியாகராசன், மற்றும் பிறர், அங்காதிபாதம், (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.104.
65. சி.பி.சாமி, (பதி.ஆ.), மு.நூ., பா.603.
66. மேலது, பா.362.
67. மேலது, பா.369.
68. மேலது, பா.444.
69. சூ.இராசாமணி, (தொ.ஆ.), அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி 1200, பா.9.
70. மேலது, பா.139.

இயல் – 4

சித்தமருத்துவத்தில் பிணியும் பிணியறிதலும்

காலம், பருவம், உறைவிடம், மரபு மற்றும் பல்வேறு உணவு முறைகளால் மனிதனுக்குப் பிணிஏற்படுவது இயற்கை. பிணியாளரின் உடல்வன்மை, பிணிவன்மை, பிணிக்காலம், வயது, உடல்தோடம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அப்பிணியினை அறியலாம். பிணியாளரின் குணம் குறிகளை அடிப்படையாகக் கொண்டும் அவரது பிணிகளை வகைப்படுத்தியும் அறியலாம். அவ்வகையில் சித்த மருத்துவத்தின் வழியாகப் பிணிகளையும் அவற்றை எவ்வாறு அறியலாம் என்பதையும் பற்றி ஆராய்வதாகச் 'சித்த மருத்துவத்தில் பிணியும் பிணியறிதலும்' என்னும் இவ்வியல் அமைகின்றது.

பிணியின் வகைகள்

இயற்கையோடு இயைந்து வாழ்வதெனில் உடலின் இயல்பை, தன்மையை நாம் நன்கு அறிந்து அதன் வழி ஒழுகவேண்டுவது இன்றியமையாததாகும். இவ்வுடல் ஏழு தாதுக்களால் உருவானதாகும்; பல கோடி உயிரணுக்களால் நிரம்பி இருக்கிறது. ஒவ்வோர் உயிரணுவும் தோன்றல், வளர்தல், சீர்திருத்தல், இனப்பெருக்கம் செய்தல், தேய்தல் என்று ஐவகையில் வினையாற்றும்படி உடல் அமைகின்றது. இந்த உடலில் ஏற்படும் பிணிகளை மூன்று வகைப்படுத்தலாம். அவை;

1. தோடவழிப் பிணிகள்

2. பரம்பரைப் பிணிகள்

3. புறக் காரணவழிப் பிணிகள்

என்பனவாகும். இனி இவற்றை விரிவாகக் காண்போம்.

1. தோடவழிப் பிணிகள்

மனித உடல் ஏழுவகையான தாதுக்களால் ஆனது. அவை ரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, எலும்பு, மச்சை, விந்து அல்லது சுரோணிதம் என்பவையாகும். இதனை,

> "தனை மரம் ரத்தமாங் கிஷமேதை
> தசை மச்சை சுக்கிலத் தோடேழதாகி"[1]

என்ற பாடலில் தனை ரசம் என்பதற்குப் பதில் அச்சுப் பிழையாக தனை மரம் என்று வந்துள்ளது. தாதுக்களாலான உடலில் தோடங்களான வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் உள்ளதை,

> "வளிமுதலா யெண்ணியமுக் குற்ற மெல்லாம்
> வாழ்வாதனும் தோமுற்றும் பம்பிப் பரந்து"[2]

என்ற பாடலில் வளி (வாதம்), அழல் (பித்தம்), குற்றம் (கபம்) என்னும் மூன்றும் உடல் முழுவதும் குறைந்தும், கூடியும் உள்ளன. இவை மூன்றும் தன்னளவில் கூடினாலும் குறைந்தாலும் உடலில் பிணி ஏற்படும். இதனையே வள்ளுவரும்,

> "மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று"[3]

என்ற குறட்பாவில் வலியுறுத்துகின்றார். சித்த மருத்துவத்தில் இதனை,

வளி என்பது - காற்று - வாயு - வாதம் என்றும்

அழல் என்பது - வெப்பம் — உஷ்ணம் - பித்தம் என்றும்

குற்றம் என்பது - குளிர்ச்சி - கபம்

என்றும் சித்தர்கள் அழைத்தனர்.

தோடங்கள் உற்பத்தியாகும் இடங்கள்

'வாதம்', 'பித்தம்', 'கபம்' என்னும் மூன்று தோடங்களின் செயல்பாட்டைக் கூறிய சித்தர்கள் அவை உற்பத்தியாகும் இடம் பற்றியும் அறிந்திருந்தனர். இதை,

"வேதமேவுரைத்த வுண்மை வாதத்தின் வீடு தொப்புள்
ஓது பித்தத்தின் வீடு கண்டத்தாஞ் சிலேத்து மத்துக்
காதியாயிதைய முக்கி வாகுமீயி தன்னந்தானே"[4]

எனும் பாடலிலிருந்து வாதம் என்னும் வாயு உற்பத்தியாகும் இடம், பாதம் முதல் நாபி வரை என்றும் பித்தம் எனும் வெப்பம் உற்பத்தியாகுமிடமாக நாபி முதல் கண்டம் வரை என்றும், கபம் எனும் நீர் உற்பத்தியாகுமிடமாகக் கண்டம் முதல் உச்சிவரை என்றும் தோடங்கள் உற்பத்தியாகும் இடங்களைச் சித்தர்கள் வகுத்துள்ளனர்.

நாடித் துடிப்பழுத்த அளவு

வாதம், பித்தம், கபம் என்னும் முத்தோடங்களை அறியச் சித்தர்கள் நாடித்துடிப்பின் அளவைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதனை,

"வழங்கியவாத மாத்திரை யொன்றாகில்
தழங்கிய பித்தன் தன்னில ரைவாசி
அழங்குங் கபந்தா னடங்யே காலோடில்"[5]

என்ற பாடலில் வாதம் ஒரு மாத்திரை அளவும், பித்தம் அரை மாத்திரை அளவும், கபம் கால் மாத்திரை அளவும் எனத் தமிழ் எழுத்துகளுக்குரிய உச்சரிப்பு மாத்திரை அளவுகளைக் கொண்டே நாடியின் துடிப்பழுத்த அளவையும் கணக்கிட்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

முத்தோடங்களின் மூலங்கள்

வாதமான வாயு அபான வாயுவை மூலமாகக் கொண்டும் பித்தமான அழல் பிராணவாயுவை மூலமாகக் கொண்டும் கபமான சிலேத்துமம் சமான வாயுவை மூலமாகக் கொண்டும் உடல் முழுவதும் பரவிச் செயல்படுகின்றது என்பதைச் சித்தர்கள் நன்கறிந்துள்ளனர். இதனை,

> "உரைக்கிறேன் அபானனது வாதஞ் சேரு
> முற்றுப்பார் பிராணனது பித்தஞ் சேரு
> நிரைக்கிறேன் சமானனது ஐஞ் சேரு
> நேர்வாதம் வாய்வு பித்தம் நெருப்பதாகும்
> தரைக்கிறேன் சிலேட்டும்மது தண்ணீராகும்"[6]

என்ற பாடலின் வாயிலாகச் சித்தர்கள் உடலியக்கங்களுக்கு அளவுகளையும் அத்தோடங்கள் உடலில் எங்கு உற்பத்தியாகின்றன என்பதையும், அவை எந்த இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றன என்பதையும் ஆழ்ந்த அறிவு கொண்டு அறிந்திருந்தனர்.

தோடங்களினால் ஏற்படும் பிணிகள்

தன்னளவில் அதிகரித்த பித்தம், வாதத்துடன் கூடி கபத்தின் அளவைக் குறைத்துப் பித்த வாந்தி, நகம், கண், சிறுநீர், வியர்வை போன்ற பலக் குறைவையும் சோர்வையும் உண்டாக்குகின்றது. உடலில் கபம், வாத அளவுக் குறைந்திருக்கும் பொழுது, பித்த அளவைக் குறைத்துப் பசிக்

குறைவு, உடல் வெப்பக்குறைவு, தலைக்கணம், தூக்கம், சோம்பல், இதயப் பிணிகள் போன்ற பிணியினை உண்டாக்குகின்றது.

வாதம், பித்தம், கபம் எனும் இம்மூன்று தோடங்களும் தனித்தும் ஒன்றுடன் ஒன்று கலந்தும் தம் அளவில் மாறுபடும்போது, உடலில் பிணிகளை ஏற்படுத்துகின்றது. மூன்று தோடங்களும் ஒன்றாகச் சேரும் போது மரணத்திற்கு ஒப்பான பிணியையும் ஏற்படுத்துகின்றது.

வேகங்கள்

தோடங்கள் தன்னளவில் மாறுபடும்போது அத்தோடங்களைச் சமப்படுத்துவதையும் உடல் கழிவுகளை வெளியேற்றுவதையும் உடல் இயற்கையாகக் கொண்டுள்ளது. அவ்வாறான செயல்களைச் சித்தர்கள் ‘வேகங்கள்’ எனக் குறிப்பிட்டு அவற்றைப் பதினான்கு எனவும் பிரித்துள்ளனர்.

“தேகமாம் தூதுதன்னில் சிக்குடில் மோகியாவான்
வேகமாய்ப் பதினாலென்று வியாதியிற் பவிக்குந்தானே”[7]

எனப் பாடியிருப்பதிலிருந்து வேகங்கள் பதினான்கு என அறிய முடிகின்றது.

வேகங்களின் வகைகள்

சித்தர்கள் வேகங்கள் பதினான்கு எனவும் அவற்றைப் பற்றி விரிவாகவும் குறிப்பிட்டுள்ளார். அவை: 1. அபானன், 2. சிறுநீர், 3. மலம், 4. பசி, 5. தாகம், 6. தும்மல், 7. இளைப்பு, 8. வாந்தி, 9. கொட்டாவி, 10.கண்ணீர், 11. தூக்கம், 12. விந்து, 13. சுவாசம், 14. ஏப்பம் என்பனவாகும். இந்தப் பதினான்கு வேகங்களையும் அடக்கினால் உடலில் வாதம், பித்தம், கபம் என்னும் முத்தோடங்களில் தன்னளவில் அதிகரித்த தோடம் அளவில் நடுநிலை உள்ள தோடத்துடன் கலந்து, குறைந்த தோடம் உள்ள இடத்தை

ஆக்கிரமித்து விடும். இதனால் பல பிணிகள் உண்டாவதைச் சித்தர்கள் பகுத்தறிந்துள்ளனர்.

வாதம், பித்தம், கபம் மாற்றத்தினால் ஏற்படும் பிணிகள்

வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் தன்னளவில் மாறுபடும்போது ஏற்படும் பிணிகளைப் பற்றிச் சித்தர்கள் அறிந்திருந்தனர். உடலில் வாதம் தன்னளவில் மாறுபடும்போது மந்தம், வயிறுபொருமல், கை, கால், மூட்டுவலி, கிராணி, மகோதரம், நீராமை, வாதசூலை, வலி, கடுப்பு, அபானத்தில் கிருமி உற்பத்தி, தலைவலி, சிறுநீர் எரிச்சல், பல் பிணிகள், சிறுநீர் பிணிகள், மூலரோகம் போன்ற பிணிகள் உண்டாகின்றன. உடலில் பித்தம் தன்னளவில் மாறுபடும்போது, உடலில் வெப்பம் அதிகரித்தல், வெப்ப வாயு, அஸ்தி சுரம், மறதி, கிருகிருப்பு, பைத்தியம், சோகை, சுழல் எரிவு, காந்தல், வாயில் கசப்புச் சுவை, இதயப் பலகீனம், தாகம், கனவு, மூர்ச்சை, மயக்கம், ருது பெரும்பாடு, இரத்தப் பிரமேகம் போன்ற பிணிகள் உண்டாகும் என்பதையும் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். உடலில் கபம் தன்னளவில் மாறுபடும்போது இளைப்பு, சயம், ஈளை, இருமல், மந்தாரகாசம், சன்னி, விக்கல், கரப்பான், ருது வெளிப்படாமை, வீக்கம், வாந்தி, சுவாசம், தூக்கம், காமாலை, பாண்டு, சோகை, சுரங்கள் ஆகிய பிணிகள் ஏற்படும் என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

தன்னளவிலுள்ள வாத, பித்த, கபம் மூன்றும் பிராணன், அபானன், சமானன் இவற்றில் நின்று செயல்பட்டு உடலைக் காப்பதையும், தன்னளவில் மாறுபடும் பொழுது பிணியை உண்டாக்கும் என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

பரம்பரைப் பிணிகள் தோன்றும் விதம்

கருவிலே பரம்பரைப் பிணிகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதை அகத்தியர் தம் பாடலில்,

“போமடா புருடனுடமேக வியாதி
பொலிகின்ற பெண்சாதி தனக்குக் கேடு
ஆமடா மத்தியே இருக்கும்போது
அவளுக்குக் கருத்தரித்தால் அப்போ பாரு”[8]

என்று கணவன் கொண்ட பிணியானது புணர்ச்சி வழி மனைவிக்கு உண்டாவதையும் அப்புணர்ச்சியில் அவள் கருக்கொண்டால் அக்கருவில் வளரும் சிசுவிற்கும் அப்பிணி உண்டாகும் என்பதையும் சித்தர்கள் அறிந்துள்ளனர். இதனை,

“துறைகேட்ரில் கர்ப்பத்தில் துவங்கிய மேகங்கள்
நறைபூத்த கொங்கையாள் நாயகன் மோகத்தால்
மறைபொற்றும் கர்ப்பத்தில் வளர்ந்தது மேகமே”[9]

என்று திருமூலர் பாடியுள்ளதிலிருந்து முன்னோர்களின் பிணிகள் அவர்தம் குழந்தை வழி தொடர்ந்து பரம்பரைப் பிணிகளாகக் கருவில் சிசு உருவாகும்போதே வளர்ந்து வருவதையும் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தாய்மூலம் சிசுவிற்குப் பிணி பரவுதல்

தாய்கொண்ட பிணியானது கருவில் இருக்கும் சிசுவிற்கும் உண்டாகும் என்பதை,

“எத்தாலே வந்ததென்று கேட்பா யாகில்
இளமாதர் முலைப்பாலில் விளைந்த நோயே”[10]

என்பதிலிருந்து தாய்கொண்ட பிணியானது, தன் சிசுவிற்குத் தரும் தாய்ப்பாலின் வழி பிணி விளையும் என்பதை அறிய முடிகின்றது. தற்காலத்தில் மருத்துவர்கள் காமாலைப் பிணி கொண்ட இளம் பெண்களை அவர்தம் சிசுக்களுக்குத் தாய்ப்பால் கொடுக்கக்கூடாது என்று கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

தாய், தந்தைப் புணர்ச்சிக் காலத்தில் இடகலை நாடி, பிங்கலை நாடி கூடுமிடுமான 'புருவ நாடி'யின் (சுழிமுனை நாடி) இயக்கம் குறைந்திருக்கும் பொழுது புணர்ந்தால் கருவிற்கு அதிகப் பிணிகள் உண்டாகும் என்பதை,

"சதியாக நின்று சுழிமுனை நாடித் தயங்கினதால்
கெதி வேறு மில்லை வெகு நோய்கள் கண்டு கிடந்தனரே"[11]

என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

தாய், தந்தையரின் புணர்ச்சிக் காலத்தில் ஏற்படும் வெப்பம் முதல் கருப்பையில் உள்ள சூடு வரை கருவிலுள்ள சிசுவிற்குப் பிணியை உண்டாக்குகிறது என்பதை,

"நேரே மாந்தம் பதினெட்டும் நேருங்கிரந்தி தன்குணம்
சீரே புணர்ச்சிக் காந்தலதுஞ் சிறந்தகர்ப சூடுமுதல்
நேரே மாந்தரறிய வென்று நிறையா யுரைத்த திதுவாமே"[12]

எனும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. புணர்ச்சி வழிப் பிணிகள் உண்டாகி, பிணியுடனே பிறந்து, வளர்ந்து பிணியுடன் பிணைக்கப்படுவதைத் தெளிவாகச் சித்தர்கள் கூறுகின்றனர்.

புறக்காரணங்களில் பிணித் தோற்றம்

புறக்காரணங்களினால் தோடங்கள் தன் அளவில் மாறுபட்டு உடலில் பிணி உண்டாவதைச் சித்தர்களின் பாடலின் மூலம் அறிய முடிகின்றது. புறக் காரணங்களினால் பிணி உண்டாவதைக் காலம், உறைவிடம், உணவு, புணர்ச்சி, விபத்து மற்றும் விடம் என்ற அடிப்படையில் அறிய முடிகின்றது.

காலமும் பிணியும்

காலம் என்பதை ஒரு வருடம் கொண்ட பன்னிரண்டு மாதங்களையும் ஆறுகாலமாகப் பிரித்துள்ளனர். இதனை,

"இரும் பொழுதின் பேர்தான் இருபனி வேனில்
கருமுகிற் கால மெனக் காண்"[13]

எனும்போது மார்கழி, தை ஆகிய மாதங்கள் முன் பனிக்காலம் எனவும் மாசி, பங்குனி ஆகியவைப் பின்பனிக்காலம் எனவும், சித்திரை, வைகாசி ஆகிய மாதங்கள் இளவேனிற்காலம் எனவும், ஆனி, ஆடி ஆகிய மாதங்கள் முதுவேனிற்காலம் எனவும் ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்கள் கார்காலம் எனவும், ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்கள் கூதிர்காலம் எனவும் ஆறுகாலங்களாக வகுத்துள்ளனர்.

ஆறுகாலமும் - இரண்டு பிரிவும்

முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற் காலம், கார்காலம், கூதிர்காலம் ஆகிய ஆறு காலங்களையும் இரண்டு வகையாகப் பிரித்து அடக்குவர். அவை, 1. உடலுக்குப் பலம் அதிகரிக்கும் உரமோங்கும் காலம், 2. உடல் பலத்தைக் குறைக்கும் உடலுரம் போக்கிக் காலம் என்பனவாகும்.

"கார் கூதிர் முன் பனியில் காண் சீதத் தன்மையால்

உலகில் உடலுர மோங்கு மென்று கொண்டாடுங் காலமிதுகாண்"[14]

என்ற பாடலடியில் கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம் என்ற இப்பருவங்களில் சீதம் என்ற குளர்ச்சித் தன்மையால் உடல் உரம் பெறும் என்பதை அறிய முடிகின்றது.

"வடக்கு செலவாய் வழங்கும் பொழுதில்

திடமுடன் ஞாயிறு தீய்க்கும் - உடலுரம் போம்"[15]

என்ற பாடலின் வாயிலாகத் தை முதல் ஆனி வரையுள்ள காலத்தில் சூரியக் கதிர்களின் வெப்பத்தினால் வறட்சி, கரகரப்பு போன்ற பல பிணிகள் தோன்றி உடலின் வன்மை குறையும் என்பதையும் அறிய முடிகிறது.

முன்பனிக் காலமும் - பிணியும்

முன்பனிக் காலத்தில் மிகுந்த குளிரானது தோலின் மயிர்க் காலின் துளைகளையெல்லாம் சுருக்கி விடுவதாலும், உடல் கொண்ட துளைகள் சுருங்கி விடுவதாலும், உடலுள் பித்த இயக்க வழிச் செயல் இரைப்பையில் மிகுந்து காணப்படுகின்றது என்பதை,

"துன்னுகுளிர் தோலின் துளை மெய்யில் - மன்னுபல
வாயில்க ளெல்லாம் வாய்ச் சுருக்கி மூடும்
ஆயிடுமுட் சூடதிகமாய்"[16]

என்ற பாடலினால் அறியலாம்.

பின்பனிக் காலமும் - பிணியும்

பின்பனிக் காலத்தில் மார்பு, தொண்டை, தலை, எலும்பு மூட்டுக்கள், இரைப்பை, மூக்கு, நாக்கு போன்ற இடங்களில் கபம் பெருகிப் பல பிணிகள் ஏற்படுத்துகின்றன.

இளவேனிற் காலமும் - பிணியும்

இளவேனிற் காலத்தில் கபம் குறைய ஆரம்பித்து வாத, பித்தத்துடன் கலக்கும் கபம் இரைப்பையுள் மிகுந்து செரிமானத்தைக் குறைத்து மந்தத்தை உண்டாக்கும். இதன் காரணமாகப் பல பிணிகள் உடலில் தோன்ற வாய்ப்புள்ளது.

முதுவேனிற்காலமும் - பிணியும்

முதுவேனிற்காலத்தில் நீர்த்தன்மை குறைந்து வறட்சி காணப்படும். இதன் காரணமாகக் கபம் குறையும்; வாதம் பெருகும். இதனடிப்படையில் மன நோயும், வேக்காடும், பலகீனமும், நரம்பு வலி, மூட்டுவலி போன்ற பல பிணிகள் உண்டாவதையும் அறியலாம்.

கார்காலமும் - பிணியும்

வெளிப்புறத்தில் உண்டான குளர்ச்சியைத் தாங்குவதற்காகத் தேவையான வெப்பத்தை உடலிலுள்ள உட்சூடு தோலுக்குப் பரவி விடும். இதன் காரணமாகச் செரிமானத்தில் செயல்படும் வெப்பம் குறைவதால் வாதம், பித்தம், கபம் என்னும் மூன்றும் தன்னளவில் குறைந்து காணப்படும். இதனை,

"மிகச் செயு மழலையே மலினநீர் செரியனலின்
கெடுதியும் கபமதி கரிப்பதுங் கரியபெருங்"[17]

எனும் பாடல் உடலில் செரிமானத்தைக் கெடுப்பதால் பிணிகளையும் கபத்தையும் அதிகரிக்கச் செய்து பல்வேறு சிக்கல்களை உடம்பிற்கு ஏற்படுத்துவதைக் குறிப்பிடுகின்றது.

கூதிர்காலமும் – பிணியும்

பித்தம் தன்னளவில் மிகுதியாவதுடன் வாத, கபத்துடன் கூடி அவற்றில் பல்வேறு பிணிகளை உண்டாக்கும். இக்கால இயல்பால் வாதப் பிணிகள் உடலில் பாதிப்படையச் செய்யும். இவ்வாறாகச் சித்தர்கள் பருவகாலச் சுழற்சியால் ஏற்படும் காற்று, குளிர், பனி, வெப்பம் போன்றவை உடலில் பல பிணிகளை உண்டாக்குவதை அறிந்திருந்தனர் என்பதை மேற்கண்ட பாடல்கள் அனைத்தும் தெரிவிக்கின்றன.

உறைவிடமும் – பிணிகளும்

தமிழர்கள் நிலப்பரப்பை ஐந்தாக வகுத்துள்ளனர். அவை முறையே, 1. குறிஞ்சி, 2. முல்லை, 3. மருதம், 4. நெய்தல், 5. பாலை என்பனவாகும். இவ்விடங்களில் தோன்றும் பிணிகளையும், அப்பிணிகள் எந்தத்தோட அடிப்படையில் உண்டாகின்றன என்பதைச் சித்தர்களின் பாடல்களில் அறிய முடிகின்றது.

குறிஞ்சி நிலப் பிணிகள் கபத்தின் அடிப்படையில் தோன்றுகின்றன. சுரம், வயிற்றுக்கட்டி போன்றவை இந்நிலப் பிணிகளாகும். முல்லை நிலப் பிணிகள் வாதத்தின் அடிப்படையில் தோன்றுகிறது. அதாவது ஈரல் சார்ந்த பிணிகளும் வாதப் பிணிகளும் ஏற்படுகின்றன. மருதநிலம் பிணிகளைப் போக்கும் தன்மை கொண்ட சிறந்த நிலமாகச் சித்தர்கள் கருதினர். நெய்தல் நிலப் பிணிகள் வாத தோடத்தின் அடிப்படையில் உண்டாவது; ஈரலை

பெருக்கச் செய்யும்; குடல் வாயுவை அதிகரிக்கும் என்று குறிப்பிட்டுள்ளனர். பாலைநிலப் பிணிகள் வாதம், பித்தம், கபம் ஆகிய முத்தோடங்களின் அடிப்படையில் உண்டாவதாகும். இவ்வாறாக வாழுகின்ற இடங்களை வைத்து அவ்விடங்களில் ஏற்படுகின்ற பிணியினைக் கண்டறிந்து சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உணவும் – பிணியும்

உண்ணும் உணவு மாறுபடுவதாலும், காலம் கடந்து உண்பதனாலும் மிகுந்த உணவு உண்பதனாலும் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாத உணவை உண்பதனாலும் ஏற்படுகின்ற செரிமானமின்மை போன்றவை உடலில் இயங்கும் வாத, பித்த, கபத்தின் அளவுகளை மாறுபடச் செய்து, பல பிணிகளை உண்டாக்குவதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். இக்கருத்தையே வள்ளுவரும்,

“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு”[18]

என்ற குறளில் உணவுப் பழக்கமுறையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேரம் தவறிய உணவு

குறிப்பிட்ட நேரத்திற்கு உண்ணாமல் நேரம் தவறி உண்பதால் வயிறு பொருமல் போன்ற பிணிகள் ஏற்படுகின்றன. இதனை,

“ஞான்று ஞுண்ணூமந்த நறுமுணவே – தோன்றுடலுக்
கொக்குமித நோயரமு ரோகமுயிற் கந்தரஞ்செய்
விக்குமித மிராய்ந்து வின்”[19]

எனும் பாடலினால் அறியலாம்.

மிகு உணவு

அதிகமான அளவு உண்பதால் செரிமானம் இல்லாமல் வெப்பவாயு உண்டாகிப் பிணி ஏற்படும். கபம் குறையும் போதும் பிணிகள் ஏற்படும்.

உணவில் நச்சு

எந்த உணவுடன் எந்த உணவு கலந்து உண்பதால் நச்சுத்தன்மை உண்டாகிறது என்பதை அறியாமல் உண்பதால் ஏற்படும் விளைவுகளை,

“கானந் திரிமன் கவின் கோழி யூனையோ
டுண்ணத் தகாநஞ்சென் றோதினர் காண் வாகடத்தின்”[20]

என்ற பாடலின் மூலம் அறியலாம். அதாவது இறைச்சியுடன் தயிர் சேர்த்து உண்டால் அவ்வுணவே நஞ்சாவதைச் சுட்டிக்காட்டுகின்றது.

கூடாத உணவு

பிணியுடையோர் எந்தவகை உணவுகளை உண்ண வேண்டும் என்பதை அறிந்து, உடல் ஏற்கும் உணவுகளை உண்ண வேண்டும்; உடல் ஏற்கா உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்றுச் சித்தமருத்துவர்கள் கட்டுப்பாடு விதிப்பதால் இவர்கள் ‘அறவோன்’ என்று அழைக்கப்பட்டனர். இதனை,

“அரும்பிணி உறுநர்க்கு வேட்டாது கொடாது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்”[21]

எனும் நற்றிணைப் பாடல் வரிகளில் கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது, தமிழில் சித்த மருத்துவர்கள் உணவின் மூலம் பிணி போக்குதலும் பிணித்

துன்பத்தைக் குறைத்தலும் பிணிவராமல் தடுத்தலும் எனும் நோக்கில் உணவு முறைகளை வகுத்துள்ளனர்.

புணர்ச்சியும் – பிணியும்

புணர்ச்சி என்பது கணவன் மனைவிக்கிடையே நடைபெறும் நிகழ்வாகும். கணவனின் உடல் பிணியுள்ள போதும் பிற காரணங்களினாலும் புணர்ச்சிகளில் பிணி உண்டாகும். எவருடன், எந்த இடங்களில் புணர்ச்சியில் ஈடுபடக் கூடாது என்பதை,

> “மிக்க மெலிந்த மெய் மிக்க பருத்த உடல்
> சுக்கென வற்றிச் சுருங்கிய வக்குறிகள்”[22]

என்ற பாடலில் மிகவும் இளைத்த உடல். மிகவும் பருத்த உடல், வறண்டு வற்றிய உடல், பேறுகாலமானதும் ருது கொண்டவள், விருப்பமில்லாதவள், மாற்றான் மனையாள், சூல் கொண்டவள், பிரம்மச்சாரி போன்றவர்களுடன் புணர்ச்சியில் ஈடுபடக்கூடாது என்று சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆலயம், குருவின் வீடு, மடங்கள், இடுகாடு, சுடுகாடு, மரங்களின் நிழல், தண்டிக்கும் இடங்கள், தெருக்கூடுமிடம், மாதப்பிறப்பு, பெரியோர் நினைவு நாட்கள், உபவாச நாட்கள், அமாவாசை, முழுநிலவு, கிரகணம், பகல் பொழுது, கவலை, தாகம், உறுப்புப் பலகீனம் ஆகிய நிலைகளில் புணர்ச்சியில் ஈடுபடக் கூடாது என்றும் அவ்வாறு புணர்ச்சியில் ஈடுபட்டால் பல்வேறு பிணிகள் ஏற்படும் என்பதையும் சித்தர்களின் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

விபத்துகளும் பிணியும்

உடலில் தசைகள், நரம்புகள், எலும்புகள், இவற்றின் இணைப்புகளில் பிராணன் என்னும் உயிர் சக்தி அடங்கி இருக்கிறது. இது அமிர்த இடங்கள் என்றும் மர்ம இடங்கள் என்றும் கூறப்படும். இவ்விடங்களில் தாக்குதல், காயம், குத்து, வெட்டு, தட்டு, இடி, உதைபடும் போது வலி, வீக்கம், இரத்தம் வெளிப்படுதல், மரத்துப் போதல், எலும்பு முறிவு உறுப்புகள் செயலிழத்தல், மரணம் ஏற்படுதல் நிகழும் என்பதை,

> "அண்ணலே உலகத்தில் வாழும் மாந்த
> ரடி காயமுறு விழுதலாலும் வுண்ணடியில்
> பிணையற்று வீழ்வதாலும் விழுந்த நீசி"[23]

என்று விபத்து வழிப் பிணிகளை வகைப் படுத்தியுள்ளமையை அறிய முடிகின்றது.

நச்சுகளும்-பிணியும்

நச்சுக்களால் தோடங்கள் விரைந்து செயலிழப்பதை அறிந்த சித்த மருத்துவம் 'விடம்' எனும் நச்சுகளை, உயிர்விடம், பொருள் விடம் என இரண்டாக வகுத்துள்ளது. இவற்றில் உயிர்விடம் என்பது பாம்பு, பல்லி, எலி, சிலந்தி, தேள், நரி, பூரான், செய்யான், குரங்கு போன்ற உயிர்ப் பிராணிகளாகும்.

பொருள் விடம் எனப்படுவது கஞ்சா, அபின், கற்பூரம், அலரி, எட்டி, ஊமத்தை, குன்றி விதை, கள்ளிப்பால், எனத் தாவர வழிப் பொருட்களால் ஏற்படும் நச்சுப் பொருள்களைப் பற்றியதாகும். மேலும், கந்தகம், பாடாணங்கள் மற்றும் பூமித்தாதுப் பொருட்கள் போன்றவற்றால் ஏற்படும் நச்சு விளைவுகளையும் சித்தர்கள் முறைப்படுத்தியுள்ளனர்.

பிணி அறியும் முறை

ஐம்புலன்களையும் அவயங்களின் பேதங்களையும் கழிவுகளையும் சோதனை செய்து பிணி அறியும் முறை சித்த மருத்துவத்தில் இருந்தன என்பதை,

> "தரணியுள்ள வியாதிகளை யட்டங்கத்தால்
> தானறிய வேண்டுவது ஏதோ னென்னில்
> திரணியதோர் நாடிகண்கள் சத்தத்தோடு
> தேகத்தினது பரிசம்வர்னம் நாக்கு
> இரணமலம் மூத்திரமாம் இவைகளெட்டாம்"[24]

என்னும் யூகிமுனிச் சித்தர் பாடலின் வாயிலாக, மெய், வாய், மூக்கு, கண்கள், காதுகள், நாடி, மலம், சிறுநீர் என எட்டு முறைகளில் பிணிகளை அறியலாம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். பிணிக் காலத்தில் தோலில், நாவில், பற்களில், கண்களில், மூக்கில், காதுகளில், பேச்சு, ஓசை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டும் பிணி அறியப்படுகிறது. நாடித்துடிப்பான வாத, பித்த, கபம் எனும் இவை கலந்தும், மிகுந்தும், குறைந்தும் உள்ள நிலையைக் கொண்டும் மலம், சிறுநீர் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும் பிணிகளை உறுதி செய்வதைச் சித்தமருத்துவர்கள் அறிந்திருந்தனர் என்பதை இப்பாடலின் வழி அறிய முடிகின்றது.

குறி, குணங்கள், புலன் வழி பிணியறிதல்

பிணிகளின் குறி, குணங்களைக் கொண்டு உடலில் ஏற்படும் மாற்றங்களின் வழியாகவும் மெய், வாய், மூக்கு, கண்கள், காது ஆகியப் புலன்களின் வழியாகவும் பிணியறியும் முறைகளைச் சித்தர்கள்

அறிந்திருந்தனர். புலன்கள் மற்றும் நாடிகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

1. மெய்

உடலின் குளிர்ச்சி, வெப்பம், வறட்சி, மதமதப்பு, தோலில் ஏற்படும் பிணிக் குறிகள், வியர்வை, நிறம், முடி ஆகியவற்றின் வழி பிணிகளை அறியலாம். இதனை,

"கனிகொள் வாயிற் பதினெட்டுக் காணும்
இனியநாசி யிருபத் தேழாஞ் செவி
பிணிவ ரைம்பத் தாறெனப் பேசினார்"[25]

எனும் பாடல் வழி அறிய முடிகின்றது.

2. வாய்

வாயில் பதினெட்டுப் பிணிகளையும், உதடு, நாக்கு, பற்கள், உள்நாக்கு, உட்கண்ணம், தொண்டைக்கிரந்தி, சுவையறிதன்மை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றத்தினாலும், பேச்சுஒலித் தன்மை, பற்கள், ஈறுகள் இவைகளில் ஏற்படும் மாற்றத்தினாலும் பிணிகளை நன்கறியலாம்.

3. மூக்கு

மூக்கில் இருபத்தேழு பிணிகளை வகுத்திருந்தாலும் வாசனை அறிதிறன், கட்டி, குருதிவடிதல், நீர்வடிதல், எரிச்சல், வலி, அடைப்பு போன்ற பல குணங்களின் அடிப்படைகளாலும் பிணிகளை அறியலாம்.

4. கண்கள்

கண்களில் தொண்ணூற்றாறு வகைப் பிணிகள் இருப்பினும், அகக் காரணங்களினால் கண்களில் ஏற்படும் மாற்றங்களையும், புறக் காரணங்களினால் கண்களில் ஏற்படும் மாற்றங்களையும் கொண்டு பிணிகளை அறியலாம். உடலில் ஏற்படும் வெப்பம், குளிர்ச்சி,

தோடப்பிறழ்தல் ஆகியவற்றின் வழியாகவும், குறிகளையும், நிறங்களையும் வகைப்படுத்தியும் பிணிகளை அறியலாம்.

5. காது

காதில் ஏற்படும் பிணிகளை ஐம்பத்தாறு என வரையறுக்கப்பட்டிருந்தாலும் அதன் கேட்புத் திறன், குளிர்ச்சி, வெப்பத்தை உணர்திறன், காது சவ்வுக் குளிர்ச்சி, காதின் உட்புறம் கேட்கும் ஓசை இவற்றின் மூலமும் பிணி அறிதல் முறையை வகுத்துள்ளனர்.

6. நாடி

சித்த மருத்துவத்தில் பிணியறிதலின் சிறப்பு முறையாக நாடி பார்க்கும் முறை கையாளப்பட்டு வருகிறது. நாடிச் சோதனையின் மூலம் உடலில் உள்ள வாத, பித்த, கபம் எனும் தோடங்களின் தன்மைகளையும் அறியலாம். இதனையே வள்ளுவரும்,

> "மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று"[26]

என்னும் குறட்பாவின் வழி உணர்த்துகின்றார். அதாவது, தோடங்கள் தம் அளவில் பிறழ்ந்த நிலையையும் ஒன்றுடன் ஒன்று கலந்து பிணி செய்யும் நிலையையும் அறிந்து கொள்ள அடிப்படையாக உள்ள சோதனை 'நாடிச் சோதனை' என்பதை அறிய முடிகின்றது.

நாடியும் பஞ்சபூத இயக்கமும்

உடல் பஞ்சபூத இயக்கங்களால் ஆனது. எனவே உடலில் ஏற்படும் பிணிகளையும், தோடங்களையும், பஞ்சபூதவழி அறியலாம்.

ஆகாயம் -	மேகப்பிணி -	பூதநாடி
காற்று -	வாதப்பிணி -	வாதநாடி

நெருப்பு	-	பித்தப்பிணி	-	பித்தநாடி
நீர்	-	கபப்பிணி	-	கபநாடி
மண்	-	கிரந்திப்பிணி	-	பூதநாடி

எனப் பஞ்ச பூதங்களைத் தோடங்கள் வழி நாடிகளைக் கொண்டு ஐந்தாகப் பிரித்துப் பிணியறிந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

இயக்கத் தோடங்கள்

இயக்கத் தோடங்களான வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் தசநாடிகளிலும், முதன்மை நாடிகளான இடகலை, பிங்கலை, சுழிமுனை, ஆகியவற்றிலும் தசவாயுக்களில் முதன்மை வாயுக்களான அபாணன், பிராணன், சமானன் இம்மூன்றிலும் முறையாக நின்ற மூல இயக்கம் கொண்டு, பிற நாடிகளிலும் பிற வாயுக்களிலும் கலந்து உடலை இயக்குகின்றன. இதனை,

"தாது முறையே தனியிடை வாதமாம்
போதுறு பிங்கலை புகன்றது பித்தமாம்
மாது சுழிமுனை வழங்கிடு மையமாம்
ஓது முறை பார்த்துணர்ந்தவர் சித்தரே."[27]

என்ற பாடலின் வழி நாமறிய முடிகிறது. மேலும்,

"உணர்ந்தவபா னனூறு மந்த வாதத்தில்
புணர்ந்த பிராணன் புருவந்தப் பித்தத்தில்
அணைந்த சமாணன் டக்குங் கபத்தோ
டிணைந்த மூன்றுக் கொடுத்த குறியொன்றே"[28]

என்ற திருமூலர் பாடலும் தோடங்கள் வாயுக்களையும், நாடிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளதைக் குறிப்பிடுகின்றது. வாதத் தோடமானது அபாணன், இடகலை என்றும், பித்தத் தோடமானது பிராணன், பிங்கலை என்றும், கபத்தோடமானது சமானன், சுழிமுனை என்ற வாயுக்களையும்

நாடிகளையும் மூலமாகக் கொண்டு இயங்குகிறது. மேலும் பிற வாயுக்களிலும், நாடிகளிலும் நின்று உடல் முழுவதும் தோடங்கள் பரவிச் செயல்படுவதை அறிய முடிகின்றது. தேரைச் சித்தர் பாடலில் உயிர்த் தாதுக்களான வாதம், பித்தம், கபம் இம்மூன்றைப் பற்றி,

"வாதமாய் படைத்து பித்த
வன்னியாய் காத்து சேத்ப
சீதமாய் துடைத்து...."[29]

என்ற பாடலில் வாதம் படைக்கும் செயலிலும் பித்தம் காக்கும் செயலிலும் கபம் அழிக்கும் செயலிலும் இயங்குவது குறிப்பிடப்பட்டுள்ளது.

உடல் இயக்கத்தில் நாடி

உடல் கொண்ட வாதம், பித்தம் மற்றும் கபம் எனும் உயிர்த்தாதுக்கள் உடல் இயக்கத்தில் தன் அளவு கொண்டு உடலை இயக்கிக் கொண்டிருக்கிறது. பிணியிலிருந்து பிணியாளரைக் காப்பாற்ற இயலும் இயலாது என்பதையும், உடலில் எந்தத் தோடம் தன்னளவில் மிகுந்தும் குறைந்தும் உள்ளது என்பதையும், நாடித் துடிப்பின் துடிப்புணர்தலின் அளவைக் கொண்டு அறியலாம். இதனை,

"பதைக்கின்ற மூவரில் பக்குவம் தப்பியே
நிதைக்கின்ற வாதமும் பித்தமும் நீங்கிடில்
வதைகொண் டிருந்தாலும் தோன்றிய வுயிர்விடும்
பிதைக் கொண்ட வாதபித்த பெலனாமே."[30]

என்னும் பாடலின் வாயிலாக அறிய முடிகின்றது. உடலில் உயிர் வாழ்வதற்கு வாதம், பித்தம் இரண்டும் முதன்மையானவை; உயிர்த் தாதுவான கபம் தன் அளவில் மிகுந்து வாதம், பித்தம் அடங்கினால்

உடலிலிருந்து உயிர் பிரிந்து மரணம் உண்டாகும் என்பதை இப்பாடல் சுட்டிக்காட்டுகிறது. மேலும் வாதமானது உடலில் படைக்கும் செயலையும் பித்தம் காக்கும் செயலையும், கபம் அழிக்கும் செயலையும் செய்கிறது என்பதையும் இப்பாடல் சுட்டிக்காட்டுகிறது. கபமே உயிர் அடங்கும் செயலை உணர்த்தும் துடிப்பாகவும், வாதம், பித்தம் உயிர் காப்பதை உணர்த்தும் துடிப்பாக உள்ளதையும் அறிய முடிகின்றது.

நாடி பார்த்தலின் பொது விதிகள்

நாடிச் சோதனை எந்த மாதத்தில் எந்த நேரத்தில் நாடி பார்த்தால் மிகவும் தெளிவாக உணர முடியும் என்பதனை,

"சித்திரை வைகாசிக்குச் செழுங்க திருதயந்தன்னில்
அத்தமா மானியாடி ஐப்பசி கார்த்திகைக்கு
மத்தியானத்திற் பார்க்க மார்கழிதையு மாசி
வித்தகக் கதிரோன் மேற்கில் விழுகின்ற நேரந்தானே"[31]

என்ற பாடலில் சித்திரை, வைகாசி மாதங்களில் உதய காலத்திலும், ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகையில் உச்சிக் காலத்திலும், மார்கழி, தை, மாசியில் அந்திப் பொழுதிலும், ஆவணி, புரட்டாசியில் இரவிலும் நாடி பார்க்க வேண்டும். இச்செய்திகள் நாடி பார்த்தலின் முக்கியத்துவத்தையும் அதன் சிறப்பினையும் சுட்டிக்காட்டுகின்றன. மேலும், ஆண்களுக்கான நாடி பார்க்கும் விதத்தைப் பற்றியும், பெண்களுக்கான நாடி பார்க்கும் விதத்தைப் பற்றியும் கூற வந்த சித்தர்கள்,

"நானெனும் புருடற்கெல்லா நாடிதான் வலக்கையாகும்
தேனெனும் மடவார்க் கெல்லாந் திடம்பெற விடக்கை சித்தே"[32]

என்று ஆண்களுக்கு வலது கையிலும் பெண்களுக்கு இடது கையிலும் நாடி பார்க்க வேண்டும் என்று கூறியுள்ளதை இப்பாடல் வழி அறிய முடிகின்றது. இதே கருத்தையே தேரையச் சித்தரும் வலியுறுத்திக் கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நாடி பார்ப்பதற்கு முன் செய்ய வேண்டியவை

நாடி பார்க்கும் முன் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யூகிமுனிச்சித்தர் தம்பாடலில்,

"பார்க்கவே கைபிடித்து நாடி தன்னைப்
பகர்ந்திடவே நெட்டையது வாங்கிப் பின்னும்"[33]

என நாடி பார்க்கும்போது முன் கையைப் பிடித்து நன்கு தடவிக் கொடுத்து சிறிது வெப்பம் உண்டாக்க வேண்டும், பின் நெட்டை விட்டு, பெருவிரலின் கீழ்ப்புறம் ஓர் அங்குலத்தில் ஆரை எலும்பின் மேல் துடிப்புக் கொண்டுள்ள நாடியை மூன்று விரல்களால் மிதமாக அழுத்திப்பிடித்து ஒவ்வொரு விரல் வழியும் துடிப்பை உணர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு நுட்பமாகக் கூறியுள்ள யூகிமுனிச்சித்தரின் மருத்துவமுறை குறிப்பிடத்தக்கது.

ஆண் - பெண்களுக்கான நாடித்துடிப்பு

ஆண், பெண்களுக்கான நாடித் துடிப்பின் தன்மையிலுள்ள வேறுபாட்டை உணரும் வகையில் நாடி பார்க்கும் முறையையும் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் எந்த விரலில் எந்த நாடி பார்க்க வேண்டும் என்பதை,

"வாளப்பா முதல் விரலே வாதநாடி
வண்மையுட னடு விரலே பித்தநாடி

கேளப்பா பெரு விரலே சேத்மநாடி"[34]

என்ற பாடலில் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆள்காட்டி விரலில் வாதநாடியும், நடுவிரலில் பித்த நாடியும், மோதிர விரலில் கப நாடியும் பிடித்து உணர வேண்டும் என்று கூறியுள்ளனர்.

"வந்திடும் வாதநாடி மயில்போலும் அன்னம் போலும்"[35]

என வாதநாடித் துடிப்பில் மயில், அன்னம் ஆகிய பறவைகளின் நடைபோலும் பித்தநாடித் துடிப்பில் ஆமை, அட்டை போல் ஊர்ந்தும், கபநாடித் துடிப்பில் தவளை, பாம்பு போன்று ஊர்ந்தும், தத்தியும், நடப்பதும் உணரப்பட வேண்டும் என்றும் சித்தர்கள் தங்களின் பாடல்கள் வழி தெரிவித்துள்ளனர். பெண்களுக்கான நாடித்துடிப்பை,

"சாம்பென சிலேத்ம நாடி சடுதியிலன்னம் போலும்
நாம்பென பெண்களுக்கு நாடி நடக்குந் தானே"[36]

எனும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதநாடித் துடிப்பில் பாம்பு போலவும், பித்த நாடித் துடிப்பில் தவளை போலவும், கபநாடித் துடிப்பில் அன்னம் போலவும் அசைவுகள் பெண்களுக்கு நாடி பிடித்துப் பார்க்கும்போது உணரப்பட வேண்டும் என்பதையும் எடுத்துரைத்துள்ளனர்.

தோடங்களின் அளவு விவரம்

நாடித் துடிப்பு உணர்தலில் வாதம், பித்தம், கபம் ஆகியவற்றின் அளவுகளைப் பற்றி,

"வழங்கிய வாத மாத்திரை யொன்றாகில்
தழங்கிய பித்தந் தன்னி லரைவாசி
அழங்குங் கபந்தா னடங்கியே காலோடில்
பிலங்கிய மூவற்குப் பிசகொன்று மில்லையே"[37]

எனும் பாடலில் திருமூலர் சுட்டிக்காட்டியுள்ளார். வாதம் ஒரு பங்கும், பித்தம் அரைப் பங்கும், கபம் கால் பங்கும் என மாத்திரை அளவுகளால் உணரப்பட்டால் அந்த அளவு ஆரோக்கியமான அளவாகக் கருதப்பட வேண்டும் என்பதையும் இந்தப் பாடலின் மூலம் திருமூலர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடித் துடிப்பு எப்பொழுதெல்லாம் யார் யார்க்கெல்லாம் காண முடியாது என்பதனை யூகிமுனிச் சித்தர்,

"வெய்யிலிலோ எப்பொழுதும் நடக்கையாலும்
வெம்பசி யிலாகிரிக ளருந்தலாலும்
துய்ய வெய்யில் புகையிலைகள் கொள்ளலாலும்"[38]

என்ற பாடலில் நாடித் துடிப்பை யார் யார்க்கெல்லாம் உணர முடியாது என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். தொடர்ந்து நடப்பவர்களிடமும், வெயிலில் இருப்போரிடமும், பசிக் காலத்திலும், போதைப் பொருட்கள் உட்கொண்ட நேரத்திலும், சோர்வு, சுரம், தூக்கமின்மை போன்ற நேரங்களிலும், மனச் சலனம், இரத்தப்போக்கு மிகுபேதி போன்ற

பிணிகளால் பாதிக்கப்பட்ட நேரங்களிலும் நாடித் துடிப்பை உணர இயலாது என்று குறிப்பிட்டுள்ளதுடன்,

"கொண்டிடவே சயரோசி காசரோசி
குறிப்பாக சிற்றின்பஞ் செய்தபேர்கள்"[39]

என்று சயப்பிணி, காசப்பிணி, புணர்ச்சியில் ஈடுபட்டோர், மிகுந்த வயதானவர்கள், சிசுக்கள், நீரில் மூழ்கியவர்கள் போன்றோரின் நாடித் துடிப்பில் உண்மையான தோட விபரங்களின் நிலையை அறிய முடியாது என்பதையும் இப்பாடலின் மூலம் தெரிவித்துள்ளார்.

நாடித் துடிப்பில் தோடக்கலப்பு உணர்தல்

தோடங்களான வாதம், பித்தம், கபம் இவை மூன்றும் ஒன்றோடு ஒன்றோ, அல்லது மூன்றுமோ கலந்து இருக்கும் நிலையில் துடிப்பை எவ்வாறு உணரலாம் என்பதைப் பற்றியம் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதைக் கீழ்வரும் பகுதி காட்டுகிறது.

- "வாதம் இரண்டு பங்கும் பித்தம் ஒரு பங்கும் கலந்தால் வாதபித்தம் என்பதாகும். இவ்வுணர்வு தள்ளாடி நடப்பது போன்றதாகும்.
- பித்தம் இரண்டு பங்கும், கபம் ஒரு பங்கும் கலந்தால் பித்த கபத் தொந்தமாகும் இவ்வுணர்வு தொட்டில், ஓடம் அசைவது போன்றதாகும்.
- கபம் இரண்டு பங்கும் வாதம் ஒரு பங்கும் கலந்தால் கபவாதத் தொந்தமாகும். இவ்வுணர்வு முன்னும் பின்னும் அசைவது போன்றதாகும்.
- வாதம் இரண்டு பங்கும் கபம் ஒரு பங்கும் கலந்தால் வாதகபத் தொந்தமாகும். இவ்வுணர்வு அரணை வால் துடிப்பது போன்றதாகும்.
- பித்தம் இரண்டு பங்கும் வாதம் ஒரு பங்கும் கலந்தால் பித்தவாதத் தொந்தமாகும். இவ்வுணர்வு தூண்டப்பட்ட வீணை நரம்பு துடிப்பது போன்றதாகும்.
- கபம் இரண்டு பங்கும் பித்தம் ஒரு பங்கும் கலந்தால் கபப்பித்தத் தொந்தமாகும். இவ்வுணர்வு சக்கரம் சுழல்வது போன்றதாகும்."[40]

தோடங்கள் மூன்றும் கலக்கும் போது நாடித்துடிப்பின் உணர்தலை எவ்வாறு அறியலாம் என்பதைச் சித்தர்கள் சரியாகக் கணித்திருந்தனர் என்பதை மேற்கண்ட செய்திகள் நமக்குக் காட்டுகின்றன. வாதம், பித்தம், கபம் மூன்றும் இரத்த ஓட்ட அழுத்த அளவை மாத்திரை அளவாக முறையே 1, ணீ , டீ என்று கணக்கிடப்பட்டுள்ளது.

குரு நாடி

பிணிகளை நாடித் துடிப்பின் அடிப்படையில் வகுத்த சித்தர்கள், ஐந்து விரல்களிலும் உணரப்படும் நாடிகளில் பெருவிரலைப் பூத நாடி என்றும், ஆள் காட்டி விரலை வாத நாடி என்றும், நடு விரலைப் பித்த நாடி என்றும், மோதிர விரலைக் கப நாடி என்றும், சிறுவிரலைப் பூத நாடி என்றும் வகுத்துள்ளனர். இவ்வைந்து நாடிகளுக்கும் அடிப்படைத் துடிப்பாக உணரப்படுவதே குரு நாடி என்பதை,

“பாரப்பா குருநாடி யைந்துக்கும் நடுவாம்
பாரி நிற்கும் வரலாறு தன்னைக் கேளு
சீரப்பா பித்தத்தின் முன்னே நிற்குந்
தெசநாடி பத்துக்குள் திறமாய் நிற்கும்.”[41]

என்றுக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்து நாடிகளுக்கும் நடுவாக ஓடுவதும் பித்த நாடிக்கு முன்னர் இருந்து துடிப்பதும், பத்து நாடிகளுக்கும் அடிப்படையாய் இருப்பதும் குருநாடி எனச் சித்தர்கள் கூறியுள்ளனர். மேலும் குருநாடியானது, வாதத்திலும் பித்தத்திலும் பம்பரம் சுழல்வது போன்று துடித்தாலும், கபத்தில் எதிர் எதிர் மோதுவது போன்று துடித்தாலும் பிணி எனச் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர்.

பூதநாடி

பித்த நாடித் துடிப்பை உணர்தலில் உயர்ந்து துடித்தலும் அடங்காமல் படபடவென்று துடித்தலும் பூத நாடியின் அறிகுறி என உணர வேண்டும். இதனை,

"ஆற்றலுட னுயர்ந்தேறிக் குதித்தல் போலு
மடங்காமற் படபவெனப் பித்த மோடின்
மாற்றவரி தாம்பூதநாடி யென்றே
வாகட ரெல்லாம் முரைத்தர் வையமீதே"[42]

என்ற பாடல் வரிகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பித்த நாடியில் பூதநாடியானது-பூனை நடை போன்றும் வெள்ளெலி நடைபோன்றும் வண்டு நடைபோலும் பாம்பு நெளிதல் போன்றும் துடிப்புகளை உணர்ந்தால் அது உடல் பிணி எனச் சித்தர்கள் வரையறுத்துக் கூறியுள்ளதையும் அறிய முடிகின்றது. பித்தம் மிகுந்து விரைந்து துடித்தால் அது கிரிசை நோய் என்னும் மனநோய் எனவும் சித்தர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர். இதனை,

"பித்தமாய் நாடிதானே பெலத்தொடி தனித்து நிற்கில்
மத்திமப் பைத்தியத்தை வளர்த்திடும் வரட்சி சேரும்"[43]

என்ற பாடல் வரிகளின் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

குருநாடியின் துடிப்புக் குறையும்போது பூத நாடித் துடிப்பு மேலோங்கி, குருநாடித் துடிப்பை அடக்கினால் மரணம் உண்டாக்கும் என்பதையும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர். இந்தத் துடிப்புணர்வைத் தோடப் பிணியின் அடிப்படையில் அறிய முடியும் என்பதை,

"வாதபித்த தையமூன்றும் வண்பலத்துடனே தத்தம்

பேதமொன் றில்லாவண்ணம் பேசியதானந் தன்னில்
நீதியாய்நிலை த்துநின்றால் நெடும்பிணி சிக்கலில்லை
தாதுவுமொன் றொடொன்று தாவிடிற்பிணி கள்தானே"[44]

என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது. அதாவது வாத, பித்த, கபம் என்னும் உயிர்த்தாதுக்கள் துடிப்பில் தன்னளவு பிறழாமல் இருந்தால் பிணியில்லை என்றும் துடிப்பில் மாறுபட்டால் பிணி என்றும் வகுத்துள்ளதையும் இப்பாடல் வரிகள் காட்டுகின்றன.

நாடித் துடிப்பில் மரணம் அறிதல்

கொடிய பிணிக் காலத்தில் நாடித்துடிப்பு வழி மரணம் உணருவதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதையும் அவர்களின் பாடல்கள் வழி அறிய முடிகிறது. இதனை,

"மத்திய ஐயநாடி மத்தித்து உழன்று நின்று
முத்திய ஈசல்போல் முடுகியே பதறு மாகில்
நித்தமோர் பகலுக்குள்ளே நில்லாது மரணம் வந்த
சுத்தியே மரிப்பாரென்னச் சொல்லுவார் நல்லோர் தானே"[45]

என்ற பாடலில் கபநாடி உழன்று, ஈசல் போல் பதறித் துடித்தால் மரணம் உண்டாகும் என்பதை எடுத்துரைத்துள்ளனர். மேலும் வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று தோடங்களின் துடிப்பினைக் கொண்டும் மரணத்தை அறியமுடியும் எனவும் கண்டறிந்துள்ளனர். அதாவது வாதம், பித்தம் இரண்டும் துடிப்பின்றி, கபம் மட்டும் துடித்தால் 40 நாழிகையில் மரணம் ஏற்படும் என்பதையும் கபம் பித்தத்தை அடக்கித் தன்னளவில் துடித்தால் ஒரு நாளில் மரணம் உண்டாகும் என்பதையும் கபம் மட்டும் மிகுந்து நீர்போல் துடித்தால் இரண்டு நாட்களில் மரணம் ஏற்படும் என்பதையும் அறிந்துள்ளனர். கபமானது புரண்டு உருண்டு துடித்தால் இரண்டரை

நாட்களில் மரணம் உண்டாகும் என்பதையும் பித்தம் புரண்டு உருண்டு துடித்தால் மூன்று நாட்களில் மரணம் ஏற்படும் என்பதையும் வாதம் சிதறித் துடித்தால் எட்டு நாட்களிலும் வாதமும் பித்தமும் சிதறித் துடித்தால் பதினைந்து நாட்களிலும் அரணைவால் அறுபட்டது போன்றுத் துடித்தாலும் மரணம் உறுதியாக ஏற்படும் என்பதையும் சித்தர்கள் முன்பே கண்டறிந்துள்ளனர் என்பதை மேற்கண்ட பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன. நாடிச் சோதனை முறையில் உடலில் உயிர் நிலையை அறியக் குருநாடித் துடிப்பையும், உடலில் உயிர் பிரிதலின் நிலையை அறியப் பூதநாடித் துடிப்பையும், சித்தர்கள் அறிந்திருந்தனர்.

மரணத்தை நாடிவழி உணர்தல்

நாடிவழி மரணத்தை அறியும் முறைகளையும் சித்தர்கள் அறிந்திருக்கின்றனர் என்பதனை,

"பித்த மடங்கிணாற் பேசாதே போய்விடும்
எத்திய வைய மெழும் பிடிற் கிட்டாதே"[46]

என்ற பாடலில் வாதம், பித்த நாடிகள் துடிப்பின்றி கபம் மட்டும் துடிப்புக் கொண்டிருந்தால் மரணத்தையும் அதன் துடிப்புக் கொண்ட விரைவுத்தன்மை அடிப்படையிலும் மரணம் நிகழும் என்பதையும் இப்பாடலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நாடித்துடிப்பில் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் கொண்டு எந்தப் பிணி அவரது உடலில் ஏற்பட்டுள்ளது என்பதையும் அறிந்துவிடலாம். இதை,

"எந்தி வாத மெழும்பின் மருந்து செய்

எந்திய யிம் மூன்றின் னியல்பை யறிந்திடே"[47]

என்பதிலிருந்து வாத நாடித் துடிப்பைக் கொண்டு பிணியாளரின் உயிர் நிலையை அறிந்து மருத்துவம் செய்வது கபநாடிவழி மரணத்தையும், பித்த நாடி வழி மனநோயையும் அறியலாம் என இப்பாடலில் திருமூலர் எடுத்துரைத்துள்ளார்.

மலம், சிறுநீர்

சித்தர்கள் பிணிகளை அறிய மூன்று தோடங்களான வாத, பித்த, கபம் மட்டுமன்றி மலம், சிறுநீர் ஆகிய மனிதனின் கழிவுகளைக் கொண்டும் அறிந்திருக்கின்றனர். இதனை,

"மேவுவாத முடையவர் மெய்மலம்
சீவிதாகக் கருத்திடுஞ் செம்மியே"[48]

என்ற பாடல் நன்கு விளக்குகின்றது. அதாவது மலத்தின் இளகிய மற்றும் இறுகிய தன்மையினைக் கொண்டு பிணியினை அறியலாம். கழிச்சல், பேதி, நீர்த்தல், ஊநீர், சீதம் ஆகியவை கலந்து போதலும், மஞ்சள் நிறம், கருப்பு நிறம், வெளுப்பு நிறம், சிவப்பு நிறம், பச்சை நிறம், நுரைத்துப் போதல், இரத்தம் கலந்து போதல், செரிக்காமல் நாற்ற மலமாதல், புழுக்களுடனான மலம் என மலத்தை அடிப்படையாகக் கொண்டும் பிணிகளை வகைப்படுத்தியுள்ளதையும் இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

சிறுநீர்வழிப் பிணியறிதல்

சித்தர்கள் மலத்தைக் கொண்டு பிணிகளை அறிந்திருத்தலைப் போலச் சிறுநீரைக் கொண்டும் பலவகையான பிணிகளை அறிந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. இதனை,

"வந்த நீர்க்கரி எடை மனம் நுரை எஞ்சலென்

றைந்திய லுளவை யறைகுது முறையே"[49]

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. சிறுநீரின் நிறம், அளவு, நாற்றம், நுரை மற்றும் வண்டல் (எஞ்சல்) என்ற ஐந்தினையும் அடிப்படையாகக் கொண்டே பிணிகளை நிர்ணயித்துள்ளனர் என்பதையும் இப்பாடல் வழி நாமறிய முடிகிறது. சிறுநீரின் நிறத்தினைக் கொண்டு பல்வேறு பிணிகளை வகுத்துள்ளனர். சிறுநீர் மஞ்சள் நிறத்தில் இருந்தால் ஆறுவகைப் பிணிகளையும், சிவப்பு நிறத்தில் இருந்தால் நான்கு வகைப் பிணிகளையும், பச்சை நிறத்தில் இருந்தால் ஐந்து வகைப் பிணிகளையும் கறுப்பு நிறத்தில் இருந்தால் நான்கு வகைப் பிணிகளையும் வெண்மை நிறத்தில் இருந்தால் இரண்டு வகைப் பிணிகளையும் வகுத்துள்ளதோடு, உடல் உறுப்புகளில் உண்டாகும் பிணிகளையும் சிறுநீரினைக் கொண்டு சித்தர்கள் அறிந்துள்ளனர். இதனை,

"பீதம் செம்மையே கருமை வெண்மை யென
றோதைங் கொழுமையை யொத்துகு நீரே"[50]

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

சிறுநீரில் நெய்விட்டுச் சோதனை செய்தல்

சிறுநீரில் ஒரு துளி எண்ணெய் (நெய்) விட்டு அந்த எண்ணெய்த் துளி பரவுவதை அடிப்படையாகக் கொண்டும் சித்தர்கள் பிணிகளை வரையறுத்துள்ளனர்.

"நிறக்குறிக் குரைத்த நிருமாண நீரிற்
சிறக்க வெண்ணெய்யோர் சிறுதுளி நடுவிடுத்து"[51]

என்ற பாடலின் வழி இதை அறிய முடிகின்றது. சிறுநீர்ச் சோதனை மூலம் வேறுபல பிணிகளையும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர் என்பதை,

"அரவென நீண்டினஃதே வாதம்
ஆழிபோற் பரவின் அஃதே பித்தம்
முத்தொத்து நிற்கின் மொழிவதென் கபமே"[52]

எனும் பாடல் வரிகள் காட்டுகின்றன. ஒரு கோப்பையில் சிறுநீரை எடுத்து அதன் நடுவில் ஒரு சொட்டு எண்ணெய் விட வேண்டும். அப்போது அந்த எண்ணெய்ப் பரவும் கோலம் பாம்பு போல் நீண்டால் வாதம் என்றும், கடல் போல் பரவினால் பித்தம் என்றும் பரவாமல் முத்துபோல் திரண்டு நின்றால் கபப் பிணி என்றும் வகுத்துள்ளதையும் நாம் அறிய முடிகிறது. சிறுநீரில் விடப்பட்ட ஒரு துளி எண்ணெயைக் கொண்டு கண்டறியப்படும் பிணியில் எந்தப் பிணி தீரும், எந்தப்பிணி தீராது என்பதையும் சித்தர்கள் நன்கு அறிந்துள்ளனர். இதனை,

"விடுதுளி சிதறி வெவ்வே றொன்றாமல்
கடுகெனப் பரவின் கைவிடல் முறையே"[53]

எனும் பாடலின் மூலம், சிறுநீரில் விடப்பட்ட எண்ணெய்த் துளியானது சிதறிப் பரவாமல் நீரின் உள் சென்று அடங்கினால் பிணி தீராது என்றும், எண்ணெய்த் துளி சிறுநீரில் பரவினால் பிணிதீரும் என்றும் கூறியுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பொதுவாகச் சிறுநீரின் நிறத்தைக் கொண்டு பிணியைச் சித்தர்கள் அறிந்துள்ளனர். வாதப் பிணியாளரின் சிறுநீரானது வெண்ணிறத்தையும், உதிர நிறத்தையும் கொண்டிருக்கும் போது அதில் எண்ணெய்த் துளிவிட்டுப்

பார்த்தால் அது பாம்பு போல் நீண்டும், சிறுநீர் கருத்து, நொந்தும் காணப்படும். பித்தப் பிணியாளரின் சிறுநீர் மிகவும் தடித்து வெளியேறும்; கொடிய மணம் வீசும்; கபப் பிணியாளரின் சிறுநீர் நுரை குறைந்து வெளியேறும் தன்மையுடையதாக இருக்கும். வாத பித்தப் பிணியாளரின் சிறுநீரானது புல்முனை போலவும், ஆகாய நிறத்தைப் போன்றும் வெளியேறும் என்ற அடிப்படைகளில் சிறுநீரின் வழிப் பிணிகளைக் கண்டறிந்துள்ளதைச் சித்தர்களின் பாடல்களின் மூலமாக நாம் அறிய முடிகிறது.

முடிபுகள்

- ✍ காலம், பருவம், உறைவிடம், மரபு ஆகிய சூழ்நிலைகளாலும் பல்வேறு உணவு முறைகளினாலும் ஏற்படும் பிணியினை அறிய, பிணியாளரின் உடல் வன்மை, பிணிவன்மை, பிணிக்காலம், வயது, உடல், தோடம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சித்தர்கள் பிணியினை அறிந்துள்ளனர்.

- ✍ மனிதர்களுக்கு ஏற்படும் பிணிகளை அதன் தோற்ற அடிப்படையில், குணம், குறிகள் அடிப்படையில் தோடவழிப் பிணிகள், பரம்பரைப் பிணிகள், புறக்காரணவழிப் பிணிகள் என மூன்று வகையாகப் பிரித்துள்ளதைச் சித்தர்களின் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

- ✍ தாதுக்களாலான உடலில் தோடங்களான வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் தன்னளவில் குறைந்தாலும், கூடினாலும் உடலில் பிணி ஏற்படும் என்பதைச் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

- ✍ வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று தோடங்களிலும் வாதமானது, பாதம் முதல் நாபி வரையிலும் பித்தமானது நாபி முதல் கண்டம் வரையிலும் கபமானது கண்டம் முதல் உச்சிவரையிலும் உற்பத்தியாகும் இடங்களாகச் சித்தர்கள் கண்டறிந்துள்ளதையும் நாமறிய முடிகிறது.

- ✍ முத்தோடங்களின் அளவினைப் பற்றி அறிய எண்ணிய சித்தர்கள் வாதம் ஒரு மாத்திரை அளவும், பித்தம் அரை மாத்திரை அளவும், கபம் கால் மாத்திரை அளவும் எனத் தமிழ் எழுத்துக்களுக்குரிய உச்சரிப்பு மாத்திரை அளவுகளைக் கொண்டே நாடியின் துடிப்பழுத்த அளவைச் சித்தர்கள் கணக்கிட்டுள்ளனர் என்பதையும் அவர்களின் பாடல்களின் மூலம் நாமறிய முடிகிறது.

- ✍ வாதமான வாயு அபாண வாயுவை மூலமாகக் கொண்டும், பித்தமான அழல் பிராணவாயுவை மூலமாகக் கொண்டும், கபமான சிலேத்துமம் சமான வாயுவை மூலமாகக் கொண்டும், உடல் முழுவதும் பரவிச் செயல்படுகின்றன என முத்தோடங்களின் மூலத்தினைப் பற்றியும் சித்தர்கள் நன்கறிந்துள்ளனர்.

- ✍ தோடங்கள் தன்னளவில் மாறுபடும்போது அத்தோடங்களைச் சமப்படுத்தவும் உடல் கழிவுகளை வெளியேற்றவும் உடல் இயற்கையாகச் செயல்படுகிறது. இத்தகைய செயல்களைச் சித்தர்கள் ‘வேகங்கள்’ எனக் குறிப்பிட்டு அவற்றைப் பதினான்கு வகைகளாகப் பிரித்துக் கூறியுள்ளனர்.

- ✍ தன்னளவிலுள்ள வாதம், பித்தம், கபம் ஆகியவை பிராணன், அபாணன், சமானன் இவற்றில் நின்று செயல்பட்டு உடலைக் காப்பதையும் அவை தன்னளவில் மாறுபடும் பொழுது பிணியை உண்டாக்கும் என்பதையும் சித்தர்கள் அறிந்துள்ளனர்.

- ✍ கணவன் கொண்ட பிணியானது புணர்ச்சி வழி மனைவிக்கு உண்டாவதையும் அப்புணர்ச்சியில் கருக் கொண்டால் அக்கருவில் வளரும் சிசுவிற்கும் அப்பிணி உண்டாகும் என்பதையும் பரம்பரைப் பிணிகளாகச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- ✍ அகக் காரணங்களினால் மட்டுமின்றி புறக் காரணங்களினால் தோடங்கள் தன்னளவில் மாறுபடும் போது காலம், உறைவிடம், உணவு, புணர்ச்சி, விபத்து ஆகியவற்றின் அடிப்படையில் பிணி உண்டாகும் என்பதையும் சித்தர்கள் தங்களின் பாடல்களின் மூலம் உணர்த்தியுள்ளனர்.

- ✍ பிணிகளைக் காலத்தின் அடிப்படையில் வகுத்த சித்தர்கள், பன்னிரெண்டு மாதங்களையும் ஆறுகாலமாகப் பிரித்து, இன்ன காலத்திற்கு இன்ன பிணி ஏற்படும் என்பதையும் வகுத்தறிந்துள்ளனர். உடலுக்குப் பலம் அதிகரிப்பது உரமோங்கும் காலம் என்றும். உடல் பலத்தைக் குறைப்பது உடலுரம்போக்கிக் காலம் என்றும் பிரித்துக் கூறியுள்ளதையும் அவர்களின் பாடல்கள் வழி அறிய முடிகின்றது.

- ✍ குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்களில் தோன்றும் பிணிகள் எத்தோடங்களின் அடிப்படையில் உண்டாகின்றன என்பதைப் பற்றியும் தோடங்கள் குறைவதாலும் கூடுவதாலும் சில வகையானப் பிணிகள் ஏற்படுகின்றன என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- ✍ உண்ணும் உணவு மாறுபடுவதாலும் காலம் கடந்து உண்பதாலும் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாத உணவை உண்பதாலும் ஏற்படுகின்ற செரிமானமின்மை, கூடா உணவு, ரசம் போன்றவை, தன்னளவிலுள்ள வாத, பித்த, கபத்தின் அளவுகளை மாறுபடச் செய்து, பல பிணியை உண்டாக்குகின்றன என்பதைப் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- ✍ புணர்ச்சி என்பது கணவன் மனைவிக் கிடையே நடைபெறும் நிகழ்வு ஆகும். கணவனின் உடலில் பிணியுள்ள போது புணர்ந்தால் மனைவிக்கும் பிணி உண்டாகும் என்பதையும் எந்தெந்த நிலைகளில் புணர்ச்சியில் ஈடுபடக் கூடாது என்பதையும் யார் யாருடன் புணர்ச்சியில் ஈடுபடக் கூடாது என்பதையும் சித்தர்கள் தங்கள் பாடல்களின் மூலம் எடுத்துரைத்துள்ளனர். இது வாழ்க்கையை அவர்கள் எந்த அளவு கூர்மையாகக் கவனித்துள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

- ✍ ஐம்புலன்களையும் அவயங்களின் பேதங்களையும் கழிவுகளையும் சோதனை செய்து பிணி அறியும் முறை சித்த மருத்துவத்தில் உள்ளது. வாத, பித்த, கபம் எனும் தனித் தன்மைகளும் இவை கலந்தும், மிகுந்தும், குறைந்தும் பிணியினை உண்டாக்கும் என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதன் மூலம் அவர்களின் நுண்ணறிவை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

- ✍ பிணிகளின் குறி குணங்களைக் கொண்டும் உடலில் ஏற்படும் மாற்றங்களின் வழியாகவும் பிற புலன்களின் வழியாகவும் சித்தர்கள்

மலம், சிறுநீர் ஆகியவற்றைக் கொண்டும் பிணியறிதலை அறிந்திருந்தனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

- முத்தோடங்கள் உடல் இயக்கத்தில் தன் அளவு கொண்டு உடலை இயக்கிக் கொண்டிருப்பதுடன் உடலில் அகக் காரணம் மற்றும் புறக் காரணவழி ஏற்படும் பிணிகளில் பிணியாளரைக் காப்பாற்ற இயலும் அல்லது இயலாது என்பதையும், உடலில் எந்தத் தோடம் மிகுந்தும் குறைந்தும் உள்ளது என்பதையும் நாடித் துடிப்பின் துடிப்புணர்தல் வழி அறிய முடியும் என்பதைச் சித்தர்கள் தெரிந்திருந்தனர்.

- சித்தர்கள் நாடி பார்த்தலின் அவசியத்தையும் எவ்வாறு நாடி பார்க்க வேண்டும் என்பதையும் அறிந்திருந்தனர். ஆண், பெண்களுக்கான நாடித் துடிப்பின் தன்மைகளைப் பற்றியும் ஆள்காட்டி விரலில் வாத நாடியும், நடு விரலில் பித்த நாடியும், மோதிர விரலில் கப நாடியும் என்று எந்தெந்த விரலின் மூலம் எந்தெந்த நாடி பார்த்தால் எந்தெந்தப் பிணி தெரியும் என்றும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர்.

- நாடித் துடிப்பை உணர்தலில் வாதம் ஒரு பங்கும், பித்தம் அரைப் பங்கும் கபம் கால் பங்கும் என மாத்திரை அளவுகளால் உணரப்பட்டால் அந்த அளவு ஆரோக்கியமான அளவாக இருக்கும் எனச் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

- தோடங்களான வாத, பித்த, கபம் ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்றோ அல்லது மூன்றும் கலந்தோ இருக்கும் நிலையில் நாடித் துடிப்பின் வழி அவற்றின் பிணிகளைச் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

✍ குருநாடி, பூதநாடி என நாடியினை வகைப்படுத்தித் தோடங்களின் அளவினைக் கொண்டு அது எந்த நாடி, எந்தப் பிணி என்பதையும், எத்தோடங்களின் குறைவால் அவை ஏற்படுகின்றன என்பதையும் சித்தர்கள் பகுத்துக் காட்டியுள்ளனர்.

அடிக்குறிப்புகள்

1. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், யூகிதத்துவம், பா.21.
2. இரா.தியாகராசன் மற்றும் பிறர், மருத்துவதனிப்பாடல்கள், (பழநி. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டு குழு), பா.56.
3. குறள். 941.
4. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ. திரட்டுநாடி, பா.21.
5. மேலது, திருமூலநாயனார் நாடி, பா.9.
6. மேலது, வல்லாதியின் வைத்தியநாடிப்பரிட்சை, பா.12.
7. மேலது, வியாசர் சரீர சூத்திரம், பா.4.
8. சி.பி.சாமி, (பதி.ஆ.), அகத்தியர் குணவாகடம், பா.1133.
9. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் (பதி.ஆ.), திருமூலர் வைத்தியம் கருக்கிடை 600, பா.86.
10. சி.பி.சாமி (பதி.ஆ.), மு.நூ. பா.8.
11. மா.வடிவேலுமுதலியார், (உ.ஆ), ஞானவெட்டியான், பா.243.
12. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் (பதி.ஆ.), ஆத்மரட்சமிருதம் எனும் வைத்தியசார சங்கிரகம், ப.56. (பா.எ.இ.).
13. இரா.தியாகராசன், மற்றும் பிறர், மு.நூ., (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டு குழு), பா.78.
14. மேலது, பா.83.
15. மேலது, பா.80.
16. மேலது, பா.85.

17. மேலது, பா.123.

18. குறள். 945.

19. முனுசாமி முதலியார் (தொ.ஆ.), நோயில்லா நலவாழ்வு, ப.4. (பா.எ.இ.).

20. இரா.தியாகராசன், மற்றும் பிறர், மு.நூ., (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.46.

21. நற். 136.

22. இரா.தியாகராசன், மற்றும் பிறர், மு.நூ., (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.43.

23. சூ.இராசாமணி (தொ.ஆ), அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி 1200, பா.9.

24. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் (பதி.ஆ.), ஆத்மரட்சாமிர்தம் எனும் வைத்திய சாரசஸ்கிரகம், பா.41.

25. இரா.தியாகராசன், மற்றும் பிறர், அங்காதிபாதம், (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.104.

26. குறள். 941.

27. கந்தசாமி முதலியார் (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், திருமூலநாயனார் நாடி, பா.5.

28. மேலது, பா.6.

29. இரா.தியாகராசன், (தொ.ஆ.), தேரையர் மருத்துபாரதம், பா.2.

30. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ. திருமூலநாயனார் நாடி, பா.35.

31. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., அகத்தியர் நாடி, பா.31.

32. பி.இரத்தினநாயக்கர் அன் சன்ஸ், (தொ.ஆ.), ஆத்மரட்சாமிர்தம் எனும் வைத்தியசார சங்கிரகம், ப.9. (பா.எ.இ.).
33. மேலது, ப.9.
34. கந்தசாமி முதலியார் (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், பரிபூரண நாடி, பா.2.
35. பி.இரத்தினநாயக்கர் அன் சன்ஸ் (தொ.ஆ.), மு.நூ., ப.10. (பா.எ.இ.).
36. மேலது, ப.10.
37. கந்தசாமி முதலியார் (தொ.ஆ.), மு.நூ., பா.9.
38. பி.இரத்தினநாயக்கர் அன் சன்ஸ் (தொ.ஆ.), மு.நூ., ப.7. (பா.எ.இ.).
39. மேலது, ப.7.
40. மேலது, ப.15, 16.
41. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., பா.9.
42. இரா.தியாகராசன் மற்றும் பிறர், அங்காதிபாதம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு, பா.177.
43. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், குணவாடத்தின் நோயின் சாரம், பா.31.
44. மேலது, பா.50.
45. மேலது, பா.45.
46. மேலது, திருமூலநாயனார் நாடி, பா.36.
47. மேலது, பா.34.
48. மேலது, திரட்டுநாடி, பா.48.

49. ம.சண்முகவேலன், சித்தமருத்து நோய்நாடல் நோய் முதல் நாடல் திரட்டு, ப.265. (பா.எ.இ.).

50. மேலது, ப.266.

51. க.சு.உத்தமராயன், சித்தமருத்துவாங்கச் சுருக்கம், ப.349. (பா.எ.இ.).

52. ம.சண்முகவேலன், மு.நூ., பக்.279-280. (பா.எ.இ.).

53. க.சு.உத்தமராயன், மு.நூ., ப.352. (பா.எ.இ.).

இயல் – 5

சித்தமருத்துவ முறைகள்

தமிழ் மக்களிடையே தொன்று தொட்டுச் சித்த மருத்துவம் ஒரு சிறப்பு மருத்துவமாக விளங்கி வருகின்றது. இன்றைய மருத்துவ முறைகளை உலகிற்கு அறிமுகப்படுத்தியதே சித்த மருத்துவம் தான் என்றால் அது மிகையாகாது. நவீன மருத்துவ முறைகள் அதிகரித்து வரும் இக்காலத்திலும் சித்த மருத்துவம் சிறப்பிடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அக்கால மக்கள் தொழில் நுட்பமே இல்லாத காலத்தில் பல்வேறு வகையான சித்த மருத்துவமுறைகளை அறிந்திருந்தனர். அத்தகையச் சிறப்பிற்குரியச் சித்த மருத்துவ முறைகளைப் பற்றி ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

வர்ம மருத்துவம்

உலகின் வேறு எந்த மருத்துவமுறைகளிலும் இல்லாத ஒரு மருத்துவ முறைதான் வர்ம மருத்துவம் என்பதாகும். இது சித்தர்களால் மட்டுமே கையாளப்பட்டு வந்த மருத்துவ முறைகளாகும். உடலில் உள்ள தசை ஒட்டு, நரம்பு இணைப்பு, எலும்பு இணைப்பு, இரத்தக் குழாய் இணைப்பு போன்ற இடங்களிலுள்ள நுண்ணிய உணர்வுப் பாகங்களைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். அவ்வாறு நுண்ணிய உணர்வுகள் மறைந்துள்ளதை மர்ம இடங்கள் மற்றும் வர்ம இடங்கள் என அழைத்தனர். இவ்விடங்களில் தாக்குதல், விபத்து ஆகியவற்றால் ஏற்படும் நோய், பிணி ஆகியவற்றை ‘வர்மப் பிணிகள்’ என்றழைத்தனர். இவ்வாறு ஏற்படும் வர்மப் பிணிகளுக்கு

உரிய சிகிச்சை முறைகளை வர்ம மருத்துவம் என அழைத்தனர். வர்ம மருத்துவத்தை,

"கேளப்பா தடியடிகள் படுவதாலும்
செடியான எறிவிசைகள் கொள்ளலாலும்
வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்
மாற்றானின் மைகப்பிடிகள் படுவதாலும்"[1]

எனும் பாடல் வரிகள் நமக்கு காட்டுகின்றன.

வர்மப் பிணிக்கான காரணங்கள்

முன்பின் தாக்குதல், முட்டுதல், வெட்டுதல், குத்துதல் போன்ற காரணங்களால் வர்மப் பிணிகள் ஏற்படுகின்றன. அவற்றால் உடல் அசைவற்று மயங்குதல், உறுப்புகள் அசைவற்றுப் போதல், மூட்டுகளில் சவ்வு ஏற்படுதல், பிணிகள், உடல் பலமிழந்துத் தொய்வடைதல், உடல் குறுகுதல், அடிபட்ட இடத்தில் வீங்கி நீர் கோர்த்தல், பேச இயலாமை, நடக்க இயலாமை போன்ற அறிகுறிகள் தோன்றி வர்மம் பீடிக்கும்.

வர்மப் பிணியைப் போக்குவதற்கான வழிமுறைகள்

உடலில் வர்மம் என்பது உயிரும், உணர்வும் ஒன்றியிருக்கும் நூற்றி எட்டு இடங்களே வர்மத்தலங்களாகும் என்பதை,

"உள்ளபடி நூற்றெட்டுத் தலங்களாகும்
உணர்வாரும் அத்தலங்கள் உயிருமாகும்
கள்ள முற்றால் தலங்கள் பிணியுமாகும்"[2]

என உடலில் நூற்றி எட்டு இடங்களில் வர்மத்தலம் உள்ளதையும் விபத்துவழிப் பிணியும் உண்டாகும் என்று கூறுவதையும் இத்தலங்களில்

பெண்களுக்குப் ‘பீசகாலம்’ எனும் ஒரு வர்மதலம் நீக்கி நூற்றி ஏழு வர்ம தலங்களே உள்ளன என்றும் கூறுவதையும் அறிய முடிகின்றது.

வர்மத் தலங்கள்

வர்மத் தலங்கள் நூற்றி எட்டு என்பதைக் கூறியச் சித்தர்கள் அவை எங்கெங்கு உள்ளன என்பதையும் அறிந்திருந்தனர். ‘சிரசு முதல் கண்டம் வரை’ இருபத்தைந்து தலங்களையும் கண்டம் முதல் உந்திவரை நாற்பத்தைந்து தலங்களையும் உந்தி முதல் ஆசான வாய்வரை ஒன்பது தலங்களையும் கைகளில் பதினான்கு, கால்களில் பதினைந்து என மொத்தம் நூற்றியெட்டுத் தலங்களைக் கொண்டதாக வகைப்படுத்தியுள்ளனர். வர்மத் தலங்கள் நூற்றியெட்டையும் ‘வாதம், பித்தம், கபம்’ என்னும் மூன்றினுள் அடக்கலாம் என்பதை,

“உருத்தான வாதவர்மம் அறுபத்தி நாலும்
கருத்தறிந்து நயந்து செயில் சாத்தியமாகும்
கருத்தான பித்தவர்மம் இருபத்தாறும்
உறும் பயங்களில்லாமல் உகந்தி செய்நீ
வருத்தமுள்ள சிலேற்பவர்மம் ஆறுமப்பா
மானிலத்தில் செய்யாதே மரணம்பாரே
பொருத்தமுள்ள உள்ளுவர்மம் ஈராறாலும்
புன்னியனே நாலுவர்மம் அசாத்தியம் பாரே”[3]

என வாதவர்மம் அறுபத்து நான்கு எனவும், பித்தவர்மம் இருபத்தாறு எனவும், கபவர்மம் ஆறு எனவும், தோடக்கலப்பு வர்மம் பன்னிரண்டு எனவும் சித்தர்கள் வகுத்துள்ளனர். சித்தர்கள் வர்மத் தலங்களையும்

தோடவழி வர்மங்களையும் வகுப்பதில் கருத்தொருமித்திருந்தனர் என்பதை இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

உடலில் வர்மத் தலங்கள் எந்த இடங்களில் வர்மப் பிணிகளை உண்டாக்குகின்றன என்பதை,

"செப்புறு தசைக ளென்பு சிறுபெரு நரம்பு சந்து
தப்பறு நாடியானுந் தங்கிடு வறும மாமே"[4]

என்பதிலிருந்து தசை, எலும்பு, சிறு, பெருநரம்புகள், நாடிகள் ஆகியவற்றில் வர்மப் பிணி உண்டாகிறது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

வர்மங்களின் வகைகளும் அதன் தன்மைகளும்

உடலில் வர்மத் தலங்கள் நூற்றியெட்டு உள்ளன. அத்தலங்களை எவ்வாறு கண்டறிவது என்பதை,

"நேரப்பா நெற்றிநடு புருவந்தன்னில்
நேராக நெல்லிடைக்குத் தாழ்வாக
தாரப்பா திலதவர்ம மென்றதற்குபேரு"[5]

எனும் பாடலின் மூலம் அறியலாம். உதட்டின் நடுப்பகுதியிலிருந்து மூக்கடியில் உள்ளதே சுழியாடி வர்மமாகும். அதே நேர்கோட்டில் மூக்கின் தண்டு நடுவில் மூக்கிறாணி வர்மமும், அதே நேர்கோட்டில் இரு புருவங்களின் மத்தியில் ஒரு நெல் அளவு கீழே திலதவர்மம் உள்ளன. அதே நேர்கோட்டு உச்சியில் உச்சிக்கால வர்மமும் அதே நேர்கோட்டுக் கொண்டையில் கொண்டைக்கால வர்மமும் பிடரி இறுதியில் நேர்கோட்டு முடிவில் தலைமுடி இறுதியில் பிடரி வர்மமும் என வரைகோடு

அடிப்படையில் உடலில் வர்ம அளவுகளைக் கொண்டு வர்மத் தலத்தைச் சித்தர்கள் வகுத்திருப்பதைக் காணமுடிகின்றது.

வர்மங்களில் விரைந்து மரணம் உண்டாக்கும் வர்மங்கள் பத்தொன்பதாகும். காலம்கடந்து மரணத்தை உண்டாக்கும் வர்மங்கள் முப்பத்து மூன்றும் பிணி உண்டாக்கும் வர்மங்கள் மூன்றும் தாதுக்களில் பலவீனத்தை உண்டாக்கும் வர்மங்கள் நாற்பத்து நான்கும் வலியுடன் கூடிய வர்மங்கள் எட்டு எனவும் வகுத்துள்ளனர். வர்மங்களின் பெயர்களான பிடரிவர்மம், சீறும் கொண்டைக் கொல்லி வர்மம், உச்சி வர்மம், உறக்க கால வர்மம், தும்மிக் கால வர்மம், நேர்வர்மம், உறுமிக்கால வர்மம், மூத்திரக்கால வர்மம், கல்லிடைக்கால வர்மம், உந்திவர்மம் என வர்மங்களின் வகைகளையும் சித்தர் பாடல்களின் மூலம் அறிய முடிகின்றது.

வர்மங்களின் உட்பிரிவுகளும் - மருத்துவக் காலவரையறைகளும்

சித்தர்கள் நூற்றியெட்டு வர்மங்களை இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர். அவையாவன;

1. படுவர்மம்
2. தொடுவர்மம் என்பனவாகும். இவற்றின் வகைகளை,

"நெட்டுறவே இவையெல்லாம் நூற்றெட்டாதி"[6]

எனக் குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் படுவர்மம் பன்னிரண்டு எனவும், தொடுவர்மம் தொண்ணூற்றாறு எனவும் அறிய முடிகின்றது.

வர்மவழிப்பிணி வந்தவுடன் உடனடியாக மருத்துவம் செய்யாவிட்டால் மரணம் ஏற்படும் என்பதை,

"நேசக்கேள் மரணம் வரும் பிழையா தென்று"[7]

என்பதன் மூலம் அறிய முடிகிறது. இதிலிருந்து வர்மப் பிணி வந்த எவ்வளவு காலத்திற்குள் மருத்துவம் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதாவது பிடரிக்கால வர்மத்தை 34 நாழிகைக்குள்ளும் திலதவர்மத்தை 24 நாழிகைக்குள்ளும், நட்சத்திர வர்மத்தை 27 நாழிகைக்குள்ளும், செவிக்குத்திக் கால வர்மத்தை 23 நாழிகைக்குள்ளும் வர்மச் சிகிச்சை செய்யாவிட்டால் மரணத்தை உண்டாக்கும் என்பதை அறியலாம். சிகிச்சை பலனளிக்காத வர்மக் குணம் குறிகளையும் வர்ம மருத்துவத்தில் சித்தர்கள் பாடியுள்ளனர். இதை,

"மிஞ்சிடவே காற்றொடு தீயுங்கூட்டி
மிகுப்பான சுழிமுனையில் விசைதான் கொண்டால்
தஞ்சமில்லை ஒருபோதும் மீளாதப்பா"[8]

என வாதமும், பித்தமும் சுழிமுனையில் அடங்கினால் மரணம் உறுதி எனக் கூறியதுடன், சிகிச்சை பலனளிக்காத குணம் குறிகளையும் அறிந்திருந்தனர். விபத்து அல்லது தாக்குதல் காலத்தில் கண்விழி பிதுங்கி, பார்வை நிலை குத்தி இருத்தல், விந்து வெளியேறி இருத்தல், வாயில் குருதியும், நீரும் கசிதல், கண்களிலும் காதுகளிலும் குருதிக் கசிதல், கண்கள் சிவந்து இருத்தல் ஆகிய குணம் குறிகள் இருந்தால் வர்மப் பரிகாரம் (சிகிச்சை) செய்யக் கூடாது. அவ்வாறு சிகிச்சை செய்தாலும் பயனில்லை என்பதையும் இப்பாடல் வரிகள் காட்டுகின்றன.

பிணியின் வகைகளும் உட்பிரிவுகளும்

சித்தர்கள் பிணிகளை வாதப்பிணி, பித்தப்பிணி, கபப்பிணி, கலப்புப் பிணி, அகக்காரணப் பிணி, புறக்காரணப் பிணி என வகுத்துள்ளனர்.

இதனுள் ஒவ்வொரு பிணியிலும் உள்ள உட்பிரிவுகளையும் வகுத்துள்ளனர். இதனை,

"பாரப்பா வாதமது எண்பத்தி நாலு
பருக்கவே பித்தமது நாற்பத்தெட்டு
தாரப்பா சேற்றுமங்கள் தொண்ணூற்றாறு
தணுர்வாயு முன்னூறு சயமே ஏழு
வேரப்பா பெறுவயிறு எட்டதாகும்
வெகுசூலை யிருநூறு பாண்டு பத்து
தாரப்பா நேத்திர நோய் தொண்ணூற்றாறு"[9]

எனும் பாடலின் மூலம் வாதப்பிணி எண்பத்து நான்கு, பித்தப்பிணி நாற்பத்தெட்டு, கபம் தொண்ணூற்றாறு, தணுர்வாயு முந்நூறு, சயம் ஏழு, பெருவயிறு எட்டு, சூலை இருநூறு, பாண்டு பத்து, நேத்திர நோய் என்னும் கண் பிணிகள் தொண்ணூற்றாறு என்பதை அறிய முடிகின்றது.

சித்தர்கள் பிணியின் தொகுப்பினை 4448 என வரையறுத்துள்ளதை,

"நாளடா நாற்பத்து நாலுநூறு
நயமுடனே நாற்பத்து எட்டுரோகம்"[10]

என்று அகத்தியச் சித்தர் பிணியின் தொகை 4448 எனக் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகின்றது. இக்கருத்தையே திருமூலரும் ஏற்கின்றார்.

"சங்கை கேணோய் தான்றனித்த நாலாயிரஞ்
சங்கை கேனானூற்று நாற்பத்தெட் டென்பர்காண்
சங்கை கேனிவ்வளவுந் தனுடலி னுண்டாகி"[11]

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

தீரும் பிணி - தீராப் பிணி

பிணியின் தொகுப்பினை வகுத்தறிந்த சித்தர்கள் இவை தீரும் பிணி, இவை தீராப் பிணி எனவும் வரையறுத்துள்ளனர்.

"ஆளென்றவழகு காமாலையோட
ஆறுந்தான் சாத்திய மறிந்து கொள்ளு"[12]

எனக் காமாலைப் பிணியைப் பதிமூன்று வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம். ஆறுவகைக் காமாலைப் பிணியான கும்பக்காமாலை, குன்மக்காமாலை, முக்குற்றக்காமாலை, வளிக்காமாலை, செங்கமலக்காமாலை, அழகுக்காமாலை என்ற காமாலைப் பிணிகள் தீராது (அசாத்தியம்) என்றும் ஏனைய ஏழும் தீரும் (சாத்தியம்) பிணிகள் என்றும் சித்தர்கள் கூறியுள்ளதைக் காண முடிகின்றது.

பிணிகளும் - மரணமும்

சித்தர்கள் பிணி, அதன் குணம், குறிகளை வகுத்ததுடன் ஒரு பிணியைத் தொடர்ந்து எந்தப் பிணி ஏற்பட்டால் மரணம் உண்டாகும் என்பதை,

"சாற்றுவது நீரிழிவிற் பிளவையாக
சலமான பிளவையிலே தாகமாகா
தேற்றமுள்ள தாகமதில னலுமாகா
வியல்பான வனல்தனிலே மயக்கமாக
சீற்றமுறு மயக்கமதில் வேர்வையாகா
சீர்கேடாம் வேர்வையிலே கபமுமாகா
பூற்றிருவே கபந்தனிலே விக்கல் வந்து
பெருந்திடிலே மரணமென்று புகலாமே"[13]

எனும் பாடலின் மூலம் அறிய முடிகிறது. நீரிழிவுப் பிணியில் பிளவையும், பிளவில் தாகமும் தாகத்தில் பித்தமும் பித்தத்தில் மயக்கமும் மயக்கத்தில் வேர்வையும் வேர்வையில் கபமும் கபத்தில் விக்கலும் வந்தால் மரணம் உண்டாகும் என்பதை இப்பாடலின் வழி அறிய முடிகின்றது.

சித்த மருத்துவத்தில் சிகிச்சைகள்

சித்த மருத்துவம் உடலில் தோடவழி உண்டாகும் உபாதைகளையும் மனத்தில் தோடவழியும், பிற காரணவழி உண்டாகும் துன்பங்களையும் சித்தர்கள் தனித்தனியே வகுத்துள்ளனர். உடலில் தோன்றும் உபாதையே பிணி என்று குறிப்பிடுவதைச் சங்க இலக்கியப் பாடல்கள் வலியுறுத்துகின்றன. இதனை,

"நடுங்கு பிணி நலியநல் எழில்சா அய்"[14]

என்ற நற்றிணைப் பாடலின் வழியும் அறிய முடிகின்றது. ஆனால் வள்ளுவர், நோயாளியின் வயது, நோயின் தன்மை, மருத்துவம் செய்வதற்குரிய நேரம் ஆகியவற்றை எல்லாம் மருத்துவம் கற்றவர் எண்ணிப் பார்த்தே செயல்பட வேண்டும் என்பதை,

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"[15]

எனக் குறிப்பிடுகின்றார். மேலும்,

"பிணிவரு நாளுங் கண்டு பிணியிலேதுக் கண்டு
பிணியில் வண்மை மென்மை பிணிதவிர் நாளுங் கண்டு"[16]

என்ற அகத்தியர் பாடலிலிருந்தும் உடல் உபாதை என்பது 'பிணி' என வரையறுத்துள்ளதை அறிய முடிகின்றது.

சித்த மருத்துவச் சிகிச்சை முறைகளை மனநோய், உடற்பிணி என்ற அடிப்படையிலும் மனவழி - உடற்பிணி, உடற்பிணிவழி - மனநோய் என்ற அடிப்படையிலும் உடல் தோடங்களின் பிறழ்நிலை, பிணியின் சீற்றம், தாழ்வு, அளவு, பிணிக்காலம், பிணியின் கடுமை, பருவக்காலம் பிணியாளர் வயது இவற்றின் அடிப்படையிலும் மனநோயினை அறியலாம் என்பதைத் திருவள்ளுவர்,

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்”[17]

என்ற குறட்பாவில் முதலில் மனநோயினைப் பற்றியும் அதற்கான காரணத்தைப் பற்றியும் அதனைத் தணிப்பதன் வழியையும் அறிவுரையையும் மருத்துவ முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு வகுத்துள்ளதைக் காணலாம்.

உடல் பிணிக்கான சிகிச்சைகள்

உடலில் ஏற்படும் பிணிகளுக்கு மருத்துவம், மருந்துகள், பயிற்சி என மூன்று முறைகளில் சிகிச்சைகள் அளிக்கலாம். அறிவுரை, உணவுக் கட்டுப்பாடு கூறுதல் என்ற மருத்துவ முறைகளும் அகமருந்துகள், புறமருந்துகள் என மருந்து வகைகளும் மனம், உடல், ஒழுக்கம், ஆசனங்கள், பிராணாயாமம் என்ற பயிற்சி முறைகளும் மேற்கொண்டால் உடல் பிணி நீங்கும் என்பதைச் சித்தர்களின் பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

மனநோய்க்கான சிகிச்சைகள்

பராமரிப்பு, அரவணைப்பு, அறிவுரை, உணவுக் கட்டுப்பாடு ஆகிய மருத்துவ முறைகளும், அகமருந்து, புறமருந்து என மருந்து வகைகளும்

பிராணாயாமம், தாரனை, தியானம் ஆகிய பயிற்சி முறைகளும் மேற்கொண்டால் மனநோய் தீரும் என்பது சித்தர்களின் சிகிச்சை முறைகளாகும். இதனை,

> "அணிதருஞ் சித்தவேகத் தரைத்திடு மருந்தினாலே
> பிணிதரும் வியாதி மூன்றும் பெருகிய கோபந்தீர"[18]

என்றச் சித்தவேகம் எனும் மனநோய்க்கும் பிணி என்னும் உடல் உபாதைக்கும் மருந்துகளையும் மருத்துவ முறைகளையும் வகுத்துள்ளதை இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

உடல்தோடங்களின் வழி சிகிச்சை முறைகள்

சித்த மருத்துவச் சிகிச்சை முறைகளை உடல்கொண்ட தோடங்களின் சீற்ற அடிப்படையில்,

> "பேதிக்கத் தாழும் வாதம் பித்தஞ்சத் திக்கத் தாழும்
> ஓதிய நாசியத் தாலே யுயர்கபந் தாமுநிற்க
> நீதியஞ் சனத்தான் மிக்க நிகரிலா வெளியாங்கானே"[19]

என வாதத்தை அடிப்படையாகக் கொண்ட பிணிகளும் நோய்களும் பேதிச் சிகிச்சையால் குணமடைகின்றன. பித்தத்தை அடிப்படையாகக் கொண்ட பிணிகளும் நோய்களும் வாந்திச் சிகிச்சையால் குணமடைகின்றன. கபத்தை அடிப்படையாகக் கொண்ட பிணிகளும் நோய்களும் நசியம், வியர்வை போன்றச் சிகிச்சை முறைகளை மேற்கொண்டால் உடல் நலம் பெறலாம் என்பதை இப்பாடல் சுட்டிக்காட்டுகிறது. மூன்று தோடங்களும் சேர்ந்து உண்டாக்கும் பிணிகளைப் போக்க,

> "அஞ்சனம் எய்து முப்பிணியுந்தீர . . . ."[20]

என்று கண்களில் மருந்து இடுதல், எண்ணெய் தடவுதல், வாய் கொப்பளித்தல், வேது, சுடுதல், பற்று ஆகிய சிகிச்சை முறைகளைப் பின்பற்ற முத்தோடங்களின் வழி ஏற்படும் பிணிகளைப் போக்கலாம் என்பதையும் சித்தர்கள் வகுத்துள்ளனர்.

சிகிச்சை முறைக்கான கால அளவு

சிகிச்சை முறைகளை வகுத்தச் சித்தர்கள் எந்தச் சிகிச்சை முறையை எந்தக் காலத்தில் எந்த அளவு செய்ய வேண்டும் என்பதையும் விளக்கியுள்ளனர்.

“செய்யநற் பேதி தானும் செய்வது காலமேற்க
உய்யும் ஏக்காளத் துக்கே உகந்ததோர் சாமத்துள்ளாம்
பொய்யுமா நசியத் தானும் பெரும்பதி னேழுக் குள்ளாம்
மெய்யுறு மருந்தே கண்ணில் மருந்திடும் அந்தி மிக்காம”[21]

என்ற பாடலின் மூலம் பேதிச் சிகிச்சை காலையிலும், வாந்திச் சிகிச்சை சூரிய உதயம் முதல் ஒரு சாமத்திற்குள்ளும், நசியச் சிகிச்சை சூரிய உதயம் முதல் பதினேழு நாழிகைக்குள்ளும் அஞ்சனம் என்னும் கண்ணுக்குரிய சிகிச்சை அந்திப் பொழுதிலும் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சித்தர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வாதப்பிணி

வாதப்பிணி தோன்றுமிடம் மலக்குடலாகும். சீற்றமான வாதம், மலக்குடலை இருப்பிடமாகக் கொண்டே வாதப் பிணியைச் சீற்றமடையச் செய்கிறது. இதனைப் பேதி மருந்துகள் மூலம் ஆசனவாய் வழி மருந்து செலுத்தும் பீச்சு மருத்துவ முறைமூலம் சிகிச்சை செய்வதால், வாதம் தன்

சீற்ற நிலையிலிருந்து தன்னளவிற்குக் குறைகிறது. 'தைலம் தடவல்' எனும் எண்ணெய் சிகிச்சை (தொக்கணச் சிகிச்சை) மூலமும் வாதப் பிணி தீரும்.

பித்தப்பிணி

நாபிக்குமேல் கண்டம் வரையுள்ள இடங்களில் பித்தம் சீற்றமடைந்தால் வாந்தியை உண்டாக்கும் மருந்துகளை அளவுப்படி உண்ணச் செய்து, அதன்வழி உண்டாகும் வாந்திச் சிகிச்சையில் பித்தப்பிணி தீரும் என்றும் சித்தர்கள் கண்டறிந்துள்ளதும் இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

கபப்பிணி

கண்டத்திற்குமேல் உச்சிவரை கபத்தோடத்தின் ஆதிக்கமாக உள்ளதால், நாசித் துளைகள் வழியே செலுத்தப்படும் மருந்துகளான நசியம், ஆக்கிராணம் போன்றவையும், கண்களில் தீட்டப்படும் ஆஞ்சனம் போன்ற மருந்துகளும் கபத்தோடத்தை நீக்குகின்றன. இதனால் பிணி, தோடம், சிகிச்சை என்ற நோக்கிலேயே சிகிச்சை முறைகளைச் சித்தர்கள் மேற்கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. சிகிச்சை முறைகளில் பற்றிடல், வேதுபிடித்தல், ஒற்றிடல் போன்ற சிகிச்சை முறைகளையும் முறைப்படி வகுத்துள்ளனர். ஒற்றிடும் இடங்களையும் ஒற்றிடும் முறைகளையும்,

> "வற்றலன வேவறுத் தஃதுபத மெண்ணியொரு
> வத்திரத்திடை முடிந்து
> மார்புதலை கன்னமொய்ம் பதரமிடை சானுபதம்"[22]

என்ற பாடலின் மூலம் அறியலாம். அதாவது மார்பு, தலை, கன்னம், இடுப்பு, கால்கள், கைகள், மற்றும் உடல் முழுவதும் ஒற்றிட்டுச் சிகிச்சை செய்ய வேண்டும் என்பதை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

சிகிச்சைக்குரிய காலம், சிகிச்சையின் வன்மை, மென்மை, குழந்தை, பெண்கள், ஆண்களுக்கான சிகிச்சை ஆகிய தன்மைகளில் மிகுந்தும் வேறுபட்டும், தோடங்களுக்குரிய சிகிச்சைகள், சிகிச்சையின் பின் தொடர் செயல்கள் எனச் சித்தர்கள் வகுத்துள்ளதையும் அவர்களின் பாடல்கள் வழி அறிய முடிகின்றது.

மருந்துகளும் சிகிச்சை முறைகளும்

சித்த மருத்துவம் தன்னகத்தே உட்கொள்ளும் மருந்துகளை அகமருத்துவம் என்றும் வெளி உபயோக மருந்துகளைப் புறமருத்துவம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

> “காரணமாய் செந்தூரம் பற்லேகியம்
> கலிக்கம் எண்ணெய் மாத்திரையும் பிட்டு வேறு
> சூரணமும் தயிலம் ஒத்துச் சுரசம் பத்துத்
> துகை முறிச்சல் கீறலுடன் இயாழமையே
> மைசுடும் நசியமது கிருதம்வேது
> மகாவேர்வை ஆக்கீறாமை . . . . . .”[23]

என்ற பாடல் அகமருந்துகள் முப்பத்திரண்டையும் எடுத்தியம்புகிறது. இவ்வகை மருந்துகளாவன, சுரம், சாறு, குடிநீர், கற்கம், உட்களி, அடை, சூரணம், பிட்டு, வடகம், வெண்ணெய், மணப்பாகு, நெய், சுவைப்பு, இளக்கம், எண்ணெய், மாத்திரை, கடுகு, பக்குவம், தேன்ஊறல், தீநீர், மெழுகு, குழம்பு, பதங்கம், செந்தூரம், நீறு, கட்டு, உருக்கு, களங்கு, சுண்ணம், கற்பம், சத்து, குருகுளிகை என உட்கொள்ளும் 32 மருந்துகளையும் வகைப்படுத்தியுள்ளனர். அத்துடன் புறமருந்துகள் மற்றும் மருத்துவ முறைகள் முப்பத்திரண்டையும் வகைப்படுத்தியுள்ளனர். அவை;

கட்டுதல், பற்று, ஒற்றடம், பூச்சு, வேது, தொட்டணம், சொக்கணம், புகை, மை, பொடித் திமிர்த்தல், கலிக்கம், நசியம், ஊதல், நாசிகாபரணம், களிம்பு, சீலை, நீர், வர்த்தி, சுட்டிகை, சலாகை, பசை, களி, பொடி, முறிச்சல், கீறல், காரம், அட்டைவிடல், அறுவை, கொம்பு கட்டல், உறிஞ்சல், குருதி வாங்கல், பீச்சு எனப் புறமருந்துகளையும் பகுத்தறிந்துள்ளனர்.

அறுவை மருத்துவம்

தமிழர்கள் போர்க்கருவிகளாக வாள், வேல், ஈட்டி போன்ற இரும்பாலான ஆயுதங்களைக் கொண்டிருந்த பழக்கத்தால் போரில் ஏற்பட்ட ரணங்களையும் (புண்), எலும்பு முறிவுகளையும் அறுவைச் சிகிச்சையின் மூலம் மருத்துவம் புரிந்துள்ளனர் என்பதை,

> "இரும்புச் சுவை கொண்ட விழுப்புண் நோய்த் தீர்த்து
> மருந்துகொல் மரத்தின் வாள்மடு மயங்கி"[24]

எனும் புறநானூற்றுப் பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

போர் நடைபெறும் காலங்களில் மார்பில் ஏற்பட்ட விழுப்புண்ணை ஊசி கொண்டு தைத்துள்ளனர் என்ற குறிப்பும் சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகிறது.

> "இரும்பனம் புடையலீகை வான்கழல்
> மீன்றோர் கொட்பிர் பணிக்கய மூழ்கிச்
> சிரல் பெயர்த் தன்ன நெடுவள் ஊசி
> நெடுவசி பரந்த வடுவாழ் மார்பில்"[25]

என்ற பாடலில் சிரல் பறவையின் அலகைக் கிழிந்த தசைகளைத் தைக்கும் ஊசிக்கு உவமையாகக் கூறியுள்ளதிலிருந்து, தமிழர் மருத்துவமான சித்த

மருத்துவத்தில் சங்க காலத்திற்கும் முன்பே அறுவை சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

அறுவைச் சிகிச்சைக்கான கருவிகள்

புற மருத்துவ முறைகளில் ஒன்றான நுட்பச் சிகிச்சை எனும் நோக்கில், அறுவை மருத்துவமும் ஒன்றாக வகுக்கப்பட்டுள்ளதையும் அதற்கான அறுவைச் சிகிச்சைக் கருவிகளைப் பற்றியும் அறிந்திருந்தனர் என்பதை,

> "கத்தி சத்திரம் கவின் குறும்படி வாங்கியும்
> முக்காவா தன்னுடன் முள்ளு வாங்கியும்
> ஆழிக் கோலு மடுத்த பிறையுடன்
> கத்திரிக் கையுடன் பரசுரை வாங்கியும்
> முச்சலா கையொடு முனிமொழி யோட்டும்
> மட்டக்கோலும் மாறும் ஊசியும்"[26]

என்ற பாடலில் கத்தி, சத்திரம், குறும்பி வாங்கி, முக்காவகருவி, முள்வாங்கி, ஆழிக்கோல், பிறைக்கோல், கத்திரிக்கோல், பரசுரை வாங்கி, முனிமொழி, ஓட்டுக்கோல், அட்டக்கோல், ஊசி, செப்புக்குழை, சலாகை, வட்டகை, பஞ்சமுகம், செப்புச் சலாகை, கொம்பு, குடோரி, வெண்கலக் குழல், ஈயச் சலாகை, காயக்கோல், தெண்டு, நயன கத்தி போன்ற கருவிகளை அறுவைச் சிகிச்சைகளுக்காகப் பயன்படுத்தியுள்ளனர். அவற்றின் எடை, நீளம், அகலம் போன்ற குறிப்புக்களையும் கூறியுள்ளதன் மூலம் சித்தர்கள் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

அறுவைச் சிகிச்சை முறைகள்

சித்த மருத்துவத்தின் அறுவைச் சிகிச்சை முறைகளைப் பற்றிப் பின்வரும் பாடல் நன்கு தெளிவுறுத்துகின்றது.

"தோன்றுளிக் குழலாய் காசங் குத்துமிச் செய்கை கேளே
கூறிய கருவி நீளம் நால்விரலாகக் கொண்டு
நேரிய முனையதாக வகல நெல்வடிவதாகச்
சீர்பெறு கடைக் கண்ணுக்குந்தெளி கருவிழிக்கும் மத்தி
சாரவே யூன்றுந் தாழ்வு சனல் விரையளவ தாமே"[27]

எனும் பாடல், கண்களில் ஏற்படும் பித்தகாசம் (கண்ணில் ஏற்படும் படலம்) எனும் பிணிக்குச் செய்யும் அறுவை மருத்துவத்தையும் கடைக் கண்ணுக்கும், கருவிழிக்கும் மத்தியில் தாழ்வாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

சித்த மருத்துவத்தில் அறுவை மருத்துவத்தைக் கட்டிகள், கண்டமாலை, கண்நோய்கள், கல்லடைப்பு, சதையடைப்பு, பவுந்திரம், மூலம் போன்ற பிணிகளின் அறுவைச் சிகிச்சை முறைகளை,

"நெடியதோர் பிளவைக் கட்டி யிவற்றைக்
கண்டமாயனுக்குக் கறுக்கவுங் கீறவும்"[28]

என அறுத்தல், சுடுதல், கீறல் போன்ற செயல்களால் இம்மருத்துவம் நடைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகின்றது. அறுவைச் சிகிச்சைகளையும் பிற ஒடிவு, முறிவுச் சிகிச்சைகளையும் செய்யும் நேரங்களையும்,

"கனவுறு நரம்புகுத்தல் கருவிகளாடல் காலை
யளவுறு கொம்பு வைத்தங் குதிரம் வாங் கல்மதியம்
அளவுறு அட்டைவிட்டே ஆற்றுவ தந்திக்காலம்"[29]

என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நரம்பு குத்தல் சிகிச்சைக்குக் காலை நேரம் சிறப்பு எனவும், கொம்பு வைத்தல், குருதி வாங்குவதற்கு மதிய நேரம் சிறப்பு எனவும், அட்டைப்பூச்சி கொண்டு சிகிச்சை செய்ய மாலைநேரம் சிறப்பு என்றும் அறுவைச்சிகிச்சை செய்யும் காலத்தைச் சித்தர்கள் வகுத்துள்ளனர்.

நுடப்பிணிக்கும் வர்மப் பிணிக்கும் சிகிச்சைகள்

நுடமருத்துவம் எனும் எலும்பு மருத்துவத்திலும் வர்ம மருத்துவத்திலும் சிகிச்சை செய்யும் முறைகளைச் சித்தர்கள் வகுத்துள்ளனர். இதை,

"சொன்னேன் நான் கஞ்சி முதல் குடிநீர் தானும்
சுகமான தயிலமொரு கூட்டெண் ணொய் தானும்
மண்ணிடவே ஒத்தலொரு பொடியும் பூச்சும்
மதிப்பான ஒடிமுறிவு வகையாக கட்டல்
நிண்ணயமாய் பத்தியமே நடத்தல் செய்கை
நலமான கைமுறையும் செய்முறை சொன்னேன்
பின்னியதோர் நரம்புகளைப் பிடிக்கச் சொன்னேன்
பேதகமாய்ப் பேசாமல் தீர்க்கங்கொள்ளே"[30]

எனும் பாடலின் வழி அறிய முடிகின்றது. அக மருத்துவ முறைகளாக மருந்துக் கஞ்சி, குடிநீர் எனும் கசாயம், கூட்டு எண்ணெய், உணவுக் கட்டுப்பாடு ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளனர். புறமருத்துவத்தில் தைலம் தடவல், பொடி தூவல், பூச்சுமுறை, கட்டுப் போடுதல், கொம்பு வைத்தல், ஒடித்தல், முறித்தல், இளக்குமுறை, தொக்கண முறைகள், உடற்பயிற்சி எனும் சிகிச்சை முறைகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

மருந்துகள்

உடற்பிணி மற்றும் உளநோய் உள்ளவர்களுக்கு வேதனையிலிருந்து காப்பதற்கும் பிணிவழி மற்றும் நோய்வழித் துன்பத்திலிருந்து காப்பதற்கும் பயன்படுவதே மருந்துகள் எனப்படும். மருந்துகளிலும் துணை மருந்துகள் என்ன என்பதைப் பற்றி,

"அவிழ்த மைந்தனு பானமே - யவிழ்த மெய்யனு பானமே
யவிழ்தனு தேரனு பானமே - யவிழ்த வாயனு பானமே"[31]

என்று பாடியுள்ளதிலிருந்து பால், கரும்புச் சாறு, இஞ்சிச் சாறு, நெய், தாய்ப்பால், கசாயங்கள், தேன், குடிநீர், சுக்குத்தூள், துளசித்தூள், ஓமக் கொதிநீர், திப்பிலித் தூள், சூரணம், கசாயம் போன்றவை துணை மருந்துகளாகும் என்றுக் குறிப்பிட்டுள்ளனர்.

"கொண்ட மருந்தாய்க் குறித்த கசாயத்தைக்
கண்ட நோயாளிக்கு காட்டி நீ - அண்டையிலே"[32]

எனும்போது முதல் மருந்தைக் கசாயம் எனும் துணை மருந்துடன் குறிப்பிட்ட பிணியுள்ளவர்க்குக் கொடுக்கப் பிணிநீங்கும் எனக் குறிப்பிடுவர்.

மருந்துகளின் அளவு

சித்த மருத்துவத்தில் மருந்தளவு என்பதை எளியவர்களும் அறியும்படிச் சித்தர்கள் வகுத்துள்ளனர். இதை,

"செப்பிடுவித்தை தினை, சாமை, காண முன்னால்
செப்பிடு வித்தை திணமேமேழ் - செப்பிடு நெய்"[33]

என மருந்துகளின் அளவைத் தினை, சாமை, கடுகு, காணம் என்ற விதைகளின் அளவாகக் கொண்டு தேவைப்படும் அளவை நான்கால் பெருக்கிப் பதினாறு அளவாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனை,

“சுத்த வவிடதஞ் சொன்ன பிரயோகம்
வித்தள வாகநரல் வேற்றுமை யாயிறு
முத்தம மாதியுரைக்கு மிரண்டிரண்
டத்தனை யேதொகை யாகும் பதினாறே”[34]

என்ற பாடலின் வாயிலாக வகுக்கப்பட்டுள்ள அளவுப்படி மனிதர்களின் உடல் வலு, பிணி வலு இவ்விரண்டின் அடிப்படையில் மருந்தின் அளவைத் தேவையான அளவிற்கு முன் கூறிய வித்துக்களின் அளவைப் பெருக்கிப் பதினாறு அளவாக மருந்தைப் பிணியாளருக்குத் தரலாம் எனச் சித்தர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

மருந்து, உணவு, உட்கொள்ளும் காலம்

வித்தளவைப் பெருக்கி மருந்தளவு கூறிய சித்தர்கள், மருந்து உட்கொள்ளும் காலத்தையும் உணவு விபரத்தையும் அவற்றின் கட்டுப் பாடுகளையும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுவர்

“பேதமில்லை சுண்டைக்காய் வீதங்கொள்ள
முத்தப்பா மோருஞ்சோ றுண்டுமுன்னே
முசியாம லருந்துநீ மண்டலந்தான்
சித்தப்பா முழுகுநாள் மருந்துண்ணாதே”[35]

என்றும்,

“கொள்ளவேநா ளொன்று அந்திசந்தி
குறையாதே வெருகடிதூள் மண்டலந்தான்
கொள்ளவே பித்த நாற்பதுந் தானெங்கே”[36]

என்றும் போகச் சித்தர், மருந்து உட்கொள்ளும் முறையைத் தினமும் காலை, மாலையில் மருந்தளவு, நான்கு விரல் அளவு எடுத்து ஒரு மண்டலம் எனும் நாற்பத்து எட்டு நாட்கள் உட்கொள்ள வேண்டும் என்றுக்

குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் அதிக வீரியம் உள்ள மருந்துகள், நடுத்தரமான மருந்துகள், வீரியம் குறைந்த மருந்துகள் எனப் பிரித்து, பிணிக்காலம், பிணித்தன்மை, பிணியாளியின் உடல் வன்மையை அடிப்படையாகக் கொண்டு மருந்தளவைப் பிரித்துள்ளனர் என்பதையும் மேற்கண்ட பாடல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

"உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"[37]

என்னும் குறளின் மூலம் கூறியுள்ளதும் இவண் ஒப்பு நோக்கத்தக்கது.

சித்த மருத்துவத்தில் காயகற்ப மருத்துவம்

சித்தர்கள் கண்டறிந்த காயகற்ப மருத்துவ முறையானது, 'உடல் பிணிவழிச் சிதைவதால் உயிர் பிரிகிறது' என்ற நோக்கில், உடம்பைப் பிணியிலிருந்து காத்துப் பிணிபடாதிருக்க முன்மருந்தாகவும், பிணிபட்டால் தீர்க்கும் உடனடி மருந்தாகவும் எப்பொழுதும் இளமைத் துடிப்புடனும் உடல் வன்மையுடனும் இருக்கச் செய்யும் மருந்தாகவும் பயன்படுவது காயகற்ப மருத்துவ முறையாகும். காயகற்ப மருத்துவத்தைப் பற்றித் திருவள்ளுவர் ஞான வெட்டியான் எனும் நூலில்,

"கற்பமுறை சொல்லுகிறேன் ஆண்டே நான்
கற்ப முறை சொல்லுகிறேன்"[38]

என்று குறிப்பிட்டுள்ளார். சட்டமுனிச் சித்தரும்,

"சூடுகிறேன் காய சித்திக் காதியந்தஞ்
சொல்லுகிறேன் நன்றாகக் கேளுகேளே"[39]

என்று காயகற்ப முறையை வகுத்திருப்பதைக் காணமுடிகிறது.

காயகற்ப மருந்துகளை உண்டால் காயம் எனும் உடல் பிணிவழிச் சிதைவடையாது. பிணிகள் உள்ள நிலையில் உண்டால் பிணிகள் நீங்கிவிடும். தாதுக்களின் சிதைவால் மரணத்தை உண்டாக்கும் கொடிய பிணிகளைக் காயகற்பம் போக்குவதுடன் உடலையும் வலுப்பெறச் செய்கிறது என்பதையும் மேற்கண்ட பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. காயகற்ப மருத்துவத்தில் சித்தர்கள் மூலிகைகளையும், பிற தாதுப் பொருட்களையும் உபயோகத்தில் கொண்டிருந்தனர் என்பதைத் திருமூலர் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றார்.

“மூலிகைக் கற்ப முயன்றிறுபதும்
பாலியுபரசம் பாங்காயறுபதும்
வாலிய சூதம் தங்க மிரண்டும்
ஒலியொருநூற் றிருபத்திரண்டே”[40]

என்று மூலிகைக் காயகற்பங்கள் அறுபது என்றும் உபரசம் என்னும் பிற தாதுப் பொருட்களின் காயகற்பங்கள் அறுபது என்றும் சூதம், தங்கம் இவை இரண்டுமாக நூற்றிருபத்திரண்டு காயகற்ப, காய சித்தி மருந்தாகப் பயன்படுத்தியுள்ளதை திருமூலர் சுட்டிக்காட்டியுள்ளனா. மேலும் இக்காயச் சித்தி மருந்தினைப் பிணியில்லாத முழு நலவாழ்வுக்கான மருத்துவமாகவும் கொடிய பிணிகளிலிருந்து காக்கும் மருத்துவமாகவும் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

மூலிகைக் காயகற்பங்கள்

மூலிகைக் காயகற்பங்களை வகைப்படுத்திய சித்தர்கள், அவற்றில் தனிமூலிகைக் கற்பமாகவும் கலப்புக் கற்பமாகவும் திரிமூலிக்கற்பமாகவும்

பஞ்சமூலிக் கற்பமாகவும் அட்டமூலிக் கற்பமாகவும் வகைப்படுத்தியுள்ளனர். கற்ப மருத்துவத்திற்குரிய மூலிகைகளைப் பற்றி,

"கேளென்ற கருநெல்லி கருத்த நெச்சி
கெடியான கருவீழி கருத்தவாழை
கானென்ற கரிய கரிசாலையோடு
கருப்பான நீலியெடு கரியவேலி"[41]

என்ற பாடலில் போகச்சித்தர் குறிப்பிட்டுள்ளார். அதாவது கருநெல்லி, கருநொச்சி, கருவீழி, கருவாழை, கருகரிசாலை, கருநீலி, கருப்புக்கொடிவேலி ஆகியவையும் கருஊமத்தை, சிவன்வேம்பு, வெள்ளருகு, பொடுதலை, நிலப்பனை, நத்தைச்சூரி, வெள்ளெருக்கு, தலைச்சுருளி, ஓரிதழ்த்தாமரை போன்றவைக் காயகற்ப மூலிகைகளாகும்.

காயகற்பங்களில் தாதுக்கள், உபரசங்கள்

மண்ணில் விளையும் பொருட்களில் மேன்மையான மூலிகைகளையும் மண்ணில் தாதுக்களான உலோகங்கள், பாடாணங்கள், உப்புகள் மற்றும் உபரசங்கள் இவற்றைக் கொண்டும் காயகற்ப மருந்துகளைச் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இதை,

"பாலியுபரசம் பாங்காயறுபதும்
வாலிசூதம் தங்க மிரண்டும்"[42]

எனும் திருமூலர் சித்தர் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

சித்தர்கள் வகைப்படுத்தியக் கற்ப மருந்து மூலப் பொருட்களை நட்புப் பொருட்கள், பகைப்பொருட்கள், ஆண் பொருட்கள், பெண் பொருட்கள், உப்புப் பொருட்கள், புளிப்புப் பொருட்கள் என வகைப்படுத்தியுள்ளனர்.

செயல்முறைக்கு உட்பட்ட மருந்துப் பொருள்களான பஞ்சவேதகம் என்ற ஐந்துவிதமான வேதகச் செயல்கள் மூலம் மருந்து மூலப் பொருட்களைப் பற்பமாக்குதல், செந்தூரமாக்குதல், சுண்ணமாக்குதல், கட்டுதல், சத்து போன்ற உயர்ந்த மருந்துகளைச் செய்துள்ளனர் என்பதனை,

"மகத்தான மூலிகை தான் பரிசவேத
காமப்பா ஒப்பின்றி சூதம் கட்டும்"[43]

எனும் போகச் சித்தர் பாடல் வரிகளால் அறியலாம். இம்மருந்துகளை மீண்டும் மூலிகைகளில் நட்புப் பொருளைக் கொண்டு உரிய செயல்முறைகள் மூலம் காய கற்ப மருந்தாகச் செய்துள்ளதை,

"வாமப்பா மலைதோறு மூலிகையுண்டு
மகத்தான மூலிகை தான்பரிசவேத
காமப்பா ஒப்பின்றி சூதம் கட்டும்
கலந்து நின்ற வாசனை பாடாணஞ்சாகே
சாகவே சரக்காணவறுபத்து நாலுந்
தனித்தனியே வேதையுமாஞ் சதிரத்துக்கேடுஞ்"[44]

எனும் போகச் சித்தர் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலில் அறுபத்து நான்குக் கற்ப மூலிகைகளைக் கொண்டு ஐந்து வித மாற்றங்களை உருவாக்குவதுடன், கற்ப மருந்தாகவும் மாற்றம் கொண்டு உடலைப் பிணியிலிருந்து காக்கிறது. அத்துடன் உடல் சிதைவைத் தடுத்து உடலைக் கற்பமாக்குகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

காயகற்பம் உண்ணும் முறை

காயகற்ப மருந்துகள் நூற்றிருபத்திரண்டு என வகுத்தச் சித்தர்கள், அம்மருந்துகளை உண்ணும் முறை பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். இம்முறையை,

"வாங்கியதோர் காயசித்தி செய்யும் மார்க்கம்
வரிசையாய்ச் சொல்லுகிறேன் கேளு
ஒங்கியதோர் கடுக்காயை முந்தியுண்ணு
யுத்தமனே யிருபதுநாளான பின்பு
பாங்கியதோ ரவ்வைந்தாய் மிளகை யேற்றி"[45]

எனும் பாடலில் சட்டமுனிச் சித்தர், கடுக்காயை இருபது நாட்கள் உண்ண வேண்டும்; பின்பு மிளகை ஐந்து ஐந்தாகக் கூட்டி இருபது நாட்கள் உண்ண வேண்டும்; அவ்வாறு உண்ணுவதன் மூலம் பலன் தரும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று கடுக்காயை ஒரு வருடம் உண்ணும் முறையையும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவர்களுள் திருமூலர் சித்தர்,

"காணாத சித்தர்க்கு காயம் வலுநிற்க
ஏணாகத் தின்ன விசைந்த முறைகேளு
ஈணாவயது இருபதில் மண்டலம்
பூனாவருவதில் போல் ரெட்டி தின்றிடே"[46]

என்றுக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலின் மூலம் வயதிற்கு ஏற்றவாறு கற்ப மருந்துகள் உட்கொள்ளும் விதம் மாறுபடுவதையும், மரணமின்றி எப்பொழுதும் இளமைப் பருவமாகவே இருக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். மரணமின்றி இருப்பது என்பது, உடல் அழியாமல் உயிரால் வாழ்வதாகவே சித்தர்கள் நம்பினர் என்பது எண்ணத்தக்கது.

உடல் மாற்றங்கள்

காயகற்ப மருந்து உட்கொள்ளும்போது உடலில் ஏற்படும் மாற்றங்களைச் சித்தர்கள் நன்கறிந்துள்ளனர். அதாவது முதல் திங்களில் கடுமையான பேதியும், இரண்டாம் திங்களில் சூடு உண்டாகிப் பேதியும்

மந்தமும் மூன்றாம் திங்களில் வாய்முதல் மலவாய்வரை வேக்காடும் நான்காம் திங்களில் ஆண்மை குறைதலும் ஏற்படும் என்பதை,

"பிறந்திடுங்கற்பந்தான் பேறாகத்தின் கையில்
கறந்திடும் வாமமும் கடுமலமே போக்கும்
மறந்து வழலையு முன்பித்தமும் நீக்கி"[47]

என்ற பாடலில் திருமூலர் எனும் சித்தர் எடுத்துரைத்துள்ளார். காயகற்பம் மருந்து உபயோகிக்கும் போது அதற்குரியக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காவிட்டால் மேற்கண்ட சில குறைகள் ஏற்படும் என்பதையே இங்குச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர் எனலாம்.

காயகற்ப மருந்து உட்கொள்ளும்போது உணவுக் கட்டுப்பாடும், பழக்க வழக்கங்களில் மாற்றமும் தேவை என்பதை,

"உண்ணவே கற்பத்துக் குறுதிகேளு
உப்பாகா புளியாகா பெண்ணுமாகா"[48]

என்று போகர் சுட்டிக்காட்டியுள்ளார். உப்பு, புளி போன்ற சுவைகளைத் தவிர்த்தும், புணர்ச்சியைத் தவிர்த்தும் கற்ப மருந்து உட்கொள்ள வேண்டும். உண்ணும் உணவில் பசும்பால், சிறுபயறு, பழம், தேன் போன்ற உணவினைக் கூட்டிக் கொண்டால் நலம்பயக்கும் என்பதை இப்பாடல் வழி நாம் அறிய முடிகின்றது.

சித்த மருத்துவத்தில் யோகப் பயிற்சி

மனம் மற்றும் உடலுக்குத் தேவையான உயிர்ச் சக்தியை அதிகரிக்கச் செய்தல் மூலமாக மனநோயையும், உடல் பிணியையும் போக்கலாம். உடல் அதிகம் ஏற்றுக் கொள்ளும் பயிற்சியாகப் பிராணவாயு

தொடரும்போது மனம் ஒருமைப்படும் என்பதையும் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர். சுவாசப் பயிற்சியை மூச்சுப்பயிற்சி, வாசிப்பயிற்சி, பிராணாயாமம், வாயுதாரணை என்றும் சித்தர்கள் அழைத்தனர்.

சுவாசப் பயிற்சியின் சிறப்பு

சுவாசப் பயிற்சியின் சிறப்பைப் பற்றிச் சித்தர் திருமூலர்,

"காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்கு
கூற்றை உதைக்குங் குறிப்பது வாமே"[49]

என்று காற்றை முறைப்படி சுவாசித்து வந்தால் அப்பயிற்சியின் மூலம் மரணத்தைத் தவிர்க்கலாம் என்று சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன்,

"ஏத்தியே திரியாமற் பிடரிமார்க்கம்
ஏறுகின்ற வாசியுந்தான் கற்பந்தானே"[50]

என்ற பாடலும் இதனை வலியுறுத்துகின்றது.

சுவாசப் பயிற்சியில் மூச்சுக் காற்றின் அளவும் அதை உட்கொள்ளும் அளவும் வெளிவிடும் அளவினையும் சித்தர்கள் பிரித்தறிந்துள்ளனர். இதை,

"கூடம் எடுத்து குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பனிரண் டங்குலம்
நீடுவர் என்விரல் கண்டிப்பர் நால்விரல்"[51]

என்று திருமூலர் சித்தர் குறிப்பிட்டுள்ளார். நமது சுவாசத்தின் மூலம் உட்செல்லும் காற்று பன்னிரண்டு அங்குலமாகவும், உட்சென்ற பன்னிரண்டு அங்குலத்தில் எட்டு அங்குலம் மட்டுமே உடலில் தங்கி மீதமுள்ள நான்கு அங்குலக் காற்று வீணாக வெளிவருவதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர். இதை,

"கலை நாலு போகிறதை எட்டிற் சேரு
கபடமற்ற தேகமடா கண்டுபாரு"[52]

என்ற பாடலில் காகபுசுண்டர் எனும் சித்தர் எடுத்துரைத்துள்ளார். சுவாசவழி மூலம் வெளிவரும் நான்கு அங்குலக் காற்றையும், உட்தங்கும் எட்டு அங்குலத்துடன் அடக்கி நிறுத்தும் பயிற்சி செய்தால், உடல் எந்தவிதமானக் கேடும் இன்றி ஆயுள் நீளும் என்பதை இப்பாடல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. சுவாசப் பயிற்சியினை முறையாக மேற்கொண்டால் காயகற்பமருந்து உட்கொண்ட பலன்கள் உண்டாவதை,

"புறப்பட்டு புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே"[53]

என்னும் திருமூலர் சித்தர் பாடல் விளக்குகின்றது. உள்ளே புறப்பட்டு உள்ளே சுழன்று வெளியேறித் திரிகின்ற சுவாசக்காற்றை முறைப்படி உடல் ஏற்கும்படி பயிற்சி செய்தால் உடல் வலுக்கூடி, தாதுக்கள் பலப்பட்டு, காயகற்பம் உண்பதற்கு இணையானப் பலன் கிடைக்கும் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது. சித்தர்கள் கண்டறிந்த இந்த சுவாசப் பயிற்சியினைத் தொடர்ந்து செய்தால் மனம் அப்பயிற்சியால் முழுமையாக ஈடுபட்டு மன ஒருமையும், மன அமைதியும் உண்டாகி உடல் பிணியும், மனநோயும் விரைவில் குணமாகும் என எடுத்துரைத்தனர்.

சித்த மருத்துவத்தில் முப்பு (பூநீர், வெடியுப்பு, கல்லுப்பு)

சித்த மருத்துவர்கள், உட்கொள்ளும் மருந்துகளின் ஆயுளை நீட்டிக்கவும், மருந்தின் செயல்திறனை அதிகரிக்கச் செய்யவும் குறுகிய காலத்தில் குணம் பெறவும், மருந்தின் தன்மையை விரைந்து தாதுக்கள்

ஏற்றுக்கொள்ளச் செய்யவும் காயகற்பங்களைப் போன்று உடலைப் பாதுகாக்கவும், முப்பு (மூன்று உப்புகள்) என்னும் மருந்தைப் பயன்படுத்தினர்.

"சூட்சமுடன் தைலங்க லெண்ணை முதல்யாவும்
சுளுவான சூரணங்கள் ரசாயணங்கள் முதலாய்
தூக்கமுடன் கடுகளவு பட்டால் போதும்"[54]

என்பதிலிருந்து முறைப்படி தயாரிக்கப்பட்ட முப்புவை உரிய அளவில் உட்கொள்ளும் மருந்துகளான பற்பம், செந்தூரம், சூரணம், ரசாயணம் போன்றவற்றில் கலந்து பிணியாளருக்குத் தரும்பொழுது, இம்மருந்துகளை உடல் ஏற்பதில் விரைவும், பிணி நீக்குதலில் விரைவும் ஏற்படுகின்றது. இந்தச் செயல்களால் தூண்டப்பட்டு விரைந்து பிணியைப் போக்குகின்றது என்று முப்பின் சிறப்பைப் பற்றி போகர் சித்தர் குறிப்பிடுகின்றார். அத்துடன்,

"தீய்ச்சலுடன் உப்புக்குத் தீட்சை செய்து
திறமுடனே காயத்துக்குறுதிபண்ணு"[55]

என்றும் போகர் சித்தர் குறிப்பிட்டுள்ளார். கற்ப மருந்துகளில் முப்பு என்னும் மருந்தைக் கலந்து சாப்பிட உடலுக்கு மிகுந்த பலன் விளைவிக்கும் என்பதால் சித்தர்கள் முப்பை உடலுக்குப் பயன்படும் ஊக்க மருந்தாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. மருந்துகள் செய்வதற்கும் முப்பு மிகவும் உபயோகத்தில் இருந்துள்ளதை,

"தானான முப்புவின் மகிமையாலே
சட்டமுடன் சரக்கெல்லாங் கட்டும்பாடு"[56]

என்று போகர் சித்தர் எடுத்துரைத்துள்ளது இங்குச் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

முப்பு என்பது சித்தர்களால் வகுக்கப்பட்ட உப்புப் பொருள்களான பூநீர், வெடிஉப்பு, கல்லுப்பு, போன்றவற்றுடன் அண்டக்கல் மற்றும் புளிப்புப் பொருள்களான பழங்காடிநீர், எலுமிச்சம் பழச்சாறு ஆகியவையும் காரப் பொருள்களான வெங்காரம், சீனாக்காரம் எனும் மருந்து மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டும் உயர்ந்த காரத்தன்மையுள்ள சுண்ணமாக முப்புவைச் சித்தர்கள் தயாரித்துள்ளனர்.

சித்த மருத்துவத்தில் அகால மரணம்

சித்தர்கள் பிணிகளை முறைப்படுத்தியதுடன் மரணத்தைப் பிணிவழி மரணம், நச்சுவழி மரணம் என வகுத்துள்ளனர். பிணி வழி மரணம் என்பது மனித உடலில் ஏற்படும் நோய்களால் மரணமடைவதாகும். நச்சு மரணம் என்பது அகால மரணம் என்றும் அழைக்கப்படும். இந்த நச்சு மரணத்தை உணவு நச்சு, தாவர நச்சு, பொருள் நச்சு, விடகடி நச்சு என்று நந்தீசர் எனும் சித்தர் கீழ்காணும் பாடலில் வகைப்படுத்தியுள்ளார்.

“அகால மரண விதமறிந்து
துஞ்சா துணர்வாய் சூட்சமதாய்
துரிதத் துடனே குணங்கண்டு
நஞ்சா மிதனை தானகற்ற
நவின்றார் நந்தி நானிலத்தே”[57]

என்று அகால மரணம் ஏற்படுவதையும் சித்தர்கள் நுட்பமாகக் கவனித்து வகைப்படுத்தியுள்ளனர் என்பதை இப்பாடல் நமக்குக் காட்டுகின்றது.

உணவு நச்சு, பொருள் நச்சு

உணவின் அளவு கூடும்போது மலபந்தம், பெருமூச்சு, கிருகிருப்பு, வயிறுஉப்புதல், உடல்சூடு, சளி போன்றவை உண்டாகி மரணம் ஏற்படும். சோறுடன் மிகுந்த உப்புக் கலத்தலால் மூச்சுக் குழல் இறுக்கம், மலவாய் இறுக்கம், இதய இறுக்கம் வழி மரணம் உண்டாகும். அரளிவேருடன் நல்லெண்ணெய் சேரும்போது மூச்சிறைப்பு, கபம் ஆகியவை சுவாசத்தைத் தடை செய்வதால் மரணம் உண்டாகிறது.

செயல்வழி மரணம்

செயல்வழி மரணத்தைச் சித்தர்கள் ஏழுவகையாகப் பிரித்துள்ளனர். அவை வருமாறு.

1. தூக்கிலிட்ட செத்த பிணத்தின் குறிகள்,
2. தண்ணீரில் விழுந்த பிணத்தின் குறிகள்,
3. கழுத்தை நெறித்துக் கொன்ற பிணத்தின் குறிகள்,
4. கழுத்தை நெறித்து நீரிலிட்ட பிணத்தின் குறிகள்,
5. மூச்சைப் பிடித்து விரையைக் கசக்கிக் கொன்ற பிணத்தின் குறிகள்,
6. அடித்துப் பின் தூக்கிலிட்ட பிணத்தின் குறிகள்,
7. கற்பழித்து இறந்த பிணத்தின் குறிகள்

என்பனவாகும்.

விடகடி நச்சு

செயல்வழி மரணத்தில் ஒரு குறியீடோ அல்லது பல குறியீடோ இருக்கும் என்பதைச் சித்தர்கள் அன்றே எடுத்துரைத்துள்ளதை இன்றைய நிலையில் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய தன்மையுடையதாகும். பாம்பு கடிப்பதால் ஏற்படும் மரணம் பற்றியும் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

“கண்டு செய்யக் குறிகேளு

கறுத்தே யுடலும் நீலமதாய்
உண்டே உயிரும் போனதுபோல்
உள்ளே யடங்கி நின்றிடுமாம்''[58]

என்று பாம்புக் கடிபட்டவர் உடல் கறுத்தும், நீல நிறமும் ஏற்பட்டு மரணம் கொண்டவர் போலத் தோன்றுவர். இருப்பினும் உயிர் உடலில் அடங்கியிருக்கிறது என்பதையும் சித்தர்கள் இப்பாடலின் மூலம் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

பாம்புக்கடியைப் பொய்க்கடி, உண்மைக் கடி எனச் சித்தர்கள் இரண்டாக வகுத்துக்காட்டியுள்ளனர். பாம்பின் உண்மைக் கடியில் ஒருபல் கடியைக் 'காளி' என்றும், இரண்டு பல்கடியைக் 'காளாத்திரி' என்றும், மூன்றுபல் கடியை 'இயமன்' என்றும், நான்கு பல் கடியை 'இயமதூதன்' எனவும் வகுத்துக் காட்டியுள்ளனர். பாம்பு கடிபட்ட இடத்தில் இரத்தம் வடிந்தாலும், சக்கரமாகக் கடிதடம் இருந்தாலும், ஆமை ஓடுபோல் வீங்கி இருந்தாலும் மரணம் உறுதி என்று குறிப்பிட்டுள்ளனர். விடகடிப் பாம்புக்கடி மரணத்தை உண்டாக்கும் பாம்புகடி என்றும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். பாம்புக் கடியிடத்தில் உள்ள வாசனையை வைத்தும் மரணத்தைக் கணிக்கமுடியும் என்றும் கூறியுள்ளனர். பாம்பு கடித்த இடமாகத் தலை, நெற்றி, புருவமையம், தாடை, உதடு, நெஞ்சு, உள்ளங்கை, மர்ம உறுப்பு, தொப்புள், உள்ளங்கால், குதம் ஆகியவை அமைந்தால் மரணம் ஏற்படும் என்பதையும் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளது இங்கு நோக்கத்தக்கதாகும்.

முடிபுகள்

- ✍ தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் ஒரு சிறப்பான மருத்துவ முறையாகவும் இன்றைய மருத்துவ முறைகளை உலகிற்கு அறிமுகப்படுத்தியதே சித்த மருத்துவம் தான் என்பதையும் அறிய முடிகின்றது. சித்த மருத்துவ முறைகளில் உள்ள வர்ம மருத்துவம் பற்றியும் அதன் சிறப்புக்களையும் குணங்களையும் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.
- ✍ வர்மப் பிணிக்கான காரணங்கள், அவை ஏற்படும் விதம் இப்பிணியின் உட்பிரிவுகள், வர்மத்தலங்கள் பற்றியும் அறிந்திருந்த சித்தர்கள், இப்பிணியை எவ்வாறு கைகொள்ளுதல் வேண்டும் என்பதையும் குறிப்பிட்டுள்ளனர். வர்மப் பிணியினைப் போக்குவதற்கான மருத்துவ முறைகளையும் அந்நோயின் வகை தொகைகளைப் பற்றியக் கூறுகளையும் சித்தர்கள் கண்டறிந்து முறைப்படுத்தி வகுத்துள்ளனர்.
- ✍ உடலில் வர்மத் தலங்கள் நூற்றியெட்டு உள்ளன என்பதை அறிந்திருந்த சித்தர்கள், இவ்வர்மத்தைப் படுவர்மம், தொடுவர்மம் என இரண்டாகப் பிரித்தும் வகுத்தும் அறிந்துள்ளனர். படுவர்மத்தைப் பன்னிரண்டு வகையாகவும், தொடுவர்மத்தைத் தொன்னூற்றாறு வகையாகவும் பிரித்துக் கூறியுள்ளதை அறிய முடிகின்றது.

- ✍ சித்தர்கள் பிணிகளை வாதப்பிணி, பித்தப்பிணி, கபப் பிணி, கலப்புப் பிணி, அகக் காரணப்பிணிகள், புறக்காரணப் பிணிகள் என வகுத்து, அப்பிணிகளின் உட்பிரிவுகளையும் அவற்றிற்கான மருத்துவ முறைகளையும் வகைப்படுத்தியுள்ளனர்..

- ✍ பிணியின் தொகுப்பினைச் சித்தர்கள் சுமார் 4448 என வகுத்துக் கூறியதுடன், இப்பிணிகளைத் தீரும்பிணி, தீராப்பிணி என இரண்டு வகைக்குள் அடக்கியுள்ளனர். தீரும் பிணிக்களுக்காக மருத்துவ முறைகளையும், சிகிச்சை முறைகளையும் கண்டறிந்து அப்பிணிகளை நீக்கியுள்ளனர்.

- ✍ பிணிக்கான குணம், குறிகளைக் கொண்டு இப்பிணி எவ்வகையானப் பிணியைச் சார்ந்தது என்றும் ஒரு பிணியின் மூலமாக எந்த வகையான பிணி தொடர்ந்தால் மரணம் உண்டாகும் என்பதையும் அதனைப் போக்கும் வழி முறைகளையும் சித்தர்கள் விளக்கியுள்ளனர்.

- ✍ உடலில் தோடங்களின் வாயிலாக உண்டாகும் துன்பங்களையும், மனத்தில் தோடங்களின் வாயிலாக உண்டாகும் துன்பங்களையும் பிற காரணங்களினால் உண்டாகும் துன்பங்களையும் பற்றிச் சித்தர்கள் சித்தமருத்துவத்தில் தனித்தனியே வகுத்துள்ளனர். உடலில் ஏற்படும் துன்பங்களைப் பிணி என்றும், மனத்தில் ஏற்படும் துன்பங்களை நோய் என்றும் வகுத்துக் கூறியுள்ளதைச் சித்தர்கள் பாடல்கள் வழி அறிய முடிகின்றது.

- ✍ உடலில் ஏற்படும் பிணிகளுக்கு மருத்துவம், மருந்துகள், பயிற்சி என்ற சிகிச்சை முறைகளையும் மனத்தில் ஏற்படும் நோய்களுக்குப் பராமரிப்பு, அரவணைப்பு, உணவுக் கட்டுப்பாடு என்ற சிகிச்சை முறைகளையும் சித்தர்கள் கையாண்டுள்ளதை அறிய முடிகின்றது.

- ✍ உடலுக்கான சிகிச்சை முறைகளை வகுத்தச் சித்தர்கள், எந்தச் சிகிச்சை முறையை எந்தக் காலத்தில் எந்த அளவு செய்யவேண்டும் என்பதையும் குறிப்பிட்டுள்ளனர். காலையில் பேதிச் சிகிச்சை முறையையும், சூரியன் உதயம் முதல் ஒரு சாமம் வரை வாந்திச் சிகிச்சை முறையையும், காலை பதினேழு நாழிகைக்குள் நசியச் சிகிச்சையும், அந்திப் பொழுதில் கண்களுக்கான சிகிச்சை முறையையும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- ✍ சித்த மருத்துவத்தில் உடலினுள் உட்கொள்ளும் மருந்துகளை ‘அகமருத்துவம்’ என்றும், உடலுக்கு வெளியில் பயன்படுத்தக்கூடிய மருந்துகள் மற்றும் மருத்துவமுறைகளைப் ‘புறமருத்துவம்’ என்றும் சித்தர்கள் சித்தமருத்துவத்தில் குறிப்பிட்டுள்ளனர். இவற்றுள் அகமருந்து முப்பத்திரண்டு வகையாகவும் புறமருந்து முப்பத்திரண்டு வகையாகவும் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

- ✍ புறமருத்துவ முறைகளில் ஒன்றான நுட்பச் சிகிச்சை என்னும் அறுவை மருத்துவமுறையைச் சித்தர்கள் சரியாகக் கையாண்டுள்ளனர். அதற்கான அறுவைச் சிகிச்சைக் கருவிகளையும்,

அறுவைச் சிகிச்சை முறைகளையும் பற்றிச் சித்தர்கள் முன்பே சிந்தித்துள்ளனர்.

- சித்தமருத்துவ அறுவைச் சிகிச்சையில் கட்டிகள், கண்டமாலை, கண் நோய்கள், கல்லடைப்பு, சதையடைப்பு போன்ற நோய்களை அறுத்தல், கீறல், சுடுதல் போன்ற சிகிச்சை முறைகளில் சித்தர்கள் குணப்படுத்தியுள்ளனர். பிற சிகிச்சைகளோடு ஒடிவு, முறிவு பற்றியச் சிகிச்சை முறைகளையும் அறிந்து நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

- உடற்பிணி மற்றும் உளநோய் உள்ளவர்களை வேதனையிலிருந்து காப்பதற்கும் பிணிவழி மற்றும் நோய் வழித் துன்பத்திலிருந்து காப்பதற்குமான மருந்துவமுறைகள், 'மருந்துகள்' என்பதாகும். நுட மருத்துவமான எலும்பு மருத்துவத்திலும் வர்ம மருத்துவத்திலும் சிகிச்சை முறைகளைச் சித்தர்கள் கையாண்டுள்ளனர்.

- மருந்துகளில் தினை, சாமை, கடுகு, காணம் ஆகியவற்றைச் சித்தர்கள் துணை மருந்துகளாகக் குறிப்பிட்டுள்ளனர். இந்த விதைகளின் அளவைக் கொண்டு மருந்து தயாரிக்கத் தேவைப்படும் அளவை நான்கால் பெருக்கி பதினாறு அளவாக வகுத்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளனர். அவற்றை உட்கொள்ளும் காலத்தைப் பற்றியும் உணவு விவரத்தைப் பற்றியும் அவற்றிற்கான கட்டுபாட்டு முறைகளைப் பற்றியும் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

- உடல் பிணிவழிச் சிதைவதால் உயிர் பிரிகிறது என்பதையும், உடம்பைப் பிணியிலிருந்து காத்துப் பிணிபடாதிருக்க முன் மருந்தாகவும், பிணிபட்டால் அவற்றைத் தீர்க்கும் மருந்தாகவும்

எப்பொழுதும் இளமைத் துடிப்புடனும் உடல் வன்மையுடனும் இருக்கச் செய்யும் மருந்தாகவும் பயன்படுவது 'காயகற்ப' மருத்துவ முறையாகும். இம் முறையை மூலிகைகளின் வாயிலாகக் கலப்புக் கற்ப மருந்துகள், தனிமூலிகைக் கற்ப மருந்துகள், திரிமூலிக் கற்பம், பஞ்சமூலிக்கற்பம், அட்டமூலிக்கற்பம் என வகைப்படுத்தியுள்ளனர்.

✍ மண்ணில் விளையும் பொருட்களில் மேன்மையான மூலிகைகளையும், மண்ணில் தாதுக்களான பாடாணங்கள், உபரசங்கள் ஆகியவற்றைக் கொண்டும் காயகற்ப மருந்துகளைச் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இவை நூற்றிருபத்திரண்டு எனவும், இம்மருந்துகளை உட்கொள்ளும் முறைகள் பற்றியும், அதனால் உடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

✍ மனம் மற்றும் உடலுக்குத் தேவையான உயிர்ச் சக்தியை அதிகரிக்கச் செய்தல் மூலமாக மனநோயையும் உடல் பிணியையும் போக்க முடியும் என்பதை அறிந்திருந்த சித்தர்கள், யோகப் பயிற்சி முறையையும் மேற்கொண்டனர். யோகப் பயிற்சி முறைகளில் சுவாசப் பயிற்சி முறையையும் அவற்றின் சிறப்புகளைப் பற்றியும் சித்தர்கள் முதன்மைப்படுத்தியுள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. எஸ்.இராசாமணி, வர்மபரிகாரமும் சிகிச்சை முறைகளும், ப.2. (பா.எ.இ.).
2. சு.இராசாமணி, (தொ.ஆ.), அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி 1200, பா.81.
3. அ.மரியஜோசப் (உ.ஆ.), வர்மக்கண்ணாடி-500, பா.309.
4. இரா.தியாகராசன், மற்றும் பிறர், வர்மவிதி (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.41.
5. ஆர்.தியாகராசன் (தொ.ஆ.), போகர் அருளிச்செய்த வர்மசூத்திரம் 131, பா.8.
6. சூ.இராசாமணி (தொ.ஆ.), அகத்தியர் ஒடிவுமுறிவு சாரி நிகண்டகராதி 1200, பா.15.
7. ஆர்.தியாகராசன், (தொ.ஆ.), மு.நூ., பா.41.
8. சூ.இராசாமணி, (தொ.ஆ.), மு.நூ., பா.89.
9. கந்தசாமி முதலியார் (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் – இரத்தினச்சுருக்கம் ஐந்நூற்றில், பா.4.
10. மேலது. பா.12.
11. ச.அரங்கராசன் (பதி.ஆ.), 4448 வியாதிகள் (ஒரு விளக்கம்), ப.11.
12. கந்தசாமி முதலியார் (தொ.ஆ.), யூகிவைத்திய சிந்தாமணி 800, பா.544.
13. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், வைத்திய சதகநாடி, பா.84.

14. நற். 261.

15. குறள். 949.

16. இரா.தியாகரசான், மற்றும் பிறர், அங்காதிபாதம், (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நூல் வெளியீட்டுக் குழு), பா.289.

17. குறள். 948.

18. இரா.தியாகரசான் மற்றும் பிறர், மு.நூ., பா.92.

19. மேலது, பா.94.

20. மேலது, பா.122.

21. டி.அமிர்தலிங்கம் பிள்ளை (தொ.ஆ), அகத்தியர் நயனவிதி ஐந்நூறு – நாகமுனிவர் நயன விதி இருநூறு, பா.26.

22. ஆர்.தியாகராசன், தேரையர்தரு, ப.32. (பா.எ.இ.).

23. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., , பா.1,2.

24. புறம். 180.

25. பதிற்று, 5ம் பத்து, பா.2.

26. டி.அமிர்தலிங்கம் பிள்ளை, அகத்தியர் சாஸ்த்திராயுத விதி (அகவல்), ப.138. (பா.எ.இ.).

27. மேலது, நாகமுனிவர் நயனவிதி இருநூறு, பா.10, 11.

28. மேலது, அகத்தியர் சாஸ்திராயுத விதி, பா.2.

29. மேலது, அகத்தியர் நயனவிதி ஐந்நூறு, பா.29.

30. ஆர்.தியாகராசன், போகர் அருளிச்செய்த வரும சூத்திரம் 131, பா.96.

31. ஆசிரியர் பெயர் இல்லை, தேரையர் சேகரப்பா, பா.50.

32. க.சு.உத்தமராயன், சித்த மருத்துவாங்கச் சுருக்கம், பா.472.

33. ஆர்.தியாகராசன், தேரையர் வெண்பா, பா.130.

34. மேலது, பா.172.

35. குப்புசாமி நாயுடு (தொ.ஆ), புலிப்பாணி முனிவர் வைத்தியம் 500, பா.251.

36. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ், (பதி.ஆ.), போகர் வைத்தியம் 700, பா.207.

37. குறள். 949.

38. எஸ்.பி.இராமசந்திரன் (பதி.ஆ.), கற்பநூல் திரட்டு, (திருவள்ளுவர் கற்பம் 300), பா.65.

39. மேலது, (சட்டமுனி கற்பவிதி 100), பா.1.

40. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் (பதி.ஆ.), திருமூலர் வைத்தியம் (கருக்கிடை 600), பா.134.

41. எஸ்.பி.இராமசந்திரன். (பதி.ஆ.), மு.நூ. (போகர் கற்பம் 300), பா.190.

42. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ், (பதி.ஆ.), மு.நூ., பா.134.

43. கந்தசாமி முதலியார் (தொ.ஆ) போகர் 7000 முதல் 1000, பா.647.

44. மேலது, பா.647.

45. ஆர்.எம்.கே.வேலுச்சாமி (தொ.ஆ), சட்டமுனிவாத காவியம் 1000, பா.431.

46. பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ், (பதி.ஆ.), திருமூலர் வைத்தியம், (கருக்கிடை 600), பா.302.

47. மேலது, பா.137.

48. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., பா.619.

49. திருமந். பா.553.

50. ஆர்.தியாகராசன், சித்தமருத்துவம் சிறப்பு, ப.27. (பா.எ.இ.).

51. திருமந். பா.557.

52. ஆர்.தியாகராசன், மு.நூ., ப.27. (பா.எ.இ.).

53. திருமந். பா.556.

54. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., பா.136.

55. ஆர்.தியாகராசன், மு.நூ., ப.56. (பா.எ.இ.).

56. கந்தசாமி முதலியார், (தொ.ஆ.), மு.நூ., பா.138.

57. எஸ். சிதம்பரதானுப்பிள்ளை, (பதி.ஆ.), நந்தீசர் அகால மரணநூல், பா.1.

58. மேலது, பா.265.

இயல் – 6

சித்தமருத்துவத்தில் மருந்தும் உணவும்

சித்தர்கள் சித்தமருத்துவத்திற்குரிய மருத்துவ மூலப்பொருள்கள் மற்றும் மூலிகைப் பொருள்களை உரிய காலத்தில் சேகரித்ததோடு அவற்றிற்கான உணவுக் கட்டுப்பாட்டு முறைகளையும் வகுத்துள்ளனர். அவ்வாறு சேகரிக்கப்பட்ட மருந்துப் பொருள்களின் நச்சுத்தன்மைகளை நீக்கச் சரியான உணவையும் பகுத்து ஆராய்ந்துள்ளனர். ஏனெனில் மருந்துகளால் மட்டுமின்றி உணவுகளின் அளவு மற்றும் அதன் தன்மை ஆகியவை கூடுவதாலும் குறைவதாலும் பிணிகள் ஏற்படுகின்றன. எனவே அதற்கேற்ற உணவு முறைகளையும் மருந்துகளையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் பற்றி ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

இலக்கியத்தில் மருந்துகள்

'மருந்து' என்ற சொல்லும் அதன் பொருளும் இலக்கியத்தில் பல்வேறு இடங்களில் கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. மருந்து எனும் பொருள் பிணியாளரின் துன்பத்தையும் மனநோயாளியின் அவலத்தையும் தீர்ப்பது என்பதனை,

"அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து"[1]

எனும் நற்றிணைப் பாடலின் வாயிலாக அறிய முடிகின்றது. மேலும் உயிர் காப்பது மருந்து எனும் செய்தியை,

"இன்னுயிர் செய்யும் மருந்து"[2]

எனும் பாலைக்கலிப் பாடலின் வழியும் அறிய முடிகிறது. துயர் எனும் மனநோயைத் தீர்ப்பது மருந்து என நற்றிணைப் பாடல் கருத்தையே குறிஞ்சிக்கலிப் பாடலும்,

"அருந்துயர் ஆரமர்தீர்க்கும் மருந்து"[3]

எனக் குறிப்பிடுகின்றது. மருந்தினை அமுதத்திற்கு இணையாக ஒப்பிடும் வகையில்,

"பகரு நல்லது பானமே - யகில மீதினி யவிழ்தமா
மகிமை யீயு மருந்தினுக் கிகல் வியாதிக ளிடையவே"[4]

எனும்போது அமுதம் என்பது, மரணத்தைத் தவிர்த்து வாழ்நாளை நீட்டிக்கும் தன்மை வாய்ந்தது. இப்பானத்திற்கு ஒப்பானது இம்மருந்து எனக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சித்த மருத்துவத்தில் மருந்துகள்

சித்த மருத்துவத்தில் 'மருந்து' எனும் பொருளைச் சித்தர்கள் உடல் பிணிப் போக்கவும் மன நோய் போக்கவும் பிணிபடாது பாதுகாக்கவும் உடல் நலம் காக்கவும் மனநலம் காக்கவும் உரிய பொருளாக மருந்தைச் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

பஞ்ச பூதங்களின் வழி மருந்துகளின் தன்மைகள்

சித்தர்கள் அறிந்திருந்த மருந்துகளில் பஞ்ச பூதங்களின் தன்மைகள் உள்ளதை அறிந்திருந்தனர். அவற்றை 1.மண்பூதத் தன்மைகள், 2. நீர்ப்பூதத் தன்மைகள், 3.தீப் பூதத் தன்மைகள், 4.காற்றுப் பூதத் தன்மைகள், 5.ஆகாயப் பூதத் தன்மைகள் என ஐந்து வகையான பூதத் தன்மைகளைப் பற்றி வகுத்துள்ளனர்.

1. மண்பூதத் தன்மைகள்

மண்பூதத் தன்மைகளாவன கணத்திருத்தல், சுரசுரப்பு, கடினம், வறட்சி, அசையா தன்மை, ஒட்டுதல், இறுகுதல் ஆகிய தன்மைகள் இதனுள் அடங்கும்.

2. நீர்ப்பூதத் தன்மைகள்

நீர்த்தல், நொய்ப்பு, குளிர்ந்திருத்தல், அசைதல், ஒட்டுதல், கணத்தல் ஆகிய தன்மைகளைப் பெற்றிருப்பது நீர்ப்பூதத் தன்மைகளாகும்.

3. தீப்பூதத் தன்மைகள்

சூடாயிருத்தல், வேகத்துடனிருத்தல், இலேசாக இருத்தல், வறட்சி, தூய்மையாயிருத்தல் ஆகியவை தீப்பூதத் தன்மைகளாகும்.

4. காற்றுப்பூதத் தன்மைகள்

காற்றுப்பூதத் தன்மைகளாவன இலேசாயிருத்தல், பிசுபிசுப்பு, வறட்சி, அசைதல் ஆகியன இப்பூதத் தன்மைக்குள் அடங்குவன.

5. ஆகாயப் பூதத் தன்மைகள்

வெற்றிடம், மென்மை, தூய்மை போன்றவை ஆகாயப் பூதத் தன்மைகளாகும். இவ்வாறாக மேற்கூறிய தன்மைகளின் அடிப்படையில் ஐந்து பூதங்களின்வழி மருந்தின் மூலப்பொருட்களின் தன்மையினை அறியலாம்.

சித்த மருத்துவத்தில் மருத்துவ மூலப் பொருட்களைப் பற்றி, “உலோக வகைகள், உப்பு வகைகள், பாடாண வகைகள், வேர் வகைகள், இலை வகைகள், விதை வகைகள், பட்டை வகைகள், பூ வகைகள், பிராணிகள் உடம்பில் உற்பத்தியாகும் கோரோசனை, கஸ்தூரி, உறுப்புகள் மற்றும் கழிவுகள் ஆகியவற்றின்

குணங்களையெல்லாம் ஆராய்ந்து கண்டுபிடித்திருப்பதே அற்புதச் செயல்"[5] என்று சாமி.சிதம்பரனார் குறிப்பிடுகின்றார்.

மருந்துப் பொருட்களை ஒன்றுடன் ஒன்று கலந்தால் உண்டாகும் இறுகல், நீர்த்தல், வெடித்தல், தீப்பற்றல், புதைந்து மறைதல் என்ற ஐந்து செயல்களின் அடிப்படைகளைக் கொண்டு மருந்துகளின் மூலப் பொருளான, "பாடாணங்கள், உலோகங்கள், உப்புக்கள், உபரசங்கள், சீவப் பொருட்களையும் வகுத்ததுடன், சுவை, தோற்றம், நிறம் இவைகளின் அடிப்படையிலும் மூலிகைத் தாவரங்களையும் பஞ்சபூத அடிப்படையில் வகுத்துள்ளனர்"[6] என்பதையும் அறியமுடிகின்றது.

மூலப் பொருட்களின் குணங்கள்

மருந்தின் மூலப்பொருட்கள் ஒவ்வொன்றிற்கும் ஏழு குணங்கள் உள்ளதை அகத்தியரின் தர்க்க சூத்திரம் குறிப்பிடுகின்றது.

"பொருள் குணம் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை
இன்மையு டன்பொரு ளேழன் மொழிப"[7]

என்று மூலப் பொருள்களில் பொருள், பண்பு, செயல், பொதுத்தன்மை, தனித்தன்மை (செயல்வழி), இன்பம், துன்பம் என்ற ஏழு குணங்களையும் காணமுடிகின்றது.

மூலப் பொருட்களின் ஏழு குணங்களைப் பற்றி ஆராய்வதற்கு வேம்பு என்னும் மூலிகைத் தாவரத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டால்,

1. பொருள் - வேப்பமரம்
2. பண்பு - வேம்பு, மலை வேம்பு, நிலவேம்பு,

		சிவனார் வேம்பு
3. செயல்	-	காய், பூ, இலை, ஈக்கு, பட்டை, வேர் இவகைளின் செயல்கள்
4. பொதுத்தன்மை	-	கசப்பு
5. தனித்தன்மை	-	பிணி போக்குதலில் உள்ள சிறப்புச் செயல்.
6. இன்பம்	-	பிணி நீங்குதல்
7. துன்பம்	-	நாற்றம், கசப்பு

என்ற ஏழு வகையான குணங்களை அறியலாம்.

மூலப் பொருட்களின் வகைகள்

சித்த மருத்துவத்தில் மூலப் பொருட்களை மூலிகைத் தாவரங்கள், தாதுப் பொருட்கள், சீவப் பொருட்கள் என மூன்று வகையாகப் பிரித்து மூலப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

மூலிகைத் தாவரங்கள்

பிணியைப் போக்கும் தாவரங்கள் அனைத்தும் மூலிகைத் தாவரங்களாகும். இவை செடிகள், கொடிகள், படர் கொடிகள், மரங்கள் ஆகியவையாகும். இவற்றில் சுயமாக வளர்வதும் உண்டு; பயிரிடும் மூலிகைத் தாவரங்களும் உண்டு. இவற்றின் வளர்ச்சிக் காலம், சேகரிப்புக் காலம், மருந்துக் குணம் கொண்ட பாகம் என வகுக்கப்பட்டுள்ளது. சான்றாக, அமுக்கரா கிழங்கு, அவுரிஇலை, கற்றாழை மடல், எட்டிவிதை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தாதுப் பொருட்கள்

பொதுவாகப் பூமியில் விளையும் பொருள்கள், பாறைகளில், கடலில் கிடைக்கும் பொருள்களையே தாதுப் பொருள்களாக எடுத்துக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக பின் வருவனற்றைக் குறிப்பிடலாம்.

உலோகம் - பொன், வெள்ளி, இரும்பு

பாடாணம் - இரசம், கந்தகம், துத்தம்

உபரசம் - நவச்சாரம், வெங்காரம் போன்றவையாகும்.

சீவப் பொருட்கள்

மருத்துவக் குணம் கொண்ட பொருள்கள் சீவப் பொருட்களாகும். இவை உயிர்ப் பிராணிகளிடமிருந்து சேகரிக்கப்படுகின்றன. சான்றாக, ஆமை ஓடு, மான்கொம்பு, கஸ்தூரி, கோரோசனை, நெய், தாய்ப்பால், ஆட்டுப்பால் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சித்தமருத்துவத்தில் மூலிகைப் பொருட்கள்

சித்த மருத்துவ மூலிகைத் தாவரங்களில் ஒவ்வொரு தாவரமும் ஒவ்வொரு தாவரக் குடும்பமாக விளங்குவதை அறிய முடிகின்றது. ‘கொன்றை’ எனும் மூலிகைத் தாவரக் குடும்பத்தில் “சரக் கொன்றை, சிறுகொன்றை, புளிக்கொன்றை, பெருங்கொன்றை, மந்தாறக் கொன்றை, மயிர்க் கொன்றை, செம்மயிர்க் கொன்றை, பொன்மயிர்க் கொன்றை, முட்கொன்றை”[8] என வகைப்படுத்தியுள்ளமையை அறிய முடிகின்றது.

அதேபோன்று ‘ஆமணக்கு’ எனும் மூலிகைத் தாவரக் குடும்பத்தில், “சிற்றாமணக்கு, செவ்வாமணக்கு, பேராமணக்கு, மலையாமணக்கு, மணியாமணக்கு, எலியாமணக்கு, புல்லாமணக்கு, காட்டாமணக்கு”[9] என வகுத்துள்ளதையும் அறியலாம். எனவே, சித்த மருத்துவத்தில் மூலிகைத் தாவரங்களின்

பெயர்வழிக் குடும்பங்களை வகுத்துள்ளதையும், மூலிகைத் தாவரங்களின் தோற்றம், வளர்ச்சி, இலை வடிவம், பூவடிவம், காய்வடிவம் ஆகியவற்றைச் சேகரிக்க வேண்டிய காலமுறையையும் சித்தர்கள் கணித்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது.

மூலிகைத் தாவரங்களின் குணங்கள் மற்றும் செயல்கள்

மூலிகைத் தாவரங்களின் மருத்துவக் குணங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து மூலிகைகளை மருத்துவத்திற்கு மருந்தாகச் சித்தர்கள் பயன்படுத்தினர்.

1. அகட்டுவாய்வகற்றி

அகட்டிலுள்ள அசுத்தக் காற்றைப் போக்கி உடலில் வெப்பத்தை உண்டாக்கி, உடல் நலம் சிறக்க இம்மூலிகைப் பயன்படுகிறது.

2. அழுகலகற்றி

உடல் தாதுக்களை அழுகவிடாமல் தடுக்கும் மூலிகையாக இது பயன்படுகிறது.

3. இசிவகற்றி

உடல் இசிவுகளை நீக்கும் மருத்துவக் குணம் கொண்ட தாவரமாக இது விளங்குகின்றது.

4. இளைப்பகற்றி

உடலை வன்மைப்படுத்தித் திடப்படுத்தும் மூலிகைப் பொருளாக இது விளங்குகின்றது.

5. இன்பம் பெருக்கி

இது, காம உணர்வைப் பெருக்கும் பொருளாகப் பயன்படுகிறது.

6. ஈரல் தேற்றி

இது, ஈரலுக்கு வன்மை தருகின்றது.

7. உடல் வெப்பகற்றி

இது, உடல் மிகு வெப்பத்தைத் தணிக்கும் பொருளாகப் பயன்படுகிறது.

8. உடலுரமாக்கி

இது, உடல் தாதுக்களை வலுப்படுத்தும் மூலிகையாகும்.

9. உடல் தேற்றி

உடலில் உள்ள பிணிகளைப் போக்கி உடலைத் தேற்றும் மூலிகையாகும்.

10. உணர்ச்சிப் போக்கி

இம்மூலிகைத் தடவப்பட்ட உடல் பகுதியில் உணர்ச்சியை நீக்கும் தன்மையுடையதாகும்.

இவ்வாறாகப் பலவகை மூலிகைகளையும் அவற்றின் மருத்துவக் குணங்களையும் இதனால் தெளியலாம்.

மூலிகைத் தாவரங்களின் வகைகள்

மூலிகைத் தாவரங்களைப் பொதுவாக இரண்டு வகைப்படுத்திக் கூறுவர் தாவரவியல் வல்லுநர்கள். அவை 1.பூக்கும் தாவரங்கள், 2.பூக்காத தாவரங்கள் என்பனவாகும். “மூலிகைத் தாவரங்களில் பூக்கும் தாவரங்கள் மற்றும் பூக்காத தாவரங்கள் சுமார் 3,63,730 பேரினங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் பூக்கும் தாவரங்கள் 96680 பேரினங்களையும் கொண்டு வளர்வதாகக் கண்டறிந்துள்ளனர். தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 5000 பூக்கும் தாவரங்கள் உள்ளதாகவும், தமிழ்ச் சித்த மருத்துவத்தில் பூக்கும் தாவரங்கள் மற்றும் பூவாத் தாவரங்கள் என இருவகை

மூலிகைத் தாவரங்களையும் மருத்துவ மூலப் பொருளாகக் கொண்டதுடன் சுமார் 1500க்கும் மேற்பட்ட மூலிகைத் தாவரங்களை மருத்துவ மூலப்பொருளாக உபயோகித்து வந்துள்ளனர்"[10] என்பதையும் அறிய முடிகின்றது.

மூலிகைத் தாவர வேதிப்பொருட்கள்

தாவரவியல் அறிஞர்களால் மூலிகைத் தாவரங்களிலிருந்து பெறப்பட்ட மூலிகைத் தாவர வேதிப்பொருள்களை "உப்பு, இனிப்பு, நுரைப்பிகள், எண்ணெய்கள், ரோசனங்கள், பிசின்கள், துவர்ப்பிகள் என்று வகைப்படுத்துவது மூலிகைத் தாவர வேதிப்பொருள்களேயாகும்"[11] எனக் குறிப்பிடுவர்.

உப்பு - (ஆல்கலய்டு)

இது காரத்தன்மையுள்ள பொருளாகும். அதாவது ஊமத்தை, மார்ஃபின், கோகேயின், அட்ரோப்பின், நாயுறுவி, திராட்சை, பப்பாளி, மாசிக்காய், வாழை போன்றவைகளிலிருந்து பெறப்படும் பொருளாகும்.

இனிப்பு, இனிப்பு அற்றவை - (குளுக்கோசைடு)

இவை சர்க்கரைப் பொருளும் சர்க்கரை அற்ற பொருட்களையும் அடிப்படையாகக் கொண்டவை. கருங்கடுகு, வெண்கடுகு, எலுமிச்சை ஆகியவற்றிலிருந்து பெறப்படுவதாகும்.

நுரைப்பிகள் (சாப்போனின்)

இவை நீரில் கரைதலில் நுரை உண்டாக்குபவை, அதாவது சீயக்காய், பூந்திக் கொட்டை, அரப்புஇலை, பரங்கிப்பட்டை போன்றவை இத்தன்மையுடையனவாகும்.

இனிப்பு (கிளைக்கோசைடு)

இவை சர்க்கரைப் பொருளாகும். சீந்தில் சர்க்கரை, அதிமதுரச் சர்க்கரை, கூகை மாவு, பூமிச் சர்க்கரை, கிழங்குமாவு போன்றவையாகும்..

எண்ணெய்

எண்ணெய்களில் நிலைத்த எண்ணெய், ஆவியாகும் எண்ணெய் என இருபிரிவுகள் உள்ளன. நிலைத்த எண்ணெய் எனப்படுபவை தேங்காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் ஆகும். ஆவியாகும் எண்ணெய் எனப்படுபவை மிளகு எண்ணெய், கிராம்பு எண்ணெய் முதலியனவாகும்.

ரோசனங்கள் (ரெசின்கள்)

ரோசனங்கள் என்பது ஒருவகையான மரத்தின் பால் அல்லது மரத்தின் கழிவு என்று குறிப்பிடலாம்.

பிசின்கள் (கோந்து)

பிசின்களில் மருந்துத் தன்மை உள்ளது, மருந்துத் தன்மை இல்லாதது என இரண்டு வகைப்படும். மருந்துத் தன்மை உள்ளது குங்கிலியம், குக்கல், பெருங்காயம் ஆகியவையாகும். மருந்துத் தன்மை இல்லாதது கருவேலாம் பிசின் ஆகும்.

துவர்ப்பிகள் (டேனின்)

இது, சிலேத்மப் படலத்தில் மருந்தாகச் செயல்படுவதாகும். அதாவது பாக்கு, கடுக்காய், மாசிக்காய், தென்னம்பாளை ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிறது.

இவ்வாறாகத் தாவரங்களில் வகைப்படுத்தப்பட்ட மூலிகைவேதிப் பொருட்கள் சித்த மருத்துவத்தில் இன்றளவும் இருந்துவருவதைக் காணமுடிகின்றது.

மூலிகைத் தாவரங்களில் மருந்துக் குணம்

சித்த மருத்துவத்தில் ஒவ்வொரு மூலிகைத் தாவரங்களிலும் உள்ள மருந்துக் குணம் கொண்ட பகுதிகளைக் கொண்டே சித்தர்கள் மருந்துகள் தயாரித்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. சான்றாக, மருந்துக் குணம் கொண்ட பூ; அழிஞ்சிப் பூ என்றும், மருந்து குணம் கொண்ட பட்டை; நொச்சிப்பட்டை என்று கூறுவதையும், மருத்துவக் குணம் கொண்ட இலை; கையாந்தகரை இலை எனவும், மருத்துவ குணம் கொண்ட வித்து; எள் எனவும் குறிப்பிடுவர்.

மூலிகைத் தாவரங்களின் தொகைச் சரக்குகள்

மூலிகைத் தாவரங்களின் இலை, பூ, தண்டு, நிலகீழ்மட்டத்தண்டு, வித்து, காய், பழம், பட்டை என ஒவ்வொரு பாகத்தின் மருத்துவக் குணங்களை அறிந்தச் சித்தர்கள், அவற்றின் தொகைச் சரக்குகளைக் குறிப்பிட்டுள்ளனர். சான்றாக,

இருமஞ்சள்	- மஞ்சள், மரமஞ்சள்
திரிகடுகம்	- சுக்கு, மிளகு, திப்பிலி
திரிகந்தம்	- கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி
முக்கூட்டுநெய்	- பசுநெய், நல்லெண்ணெய், ஆமணக்கு நெய்
பஞ்சசாதம்	- சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், வால்மிளகு
பஞ்சமூலம்	- பெருமருந்து, குறிஞ்சான், சுக்கு, பேரரத்தை, சிறுதேக்கு

ஐங்காயம் - கடுகு, வசம்பு, ஓமம், பெருங்காயம், வெள்ளுள்ளி

அட்டகாயம் - சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், காயம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், நற்சீரகம்

என்பன போன்ற தொகைச் சரக்குப் பெயர்கள் வழக்கத்தில் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

சித்த மருத்துவத்தில் உலோகங்கள் பாடாணங்கள்

சித்த மருத்துவத்தில் உலோகங்களை மூலப்பொருட்களாகக் கொண்டு மருந்துகளைக் கண்டறிந்துள்ளனர் என்பதையும் உலோக மருந்துகளைக் கொண்டு பிணியினைப் போக்கியுள்ளதையும் அறிய முடிகின்றது.

சித்த மருத்துவத்தில் உலோக வகைகளைப் பற்றி,

> "உற்றுப்பார் தங்கம் வெள்ளி செம்புநாகம்
> உருக்கிரும்பு வெண்கலம் பித்தளை தராவும்
> நத்தில்பார் காரீயம் வெள்ளீ யந்தான்
> நலமாகப் பதினொன்றாய்ப் பிரிந்த தையர்"[13]

என உலோகங்களைத் தங்கம், வெள்ளி, நாகம், உருக்கி, இரும்பு, வெண்கலம், பித்தளை, தரா, காரீயம், வெள்ளீயம், செம்பு என்று பதினொன்றாக வகைப்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது.

உலோகங்களின் மருத்துவக் குணம்

சித்தர்கள் உலோகங்களின் மருத்துவக் குணம் பற்றி நன்கறிந்திருந்தனர் என்பதை மெய்ப்பிக்கும் வகையில்,

"பாண்டுவெண் குட்டம் பருந்துகால நோய்கோபை
மாண்டிடச் செய் மந்தங்கா மாலை குன்பம் பூண்ட
பெருந்தாது நாட்டமும்போம் பேதிபசி வுண்டாங்
கருந்தாது நாட்டமிடுங் கால்"[14]

என்ற பாடல் அமைந்துள்ளது. அதாவது உலோகங்களில் அயமானது முறைப்படி மருந்தாகச் செய்யப்பட்டால் பித்தபாண்டு, வெண்குட்டம், அதிதூலம், கோபை, மந்தம், காமாலை, குன்மம், சுக்கிலநட்டம், கழிச்சல் ஆகியவை நீங்கி நல்ல பசி உண்டாகும் என்பதாகும். அதேபோன்று உலோகங்களில் வெள்ளியைப் பற்றிக் குறிப்பிடும்போது சித்தர்கள்,

"இரத்தங் சயம்பித்தம் ஈளை கண்ணோய் காசம்
உரத்தையம் அட்ட குன்மம் ஊதை - வருத்தும்"[15]

என்ற பாடலடியின் மூலம் உதிரபேதி, சயம், பித்தம், கோழை, விழிநோய், இருமல், மார்புச்சளி, அட்டகுன்மம், வாதச்சீற்றம் போன்ற பிணியினைப் போக்கும் திறம் கொண்டதாக விளங்குகிறது.

பாடாணங்கள் (தாதுப்பொருட்கள்)

சித்த மருந்துகளின் மூலப் பொருட்களில் பாடாண வகைகளும் சித்தர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதை,

"நாளப்பா பாடாண வகையே தென்றால்
நலமான வறுபத்து நாலதாச்சு"[16]

என்று பாடாணங்களை அறுபத்துநான்காக வகைப்படுத்தியுள்ளதை அறியலாம். மேலும் இவற்றில்,

"பாவென்றபா டாணமறு பத்துநாளில்
பாங்காக வைப்புவகை முப்பத்திரண்டு
ஒவொன்றும் பிறப்பதுமுப் பத்தி ரண்டு"[17]

எனக் குறிப்பிட்ட அறுபத்து நான்கு பாடாணங்களில் வைப்புப் பாடாணங்கள் என்ற செயற்கைப் பாடாணங்கள் முப்பத்திரண்டும், இயற்கையாக விளையும் பாடாணங்கள் முப்பத்திரண்டும் எனப் பாடாணங்களை வகைப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

இயற்கைப் பாடாணங்கள் (32)

இயற்கையாகவே விளையும் பாடாணங்கள் இயற்கைப் பாடாணங்கள் எனப்படும். இது முப்பத்திரண்டு வகைப்படும். அவை, கெந்தகம், கற்கடகபாடாணம், கோளகப் பாடாணம், சூதம், லிங்கம், கார்முகிலப்பாடாணம், அப்பிரகப்பாடாணம், காந்தப்பாடாணம், சங்குப்பாடாணம், கௌரிப் பாடாணம், வெள்ளைப் பாடாணம், துத்தம், தொட்டிப் பாடாணம், கற்பரிப்பாடாணம், சரக்கண்டப் பாடாணம், அஞ்சனப் பாடாணம், குதிரைப்பல் பாடாணம், அரிதாரப் பாடாணம், தாளகப்பாடாணம், மனோசிலை, வீரம், கல்ப்பாடாணம், சீதாங்கப் பாடாணம், சிலாமதப் பாடாணம், பலண்டுருசு பாடாணம், அமிர்தப் பாடாணம், கச்சாலப்பாடாணம், வைகிரந்தப் பாடாணம், கிராபந்தப் பாடாணம், காலங்கப் பாடாணம், அவுபல் பாடாணம், தாலபாடாணம் என முப்பத்திரண்டும் பூமியில் (விளைந்து) கிடைக்கும் பாடாணங்களாகும்.

செயற்கைப் (வைப்பு) பாடாணங்கள்

இயற்கைப் பாடாணங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்கையாகத் தயாரிக்கப்படும் பாடாணங்கள் செயற்கைப் பாடாணங்கள் எனப்படும். பொற்கொட்டி, ரத்தபாடாணம், அயத்தொட்டி பாடாணம், புத்தோட்டுத் தொட்டி, ரசிதா பாடாணம், செப்புத் தொட்டி, சாதிலிங்கம், தீமுறுகல், கார்முகில் பாடாணம், பிர்தார் சிங்கி, ரத்த சிங்கி, ஏமசிங்கி, சவ்வீரம், கோடாசூரி வீரம், வெள்ளை, கௌரி, கோழித்தலைக் கெந்தி, பவளப்புத்து, சூதம், நீலபாடாணம், காகபாடாணம், பஞ்சபட்சி பாடாணம், குங்குமப் பாடாணம், துத்தப் பாடாணம், தைலப் பாடாணம், கெந்தகப் பாடாணம், நாகப்பாடாணம், இரத்தப் பாடாணம், சோரப் பாடாணம், லவணப் பாடாணம், அரிதாரப் பாடாணம், வான கொந்திப் பாடாணம் என முப்பத்திரண்டு செயற்கைப் பாடாணங்களையும் வகுத்து மொத்தமாகப் பாடாணங்கள் அறுபத்து நான்கு என வரையறுத்துள்ளனர்.

உபரசங்கள்

சித்தர்களின் சித்த மருத்துவ மருந்துகளின் மூலப் பொருட்களில் உபரசம் என்னும் ஒரு பிரிவையும் உள்ளடக்கியுள்ளனர். இவற்றை,

"தாளப்பா உபரசநூற் றிருபதாகும்"[18]

என்பதில் உபரசம் தனக்குக்கீழ் நூற்றிருபது பொருட்களை மருந்துகளின் மூலப் பொருளாகக் கொண்டுள்ளதை அறியலாம்.

பொதுவாக உபரசப் பொருட்களாக "வயல் நண்டு, நத்தை, தவளை, கிளிஞ்சல், முத்துச் சிப்பி, ஆமை ஓடு, சங்கு, யானைத் தந்தம், மான் கொம்பு, கஸ்தூரி, காண்டாமிருகக் கொம்பு, முள்எலி, மயிலிறகு, பூநாகம்"[19] போன்றவற்றைக்

குறிப்பிடுவர். இவை போன்று பூமியிலிருந்து கிடைக்கும் பொருள்களையும் கடலிலிருந்து கிடைக்கும் பொருள்களையும், மூலிகையிலிருந்து கிடைக்கும் பொருள்களையும் சேர்த்து நூற்றிருபது உபரச மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு சித்த மருந்துகளைச் செய்துள்ளதையும் அறியமுடிகின்றது.

உபரசத்தில் நண்டு

நண்டானது வாதக் குடைச்சல், கபம், கரப்பான், நீண்டகாலக்குடல் இரைச்சல் போன்ற பிணிகளை நீக்கும் அரிய மருந்து என்பதை,

"வயிலிறு நண்டருந்த வாதகுடைச்ச
லயலி லிருக்கா தணங்கே துயில் வெட்டிடா"[20]

எனும் பாடல் வரிகளால் அறியலாம்.

உபரசங்களில் முத்து

உபரசப் பொருட்களில் ஒன்றான முத்து மருந்தாக்கப்பட்டதும், அது போக்கும் பிணிகளைப் பற்றி,

"அத்திசுரம் சோகை யருகி துர்ப்ப லம்கண்ணோய்
பித்துவிடஞ் சீதளநோய் பேசுகபம் - சுத்தத்
தயிரியநட் டத்தோடு தாதுநட்ட மும்போம்
உயிருறு நன் முத்திருந்தா லோது"[21]

என்று குறிப்பிடும் போது, முத்தின் மருத்துவக் குணங்களான எலும்புச் சுரம், சோகை அருசி, துர்பலம், கண்ணோய், மிகுபித்தம், பைத்தியம் (மனநோய்), கபநோய்கள், கபதோடவழிப் பிணிகள், விந்து நட்டம், ஏழு தாதுக்களில் ஏற்படும் பலகீனம் ஆகியவற்றைப் போக்கும் மருத்துவக் குணமுடையது என்பதை அறிய முடிகின்றது.

உப்பு, கார, சாரப் பொருட்கள்

சித்த மருத்துவ மருந்துகளான மூலப் பொருட்களில் உப்புப் பொருள்கள், கார, சாரப் பொருள்கள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டன. இதை,

“இகழாத காரசாரத்தி யல்புகேள்
அகலா வழலை ஆத்திப்பூ னீருடன்
புகழாகச் சாரமும் பொருள்சத்தி சாரமே”[22]

என்று கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது. மேலும் உப்பின் காரசாரப் பொருள்களாகக் கல்லுப்பு, வெடிஉப்பு, இந்துப்பு, வளையல் உப்பு, சவுட்டுப்பு, திலாவுப்பு, கெந்தி உப்பு, பிடாஉப்பு, சவர்க்காரம் (செயற்கை), காய்ச்சும் உப்பு, அமுரி உப்பு, ஏகாம்பரச் சாரம், சீனிக்காரம், வெண்காரம், சூடன், பச்சைக் கற்பூரம், பொன்னம்பர், மீன் அம்பர், பூநீரு, நவச்சாரம், சக்திச் சாரம், எவச்சாரம், காசிச்சாரம், கம்பிச் சாரம் என உப்பு, காரம், சாரம் என இருபத்தைந்து பொருட்கள் என்பதை,

“கேளப்பா லவணமொட காரசாரம்
கொடியாக இருபத்தஞ்சு சொல்வேன்”[23]

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

உப்பு, கார சாரத்தில் வெடி உப்பு

உப்பு, கார சாரத்தில் வெடி உப்பின் மருத்துவக் குணம் பற்றி,

“சூதக வாயு வொடு கோணிதத்தின் வாதமும் போம்
வாதவலி குன்மமிவை மாறுங்காண் - மீதாங்
கொடிய வயிறிழியுங் கோழைகப மேடும்
வெடியுப்புத் தன்னை விளம்பு”[24]

என்ற பாடலில் சூதக வாயு, சோனித வாதம், வாதவலி, குன்மம், கருப்பைக் கட்டி, கோபை, மூத்திரக்கிரிச்சாரம், நீர்ச்சுருக்கு, ஆசிசா வாதம், வாத கோணிதம், சாமானிய வாத, பித்த, கபக் குன்மங்கள், பெருவயிறு, ஈளை, கபதோடம், சுரம், வீக்கம், கீல்வாதம், இரத்தப் பித்தம், பிரமேகம், கண்ணோய், தொண்டை விரணம், சுவாச காசம் முதலிய நோய்கள் வெடி உப்பால் நீங்குபவையாகும்.

நவச்சாரம்

உப்பு, காரம், சாரம் இவற்றில் நவச்சாரத்தின் மருத்துவக் குணம் பற்றிச் சித்தர்கள் கீழ்க்காணுமாறு விளக்குவர்,

"குன்மம் குடற்சூலை கொல்லும் மகோதரத்தை
வன்மையுறு கல்லடைப்பை மாற்றுங்காண் - சன்மக்
கவிச்சுமுத் தோடங் கனவாத நீக்கும்
நவச்சார மாதே நவில்"[25]

என்பதிலிருந்து வயிற்றுவலி, குடல்வாயுவால் உண்டாகும் குத்தல் வலி, பெருவயிறு, கல்லடைப்பு, சருமத்தில் உண்டாகும் இறைச்சி வாடை, வயிறு உப்புசம், கல்லீரல் வீக்கம், ஈரப்பிணிகள், நீர்க்கோவை, இரத்தக் காசம், முகச் சந்தி, சூரியவர்த்த வாதம், சூதக்கட்டு, கக்கிருமல், முறைச்சுரம் ஆகிய நோய்களைப் போக்கும் தன்மை கொண்டது என்பதை அறிய முடிகிறது.

பஞ்சபூதம், பாடாணம், உப்பு, உபரச மூலிகைகள்

சித்த மருத்துவத்தில் மூலப் பொருள்களைப் பாடாணம், உப்பு, உபரசம் என்று பிரித்ததுடன், இவை ஒன்றுடன் ஒன்று கலக்கும் போது உண்டாகும் செயல்களின் அடிப்படையில் பஞ்சபூதங்களின்வழி முறைப்படுத்திக் கூறியுள்ளதையும் அறியலாம்.

மண்பூதம்	-	கல்லுப்பு, கம்பியுப்பு, இந்துப்பு
நீர்ப்பூதம்	-	சத்திச்சாரம், பாறையுப்பு
தீப் பூதம்	-	வெடிஉப்பு, கல்லுப்பு, சவுட்டுப்பு
காற்றுப் பூதம்	-	சீனாகாரம், துருசு
ஆகாயப் பூதம்	-	பூநீறு, வழலையுப்பு, பச்சைக்கற்பூரம்

பஞ்சபூதங்களும் பாடாணங்களும்

மண்பூதம்	-	அரிதாரம், தொட்டில் பாடாணம், மிர்தார் சிங்கி, தீமுறுகல்
நீர்ப்பூதம்	-	சவ்வீரம், பூரம், குதிரை பல் பாடாணம், கௌரி, கெந்தி
தீப் பூதம்	-	கௌரி, வீரம், தாளகம், தாரம், கெந்தி
காற்றுப் பூதம்	-	வெள்ளை, கௌரி, துத்தம், சரகண்டம், இரசம்
ஆகாயப் பூதம்	-	லிங்கம், அவுபல் பாடாணம் என்பனவாகும்.

பஞ்சபூதங்களும் உபரசங்களும்

மண்பூதம்	-	பூளாகம், இராசவர்த்தம், அப்பிரகம், ஊசிகாந்தம், சிலாசத்து
நீர்ப்பூதம்	-	நண்டு, நத்தை, சங்கு, முட்டை, பொற்கிளிஞ்சல்
தீப்பூதம்	-	வெள்ளைக்கல், இந்திரகோபப்பூச்சி, கழுதைவண்டு, நிமிளை, எலும்பு
காற்றுப்பூதம்	-	கல்மதம், கல்நார், அன்னபேதி, சாத்திரபேதி
ஆகாயப்பூதம்	-	சுக்கான்கல், வைகிரந்தம், சாலிக்கிராமம், ரசிதசிலை என்பனவாகும்.

பஞ்சபூதங்களும் மூலிகைகளும்

மண்பூதம்	-	புளியாரை, செம்பசளை
நீர்ப்பூதம்	-	பீனாரியிலை, துராஇலை
தீப்பூதம்	-	கற்றாழை, கரந்தை இலை
காற்றுப்பூதம்	-	கவுதும்பை
ஆகாயப்பூதம்	-	காஞ்சொறி, சங்கங்குப்பி

என மூலப் பொருள்களைப் பஞ்சபூத அடிப்படையில் வகுத்துள்ளதைக் காணமுடிகிறது.

ஆண், பெண் மருந்து மூலப் பொருள்கள்

மருந்து மூலப் பொருள்களை ஆண் மருந்து மூலப் பொருட்கள் என்றும், பெண் மருந்து மூலப் பொருள்கள் எனவும் இருவகையாகப் பகுத்துக் கூறுவர். ஆண் (விந்து) பொருள்களாகச் சூதம், சூடன், வெள்ளைப் பாடாணம், வீரபாடாணம், கடல்நுரை, கல்லுப்பு, எவாச்சாரம், வங்கம், பூரம், சிலாசத்து, கல்மதம் போன்றவைகளைக் குறிப்பிடுவர். அதேபோன்று பெண் (நாத) பொருள்களாகக் கெந்தி, பூநீர், நிமிளை, பூளாகம், திரிகுணசல், லிங்கம், இரும்பு, நாகம், செம்பு, காந்தம் போன்றவற்றைக் குறிப்பிடுவர்.

சுவை வழி மருந்து மூலப் பொருள்கள்

சித்தர்கள் சுவைவழியாகவும் மருந்து மூலப்பொருள்களைப் பற்றி அறிந்திருந்தனர். அவ்வகையில் உப்புச் சுவைப் பொருள்களாக வெடிஉப்பு, படிகாரம், சூடன், கடல்நுரை, சூதம், காந்தம், இரும்பு, அன்னபேதி, தொட்டி பாடாணம் ஆகியவற்றையும், புளிப்புச் சுவைப் பொருள்களாகப் படிகாரம், பழம்புளி, துளசி, கற்சுண்ணம், கெந்தி, காடி, எலியாமணக்கு, புளியரணை, அம்பர் போன்ற மூலப் பொருள்களையும் வகுத்துள்ளனர். இம்மூலப்

பொருள்களில் காரசாரப் பொருளைப் பற்றிக் குறிப்பிடும்போது, காரப் பொருளாக வெங்காரம், சீனிக்காரம், முத்துச்சிப்பி, நத்தை ஓடு ஆகியவற்றையும், சாரப் பொருள்களாக நவச்சாரம், யவச்சாரம், கம்பிச்சாரம், பூநீர் ஆகியவற்றையும் மருந்துப் பொருள்களில் வகுத்துள்ளதை அறிய முடிகின்றது.

மருந்து மூலப் பொருளும் – பகை, நட்புப் பொருளும்

மருந்து மூலப் பொருள் ஒவ்வொன்றிற்கும் பகை, நட்புப் பொருளை வகுத்துள்ளனர். அவ்வகையில் 'வெடிஉப்பு' எனும் மூலப் பொருளுக்கு நட்புப் பொருளாகச் சூடன், சவுட்டுப்பு, காரீயம், வெள்ளீயம், துரிசு, காந்தம், வெள்ளி, செம்பு, இரும்பு, மனோசிலை, தொட்டிபாடாணம், தீமுருகல், அண்டை ஓடு, கெந்தி, சிங்கி போன்ற பொருள்களையும், வெடி உப்பிற்குப் பகைப் பொருள்களாகத் தந்தம், சாரம், துத்தம், நாகம், லிங்கம், வீரம், காரம், கல்லுப்பு, இந்துப்பு, கடல்நுரை, நிமிளை, வெள்ளைப் பாடாணம் போன்றவற்றையும் வகுத்துள்ளதைக் காணமுடிகின்றது.

மருந்து மூலப் பொருள்களில் நச்சுத் தன்மை போக்குதல்

சித்த மருத்துவத்தில் மருந்து மூலப் பொருள்களில் உள்ள நச்சுத் தன்மைகளை மூலிகை நச்சு, உலோக நச்சு, பாடாண நச்சு, உப்பு நச்சு, உபரச நச்சு எனப் பகுத்துள்ளனர்.

மூலிகை நச்சு

சில மூலிகைத் தாவரங்களில் நச்சுத் தன்மைகளைக் கொண்டு இருப்பினும் அனைத்து மூலிகைத் தாவரங்களிலும் நச்சுத்தன்மை இல்லை என்றும் சித்தர்கள் வரையறுத்திருக்கின்றனர். இதனையே எஸ்.சோமசுந்தரம்

என்பார், “பொதுவாக ஒரு தாவரத்தின் அனைத்துப் பாகங்களும் நச்சுத் தன்மை உடையனவாக இருப்பதில்லை. சில தாவரங்களில் வேர்களும், சில தாவரங்களில் இலைகளும், சில தாவரங்களில் சுரக்கின்ற பாலும், சில தாவரங்ளில் கனிகளும், சில தாவரங்களில் விதைகளும் நச்சுத் தன்மையுடையனவாக இருக்கின்றன”[26] எனக் குறிப்பிடுகின்றார்.

நாபி

நாபி என்னும் மூலிகையில் நச்சு உள்ளது என்பதை அறிந்த சித்தர்கள் இச்செடியில் பயன்படும் பகுதி கிழங்காகும். (உலர்ந்த கிழங்கு). இது கொடிவகையைச் சார்ந்த மூலிகையாகும். இதன் நச்சு நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் தன்மையுடையதாகும்.

உலோக நச்சு

காரியம், வெள்ளீயம் போன்ற உலோகங்கள் நச்சுத் தன்மையுடையன. வாயில் களிம்பு, சுவை, எரிச்சல், தொண்டை, நாவறட்சி, குமட்டல், மிருதாகம், வாந்தி, இரத்த ஒழுக்கு, நீர்பேதி எனப் பலவாறு உலோக நச்சுத் தன்மையினை வகைப்படுத்தலாம்.

பாடாண நச்சு

வெள்ளைப் பாடாணத்தின் நச்சுத் தன்மை “உதடு முதல் ஆசானவாய் வரை எரிச்சல், உட்பகுதி சிவந்து வேக்காடு உண்டாகுதல், இரத்தவாந்தி நீர்த்தபேதி எரிச்சலுடன்”[27] என்று இதன் நச்சுத் தன்மையினை வகைப்படுத்திக் கூறுவர்.

உப்பு நச்சு

காய்ச்சுகின்ற உப்பானது சுவாச மண்டலத்தைச் செயலிழக்கச் செய்கிறது.

உபரச நச்சு

உபரச நச்சின் ஒரு வகையாக துருசு நச்சினைக் கூறுவர். இது உதடு முதல் ஆசனவாய் வரை வேக்காடு, எரிச்சலை உண்டாக்கும். வாந்தி, பேதி இவற்றுடன் இரத்தம் வெளிவருதல் போன்ற நச்சுத் தன்மைகளை உடையது என்றும் இதன் நச்சுத் தன்மையைக் குறிப்பிடுவர்.

மூலிகை, உலோக, பாடாண, உப்பு, உபரசங்களில் நச்சு

சித்த மருத்துவ மருந்துப் பொருள்களில் மூலிகை, உலோக, பாடாண, உப்பு, உபரசங்கள் கொண்டுள்ள நச்சுத் தன்மையினை உரிய முறையில் சுத்திகரிப்பு செய்து மருந்தாக்க முறைகளுக்கு உபயோகப்படுத்தியுள்ளனர் என்பதை,

“தாளக – பாடாணம் நாபியரிதார மனோசிலை சோபி
ஆளிரத கெந்தி, கோபி யெரியான சரக்கிவை பாடி
நஞ்சா மிவைகளை மருந்து – போல நாளு மருத்துவர் மருந்து”[28]

என்ற பாடல் வரிகளின் வாயிலாக அம்மருந்தின் இன்றியமையாமையை உணரலாம்.

மூலிகைகளில் நச்சு நீக்கும் முறைகள்

‘நாபி’ என்னும் மூலிகையில் கிழங்கு நச்சு நீக்குதல் முறையைப் பற்றி அறிய, நாபிக் கிழங்கினை வெள்ளாட்டுச் சிறுநீர் மற்றும் பசுங்கோமயத்தில் நன்கு வேக வைத்து எடுத்து உலர்த்திக் கொள்ள நாபிக் கிழங்கு கொண்டுள்ள நச்சு நீங்கி விடும் என்பதைச் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர்.

உலோகங்களில் நச்சு நீக்கும் முறைகள்

'வங்கம்' என்னும் உலோகத்தின் நச்சினை நீக்குதல் பொருட்டு, முதலில் ஒரு பாத்திரத்தில் வெள்ளாட்டுச் சிறுநீர்விட்டு அதில் பிரண்டை வேர்கல்கத்தை, நல்லெண்ணெய் ஆகியவற்றைக் கலந்து வங்கத்தை உருக்கி அந்தக் கலவையில் மூன்று முறை ஊற்றினால் வங்கம் கொண்ட நச்சு நீங்கும். பின்புச் சுத்திகரிப்புச் செய்து நச்சுத்தன்மை நீக்கப்பட்ட அந்த வங்கத்தைப் பற்பம், அண்ணம், செந்தூரம் போன்ற மருந்துகள் செய்யும் முறைகளில் உபயோகிக்கலாம்.

பாடாணங்களில் நச்சு நீக்கும் முறைகள்

பாடாணங்களில் வெள்ளைப் பாடாணத்தைச் சுத்திகரிக்கும் போது அல்லது அவற்றின் நச்சுத் தன்மையை நீக்கும்போது முதலில் அவுரிஇலைச் சாறு, வெள்ளை எருக்கன் இலைச்சாறு இவற்றைத் தனித்தனியாக வைத்துக் கொண்டு, ஓர் அகலில் வெள்ளைப் பாடாணத்தை வைத்து அடுப்பில் சிறு தீயாக எரிக்க வேண்டும். முதலில் அவுரிச்சாறு, பின் வெள்ளை எருக்கலைச் சாறு எனக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுண்ட சுண்ட ஊற்றி வரவேண்டும். ஒரு சாறுக்குச் சுமார் ஒன்பது மணிநேரம் தொடர்ந்து தீ எரித்தால் வெள்ளைப் பாடாணம் கொண்ட நச்சுத் தன்மை நீங்கிவிடும் என்பதையும் அறிய முடிகின்றது.

மருந்து செய்வதற்கான சூத்திரம்

சித்தர்கள் மருந்து தயாரித்தலுக்கென்று சில சூத்திரங்களை வகுத்துள்ளனர். இதன்வழி எந்த மூலப்பொருளைக் கொண்டு எந்த மருந்து செய்வதற்கான அடிப்படை செயல்களைச் செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

மூலப் பொருட்கள்		அடிப்படைச் செயல்கள்
"காரம் விட்டால்	-	உருக்குதல் (உருக்கினம்) போச்சு
வீரம் விட்டால்	-	நீற்றினம் (பற்பித்தல்) போச்சு
புடம் விட்டால்	-	சாரனை (வீரியம்) போச்சு
உப்பை விட்டால்	-	கட்டுப் (இறுக்கல்) போச்சு
இரசம் விட்டால்	-	வாதம் (பொன்செய்தல்) போச்சு
சாரம் விட்டால்	-	செயநீர் (அரைப்பு மருந்து நீர்) போச்சு
துருசு விட்டால்	-	குருவே (முதன்மை மருந்து) போச்சு
கெந்தி விட்டால்	-	வர்ணம் (நிறம்) போச்சு
சிராவணம் விட்டால்	-	சத்துப் (மூலப்பொருள்) போச்சு
ஊதல் விட்டால்	-	சுண்ணம் (உயர்ந்த மருந்து) போச்சு"[29]

என்ற சூத்திரத்தின் வழி அறியலாம்.

சூத்திரத்தின் அடிப்படைகள்

சித்த மருந்துகளைச் செய்வதற்குரிய சூத்திரத்தை வகுத்ததுடன் அவற்றின் அடிப்படைச் செயல்களையும் வகுத்துள்ளனர். அவையாவன, 1.ஏகமூலிகை பிரயோகம், 2. மாரணப் பிரயோகம், 3. திராவகப் பிரயோகம், 4. செயநீர் பிரயோகம், 5. முப்பு சுண்ணப் பிரயோகம் என்பனவாகும். இவை இங்கு விளக்கப்படுகின்றன.

ஏகமூலிகைப் பிரயோகம்

நச்சு நீக்கப்பட்டுள்ள மருந்து மூலப் பொருள்களின் மூலிகைகளைக் கொண்டு மருந்தாகச் செய்யும் முறையே ஏக மூலிகைப் பிரயோகம் எனப்படும்.

மாரணப் பிரயோகம்

மருந்து மூலப் பொருள்களில் வகுக்கப்பட்ட நட்பு, பகைப் பொருளைக் கொண்டு மருந்தாகச் செய்யும் முறை மாரணப் பிரயோகம் எனப்படும்.

திராவகப் பிரயோகம்

பஞ்சபூத அடிப்படையில் உப்புப் பொருள்களைக் கொண்டு முறைப்படி வடிநீராக வடித்துக் கொண்டும் சுத்தநீரைக் கொண்டும் பிறமருந்து மூலப்பொருள்களைக் கொண்டு மருந்தாகச் செய்தல் திராவகப் பிரயோகமாகும்.

செயநீர் பிரயோகம்

உப்புக்கள், உபசரங்கள், பாடாணங்கள் இவற்றை அளவுப்படி கலந்து வடிநீராகக் காய்ச்சிப் பெறப்படும் நீர் செயநீராகும். இந்நீரில் பாடாணங்கள், உபரசங்களை உயர்ந்தப் பற்பம் செய்வது முதல் கொடிய பிணியைப் போக்கும் மருந்துகளைச் செய்ய உரிய தன்மையுடையது செயநீர் பிரயோகம் எனப்படும்.

முப்புச் சுண்ணப் பிரயோகம்

மூன்றுவகை உப்புக்களை அளவுப்படி கூட்டி, திராவகம், செயநீர், காரம், சாரப் பொருள்களும், உபரசப் பொருள்களும், பாடாணங்களும் கூட்டிப் பல பக்குவ முறைகளில் செய்யப்படும். கடும் காரத்தன்மை கொண்ட சுண்ணம் ‘முப்பு’ எனப்படும். இம்முப்பைக் கொண்டு உலோகங்கள், பாடாணங்கள், உப்புக்கள், உபரசங்கள் இவற்றை உயர்ந்த மருந்தாக்கும் முறைகள் என வகுத்திருப்பது முப்புச் சுண்ணப் பிரயோகம் எனப்படும்.

மருந்துகள்

பிணியினைப் போக்கக் கூடியவை மருந்துகளாகும். இம்மருந்துகள் 1. அகமருந்துகள், 2.புறமருந்துகள் என இரண்டு வகைப்படும்.

அகமருந்துகளும் உட்பிரிவுகளும்

பிணியின் பொருட்டு உட்கொள்ளும் மருந்துகள் அகமருந்துகள் எனப்படும். அகமருந்தின் வகைகளை,

> "றெவருமகிழ் சித்தர்முப் பத்திரன் டாகமருள்
> திசைத்தவா யுள்ளனவரோ"[30]

என்று அகமருந்துகள் முப்பத்திரண்டு என வகுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் மருந்துகளின் ஆயுளையும் அவற்றை உபயோகிக்கும் முறைகளைப் பற்றியும் கூறியுள்ளனர். அகமருந்தினைப் பயன்படுத்தும் கால அளவுகள் பற்றி,

> "உள்மருள் தேசுரஞ் சாறுகுடி நீர்கற்க
> முட்களி யடையோர் சாமம்"[31]

எனும் பாடலின் வழி அறிய முடிகின்றது. அதாவது சுரசம், சாறு, குடிநீர், கற்கம், உட்களி, அடை இவை ஆறும் தயார் செய்த மூன்று மணிநேரத்திற்குள் உபயோகிக்க வேண்டும் என்பதைத் தெளிவுறுத்துகின்றது.

மூன்று மாதத்திற்குள் பயன்படுத்த வேண்டியவை

சூரணம், பிட்டு, வடகம், வெண்ணெய் இந்நான்கும் தயாரித்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் உபயோகிக்கலாம் எனவும் சித்தர்கள் அறிந்திருக்கின்றனர்.

ஆறுமாதத்துக்குள் பயன்படுத்த வேண்டியவை

மணப்பாகு, நெய், சுவைப்பு (இரசாயணம்), இளகம் (லேகியம்) இந் நான்கும் தயார் செய்த ஆறு மாதங்களுக்குள் உபயோகிக்க வேண்டும்.

ஓர் ஆண்டிற்குள் பயன்படுத்த வேண்டியவை

எண்ணெய், மாத்திரை, கடுகு, பக்குவம், தேன்ஊறல், தீநீர் இவை ஆறும் தயாரித்த ஓர் ஆண்டிற்குள் பயன்படுத்த வேண்டும்.

ஐந்தாண்டுக்குள் பயன்படுத்த வேண்டியவை

மெழுகு, குழம்பு இவை இரண்டும் தயாரித்ததிலிருந்து ஐந்தாண்டுக்குள் உபயோகப்படுத்த வேண்டும்.

இரசபதங்கம் - பத்தாண்டுக்குள் உபயோகப்படுத்த வேண்டும்.

செந்தூரம் - எழுபத்தைந்தாண்டுகள் உபயோகிக்கலாம்.

நீறு, கட்டு, உருக்கு, களங்கு இந்நான்கும் முந்நூறு ஆண்டுகள் வரையும் சுண்ணம், கற்பம், சத்து, குருகுளிகை இந்நான்கும் ஐந்நூறு ஆண்டுகள் வரையும் உபயோகிக்கலாம் என்பதிலிருந்து, சித்த மருந்துகளின் ஆயுளை முறைப்படுத்தி வகுத்துள்ளமையை அறிய முடிகின்றது.

புறமருந்துகளும் உட்பிரிவுகளும்

வெளியில் உபயோகப்படுத்தும் மருந்துகள் புறமருந்துகள் ஆகும். இப்புறமருந்துகளையும் மருந்துகள், மருத்துவ நுண்செயல்கள் என்று இரண்டாக வகுத்துள்ளனர். இவற்றுள் வெளியில் பயன்படுத்தும் மருந்துக்குரிய வாழ்நாளையும் வகுத்து அவற்றை முப்பத்திரண்டாக முறைப்படுத்தியுள்ளனர். இதை,

“மேலவற் றிற்பசை பீச்சுமை நசியமும்
மென்கலிக் கங்க நோராண்”[32]

எனும் பாடல் வரிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புற மருந்துகளான மை, கலிக்கம், நசியம், பசை, பீச்சு மருந்து இவ்வைந்தும் தயாரித்து ஓராண்டு வரையிலும் பயனுள்ளதாக இருக்கும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

புறமருந்தினைப் பயன்படுத்தும் கால அளவு

புற மருந்தினைப் பற்றியும் அவற்றைப் பயன்படுத்தும் கால அளவு மற்றும் மருந்தின் வீரியத் தன்மை பற்றியும் சித்தர்கள் நன்கறிந்திருந்தனர். நாசிகாபரணம் (மருந்து), நீர், வர்த்தி, பொடி என்ற நான்கும் தயாரித்த காலம் முதல் மூன்று மாதங்கள் வரை பயன்படுத்தலாம்.

களிம்பு, சீலை (காரத்துணி போன்றவை) என்ற இரண்டும் தயாரித்த காலம் முதல் ஆறு மாதங்கள் வரையிலும் பயன்படுத்தும் தன்மை கொண்டவைகளாகும்.

நுண்செயல்வழிச் சிகிச்சை

பற்று, ஒற்றடம், பூச்சு, வேது, பொட்டணம், புகை, காரம், களி ஆகிய எட்டும் தயாரித்த உடனே பயன்படுத்த வேண்டும். புறமருந்தின் நுண் சிகிச்சைகளாகக் கட்டுதல், தொக்கணம், பொடி திமிர்த்தல், ஊதல், சுட்டிகை, சலாகை, முறிச்சல், கீறல், அட்டைவிடல், அறுவை உறிஞ்சல், குருதி

வாங்கல், கொம்பு கட்டுதல் ஆகிய பதிமூன்றும் நுண்செயல்வழிச் சிகிச்சைகளாகும்.

மருந்து தயாரிக்கத் தேவையான பொருட்கள்

சித்த மருத்துவத்தில் மருந்துகளைத் தயாரிக்கச் சில முக்கியப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் கல்வம், கரண்டி அகல், குப்பி, குப்பி அடைப்பான், சலாகை, மண்சட்டிகள், மூசை, சீலை (மண்பட்டி), அம்மி, குழவி, உரல், உலக்கை, சில்லிடை, தைலந்துழாவும் கருவிகள், பிடிசீலை, பற்றகற்றி, வடிகட்டும் துணிவகைகள், உருக்குக் குகைகள், ஊதுகுழல், குறடு, பெரியபானை, பனை ஓலை, கத்தி, அரம், பிடிசாவி, உளி, சாணக்கல், துருத்தி போன்ற பொருள்களைப் பயன்படுத்தியதுடன். எரிபொருள்களாக விறகு, வரட்டி, சுண்ணாம்பு, கரி, மணல் போன்றவற்றையும் பயன்படுத்தியுள்ளதைச் சித்தர்களின் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. மேலும் கருவியின் வகைகளாக ‘‘அவி கருவி, தோலந்திரக் கருவி, தூபக்கக் கருவி, மெழுகுத் தைலக் கருவி, சுடர் தைலக் கருவி, குழித்தைலக் கருவி, செந்தூரக் கருவி, பதங்கக் கருவி, வாலுகா கருவி, திராவகக் கருவி, ஊது கருவி, பூதக் கருவி, பாடலக் கருவி போன்ற கருவிகளையும் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

மருந்து செய்வதற்கான தீ எரிப்பு முறைகள்

சித்த மருத்துவத்தில் மருந்து தயாரித்தலுக்குச் சரியான, முறையைப் பின்பற்றியுள்ளனர். அதாவது தீ எரிப்பில் சரியான முறையைப் (அளவு) பயன்படுத்தியுள்ளனர்.

‘‘விளக்கை யொத்திடு தீயது தீபமா மேவிக்’’[33]

எனும் போது தீபம் போன்ற தீயானது தீபாக்கினி என்றும் தாமரை போன்ற தீ கமலாக்கினி என்றும், வாழைப்பூ போன்ற தீ கதலியாக்கினி என்றும் முன் அளவுக்குமேல் தீ காடாக்கினி என்றும் கூறுவதிலிருந்து, தீ எரிப்பின் முக்கியத்துவத்தை உணரமுடிகிறது.

மருந்து தயாரித்தலில் தீ எரிப்பின் முறையினைப் பற்றி அறிந்திருந்தச் சித்தர்கள், மருந்துகளைச் செய்யும் காலங்களைத் தட்பவெட்ப நிலைகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மருந்தும் தயாரிப்பதற்கான உரிய மாதங்களைப் பற்றி அறிந்திருந்தனர். துருத்திக் கொண்டு செய்யும் மருந்துகளை ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களிலும், செயநீர், காரநீர் இவைகளைக் கொண்டு செய்யும் மருந்துகளைத் தை, மாசி, பங்குனி மாதங்களிலும், செந்தூரம் போன்ற மருந்துகளைச் சித்திரை, ஆவணி, புரட்டாசி, மார்கழி, மாசி ஆகிய மாதங்களிலும் தயார் செய்யவேண்டும் எனக் கூறுவதிலிருந்து, மருந்தின் தன்மை மற்றும் அவற்றின் குணங்களையும் அறிய முடிகின்றது. இவ்வாறாகக் குறிப்பிட்ட மாதங்களில் குறிப்பிட்ட மருந்துகளைச் செய்து முடித்த பின் அவற்றைத் தகுந்த பாத்திரங்களைக் கொண்டு பாதுகாக்க வேண்டும். இதை,

"தெங்கின் குடுக்கை திகிரிகந்தம் பாத்திரத்தார்" [34]

எனும் பாடல்வரியின் மூலம் தேங்காய் குடுவையில் மருந்தினைப் பாதுகாத்து வைத்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது. மேலும் மூங்கில் குழாய், தந்த பாத்திரம், வெண்கலம், இரும்புப் பாத்திரங்கள், மிருகக் கொம்புகள், மண் பாத்திரங்கள், பேய்ச் சுரக்குடுக்கைள், சுரக்குடுகை என்று மருந்தின் தன்மைக்கேற்பப் பாதுகாப்புப் பொருளைப் பயன்படுத்தியுள்ளனர்.

ஐம்பூதங்களின் அடிப்படையில் உணவு

உணவு முறையினை வகுத்தச் சித்தர்கள் சுவையினை ஐம்பூதங்களின் அடிப்படையிலும் அமைத்துள்ளனர். இதை,

> “மண்ணுடனே புனல்தீக்கால் முறையாகச் சேர்த்திட்டால் வருமாம் இனிப்புத்
> திண்ணமிலம் துவர்ப்பிரசம் சதாகதியோ டார்தீவின் திடமாமுறைப்பு
> எண்ணரிய கசப்புமுண்டாந் தண்ணீரில் கணலிணைப் பாலெழுமா முவர்ப்பு,
> உண்ணுரிய அறுசுவையின் பிறப்பிதெனுங் குருசித்த ருரைத்த மறையே”[35]

என்ற பாடலின் மூலம் மண்பூதத்துடன் நீர்ப்பூதம், நெருப்புப் பூதம், காற்றுப் பூதம் விகிதப்படி சேர்க்கப்பட்டால் அக்கலப்பானது முறையே இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என்னும் சுவைகளும், காற்றுப் பூதத்துடன் நெருப்புப் பூதமும் ஆகாயப் பூதமும் விகிதப்படி சேர்க்கப்பட்டால் கார்ப்பும், கைப்புச் சுவையும், நீர்பூதத்துடன் நெருப்புப்பூதம் விகிதப்படி சேர்க்கப்பட்டால் உப்பு சுவையுமாக ஐம்பூதங்களின் வழி ஆறு சுவைகளையும் ஒப்பிட்டுள்ளனர்.

அறுசுவைகளின் நற்சுவைகள்

சுவைகளை இனிப்பு, புளிப்பு, உப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு என ஆறாகப் பிரித்து, இச்சுவைகளின் தன்மைகளைக் கொண்டு அவற்றை நற்செயல், தீச்செயல் என இரண்டாகப் பகுத்துள்ளனர்.

1. இனிப்புச் சுவை

இனிப்புச் சுவையானது உடலுக்கு ஊட்டத்தையும், ஒளியையும் அளிப்பதுடன் இந்திரிய (விந்து) பலத்தையும் தருகிறது. மேலும் வாழ்நாள் பெருக்கத்தையும் முடிவளர்ச்சி, தொண்டைப் பிணிகளைப் போக்கவும், தோடங்களைத் தன்னிலைப்படுத்தவும் பெரிதும் பயனாக அமைகின்றது.

முலைப்பாலைப் பெருக்கவும் வயிற்றோட்ட பலகீனத்தைப் போக்கவும் சிறந்தது இனிப்புச் சுவையாகும்.

2. புளிப்புச் சுவை

செரிப்பழல், நெய்ப்புத் தன்மை, செரிக்கும் தன்மை, கண்களுக்குச் சுகம், இரத்த சயத்துக்குப் பலம், அரோசிகத்தைப் (சுவை வெறுப்பு) போக்குதல், பேதி உண்டாக்குதல் போன்றவற்றிற்குப் புளிப்புச் சுவை பயன்படுகிறது. கபம், இரத்தம், பித்தம் இவற்றின் நிலை அதிகரிப்பதற்கும், உள்ளடங்கிய வாயுவை வெளியேற்றவும் புளிப்புச் சுவை பயன்தருவதாக அமைகின்றது.

3. உப்புச்சுவை

உப்புச்சுவை, வறட்சி, மலச்சிக்கல், கபம், அவயச் சுருக்கம் இவைகளைப் போக்கும் தன்மை கொண்டது. நெய்ப்பு, வியர்வை, கூர்மை, சுவை, பேதி ஆகியவற்றை உண்டாக்கும் தன்மையும் உப்புச் சுவைக்கு உண்டு.

4. கைப்புச் சுவை

கைப்புச் சுவையானது புழுக்களைக் கொல்லும், நஞ்சு நீக்கும், வெப்பு, மூர்ச்சை ஏற்காமை, பித்தம், கபம் இவற்றின் தீக்குணங்களை நீக்கும், வாய்நீர் ஊறுதலைத் தடுக்கும், புத்திக்கூர்மை, உடல் இலேசத்துவம் ஆகிய தன்மையைப் பெறவும், தொண்டையையும் முலைப்பாலையும் சுத்திகரிப்புச் செய்யும் ஆற்றலையும் கைப்புச் சுவை பெற்றிருக்கின்றது.

5. கார்ப்புச் சுவை

கார்ப்புச் சுவை, தொண்டைப் பிணிகள், வீக்கத்துடன் கூடிய நமச்சல், அசீரணம், வயிற்றுப் பொறுமல், சோகை ஆகியவற்றைப் போக்கும்;

புண்களை ஆற்றும்; உடற்பசையையும், கொழுப்பையும் உடலில் கபத்தினால் உண்டாகும் துர்நீரையும் போக்கும். தீபனத்தையும், செரிமானத்தையும், நற்சுவை அறிதலையும் உண்டாக்கும். கபவழித் தீமையைப் போக்கும்; கெட்ட மலத்தைக் கழிக்கும் தன்மையும் கார்ப்புச் சுவைக்கு உண்டு.

6. துவர்ப்புச் சுவை

துவர்ப்புச் சுவை, பித்த, கப, தோடங்களைப் போக்கும்; உடலுக்கு வெப்பத்தை உண்டாக்கும்; குருதியைத் தூய்மை செய்யும்; புண்களை ஆற்றும்; கொழுப்பைக் குறைக்கும்; உறுப்புகளைச் சுருங்கச் செய்யும்; மலத்தை இறுக்கி வறட்டும்; தோலைப் பதமாக்கும் என்பன போன்ற செயல்களைச் செய்யும் ஆற்றல் துவர்ப்புச் சுவைக்கு உண்டு எனலாம்.

அறுசுவைகளின் தீச்செயல்கள்

அறுசுவைகளில் நல்ல செயல்கள் இவை என வகுத்தச் சித்தர்கள் அவற்றின் தீய செயல்களையும் முறையாக வகுத்துத் தந்துள்ளனர்.

1. இனிப்புச் சுவை

இனிப்புச் சுவை அதிகரிக்கும் போது கொழுப்பு, கபம், கபப் பிணி ஆகியவற்றைப் பெருக்கும். உடற்பெருக்கம், பசிமந்தம், பிரமேகம், புரை, கண்டமாலை போன்ற கொடியப் பிணிகளையும் உண்டாக்கும் தன்மை உடையது. மேலும் பல பிணிகளை உண்டாக்கும். பார்வையைக் குறைக்கும்; சிறுநீரகத்தைச் செயலிழக்கச் செய்யும்; மரணத்தை விரைவுபடுத்தும் ஆகிய தீயசெயல்களையும் இனிப்புச் சுவை தருகிறது.

2. புளிப்புச் சுவை

உடல் தளர்ச்சி, மங்கிய பார்வை, தலை சுற்றல், பாண்டு, சோகை, வெப்பு, நாவறட்சி, அக்கி, சொறி, கொப்புளம் இவைகளை உண்டாக்கும். இப்பிணிகளின் குணங்குறிகளை அதிகரிக்கச் செய்யும் தன்மையும் புளிப்புச் சுவைக்கு உண்டு.

3. உப்புச் சுவை

'உப்பில்லா பண்டம் குப்பையிலே' என்றாலும், உப்புச் சுவையானது தன்னிலையில் அதிகரிக்கும்போது நரை, திரை, முடிஉதிர்தல், நாவறட்சி, அக்கி, குட்டம், வாதரத்தம் போன்ற பிணிகளை உண்டாக்கும் தன்மை வாய்ந்தது. உடல் பலத்தைக் கெடுத்தும் உள்ளுறுப்புகளின் இயக்கத்தைக் கெடுத்தும் மரணத்தை விரைவில் ஏற்படுத்தும்.

4. கைப்புச் சுவை

மிக்க நாவறட்சி, சுக்கிலக்கேடு, மூர்ச்சை, வன்மைக் குறைவு, உறுப்புகளில் சோர்வு, நடுக்கம், இடுப்பு, முதுகு மற்றும் உடல் முழுவதும் வலியையும் உண்டாக்குவது கைப்புச் சுவையின் தீய விளைவாகும்.

5. துவர்ப்புச் சுவை

வயிற்றுப் பொருமல், மார்புநோய், வறட்சி, சோர்வு, ஆண்மைக் குறைவு, இரத்த நாளச் சுருக்கம், மலச்சிக்கல் ஆகிய பிணிகளை உண்டாக்கும். இவ்வாறு அறுசுவைகளின் தீயகுணங்களைச் சித்தர்கள் வகுத்துத் தந்துள்ளனர். அவ்வாறு அச்சுவைகள் அதிகரிக்காமல் தவிர்த்தால் வாழ்க்கை சிறக்கும் என நம்பினர்.

6. கார்ப்புச் சுவை

மிக்க நாவறட்சி, சுக்கிலக் கேடு, வன்மைக் குறைவு, மூர்ச்சை, உறுப்புகளுக்குச் சோர்வு, நடுக்கம், இடுப்பு, முதுகு போன்ற இடங்களில்

வலி, உள் உறுப்புகளில் வேக்காடு போன்றவை கார்ப்புச் சுவையால் உண்டாகும்.

ஐம்பூதங்களும் அறுசுவைகளின் தன்மையும்

ஒவ்வொரு பூதத்திற்கும் தனித்தன்மைகள் உள்ளதை அறுசுவைகளின் அடிப்படையில் பகுத்தறிந்துள்ளனர். இவை, “திண்மை, நொய்மை, இறுகல், நெகிழ்ச்சி, மந்தம், கூர்மை, மென்மை, வன்மை, தன்மை, வெம்மை, நிலைத்தல், இயக்கம், நொய்ப்பு, வறட்சி, நுண்மை, பருமை, கொழுமை, கரகரப்பு, தூய்மை, பிசுபிசுப்பு என இருபதுத் தன்மைகளை உடையது என்றும் இவற்றில் திண்மை, நொய்ப்பு, தன்மை, மென்மை, கூர்மை, வெம்மை, வறட்சி, நொய்மை என்ற எட்டுக் குணங்கள் பிற பன்னிரண்டு குணங்களின் தன்மையில் அடங்கும்”[36] என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐம்பூதங்களின் சேர்க்கையால் உண்டான எல்லாப் பொருள்களிலும் “சுவை, குணம், வீரியம், பிரிவு, தனிமாண்பு”[37] எனப் பகுத்துள்ளனர். இதனை, ஐம்பூதங்கள் கொண்ட எட்டுக் குணங்களையும் வீரியம், பிரிவு, தனி மாண்பு என்னும் மூன்று பிரிவுகளுக்குள் அடக்கிக் கூறுவர். மேலும் இச்செயல்கள் பூதாதி அடிப்படையில் காற்றுத் தனித்து வறட்சியுடனும், நெருப்புடன் கலத்தலில் வெம்மையாகவும் நீருடன் கலத்தலில் குளிர்ச்சியாகவும் இயங்குகிறது என்பதை அறிய முடிகின்றது.

மூன்று பிரிவுகளும் எட்டுக் குணங்களும்

வீரியம், பிரிவு, தனிமாண்பு என்னும் மூன்று பிரிவுகளுக்குள் திண்மை, நொய்ப்பு, தன்மை, மென்மை, கூர்மை, வெம்மை, வறட்சி, நொய்மை என்ற எட்டுக் குணங்களையும் அடக்கிக் கூறுவர்.

வீரியம்

வேகம், வெம்மை, குளிர்ச்சி ஆகியவை இதன் செயல்களாகும். வேகம் என்பது காற்றுப் பூதத்தாலும், வெம்மை என்பது நெருப்புப் பூதத்தாலும் குளிர்ச்சி என்பது நீர்ப்பூதத்தாலும் செயல்படுவதாகும்.

வெம்மை வேகம் அல்லது வெம்மை வீரியம்

வாதத்தைச் சமப்படுத்துதல், கபத்தை நீக்குதல், தலை சுற்றல், நாவறட்சி, உடல்வாட்டம், வியர்வை, ஒவ்வாமை, விரைந்து சீரணித்தல் ஆகிய செயல்பாடுகளை உடையது வெம்மை வேகமாகும்.

தன்மை வேகம் அல்லது குளிர் வீரியம்

இது மனக்களிப்பு, தம்பனம், ஆயுள்விருத்தி ஆகியவற்றை உண்டாக்கும். மிகு ரத்தம், பித்தம் ஆகியவற்றைப் போக்கும் தன்மையுடையது.

வீரியம் – காற்றின் தன்மை

பஞ்சபூதத்தில் ஒன்றான காற்று மூன்று தன்மைகளைக் கொண்டு பரவுவதை,

1. வெப்பவீரியம் – வெப்பத் தன்மையுடன் பரவுதல் – வெப்பக்காற்று
2. குளிர்ந்த வீரியம் – குளிர்ந்த தன்மையுடன் பரவுதல் – குளிர் காற்று
3. வறட்சி வீரியம் – வறட்சித் தன்மையுடன் பரவுதல் – வறண்ட காற்று

எனப் பகுத்து இத்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு சுவைகளில் (பரவும்) வீரியச் செயல் உள்ளதை அறிந்திருந்தனர்.

பிரிவு

உட்கொண்ட உணவுப் பொருள்கள் அறுசுவையாக இருந்தாலும், அவை சீரணிக்கப்பட்ட பின்னர் ஏற்படும் வேறுபாடே பிரிவு எனப்படும்.

அவை முறையே, இனிப்பு, உப்புச்சுவை - இனிப்புச் சுவையாகவும், புளிப்பு - புளிப்புச் சுவையாகவும், கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு - கார்ப்புச் சுவையாகவும் மாற்றமடைவதைப் ‘பிரிவு’ என அழைத்தனர். இதனை விபாகம், மாறுபாடு எனவும் கூறுவர்.

தனிமாண்பு

உட்கொண்ட உணவுகளின் சுவை, குணம், வீரியம், பிரிவு என்ற நான்கு தன்மைகளுக்குள் மாறுபட்ட செயலை உண்டாக்கிச் சிறந்த பயனை அளிப்பது தனிமாண்பு எனப்படும். இதனைப் பிரபாவம், தனிச் செயல் என்றும் கூறுவர்.

“கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு ஆகிய சுவைகள் வாதத்தை அதிகரிக்கும் சுவைகளாகவும், இனிப்பு, புளிப்பு, உப்பு ஆகியவை வாதத்தைச் சமப்படுத்தும் சுவைகளாகவும், கார்ப்பு, உப்பு, புளிப்பு ஆகியவை பித்தத்தை அதிகரிக்கும் சுவைகளாகவும், துவர்ப்பு, கைப்பு, இனிப்பு ஆகியவை பித்தத்தைச் சமப்படுத்தும் சுவைகளாகவும், இனிப்பு, புளிப்பு, உப்பு ஆகியவைக் கபத்தை அதிகரிக்கும் சுவைகளாகவும், கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு ஆகியவைக் கபத்தைச் சமப்படுத்தும் சுவைகளாகவும் கப பித்தத்தை அதிகரிக்கும் சுவையாக உப்பும், வாதப்பித்தத்தை அதிகரிக்கும் சுவையாகக் கார்ப்பும், கபப்பித்தத்தைப் போக்கும் சுவையாகத் துவர்ப்பும்”[38] என அறுசுவைகளின் மூலம் தோடங்கள் சமப்படுத்தப்படுவதையும் உணவுப் பொருள்கள் சுவை அடிப்படையில் உண்ணப்பட்டாலும் அவை செரிமானத்திற்குப் பின்னர் வீரியம், பிரிவு, தனிமாண்பு என்ற மூன்றின் அடிப்படையில் செயல்படுவதையும் அறிய முடிகின்றது.

உணவும் - பிணியும்

சித்த மருத்துவ உணவு முறைகளில் பிணியைப் போக்கும் உணவு, பிணியை ஏற்படுத்தும் அல்லது அதிகரிக்கும் உணவு என்றும் சித்தர்கள் இருவகையாகப் பிரித்தறிந்துள்ளனர். உணவுகளில் பொதுஉணவு, பிணிக்கால உணவு என்ற நோக்கில் குடிநீர் முதல் உணவுவரை அனைத்து உணவுப் பொருள்களையும் பகுத்துள்ளதைச் சித்த மருத்துவப் பாடல்களில் காணமுடிகின்றது.

நீரின் மருத்துவக் குணம்

நாம் அன்றாடம் குடிக்கும் நீரில் சில மருத்துவக் குணங்கள் அடங்கியிருக்கின்றன என்பதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். இதனை,

"ஆற்றுநீர் கபமறு மூற்றுநீர் கபமறும்
மாரிநீர் வளியறும் கூவனீ ரெரியறும்
சேற்றுநீர் மலபந்தம் தேற்றுநீர் பசிமந்தம்"[39]

எனும் பாடலில் நீரின் வகைகளையும் அவற்றின் மருத்துவக் குணங்களையும் பற்றி நாம் அறிய முடிகின்றது. அதாவது ஆற்று நீர் மற்றும் ஊற்று நீர் கபத்தைப் போக்கும் தன்மை கொண்டதாகும். மழைநீர் வாதத்தைப் போக்கும்; வெந்நீர் குளிர்ச்சியைப் போக்கும்; பழஞ்சோற்று (பழைய சோறு), நீர் பசியை உண்டாக்கும்; குளத்துநீர் இன்பம் தரும்; இளநீர் கபம் போக்கும்; கஞ்சிநீர் வாயுவைத் தூண்டும் பிணிவராது தடுக்கும்; கொள்ளுக் கஞ்சி நீர் - சீதக்கழிச்சலை உண்டாக்கும் காடி நீர் சுரத்தைத் தணிக்கும் போன்ற நீரின் மருத்துவக் குணம் பற்றியும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

“காய்ச்சி ஆறியநீர், பொற்கெண்டி, வெள்ளி கெண்டி, தாம்பிரம், பங்சலோகம், வெண்கலம் போன்ற உலோகப் பாத்திரங்களில் காய்ச்சி ஊற்றியக் குடிநீரின் குணங்களையும் வகுத்துள்ளனர்”[40] என்பதன் மூலம் காய்ச்சி ஆறவைத்த நீரின் குணங்களையும் சித்தர்கள் தெரிந்திருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

நீர் குடித்தலின் சிறப்பு

தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியச் சித்த மருத்துவம், காய்ச்சிய நீரை அருந்தும் வழிமுறைகளையும் வரையறுத்துக் கூறியுள்ளது. பிணியினால் பாதிக்கப்பட்டவர்கள் குளிர்ந்த நீரை அருந்துதல் கூடாது; உணவு உண்ணும் போது இடையிடையே நீர் அருந்துவதும் கூடாது; மாவுப்பண்டம் உண்டதும் வெந்நீர் அருந்த வேண்டும். உடல் பருத்தவர்கள் தேன் கலந்த நீரைக் குடிக்க வேண்டும் என்று யார் யார் எந்தெந்த நீரைக் குடிக்கலாம் என்று சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

உணவுகள்

உணவுப் பொருட்கள் என்பது உடல் தாதுக்களுக்குத் தேவையான சத்துக்களையும் உடல் இயக்கத்திற்குத் தேவையான சத்துக்களையும் அளிக்கும் பொருள்களாகும். உணவு வகைகளை வகைப்படுத்தும் போது,

> "கருணைக் குபம்வள்ளி வரன்முறை யாங்கிழங்கு
> காந்திமெய் யச்சஞ்சில்லி வேந்திசா கம்பறட்டை
> அரிசாக முதலாக இலைக்கறி பகர்வாழை
> அண்டுக் குடங்கந்தந் தண்டுகா தழுங்கூட்டே"[41]

என்ற பாடலின் மூலம் கருணைக் கிழங்கு, சேப்பந்தண்டு, வள்ளிக் கிழங்கு, குப்பை மேனி, அகத்தி, சிறுகீரை, வெந்தயக் கீரை, பறட்டைக் கீரை, கலவைக் கீரை ஆகியவை உடலுக்குச் சிறந்தவையாகும். இவற்றுடன் வாழைத்தண்டும் மிகவும் சிறந்தது என்றும் கூறியுள்ளனர். மேலும், கறிக்குணங்களாகச் சித்தர் கூறுவனவற்றை,

> "பொரிய லாற்பித்த மிரியலாமது
> பூசங்கதலி பீரம்பூசினி வழுதுனை
> கருணைபாக லவரை கொத்தவரை
> முருங்கையிலை முதலாக முள்ளங்கியும்"[42]

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது. அதாவது பூசனிக்காய், கருணைக் கிழங்கு, துவரை, பீர்க்கங்காய், புடலங்காய், கொள்ளு, கத்தரிக்காய், அவரைக்காய், கொத்தவரை, முருங்கைக்காய், முள்ளங்கி எனக் காய்கறி வகைகளையும் வகுத்துள்ளனர். இவையெல்லாம் உடல் நலத்திற்கு நன்மை தருபவை என்று எடுத்துரைத்துள்ளது இங்குச் சுட்டத்தக்கது.

காய்கறி வகைகளையும், கிழங்கு வகைகளையும் வகைப்படுத்திய சித்தர்கள் கீரைவகைகளையும் முறையாக வகைப்படுத்தியுள்ளனர். இதனை,

> "உண்பவர்கி ன்பமான கறிவகை யுவந்து கேண்மின்
> கண்டொளி பொண்ணால் சாணி கறிசிறு கீரையப்பை
> மண்பயில் நெடுஞ்சி கோவை மணலிவல் லாரை சீரம்
> தண்பயில் சுண்டை யோடு சர்க்கரை கொத்தமல்லி"[43]

என்ற பாடலின் வாயிலாக அறிய முடிகின்றது. அதாவது, பொன்னாங்கண்ணி, தூதுவளை, வேளைக்கீரை, சிறுகீரை, குப்பைமேனிக்கீரை, அகத்திக்கீரை, நெருஞ்சில்கீரை, வெந்தயக்கீரை, மணலிக்கீரை, வல்லாரைக்கீரை, மல்லிக்கீரை, தும்பைக்கீரை என ஒவ்வொரு கீரையும் ஒவ்வொரு மருத்துவக் குணம் கொண்டு விளங்குவதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

பொதுஉணவு வகைகள்

பொது உணவுகளில் மணத்தக்காளி, ஆதண்டை, பிரண்டை, சுண்டை, தூதுவளை, முள்ளி, நெல்லி, நாரத்தை, கண்டங்கத்திரி, அவரை, கோவை, அதலை, பாகற்காய், கடுக்காய், தான்றிக்காய், பூசுமஞ்சள், இஞ்சி, சிறுநாரத்தை, மிளகு, திப்பிலி ஆகியவற்றின் ஊறுகாய்களைப் பொது உணவின் வகையில் அடக்கிக் கூறியுள்ளனர்.

பொது உணவு வகைகளில் அரிசி வகைகளைப் பற்றியும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதாவது கார் அரிசி, இலுப்பைச் சம்பா, ஈக்குச் சம்பா, மணிச்சம்பா, புழுகுச் சம்பா, வளைதடிச் சம்பா, கோரைச் சம்பா, வரைச் சம்பா, குறுஞ்சம்பா, செஞ்சம்பா, சீரகச்சம்பா, கல்லுண்டைச் சம்பா, காளான்

சம்பா, குண்டுச் சம்பா, மூங்கிலரிசி, கோடைச்சம்பா, வரகு, தினை, சாமை, மிளகுச் சம்பா, அன்னமழகி என்றுப் பொது உணவில் அரிசி வகைகளைக் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

தோடமும் உணவுகளும்

வாதத் தோடம் கொண்டவர்கள் உணவுகளில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதாவது, அவர்களுக்கு ஏற்புடைய உணவு எது? என்பதை அறிந்து சில உணவு வகைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

> "செய்யகத்திரிக்காய் பாகல்சிறுவழு தலங்காய் நீற்று
> மொத்த நன்றாகும் வாத மேம்பாடு சரீரத் தோர்க்கே"[44]

அதாவது வாதத் தோடம் உள்ளவர்களுக்கு பிஞ்சுக் கத்தரிக்காய், பாகல், சிறு வழுதலங்காய், வெண்பூசனி போன்றவை ஏற்கக் கூடிய மருத்துவ உணவுப் பொருள்களாகும். இவை தவிரக் கீரை வகைகளில் நெருஞ்சில், கோவை, முக்கிரட்டை, அப்பைக் கோவை, வேலிப்பருத்தி, ஆரைக்கீரை, மனத்தக்காளி, பருப்புக் கீரை, முசுமுசுக்கை போன்ற கீரைவகைகளும் வற்றல் வகைகளில் பிரண்டை, சுண்டை, பேய்ப்புடல், நெல்லி, மணத்தக்காளி, தூதுவளை, கோவைக்காய் போன்ற வற்றல் வகைகளையும் வாதத் தோடம் உள்ளவர்களுக்குக் கொடுப்பது பயன் தருவதாகும்.

பித்தத் தோடம்

பித்தத் தோடம் உடையவர்களுக்கு ஏற்புடைய உணவு வகைகள் எவை எவை என்பதை,

> "சொல்லிய முருங்கைப் பிஞ்சு சூழ்ந்திரு மவரைப் பிஞ்சு

சொலத்தா முலர்த்திக் கறிகொள்ளச் சூழும் பித்தர்க் கின்பமாமே”[45]

எனும் பாடல் தெரிவிக்கின்றது. முருங்கை, அவரை, கத்திரி, புடலங்காய், வாழைக்காய் ஆகியவற்றின் பிஞ்சுகளையும், வாழைப்பூ, வாழைத்தண்டு, ஈறுள்ளி, வள்ளிக்கிழங்கு, சிறுகளா, பீர்க்கு, மாங்காய் போன்றவைகளையும் பயன்படுத்துவது பித்தத் தோடத்திற்கு நல்லது. மேலும் கீரை வகைகளைப் பயன்படுத்தும் போது, வல்லாரை, தூதுவளை, சுரைக்கீரை, பசலைக்கீரை, புளியாரை, மிளகு தக்காளி, அகத்தி, ஆவரை, புளிக்கீரை முதலியவற்றையும் இவை தவிர தாமரைக் கிழங்கையும், இஞ்சி, எலுமிச்சை, நெல்லி, கொளுஞ்சி, நாரத்தை, தூதுவளை ஆகியவற்றின் ஊறுகாய்களையும் பயன்படுத்துவது பித்தத்தோடத்தை நீக்கும் என்று அறிந்துள்ளனர்.

கபத்தோடம்

வாதம், பித்தம் போன்று கபத்தோடம் உள்ளவர்களும் உணவு வகைகளில் ஏற்பு வகைகளையே பயன்படுத்த வேண்டும். இதை,

“இன்பந்தருதற் கானகறியிசையுங் கபத்தோர்க் கியம்பிடுவன்
துன்பந்தீர்க்கு மத்திக்காய் சுரையின் பிஞ்சு மதன்றண்டும்
முன்பே சொன்ன விருபாகல் முதிரா மாவின் பிஞ்சுடனே
அன்பே செறியு மதிமுகத்தா யவரைப் பிஞ்சீ ருள்ளியுமே”[46]

என்ற பாடல் வரிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது அத்திக்காய், சுரைக்காய், கொம்புப் பாகற்காய், சிறுபாகற்காய், அவரைக்காய், ஆலங்காய், கத்தரிக்காய், முருங்கைக்காய் போன்ற காய்கறிகளையும் அத்தி, ஓமவள்ளி, சிறுகுருஞ்சா, மல்லி, சதகுப்பை, ஓமம், சுக்கு, கடுகு, துரா, தும்பை, வெந்தயம், நல்வேளை ஆகியவற்றின் சாறுகளையும்,

கீரைவகைகளில் முசுட்டை, வல்லாரை, முன்னை, முருங்கை, முளைக்கீரை, ஆரை, மணலி, அப்புக்கோவை போன்ற கீரைவகைகளையும் கொடுத்துவரக் கபதோடம் நீங்கும் வாய்ப்பு உண்டு. எனவே வாத, பித்த, கப எனும் மூன்று தோட உடலினருக்கு மேற்கூறிய உணவுகளைப் பொது உணவாகக் கொடுப்பது சிறந்த முறையாகும்.

பிணியாளர்களுக்கான உணவுகள்

பிணியாளர்களுக்கான உணவுகளைப் பிணிகளுக்கு ஏற்ற உணவுகள், பிணிகளுக்கு ஏற்காத உணவுகள் என்று வகைப்படுத்திச் சித்தர்கள் கூறியுள்ளனர். உடல் கொண்ட பிணிக் குணம் குறிகளை அதிகரிக்காத உணவாகவும்; அவற்றை நீக்கும் செயல்களுக்கு ஏற்ற உணவாகவும்; மருந்தின் செயலை ஊக்கப்படுத்தும் தன்மை கொண்ட உணவாகவும் உள்ளவற்றைப் பிணியாளர்களுக்கு ஏற்ற உணவு வகைகள் என்பர். பிணிகளையும் குணம், குறிகளையும் அதிகரிக்கச் செய்யும் உணவு முறை, மருந்தின் செயலை மந்தப்படுத்தும் தன்மை கொண்ட உணவு வகை; பிணியாளர்களுக்கு ஏற்றுக்கொள்ளாத உணவுவகை என்று வகைப்படுத்தியுள்ளதையும் அறிய முடிகின்றது.

பிணியாளர்களுக்கான ஏற்பு உணவுகள்

பிணியாளர்க்கென்று ஏற்புடைய சில உணவு வகைகளையும் சித்தர்கள் வகுத்துள்ளனர். இதை,

“காலுறு பிணியாளர்க்குப் பத்தியங் கழறக் கேளாய்
நீலுறு கடன்மச் சத்தி ணெய்த்திலி சுளுக்கி ளக்கன்
சீலுறு முரல்வி லாங்கு திரளிகட் டாமீன் வாளை
ஏலுறு மினவநன் றாகு மியம்புமா மிசத்தைக் கேளே ”[47]

எனும் பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன. நெத்திலி, சுறா, இளக்கன், முரல், விலாங்கு, திரளி, கட்டா மீன், வாளை போன்ற மீன்வகைகளையும், ஊர்க்குருவி, காடை, காட்டுக்கோழி, நாட்டுக்கோழி, கவுதாரி, உள்ளான் போன்ற இறைச்சி வகைகளையும், பொன்னாங்கண்ணி, நெருஞ்சி, பூலாங்கீரை, நாயுறுவிக்கீரை, பாவட்டைக்காய், சுண்டைக்காய், பூவன் பிஞ்சு, அத்திப் பிஞ்சு, முள்ளி, தூதுவளை, சாதிக்காய் பிஞ்சு, சாதி பத்திரி, இஞ்சி, நெல்லிக்காய், சிறுகீரை, சங்குத் தளிர், நாவல் போன்ற கீரை வகைகளையும் பிணியாளர்களுக்கு ஏற்புடைய உணவு வகைகளாகச் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிணியாளர்களுக்கான ஏற்கா உணவுகள்

பிணியாளர்களுக்கென்று ஏற்கும் உணவினை வகுத்தச் சித்தர்கள் அவர்களுக்கென்று ஏற்காத உணவு வகைகளையும் வகுத்துக் கூறியுள்ளனர்.

“வியனுறு மருந்துக் கெல்லாம் வேண்டாத பத்தியங்கேள
பயனுறு மவரை மொச்சை பருத்தபூ சனிக்காய் தும்பை
துயரறு கடுகி னோடு வெண்காயந்த துவரை தேங்காய்
தயிரிள நீர்பிட் டப்பஞ் சமைத்தகூழ் கனிவிலக்கே”[48]

என்பதில் அவரை, மொச்சை, சிவப்புப் பூசனி, கடுகு, வெங்காயம், மாங்காய், துவரை, தேங்காய், இளநீர், பிட்டு, அப்பம், கூழ், களி, தயிர், கோழி, பன்றி, நெய்மீன், வெள்ளரிக்காய், செம்மறி ஆட்டுக்கறி, எண்ணெய் வகைகள், மான், மாடு, கசப்பு, இனிப்பு, புளி, புகைப் பிடித்தல் என்பன போன்ற உணவு வகைகளைப் பிணியாளர்கள் ஏற்கக் கூடாது என்று வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

பிணியும் - பத்தியமும்

பிணிகளுக்குரிய உணவு வகைகளைக் கூறியதுடன் ஒவ்வொரு பிணிக்கும் பத்தியம் உள்ளது என்பதைப் பற்றி,

"கண்டதோர் கறிகாய் பால்நெய் கருத்தினி னுற்ற தெல்லாம்
கொண்டிற் குற்ற மென்று கூறினார் முனிவர் முன்னாள்
விண்டிடு மாவ ரங்காய் விளங்கிய முருங்கை யத்தி
பண்டுமுன் பழகு மோரும் பத்திய முரிய தாமே"[49]

என்று கூறப்பட்டுள்ளது. இறைச்சி, பால், நெய், சிவப்புப் பூசனி, கத்தரிக்காய் போன்ற ஏற்கா உணவுகளையும், அவரைக்காய், முருங்கை, அத்தி பழகியமோர் போன்ற ஏற்பு உணவுகளையும் வகுத்தறிந்துள்ளனர். இவ்வாறாக ஏற்பு உணவு, ஏற்கா உணவு என்று வகைப்படுத்தியதுடன், ஒவ்வொரு பிணிகளுக்குமான உணவுக் கட்டுப்பாட்டு முறைகளையும் சித்தர்கள் வகுத்துள்ளனர். இதனையே வள்ளுவரும்,

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு"[50]

என வலியுறுத்தியுள்ளார். அதே போன்று உணவு உண்ணும்போது அவற்றை அளவோடு உண்ண வேண்டும் என்பதனை,

"திருத்தமாய் போசனங்கள் செய்திடு முறையைக் கேளாய்
பரத்தவுந்தியினை நான்கு பங்கது வாகக் கண்டே"[51]

என வயிற்றை நான்கு பங்காகக் கணக்கிட்டு அதில் இருகூறு உணவும், ஒரு கூறு நீரும், மீதம் ஒரு கூறு காற்றுக்கான இடமும் விட்டு வயிற்றின் அளவு முறையை வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையும் சித்தர்கள் எடுத்துக் கூறி வழிகாட்டியுள்ளனர். மேலும்,

"திண்ண மிரண்டுள்ள சிக்க லடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காம லுண்ணுங்கா
நீர்கருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி"[52]

பிணி ஏற்படாதிருக்கச் செய்ய வேண்டியவற்றையும் சுட்டிக்காட்டியுள்ளனர். மலம், நீர் அடக்காமலும், காமத்தைப் பெருக்காமலும், தண்ணீரை நன்குக் கொதிக்க வைத்தும், தயிரை மோராக்கியும், நெய்யை உருக்கி, மீண்டும் உருக்கியும் உண்டால் பிணி ஏற்படாது என்றுச் சித்தர்கள் கூறியுள்ளனர்.

ஒரு மனிதன் ஆரோக்கியமான நல்வாழ்வு வாழ வேண்டும்போது கடைப்பிடிக்க வேண்டியவைகளையும் சித்தர்கள் கூறியுள்ளனர். இதை,

"பாலுண்போ மெண்ணெய் பெரின் வெண்ணீரிற் குளிப்போம்"[53]

எனும் படல் வரியால் அறியலாம். பாலுண்ண வேண்டும். எண்ணெய் தேய்த்துக் குளிக்க வெந்நீரைப் பயன்படுத்த வேண்டும்; பகல் புணர்ச்சிக் கூடாது; பகல் தூக்கம் கூடாது; வயதில் மூத்தமகளிரிடம் புணர்ச்சி கூடாது; மலம், சிறுநீர் ஆகியவற்றை அடக்கக் கூடாது; விந்தை வெளிவிடக் கூடாது; இடப்பக்கம் படுத்து உறங்கக் கூடாது; மாமிசம் தவிர்ப்பதும் நல்வாழ்விற்கு நல்லது; ஒருநாளில் இருமுறை உணவு உண்பதும், பசிக்கும் போது உண்பதும் நல்வாழ்விற்கான அடித்தளமாகும் என்று சித்தர்கள் கூறியுள்ளதை அறிய முடிகின்றது.

முடிபுகள்

- ✍ மருத்துவ மூலப் பொருள்களை உரிய காலத்தில் சேகரித்துப் பயன்படுத்துவதுடன் அம்மருந்துகளுக்கான உணவுக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றியும் சித்தர்கள் நன்கு அறிந்திருந்தனர். மருந்துகளால் மட்டுமின்றி உணவுகளின் அளவு மற்றும் அதன் தன்மை கூடுவதாலும் குறைவதாலும் பிணிகள் ஏற்படும் என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர் என்பதை இவர்களது பாடல்கள் காட்டுகின்றன.

- ✍ சித்த மருத்துவத்தில் சித்தர்கள் மருந்து எனும் பொருளை உடல் பிணி போக்கவும், மனப் பிணி போக்கவும், பிணிபடாது பாதுகாக்கவும், உடல் நலம் காக்கவும், மனநலம் காக்கவும் உரிய பொருளாக மருந்தை வகைப்படுத்தியுள்ளதைச் சித்தர்களின் பாடல்கள்வழி தெளிவாக உணர முடிகிறது.

- ✍ சித்தர்கள் அறிந்திருந்த மருந்துகளில் ஐம்பூதங்களின் தன்மைகளை உணர்ந்திருந்தனர். இதனை மண்பூதத் தன்மைகள், நீர்ப்பூதத் தன்மைகள், தீப்பூதத் தன்மைகள், காற்றுப் பூதத் தன்மைகள், ஆகாயப் பூதத் தன்மைகள் என ஐந்து வகைப்படுத்தியுள்ளனர். அவற்றைக் கொண்டு மருந்துப் பொருள்களை ஒன்றுடன் ஒன்று கலந்தால் உண்டாகும் இறுகல், நீர்த்தல், வெடித்தல், தீப்பற்றல், புதைந்து மறைதல் போன்ற செயல்பாடுகளையும் விளக்கியுள்ளனர்.

- ✍ மருந்தின் மூலப் பொருள்கள் ஒவ்வொன்றும் பொருள், பண்பு, செயல், பொதுத்தன்மை, தனித்தன்மை, இன்பம், துன்பம் என்னும்

ஏழு குணங்களைப் பெற்றிருக்கின்றன. அவற்றில் மூலிகைத் தாவரங்கள், தாதுப் பொருள்கள், சீவப் பொருள்கள் என்னும் மூன்று பிரிவுகளையும் அடக்கிக் கூறியுள்ளதையும் காணமுடிகின்றது.

- ✍ மூலிகைத் தாவரங்களின் குணங்கள் மற்றும் செயல்கள் அவற்றில் பூக்கும் தாவரங்கள், பூக்கா தாவரங்கள் எனவும் சித்தர்கள் இருவகைப்படுத்தியுள்ளனர். மூலிகைத் தாவர வேதிப்பொருள்களை உப்பு, இனிப்பு, நுரைப்பிகள், எண்ணெய், ரோசனங்கள், பிசின்கள், துவர்ப்பிகள் என வகைப்படுத்தியுள்ளதையும் இவ்ஆய்வு விளக்கியுள்ளது.

- ✍ சித்த மருத்துவத்தில் ஒவ்வொரு மூலிகைத் தாவரங்களிலும் உள்ள மருந்துக் குணம் கொண்ட பகுதிகளைக் கொண்டு மருந்து தயாரித்தது போல, உலோகங்களை, பாடாணங்களை மூலப் பொருள்களாகக் கொண்டும் மருந்துகளைச் சித்தர்கள் தயாரித்துள்ளனர். இம்மருந்துகளைக் கொண்டு பிணியினைப் போக்கியுள்ளனர் என்பதையும் அவர்களின் பாடல்கள் காட்டுகின்றன.

- ✍ சித்தர்கள் உலோகங்களின் மருத்துவக் குணம் பற்றி நன்கறிந்துள்ளனர். பாடாணங்களின் மருத்துவக் குணம் பற்றியும் இயற்கைப் பாடணங்கள், முப்பத்திரண்டும் செயற்கைப் பாடாணங்கள் முப்பத்திரண்டுமாக அறுபத்து நான்கு பாடாணங்களையும் மருத்துவப் பொருள்களாகச் சித்தர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

- ✍ சித்த மருத்துவ மூலப் பொருள்களில் உபரசமும் ஒன்றாகும். இதன்கீழ் நூற்றியிருபது பொருள்களை உள்ளடக்கியிருப்பினும்

வால்நண்டு, நத்தை, தவளை, கிளிஞ்சல், முத்துச்சிப்பி, ஆமை ஓடு, சங்கு, யானைத் தந்தம், மான்கொம்பு, கஸ்தூரி என்பன பொதுவானப் பொருள்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

- ✍ சித்த மருத்துவ மூலப் பொருட்களைப் பாடாணம், உப்பு, உபரசம் என்று சித்தர்கள் பிரித்துள்ளனர். இவை ஒன்றுடன் ஒன்று கலக்கும்போது உண்டாகும் செயல்களின் அடிப்படையில், ஐம்பூதங்களின்வழி ஆண் பொருள்களாகவும், பெண் பொருள்களாகவும் முறைப்படுத்தியுள்ளதையும் இவ்ஆய்வால் அறிய முடிகிறது.

- ✍ ஆண் (விந்து) மூலப் பொருள்களாகச் சூதம், சூடன், வெள்ளைப் பாடாணம், வீரப்பாடாணம், கடல்நுரை, கல்லுப்பு, நவாச்சாரம், வங்கம், பூரம், சிலாசத்து, கல்மதம் ஆகியவற்றையும் பெண் (நாத) மூலப் பொருள்களாகக் கெந்தி, பூநீர், நிமிளை, பூநாகம், திரிகுணசல், லிங்கம், இரும்பு, நாகம், செம்பு, காந்தம் ஆகியவற்றையும் சித்தர்கள் வகைப்படுத்திக் கூறியுள்ளனர்.

- ✍ சித்தர்கள் சுவை வழியாகவும் மருந்து மூலப் பொருள்களைப் பற்றி அறிந்திருந்தனர். இதனை உப்புச் சுவைப் பொருள்களாகவும், புளிப்புச் சுவைப் பொருள்களாகவும், காரப் பொருள்களாகவும், சாரப் பொருள்களாகவும் வகைப்படுத்தியுள்ளனர்.

- ✍ சித்த மருத்துவத்தில் மருந்து மூலப் பொருள்களில் உள்ள நச்சுத் தன்மைகளைப் போக்கி அவற்றை மருந்தாகச் சித்தர்கள் பயன்படுத்தினர். இப்பொருள்களில் உள்ள நச்சுத் தன்மைகளை

மூலிகை நச்சு, உலோக நச்சு, பாடாண நச்சு, உப்பு நச்சு, உபரச நச்சு எனப் பகுத்தறிந்துள்ளனர்.

✍ மருந்துப் பொருள்களில் மூலிகை, உலோக, பாடாண, உப்பு, உபரசங்கள் கொண்டுள்ள நச்சுத் தன்மையினை உரிய முறையில் சுத்திகரிப்புச் செய்து மருந்தாக்கும் முறைகளையும் சித்தர்கள் பயன்படுத்தியுள்ளனர். அத்துடன் மூலிகைகளில் நச்சு நீக்கும் முறைகள் பற்றியும், உலோகங்களில் நச்சு நீக்கும் முறைகள் பற்றியும், பாடாணங்களில் நச்சு நீக்கும் முறைகள் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

✍ மூலப் பொருள்களான காரம், வீரம், உப்பு, இரசம், சாரம், துருசு, கெந்தி ஆகியவற்றைக் கொண்டு எந்த மருந்தைச் செய்ய வேண்டும் என்பதற்கான சூத்திர முறைகளையும் சித்தர்கள் வகுத்துக் கையாண்டுள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. இச்சூத்திரங்களின் அடிப்படைகளாக ஏகமூலிகைப் பிரயோகம், மாரணப் பிரயோகம், திராவப் பிரயோகம், செயநீர் பிரயோகம், முப்பு, சுண்ணப் பிரயோகம் என்பதை இவற்றின் அடிப்படைச் செயலாகக் கருதியுள்ளனர்.

✍ பிணிகளுக்கு ஏற்ப உட்கொள்ளும் மருந்துகள் 'அகமருந்துகள்' எனப்படும். இம்மருந்துகளை பயன்படுத்தும் விதம் பற்றியும், அவற்றைப் பயன்படுத்தும் அளவு, துணை மருந்துகள், காலஅளவுகள் பற்றியும் சித்தர்கள் அறிந்திருந்தனர். வெளியில் உபயோகப்படுத்தும் மருந்துகளைப் 'புறமருந்துகள்' எனக் குறிப்பிட்டு,

அவற்றினை மருந்துகள், மருத்துவ நுண்செயல்கள் என இரண்டாகவும் பகுத்துள்ளனர். அவ்வாறு பகுத்து அவற்றைப் பயன்படுத்தும் காலஅளவு முறைகளையும் சித்தர்கள் தங்களின் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

- ✍ மருந்து தயாரிக்கத் தேவையான பொருள்கள் பற்றியும், அவற்றைத் தயாரிக்கும் முறைகள் பற்றியும் அறிந்து, மருந்தின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தி, குறிப்பிட்ட மாதங்களில் குறிப்பிட்ட மருந்துகளைச் செய்து முடித்த பின் அவற்றைத் தகுந்த பாத்திரங்களைக் கொண்டு பாதுகாத்து மருத்துவ முறைகளைக் கையாண்டுள்ளனர்.

- ✍ உணவு முறைகளைச் சுவையின் அடிப்படையில் இனிப்பு, புளிப்பு, உப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு என அறுசுவைகளின் தன்மைகளைக் கொண்டும், ஐம்பூதங்களின் அடிப்படையிலும் அவற்றை நற்செயல், தீச்செயல் என இரண்டாகப் பகுத்துள்ளனர். உணவுகளில் பொதுஉணவு, பிணிக்கால உணவு என்ற நோக்கில் குடிநீர் முதல் உணவு வரை அனைத்து உணவுப் பொருள்களையும் பகுத்துள்ளனர் என்பதையும் இவ்ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது.

- ✍ உடல் தாதுக்களுக்குத் தேவையான சத்துக்களையும் உடல் இயக்கத்திற்குத் தேவையான சத்துக்களையும் அளிப்பவை உணவுப் பொருள்களாகும். இவ்வுணவுகளில் பொது உணவுகள், பிணியாளருக்கான உணவுகள், பிணியாளர்கள் ஏற்கும் உணவுகள், ஏற்கா உணவுகள் என முறைப்படுத்தியும் சித்தர்கள் வகுத்துள்ளதை இவ்ஆய்வு எடுத்துரைத்துள்ளது.

அடிக்குறிப்புக்கள்

1. நற். பா.140.
2. கலித். பாலை, பா.31.
3. கலித். குறிஞ்சி. பா.8.
4. ஆசிரியர் பெயரில்லை, தேரையர் சேகரப்பா பாடல்கள், ப.50. (பா.எ.இ.).
5. சாமி. சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம், ப.40.
6. க.சு.உத்தமராயன், தோற்றகிரம ஆராய்ச்சியும் சித்தமருத்துவ வரலாறும், ப.242.
7. க.ச.முருகேச முதலியார், பொருட்பண்புநூல், (முதல்பாகம்), முதற்பதிப்புரை, (ப.எ.இ.).
8. கிருஷ்ணப்ப செட்டியார் (பதி.ஆ), பதார்த்த குணவைத்திய அகராதி, ப.114.
9. மேலது, ப.80.
10. எஸ்.சோமசுந்தரம், மருத்துவத் தாவரவியல், ப.9.
11. க.ரா.கிருட்டிணன், மருந்துகளும் பயனும், ப.14.
12. எம்.முருகேசன், மூலிகை வகுப்பு, ப.27.
13. ஆர்.தியாகராசன், குணபாடம் (தாதுசீவ வகுப்பு), ப.2. (பா.எ.இ.).
14. மேலது, ப.64.
15. மேலது, ப.160.
16. மேலது, ப.1.
17. மேலது, ப.10.
18. மேலது, ப.14.

19. மேலது, ப.14.

20. மேலது, ப.507.

21. மேலது, ப.371.

22. மு.சௌரிராசன், மச்சமுனிநாயனார் 800, பா.315.

23. ஆர்.எம்.கே.வேலுச்சாமி (தொ.ஆ.), சட்டமுனிவாத காவியம் 1000, பா.158.

24. ஆர்.தியாகராசன், குணபாடம் (தாது சீவ வகுப்பு), பா.333.

25. மேலது, பா.300.

26. எஸ்.சோமசுந்தரம், மு.நூ., ப.68.

27. ப.அ.முகமது இக்பால், சட்டம் சார்ந்த மருத்துவமும் நஞ்சு மருத்துவமும், ப.409.

28. ஆசிரியர் பெயரில்லை, தேரையர் சேகரப்பா, பா.49.

29. வி.பலராமய்யா, வாதவைத்தியத்துக்காதி, ப.86.

30. ஆர்.தியாகராசன், குணபாடம் (தாதுசீவ வகுப்பு), பா.43.

31. க.சு.உத்தமராயன், சித்த மருத்துவாங்கச் சுருக்கம், பா.480.

32. மேலது, பா.503.

33. மேலது, பா.533.

34. மேலது, பா.479.

35. இரா.தியாகராசன் மற்றும் பிறர், (பதி.ஆ.), மருத்துவத் தனிப்பாடல்கள், (பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நூல் வெளியீட்டுக் குழு), பா.139.

36. க.சு.உத்தமராயன், சித்த மருத்துவாங்க சுருக்கம், ப.16.

37. க.சு.உத்தமராயன், தோற்றக்கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும், ப.235.

38. மேலது, ப.241.

39. ஆர்.தியாகராசன், தேரையர் தரு. பா.2.

40. க.சு.உத்தமராயன், மு.நூ., பக்.250-251.

41. ஆர்.தியாகராசன், மு.நூ., பா.3.

42. மேலது, பா.4.

43. இரா.தியாகராசன், மற்றும் பிறர், அங்காதிபாதம், (பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நூல் வெளியீட்டுக் குழு), பா.178.

44. மேலது, பா.146.

45. மேலது, பா.151.

46. மேலது, பா.158.

47. மேலது, பா.324.

48. மேலது, பா.328.

49. இரா.தியாகராசன் மற்றும் பிறர், வர்மவிதி (பிளவை நிதானம்), (பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நூல் வெளியீட்டுக் குழு), பா.16.

50. குறள். 945.

51. இரா.தியாகராசன் மற்றும் பிறர், மு.நூ., பா.351.

52. முனுசாமி முதலியார் (தொ.ஆ), நோயில்லா வாழ்வு, பா.3.

53. மேலது, பா.1.

ஆய்வு முடிபுகள்

சித்தர்கள் எனப்படுவோர் ‘சித்து’ எனும் தத்துவத்தை அறிந்தவர்கள். மனிதனின் அடுத்த நிலையை அடையவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டவர்கள். சித்தர்கள் மேற்கொண்ட மருத்துவ முறைகள் ‘சித்த மருத்துவம்’ என்றழைக்கப்பட்டது. அவ்வகையில் சித்த மருத்துவத்தைப் பற்றிய பாடல்கள் அனைத்தும் தமிழில் பாடப்பட்டுள்ளதால் இம்மருத்துவத்தைத் ‘தமிழ் மருத்துவம்’ என அழைப்பர்.

உடல் பிணியையும் மனநோயையும் குணப்படுத்தி, உடலைப் பாதுகாக்கும் மருத்துவமுறையான ‘சித்த மருத்துவம்’ குறித்துத் தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இதனால், தொல்காப்பியர் காலத்திற்கும் முன்பே தமிழில் சித்த மருத்துவம் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருத முடிகின்றது.

சித்தர்கள் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்தவர்கள். இவர்கள் அறிஞர்கள், பேரறிவு படைத்தவர்கள்; நுண்ணறிவு படைத்தவர்கள் என்பதை அவர்களின் பாடல்கள் மெய்ப்பிக்கின்றன. பஞ்சபூதங்களின் கலப்பு விகிதாச்சார நிலைகள், செயல்பாடுகள் பற்றியும் சித்தர்கள் கூறியிருப்பதிலிருந்து, இவர்கள் ‘அறிவியலின் முன்னோடிகள்’ எனக் கூறலாம்.

பல்வேறு காலங்களில் பல்வேறு சித்தர்கள் பல்வேறு பாடல்களைப் பாடியிருப்பினும் சித்தர்களில் முதல் சித்தர் தட்சிணாமூர்த்தி ஆவார். அனைத்துச் சித்தர்களின் கருத்தும் ஆதிச் சித்தரின் கருத்தை ஒருமித்தே

உள்ளன. இவர்கள் கண்டறிந்த உண்மைகளையும் மருத்துவ அனுபவங்களையும் நுணுக்கங்களையும் மருந்து விபரங்களையும் தங்கள் சீடர்கள் மூலமாகக் கற்பித்தும், எழுதுவித்தும் பாடியிருப்பதிலிருந்து அறிய முடிகின்றது.

சித்தர்கள் இராமாயணம், பாரதம் ஆகிய .இதிகாச காலங்களிலும் சோழர்கள் மற்றும் பாண்டியர்களின் காலங்களிலும் வாழ்ந்துள்ளனர் என்பதைக் கொண்டு சித்தர்களின் வரலாற்றைக் கணக்கிட முடிகின்றது.

உலக மொழிகளில் மிகவும் தொன்மையானது தமிழ்மொழியாகும். அதுபோல் தமிழ் மருத்துவ முறையும் தொன்மையானதாகும். இத்தமிழ் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர்கள் ‘சித்தர்கள்’ என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் தோற்றுவித்தத் தமிழ் மருத்துவக்கலை, ‘சித்த மருத்துவம்’ என்று அழைக்கப்பட்டது.

சித்தர்கள் அழியாத உடலையும், உயிரையும் பெற்று மரணமில்லா வாழ்வு வாழக்கூடிய தன்மை பெற்றவர்களாக இருந்தனர். உயிர்ப் பொருளின் மூலத்தினை அறிந்தும், அதன் இயக்க முறைகளை அடிப்படையாகக் கொண்டும் தமிழில் சித்த மருத்துவ முறைகளைச் சித்தர்கள் வகுத்துள்ளனர் எனக் கருத முடிகின்றது.

உடல் பஞ்சபூதங்களின் கூறாக உள்ளது; உயிர்ப்பொருள் மூலமான ஆதிப்பொருளே பஞ்சபூதத் தன்மைகளை உள்ளடக்கியுள்ளது எனவும் உயிர்ப்பொருளின் ஆய்விற்கு உடல் முக்கியம் எனவும் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர். அத்துடன் உடலைப் பிணியிலிருந்து

பாதுகாக்கவேண்டும் என்று கூறி, உடலின் முக்கியத்துவத்தை மக்களுக்கு எடுத்துரைத்துள்ளனர்.

சித்தர்கள், மனிதர்களுக்கு ஏற்படும் பிணிகளை உடலில் ஏற்படும் ‘பிணிகள்’ என்றும், மனத்தில் ஏற்படும் துன்பங்களை ‘நோய்கள்’ என்றும் வகுத்துள்ளனர். அவற்றிற்கான மருத்துவ முறைகளான அக மருத்துவம், புற மருத்துவம் பற்றியும் பயிற்சி முறைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். இப்பயிற்சி முறைகளை உடல்வழிப் பயிற்சி முறைகள், மனவழிப் பயிற்சி முறைகள், உடல் மனவழிப் பயிற்சி முறைகள் எனப் பகுத்துப் பிணியாளர்களின் பிணிகளை, நோய்களைக் குணப்படுத்தியுள்ளனர்.

பிணி, தோடங்களால் மட்டுமின்றி புறக்காரணங்களினாலும், அகக்காரணங்களினாலும் ஏற்படுகிறது. பாரம்பரியத்தினாலும், உணவு முறைகளினாலும் உணவு கூடுவதினாலும் குறைவதினாலும் உணவுச் சரியாக உட்கொள்ளாமல் இருப்பதாலும் குறித்த காலத்தில் உணவு உண்ணாமலிருப்பதாலும் பிணிகள் ஏற்படுகின்றன. இதனால் உணவைச் சரியான முறையில் உண்ண வேண்டிய அவசியத்தைச் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

தமிழ் மருத்துவ முறையானச் சித்த மருத்துவம் திராவிடர் வாழ்ந்த லெமூரியர் காலத்திலும் இருந்துள்ளது. இதனால் சித்தர்கள் திராவிட காலத்திலும் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றிலும் சித்த மருத்துவமுறைகள் பற்றியச் செய்திகள் உள்ளன. இதனால் சங்க காலத்திலும் சித்தர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

சித்தர்கள் முக்காலங்களையும் அறியும் ஆற்றல் பெற்றிருந்தனர். கலைகள் அறுபத்து நான்கு என வகுத்தச் சித்தர்கள் அதற்கும் மேலாகச் சாகாக் கலையையும் அறிந்திருந்தனர் என்றும் நம்பப்படுகின்றது. பற்றற்று வாழும் தன்மையுடன் இப்பிரபஞ்ச உயிர்ப் பொருள் மூலத்தைக் குருவாகக் கொண்டும் இவர்கள் வாழ்ந்துள்ளனர்.

சித்தர்கள் காற்றில் உலாவவும் நீரில் மிதக்கவும் நெருப்பில் குளிக்கவும் எதையும் ஆக்கவும் அழிக்கவுமான தன்மையைப் பெற்றிருந்தனர் என்பதை அவர்களின் பாடல்கள் காட்டுகின்றன. இதனால், தெளிந்த மனது, தெளிந்த அறிவு, பிரபஞ்ச ஆற்றலை இயக்கும் திறமை ஆகியவற்றையும் கொண்டிருந்தனர் என்பதைச் சித்தர்களின் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

நுண்மை, மிகுபருமை, மென்மை, விரும்பியனஎய்தல், நிறைவுண்மை, ஆட்சியனாதல், கவர்ச்சி, விண்தன்மை என்னும் எண்வகைச் சித்திகளான ‘அட்டமா சித்திகளை‘ப் பற்றிச் சித்தர்கள் அறிந்திருந்தனர். இதனால், அவர்கள் உடல்வழிச் சித்துக்களாகவும், மனவழிச் சித்துக்களாகவும் வாழ்ந்து வந்தனர் என அறிய முடிகின்றது.

சித்தர்கள் அறிவுவழி மனப்பயிற்சியும் உடல் வழிப் பயிற்சியும் கொண்டு உயிர்ப் பொருளின் மூலத்தைப் பற்றி நன்கு அறிந்திருந்தனர். பிரபஞ்சத்தை அறிதல், சித்து நிலை அடைதல், மன ஒருமைப் பாட்டை ஏற்படுத்துதல், மனவழிச் சித்துக்களில் வெற்றி பெறுதல் ஆகியவை சித்தர்களின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தன.

பிறஉயிர்களிடத்தில் அன்பு செய்தல் வேண்டும் என்று கூறியச் சித்தர்கள், உடலில் பிணியைத் தோற்றுவிக்கும் உணவுகளில் மிகவும் முக்கியமானது புலால் உண்ணுதலாகும். அதனால் புலால் உண்ண வேண்டாம் என்று அறிவுறுத்தியதுடன், அவர்களைக் ‘கீழோர்’ எனவும் சித்தர்கள் குறிப்பிட்டனர். யாருக்கும் பாதகமானச் செயல்களைச் செய்யக்கூடாது; பொய் மற்றும் களவுகளில் ஈடுபடுதல் கூடாது என்று சித்தர்கள் அறக்கருத்துக்களையும் வலியுறுத்தியுள்ளதை அறியமுடிகின்றது.

உயிர்ப் பொருளின் மூலத்தை ஆதிவத்து, பராபரம், பரம்பொருள், ஆதிநாதாக்கள், ஆதிபகவான், முச்சுடர், ஆதி என்று பல பெயர்களில் அழைத்தாலும் ‘ஆதி’ என்று பொதுப் பெயரிட்டு அழைத்து வந்துள்ளமையைச் சித்தர்களின் பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. ஆதியே இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ளது; ஓர் ஆதியே பல ஆதிகளாகப் பெருகி வருகிறது எனச் சித்தர்கள் நம்பினர்.

ஆதியின் தோற்றச் செயல்களான படைத்தல், அளிப்பு, காத்தல், அழித்தல் ஆகியச் செயல்களையும் மற்றும் உணரும் செயல்களான அசைதல், ஓசை, இணைதல், பிரிதல் ஆகிய செயல்களையும் கொண்டு எட்டுச் செயல்களைச் செய்யக் கூடியது ஆதி என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

ஒரு பொருளின் வெளித்தோற்றம், உள்தோற்றம், பஞ்சபூதங்களான வெளி என்ற ஆகாயம், கால் என்ற காற்று, கனல் என்ற நெருப்பு, அப்பு என்ற நீர், மண் என்ற உருவம் ஆகியவற்றை ஆதித் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

பிரபஞ்சத்தில் படைக்கப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தும் ஆதியான பஞ்சபூதங்களின் அடிப்படையில் படைக்கப்பட்டது என்பதை உணர்ந்திருந்தச் சித்தர்கள், உடலையும் மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியப் பஞ்ச பூதக் கூறுகளாகவும் வகுத்துள்ளனர். உடலின் முடி, எலும்பு, தோல், நரம்பு ஆகியவற்றை மண்பூதத்தின் கூறு என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதுபோன்று உடலை இதர நான்கு பூதங்களின் அடிப்படையிலும் வகுத்துள்ளனர்.

பஞ்ச பூதங்களுள் இயக்கு பூதங்கள் காற்று, தீ, நீர் எனவும், இயங்கு பூதங்கள் ஆகாயம், மண் எனப் பிரித்து, இவையிரண்டும் தன்னளவில் கூடினாலும் குறைந்தாலும் பிணி, நோய், ஊனம் போன்ற குறைபாடுகள் ஏற்படுவதையும் சித்தர்கள் பகுத்தாராய்ந்துள்ளனர்.

பெண்களுக்கானச் சித்தமருத்துவ முறைகளில் சித்தர்கள் மிகவும் சிறப்புப் பெற்றிருந்தனர். இம்மருத்துவ முறையில் ஆழ்ந்த அறிவு படைத்தவர்களாகவும் விளங்கினர். பெண்களின் கருத்தரிப்பு உண்மையா? பொய்யா? என்பதையும் கருவில் உள்ள சிசுவானது ஆணா, பெண்ணா என்பதையும் நாடித் துடிப்பின் வாயிலாக அறிந்து கூறினர்.

தந்தையின் சுவாசத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு, அக்குழந்தை எம்மாதிரியான உடல்நிலையில் பிறக்கும் என்பதைத் தெளிவாகச் சித்தர்கள் அறிந்திருந்தனர். கரு உருவாகும் புணர்ச்சிக் காலத்தில் தந்தையின் உடலில் உட்செல்லும் சுவாசம் குறையும்போது உடல் குட்டையாகவும் சுவாசம் கூடும்போது கூனாகவும் சுவாசம் இளைக்கும்போது முடனாகவும் குழந்தை பிறக்கும் என்றும்

அறிந்திருந்தனர். தாய், தந்தையின் தோடஅளவைப் பொருத்து சிசுவின் உடல் தோடம் அமையும் என்பதையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

கரு வளர்ந்து வரும் காலத்தில் தாயின் உடற் கழிவுகள் வெளியேறாவிட்டால் சிசுவிற்கு ஊனம், புத்தி மந்தம் ஏற்படும். கருஉருவாகிற, கருவளருகிறக் காலத்தில் உண்டாகும் குறைபாடுகளையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

ஒரு பெண்ணிற்கு உண்டாகும் கரு சினைப்பட்டுப் பத்துமாத கால வளர்ச்சியின் போது அது பெரும் மாற்றம்; அதன் துன்பம்; ஒவ்வொரு மாதத்திலும் அக்கரு பெரும் வளர்ச்சி ஆகியன பற்றியும் அவற்றிற்கான மருத்துவ முறைகளையும் கண்டறிந்து சித்தர்கள் கூறியுள்ளனர் என்பதை அவர்களின் பாடல்கள் வழி அறிய முடிகின்றது.

கருவுற்ற பெண்ணின் உடலில் தோன்றும் மாற்றங்கள்; தின்பண்டங்களில் ஏற்படும் விருப்பம்; கருவுற்ற காலத்தில் உமிழ்நீர் பெருகுதல், மார்புகள் விம்மி வலிப்பது, வயிறு கொஞ்சம் கொஞ்சமாகப் பெருப்பது என்று கருவுற்ற பெண்ணுக்கு ஏற்படும் உடல் மாற்றங்களை நன்குச் சித்தர்கள் அறிந்திருந்தனர். கருவுற்ற காலங்களில் பெண்கள் சில ஆகாத உணவு வகைகளை உண்பதால் அவர்களுக்கு ஏற்படும் 'கர்ப்பச் சன்னி' எனப்படும் பிணி பற்றியும் எடுத்துரைத்துள்ளனர். அத்துடன் அதைப் போக்கும் மருத்துவ முறைகளையும் நன்கறிந்துள்ளனர்.

பெண்களின் பேறுகால வேதனை மிகவும் கடினமானதாகும். பேறுகாலத்தில் சில பெண்கள் இறந்து போகவும் கூடும். அதனை பிரசவ வாயு, பிரசூத வாயு, இடுப்பு வலி எனவும் பெயரிட்டு அழைத்தனர். பிரசவக் காலத்தில் தனக்குப் பிறக்கும் குழந்தை நன்றாகவும்

குறைவின்றியும் பிறக்க வேண்டும் என்று மனத்தில் குடியிருக்கும் இறைவனை வேண்டுவதாகவும் சித்தர்களின் பாடல்கள் காட்டுகின்றன.

பிரசவத்தில் கிரமப் பிரசவம், வேதனைப் பிரசவம், கிரமாதீதப் பிரசவம், விபரீதப் பிரசவம் என்று நான்கு முறைகள் உள்ளதைச் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பிரசவமுறை ஒவ்வொன்றும் எதன் அடிப்படையில் நிகழும் என்பதையும், அவற்றிற்குரிய மருத்துவ முறைகளையும் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

உடலில் உள்ள உறுப்புகளின் தன்மைகளைப் பொறுத்துப் பிணிகள் ஏற்பட வாய்ப்புண்டு என்பதையும் சித்தர்கள் கூறியுள்ளனர். இந்திரிய நரம்புகள், சலன நரம்புகள், ஒற்றுணர்வு நரம்புகள் எனும் மூன்று நரம்புகளில் ஏற்படும் பாதிப்புகளையும் பிணிகளையும் சித்தர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கருவில் குழந்தை உருவாகியது முதல் பிணிக்கு ஆட்படுகிறது. குழந்தைப் பிறந்த பின்பு சில பிணிக்கு ஆட்படுவதுண்டு. இத்தகைய குழந்தைகளின் பிணிகளுக்கான மருத்துவ முறைகளைப் ‘பாலவாகடம்’ அல்லது ‘குழந்தை வைத்தியம்’ எனப் பெயரிட்டுச் சித்தர்கள் அழைத்திருப்பதை அறிய முடிகின்றது.

மாந்தப்பிணி, கணப்பிணி, கரப்பான்பிணி, அக்காரப்பிணி, சுரப்பிணி, கழிச்சல்பிணி, வலிப்புப்பிணி, ஊதல் பிணி, பாண்டுப்பிணி, காமாலைப்பிணி, மூலப்பிணி போன்றவை குழந்தைகளுக்கு ஏற்படும் பிணிகள் எனச் சித்தர்கள், குறிப்பிட்டு, அவற்றிற்கான மருத்துவமுறைகளையும் எடுத்துரைத்துள்ளனர்.

ருதுப்பிணி, சூதகவலி, யோனிரோகம், கருப்பையில் ஏற்படும் பிணிகள், மார்பகங்களில் ஏற்படும் பிணிகள் என்று பெண்களுக்கு ஏற்படும் பிணிகள் பற்றிச் சித்தர்கள் தங்களின் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். இப்பிணிகள் எந்தெந்தக் காலங்களில் பருவங்களில் ஏற்படுகின்றன என்பதையும் அவற்றைப் போக்குவதற்கான மருத்துவ முறைகளையும் சித்தர்கள் கையாண்டுள்ளனர்.

மனித உடல் இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, மச்சை, எலும்பு, விந்து அல்லது சுரோணிதம் ஆகிய ஏழு தாதுக்களாலானது. இத்தாதுக்களில் பலகீனம் ஏற்படும்போது பல்வேறு வகையான பிணிகள் ஏற்படுகின்றன. அவற்றை உடல்வழித் தாது பலகீனம், மனவழித்தாது பலகீனம் என இரண்டு முறைகளில் பகுத்துக்காட்டியுள்ளனர்.

உடல் உறுப்புகளில் பிணிகள் உண்டாவதன் அடிப்படையில் தோடங்களில் பிறழ்தல் ஏற்பட்டுத் தாதுக்களில் பலகீனம் ஏற்படுகிறது. இதனால் ஈரல் பிணிகள், இதயப் பிணிகள், சிறுநீரகப் பிணிகள், மூளைப் பிணிகள், தண்டுவடப் பிணிகள் உண்டாகின்றன என்பதையும் சித்தர்கள் தங்களின் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

உளநோய் என்பது மனத்தில் உண்டாகும் எண்ணச் சிதறல்களாகும். மனஅழுத்தம், பைத்தியம் போன்ற நோய்களை உளநோய், அல்லது மனநோய் எனக் கூறுவர். இதனைக் ‘கிரிசை நோய்’ என்று சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். இக்கிரிசை நோயினைப் பதினெட்டு வகையாகவும் பிரித்துக் கூறியுள்ளனர்.

கண்களில் தொண்ணூற்றாறு வகையான பிணிகள் ஏற்படுவதைச் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எலும்புகளும் நரம்புகளும் அடிபடுவதாலோ, தாக்கப்படுவதாலோ, விபத்துகளினாலோ பாதிக்கப்பட்டு, எலும்புகளில் ஒடிவு மற்றும் முறிவுகள் ஏற்படுகின்றன. நரம்புகளிலும் பல பிணிகள் ஏற்படுகின்றன என்பதைச் சித்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனிதர்களுக்கு ஏற்படும் பிணிகளைத் தோற்றம், குணம், குறிகளின் அடிப்படையிலும், பிணிகளின் வகைகளைப் பரம்பரைப் பிணிகள், தோடவழிப் பிணிகள் அல்லது அகக்காரணப்பிணிகள், புறக்காரணப் பிணிகள் என மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். இப்பிணிகளுக்குத் தனித்தனியே மருத்துவ முறைகளைக் கடைப்பிடித்துப் பிணியாளர்களைக் குணப்படுத்தியதுடன் சித்தமருத்துவ வளர்ச்சிக்கும் உதவியுள்ளனர்.

வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று தோடங்களும் தன்னளவில் கூடிக் குறையும்போது ஏற்படும் பிணிகள் பற்றியும் அப்பிணிகள் மனித உடலில் உற்பத்தியாகும் இடங்கள் பற்றியும் சித்தர்கள் தங்களின் பாடல்களில் சுட்டிக்காட்டியுள்ளனர். இப்பிணிகளைப் போக்குவதற்குத் தகுந்த மருந்துகளை அளவுப்படி பிணயாளிக்குக் கொடுத்து மருத்துவம் செய்துள்ளனர் என்பதையும் அவர்களின் பாடல்கள்வழி நாமறிய முடிகின்றது.

தோடங்கள் தன்னளவில் மாறுபடும்போது அத்தோடங்களைச் சமப்படுத்தவும் உடல் கழிவுகளை வெளியேற்றவும் உடல் இயற்கையாகவே சக்தியைக் கொண்டுள்ளது. இத்தகையச் செயல்களைச் சித்தர்கள் ‘வேகங்கள்’ எனக் குறிப்பிட்டனர். இவ்வேகங்களைப் பதினான்கு வகைகளாக இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கணவன் கொண்ட பிணியானது புணர்ச்சிவழி மனைவிக்கு உண்டாவதையும் அப்புணர்ச்சியில் கருக்கொள்ளும்போது அக்கருவில் வளரும் சிசுவிற்கும் அப்பிணி உண்டாகும் என்பதைச் சித்தர்கள் 'பரம்பரைப் பிணிகள்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களின் அடிப்படையிலும் பிணிகள் தோன்றுவதைச் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர். இப்பிணிகள் எத்தோடங்களின் அடிப்படையில் தோன்றுகின்றன? அவற்றிற்கான மருத்துவமுறைகள் என்ன என்பதையும் சித்தர்கள் தங்களின் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

உண்ணும் உணவு மாறுபடுவதாலும், காலம் கடந்து உண்பதாலும் தகாத உணவு முறைகளாலும் தன்னளவில் உள்ள வாத, பித்த, கப அளவுகள் மாறுபடுகின்றன. இதனால் தன்னளவில் கூடி, குறைந்த தோடங்கள் பல்வேறு பிணிகளை ஏற்படுத்துகின்றன.

ஐம்புலன்களையும், கழிவுகளையும் சோதனை செய்து எவ்வகையான பிணி உடலில் ஏற்பட்டுள்ளது என்பதை அறியும் முறை சித்த மருத்துவத்தில் உள்ளது. முத்தோடங்கள் கலந்தும், மிகுந்தும், குறைந்தும் செயல்படுவதால் உடலில் பல பிணிகள் உண்டாகின்றன. அப்பிணிகள் எவ்வாறு உண்டாகின்றன என்பதை அறியும் முறைகளையும் சித்தர்கள் தெரிந்திருந்தனர்.

சித்தர்கள் நாடி பார்ப்பதைக் கைவந்த கலையாகக் கொண்டுள்ளனர். நாடித் துடிப்புப் பார்க்க வேண்டிய முறை, ஆண், பெண்களுக்கான நாடித் துடிப்பின் தன்மை ஆகியன பற்றிச் சித்தர்கள் அந்தக்காலத்திலேயே மிகத்

தெளிவாக அறிந்திருந்தனர் என்பதை அவர்களின் பாடல்கள் காட்டுகின்றன.

நாடித் துடிப்பினை உணர்தலில் வாதம் ஒரு பங்கும், பித்தம் அரைப்பங்கும், கபம் கால்ப்பங்கும் என மாத்திரை அளவுகளால் உணரப்பட்டால், அந்த அளவை ஆரோக்கியமான உடலின் நாடித்துடிப்பின் அளவாகச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சித்த மருத்துவத்தில் மிகவும் சிறப்பான மருத்துவம் ‘வர்ம மருத்துவம்’ என்பதாகும். இம்மருத்துவ முறை சித்தர்களிடத்தில் எத்தகையச் சிறப்புப் பெற்றிருந்தது என்பது பற்றியும் வர்மப் பிணியினை எவ்வாறு அறியலாம் என்பது பற்றியும் அதற்கான மருத்துவ முறைகளையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

வர்மப் பிணியைப் போக்குவதற்கான மருத்துவ முறைகளையும் அப்பிணியின் வகை தொகைகளையும் கண்டறிந்துள்ள சித்தர்கள், உடலில் வர்மத் தலங்கள் நூற்றியெட்டு உள்ளன என்பதையும் அறிந்திருந்தனர். இவ்வர்மப் பிணியினைப் படுவர்மம், தொடுவர்மம் என இரண்டு வகைகளாகப் பகுத்துள்ளனர். படுவர்மத்தை பன்னிரண்டு வகையாகவும், தொடுவர்மத்தைத் தொண்ணூற்றாறு வகையாகவும் பிரித்துக் கூறியுள்ளனர்.

பிணியின் தொகுப்பினைச் சித்தர்கள் சுமார் 4448 என வகுத்துக் காட்டியுள்ளனர். இப்பிணிகளைத் தீரும் பிணிகள், தீராப் பிணிகள் என இரண்டாகப் பிரித்து, அவற்றிற்கான சிகிச்சை முறைகளையும் கூறியுள்ளனர். இச்சிகிச்சை முறைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய உணவுக் கட்டுப்பாடு பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளனர். முறையான சிகிச்சை,

உணவுக்கட்டுப்பாடு ஆகியவற்றின் மூலம் பிணியாளர்களைக் குணப்படுத்தியுள்ளனர்.

மனித உடலில் ஏற்படும் பிணிகளுக்கு மருத்துவம், மருந்துகள், பயிற்சிகள் ஆகிய சிகிச்சை முறைகளையும், மனத்தில் ஏற்படும் நோய்களுக்குப் பராமரிப்பு, அரவணைப்பு, உணவுக் கட்டுப்பாடு ஆகிய சிகிச்சை முறைகளையும் சித்தர்கள் தங்களின் பாடல்களில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

சித்த மருத்துவத்தில், பிணியாளர்களை உட்கொள்ளச் சொல்லும் மருந்துகளை ‘அக மருத்துவம்’ என்றும், வெளியில் பயன்படுத்தக் கூடிய மருந்துகள் மற்றும் புறமருத்துவ முறைகளைப் ‘புறமருத்துவம்’ என்றும் குறிப்பிட்டிருப்பதை அறிய முடிகின்றது. புறமருத்துவ முறைகளில் ஒன்றான ‘நுட்பச் சிகிச்சை’ என்னும் அறுவை மருத்துவ முறைக் கையாளப்பட்டு, அதற்கான, அறுவைச் சிகிச்சைக் கருவிகளையும், முறைகளையும் பற்றிச் சித்தர்கள் அறிந்திருந்ததை அவர்கள் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

சித்த மருத்துவ அறுவைச் சிகிச்சை முறையில் கட்டி, கண்டமாலை, கண்நோய்கள், கல்லடைப்பு, சதையடைப்பு போன்ற பிணிகளுக்குச் சிகிச்சை முறைகளைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். இவற்றில் காரம் வைத்தல், சுடுதல், கீறல், அட்டை பூச்சி கொண்டு சிகிச்சை செய்தல், குருதி வாங்குதல் போன்ற சிகிச்சை முறைகளால் குணப்படுத்தியுள்ளதையும் சித்தர்கள் பாடல்களின் மூலம் அறிய முடிகின்றது.

உடல் பிணிபடாமல் காக்கவும், பிணிபட்ட உடலை மீட்கவும் எப்பொழுதும் இளமையுடன் இருக்கவும் உட்கொள்ளும் மருந்தே காயகற்ப

மருந்தாகும். இதனைக் கலப்புக் கற்ப மருந்துகள், தனிக் கற்ப மருந்துகள் என்று சித்தர்கள் பிரித்துள்ளனர். இவற்றைத் திரிமூலிக் கற்பம், பஞ்ச மூலிக் கற்பம், அட்ட மூலிக் கற்பம் என்று மேலும் பகுத்துக் காயகற்ப மருத்துவ முறையை வகைப்படுத்தியுள்ளனர்.

சித்தர்கள் மருந்தை உடல் பிணி போக்கவும், மனப்பிணி போக்கவும், மனநோய் போக்கவும், உடல் நலம் காக்கவும், மனநலம் காக்கவும் உரிய பொருளாக வகைப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

சித்தர்கள் மருந்து மூலப் பொருள்களில் பஞ்ச பூதங்களின் தன்மைகளை உணர்ந்திருந்தனர். இதனை முறையாக வகைப்படுத்தி, மருந்து மூலப் பொருள்கள் ஒன்றுடன் ஒன்று கலந்தால் உண்டாகும் இறுகல், நீர்த்தல், வெடித்தல், தீப்பற்றல், புதைந்து மறைதல் போன்ற செயல்பாடுகளையும் அறிந்திருந்தனர்.

மருந்தின் மூலப் பொருட்கள் ஒவ்வொன்றும் பொருள், பண்பு, செயல், பொதுத்தன்மை, இன்பம், துன்பம், சிறப்பு என்னும் ஏழு குணங்களைப் பெற்றுள்ளன. மூலிகைத் தாவரங்கள், தாதுப்பொருள்கள், சீவப் பொருள்கள் என்னும் மூன்று பிரிவுக்குள் சித்தர்கள் அவற்றை அடக்கிக் கூறியுள்ளனர்.

மூலிகைத் தாவரங்களின் குணங்கள் மற்றும் செயல்களையும் அவற்றில் பெயர்வழி மூலிகைக் குடும்பத்தையும், அதன் வடிவமைப்பையும், மூலிகைத் தாவரங்களின் வகைகளையும் அம்மூலிகைகளின் வடிவம், குணம், செயல் ஆகியவற்றையும் முறைப்படுத்தியுள்ளனர். இனிப்பு, நுரைப்பி, எண்ணெய், ரோசனம், பிசின், துவர்ப்பி எனவும் அவற்றை வகைப்படுத்தியுள்ளனர். மூலிகைகளில்

எந்தபாகம் மருத்துவ குணம் கொண்டது என்பதையும் சித்தர்கள் பகுத்துள்ளதை அறிய முடிகின்றது.

சித்த மருத்துவ மூலப் பொருள்களை, மூலிகைகள், உலோகம், பாடணம், உப்பு, உபரசம் என்று பிரித்துள்ளனர். இவற்றைச் செயல்களின் அடிப்படையில் பஞ்ச பூதங்களின் வழி ஆண் பொருள்களாகவும் பெண் பொருள்களாகவும் முறைப்படுத்தியுள்ளனர்.

மருந்து மூலப் பொருட்களை சுவையின் வழி உப்புச் சுவை, புளிப்புச் சுவை, காரப் பொருள்கள், சாரப் பொருள்கள் என்று வகைப்படுத்தி, அந்தந்த மூலப் பொருள்களுக்கான மருத்துவ தன்மைகளையும் சித்தர்கள் பகுத்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

மருந்து மூலப் பொருள்களை உரிய காலத்தில் சேகரித்து அவற்றின் நச்சுத்தன்மைகளைப் போக்கி, அவற்றை உரிய முறைப்படி மருந்தாக்கிப் பயன்படுத்தியுள்ளனர். இந்த மருந்து மூலப் பொருள்களின் நச்சுத்தன்மைகளை மூலிகை நச்சு, உலோக நச்சு, பாடாண நச்சு, உப்புநச்சு, உபரச நச்சு எனச் சித்தர்கள் பகுத்துள்ளனர்.

மருந்து மூலப் பொருள்களான காரம், வீரம், உப்பு, இரசம், சாரம், துருசு, கெந்தி ஆகியவற்றைக் கொண்டு மருந்து செய்வதற்கான சூத்திர முறைகளைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். ஏக மூலிகைப் பிரயோகம், மாரணப் பிரயோகம், திராவகப் பிரயோகம், செயநீர் பிரயோகம், முப்புச் சுண்ணப்பிரயோகம் போன்றவை மருந்து செய்வதற்கான அடிப்படைச் செயல்களாக உள்ளதையும் இவர்கள் உணர்ந்திருந்தனர்.

மருந்து தயாரிக்கத் தேவையான கருவிகளையும் இதரப் பொருள்களையும் அவற்றைத் தயாரிக்கும் முறைகளையும் அறிந்து வகுத்ததுடன், மருந்தின் தன்மைக்கேற்பக் குறிப்பிட்ட மாதங்களில் குறிப்பிட்ட மருந்துகளைச் செய்து முடித்து, அவற்றைப் பாதுகாக்கும் முறைகளையும் சித்தர்கள் அறிந்துப் பின்பற்றினர்.

தொன்மை வாய்ந்தக் கலையானச் சித்த மருத்துவம், சித்தர்கள் மெய்வழிக் கண்டதாகும். இவை பஞ்சபூத அடிப்படை உண்மைகளின் தனித்தன்மைகளைக் கொண்ட மருத்துவ முறையாகும். காலங்காலமாகச் சித்த மருத்துவக் குடும்பங்கள் கையாண்டு வரும் தனித்தன்மை வாய்ந்த இம்மருத்துவம் இன்றும் அழியாது நிலைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. காரணம் சித்த மருத்துவத்தைக் கையாண்டு வரும் பாரம்பரியக் குடும்பங்களின் உணர்வும் இதைப்பாதுகாத்து அடுத்துவரும் தலைமுறையினருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்ற ஆழ்ந்த எண்ணமும் தான் சித்த மருத்துவம் இன்றும் தமிழகத்தில் அழியாது நிலை பெற்றுள்ளது எனலாம்.

காலங்காலமாகச் சித்தமருத்துவம் செய்து வரும் குடும்பங்களிடம் உள்ளச் சிறப்பு மருத்துவ முறைகளையும் பழைய ஓலைச் சுவடிகளையும் நுணுக்கமாக மருந்து செய்யும் முறைகளையும் அரசாங்கம் சேகரித்து அவற்றை ஆய்வு செய்து முறைப்படுத்தி மக்களுக்கு வழங்கினால், ஆரோக்கியமான சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்க முடியும்.

மேலாய்வுக் களன்கள்

சித்த மருத்துவம் குறித்து எதிர்காலத்தில் ஆய்வு செய்ய விரும்புவோர் கீழ்க்காணும் தலைப்புகளில் ஆய்வு செய்ய இடமிருக்கிறது.

- ✍ தமிழில் சித்த மருத்துவ வரலாறு
- ✍ தமிழில் சித்த மருத்துவ முறையும் இக்கால மருத்துவ முறையும் – ஓர் ஒப்பீடு.
- ✍ தமிழில் சித்த மருத்துவச் சிகிச்சை முறைகளும் பயன்களும்
- ✍ தமிழில் சித்த மருத்துவமும் வர்ம மருத்துவமும் – ஓர் ஆய்வு
- ✍ சித்த மருத்துவப் பிணிகளும் சிகிச்சை முறைகளும்
- ✍ சித்தர் பாடல்களில் சித்த மருத்துவம் – ஓர் ஆய்வு
- ✍ சித்த மருத்துவத்தில் வேதகமுறைகள் – ஓர் ஆய்வு.

துணைநூற்பட்டியல்

1. அமிர்தலிங்கம் பிள்ளை, டி.எஸ், (தொ.ஆ.), அகத்தியர் நயன விதி ஐந்நூறு மூலமும் உரையும், நாகமுனிவர் நயனவிதிஇருநூறு, ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலை, 1936, சென்னை.

2. அரங்கராசன், ச. (பதி.ஆ.), 4448 வியாதிகள்(ஒருவிளக்கம்), தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூல் நிலையம், இரண்டாம் பதிப்பு, ஆகஸ்ட், 1990, தஞ்சை.

3. இரத்தின நாயகர் அன் சன்ஸ், பி. (பதி.ஆ.), ஆத்மராட்சாமிருதம் எனும் வைத்திய சார சங்கிரகம், பி.இரத்தின நாயகர் அன் சன்ஸ், வெளியீடு, (ஆ.இ.), சென்னை.

4. இரத்தின நாயகர் அன் சன்ஸ், பி. (பதி.ஆ.), திருமூலர் வைத்தியம், (கருக்கிடை - 600), பி.இரத்தின நாயகர் அன் சன்ஸ், வெளியீடு (ஆ.இ), சென்னை - 79.

5. இரத்தின நாயகர் அன் சன்ஸ், பி. (பதி.ஆ.), போகர் வயித்தியம் - 700, பி.இரத்தின நாயகர் அன் சன்ஸ், வெளியீடு, (ஆ.இ), சென்னை.

6. இராமநாதபிள்ளை மற்றும் பிறர், (உ.ஆ)., திருமந்திரம் (முதல் பாகம்), தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், முதற்பதிப்பு, ஜூலை - 1962, திருநெல்வேலி.

7. இராமநாதபிள்ளை மற்றும் பிறர் (உ.ஆ)., திருமந்திரம்(இரண்டாம் பாகம்), தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மறுபதிப்பு, பிப்ரவரி, 1963, திருநெல்வேலி.

8. இராமச்சந்திரன், எஸ்.பி. (பதி.ஆ)., அகத்தியர் 12000 என்னும் பெருநூல் காவியம், தாமரை நூலகம், இரண்டாம் பதிப்பு, ஆகஸ்ட், 1996, சென்னை.

9. இராமச்சந்திரன், எஸ்.பி. (பதி.ஆ)., கருவூரார் வாத காவியம் 700, தாமரை நூலகம், முதற்பதிப்பு, செப்டம்பர், 1992. சென்னை.

10. இராமச்சந்திரன், எஸ்.பி. (பதி.ஆ)., கற்பநூல் திரட்டு,
தாமரை நூலகம்,
முதற்பதிப்பு, செப்டம்பர், 1993,
சென்னை.

11. இராமச்சந்திரன், எஸ்.பி. (பதி.ஆ)., காகபுசுண்டர் பெருநூல்
காவியம் 1000,
தாமரை நூலகம்,
முதற்பதிப்பு, ஆகஸ்ட், 1999,
சென்னை.

12. இராமச்சந்திரன், எஸ்.பி. (பதி.ஆ)., சித்தர்கள் வரலாறு,
தாமரை நூலகம்,
முதற்பதிப்பு, செப்டம்பர், 1999,
சென்னை.

13. இராமச்சந்திரன், எஸ்.பி. (பதி.ஆ)., கொங்கணவர் வாதகாவியம்
3000,
(முதற்காண்டம்)
தாமரை நூலகம்,
முதற்பதிப்பு, டிசம்பர், 1992.
சென்னை.

14. இராமச்சந்திரன், எஸ்.பி. (பதி.ஆ)., கொங்கணவர் வாதகாவியம்
3000,
(மூன்றாம் காண்டம்),
தாமரை நூலகம்,
(ஆ.இ),
சென்னை.

15. இராசாமணி, சூ. (தொ.ஆ)., அகத்தியர் ஒடிவுமுறிவு சாரி நிகண்டகராதி-1200, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, முதற்பதிப்பு, டிசம்பர், 1991, சென்னை.

16. இராசாமணி, எஸ்., வர்மபரிகாரமும் சிகிச்சை முறைகளும், தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம், முதற்பதிப்பு, மார்ச், 1988, சென்னை.

17. இராமநாதன், அரு., சித்தர் பாடல்கள், பிரேமா பதிப்பகம், (ஆ.இ), சென்னை.

18. உத்தமராயன், க.சு., சித்த மருத்துவாங்கச் சுருக்கம், தமிழ்நாடு சித்த அறிவியல் மேம்பாட்டுக்குழு, சென்னை, 1983.

19. உத்தமராயன், க.சு., தோற்ற கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை, 1992.

20. கந்தசாமி முதலியார், (தொ.ஆ)., பதினெண் சித்தர்கள் நாடிசாஸ்திரம், பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் வெளியீடு, (ஆ.இ), சென்னை.

21. கந்தசாமி முதலியார், (தொ.ஆ)., பாலவாகடத் திரட்டு 1200, பார்த்த சாரதி நாயுடு சன்ஸ் வெளியீடு, 1934, சென்னை.

22. கந்தசாமி முதலியார், (தொ.ஆ)., போகர் ஏழாயிரம், பார்த்த சாரதி நாயுடு சன்ஸ் வெளியீடு, 1934, சென்னை.

23. கந்தசாமி முதலியார், (தொ.ஆ)., வைத்திய மூலிகையகராதி, பி.இரத்தின நாயகர் அன் சன்ஸ் வெளியீடு, (ஆ.இ), சென்னை.

24. கந்தசாமி முதலியார், (தொ.ஆ)., யூகிமுனி வைத்திய சிந்தாமணி -800, பி.இரத்தின நாயகர் அன் சன்ஸ் வெளியீடு, 1969, சென்னை.

25. கண்ணையா யோகி, ஜி.,	ஆன்மிகப் படைப்புகள்-5, ஆத்மஞான யோகசபா, நவம்பர், 2004, சென்னை.
26. கிருட்டிணன், க.ரா.,	மருந்துகளும் பயனும், ஏஷியன் அச்சகம், முதற்பதிப்பு, 1977, சென்னை.
27. கிருஷ்ணப்ப செட்டியார், (பதி.ஆ).,	பதார்த்த குண வைத்திய மலையகராதி, சகலகலா நிலைய அச்சுக் கூடம், 1887, சென்னை.
28. குப்புசாமி நாயுடு, (தொ.ஆ).,	புலிப்பாணி முனிவர் வைத்தியம் 500, இராம குருசாமி கோனார் வெளியீடு, 1915, மதுரை.
29. குருசிரோன்மணி, பொன்.,	பாலவாகடம், (குழந்தை மருத்துவம்) தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்துறை, மூன்றாம்பதிப்பு, 1992, சென்னை,

30. கோவேந்தன், த., — சைவமும் வைணவமும்,
சங்கர் பதிப்பகம்,
முதற்பதிப்பு,
டிசம்பர், 2000,
சென்னை.

31. சண்முகவேலன், ம., — சித்த மருத்துவ நோய்நாடல்
நோய்முதல் நாடல் திரட்டு,
தமிழ்நாடு சித்த மருத்துவ
வாரியம்,
1987,
சென்னை.

32. சாமி, சி.பி, (பதி.ஆ)., — அகத்தியர் குணவாகடம்,
மலையப்ப சாமி வைத்திய
சாலை,
1973,
பழநி.

33. சாமிநாதையர், உ.வே., — சிறுபாணாற்றுப்படை,
உ.வே.சா. நூல் நிலையம்,
1918,
சென்னை.

34. சாமிநாதையர், உ.வே., — சீவக சிந்தாமணி
உ.வே.சா. நூல் நிலையம்,
பிரசிடென்சி பிரிண்டர்ஸ்,
(ஆ.இ),
சென்னை.

35. சாமிநாதையர், உ.வே., பத்துப்பாட்டு,
உ.வே.சா. நூல் நிலையம்,
(ஆ.இ),
சென்னை.

36. சாமிநாதையர், உ.வே., புறநானூறு,
உ.வே.சா. நூல் நிலையம்,
இரண்டாம் பதிப்பு,
1993,
சென்னை.

37. சாம்பசிவம் பிள்ளை, டி.வி டி.வி.சாம்பசிவம் பிள்ளை
அகராதி,
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதித் துறை,
இரண்டாம் பதிப்பு,
1992,
சென்னை.

38. சிகாமணி முதலியார், ந.தெ, (பதி.ஆ)., அகத்தியர் பரிபூரணம் 1200,
சிகாமணி முதலியார் வெளியீடு,
முதற்பதிப்பு,
ஆகஸ்ட், 1986,
செய்யாறு.

39. சிங்காரவேலன், சொ., தொல்காப்பியம் (எளிய உரை),
(எழுத்து, சொல், பொருள்),
கழக வெளியீடு,
முதற்பதிப்பு,
செப்டம்பர், 1998,
சென்னை.

40. சிதம்பரனார், சாமி., சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம், இலக்கிய நிலையம், நான்காம் பதிப்பு, 1974, சென்னை.

41. சிவப்பிரகாச சுவாமிகள்., குறுந்தொகை, ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் வெளியீடு, 1915, வேலூர்.

42. சிதம்பரதானு பிள்ளை, எஸ். (பதி.ஆ)., நந்தீசர் அகால மரண நூல் சித்தர் மகுட பிரசுரம், இரண்டாம் பதிப்பு, 1968, சென்னை.

43. சுவாமி ஈசுவரப்பட்டா., சத்தியத்தின் சக்தி நிலை, சத்தியத்தின் சக்தி நிலைச் சங்கம் வெளியீடு, (ஆ.இ) ஈரோடு.

44. சூரியன். பாண்டியன், கா., மறைக்கப்பட்ட மரபுச் செல்வங்கள், சித்தார்த் பதிப்பகம், முதற்பதிப்பு, டிசம்பர், 1988, சென்னை.

45. சேதுரகுநாதன், நா.(உ.ஆ)., யூகி பிடிவாதம் 1000, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1982, மதுரை.

46. சோமசுந்தரம், எஸ்., மருத்துவ தாவரவியல், இளங்கோவன் பதிப்பகம், முதற்பதிப்பு, 1997, பாளையங்கோட்டை.

47. சௌரிராசன், மு., மச்சமுனி நாயனார் 800, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூல் நிலையம், இரண்டாம் பதிப்பு, நவம்பர், 1991, தஞ்சை.

48. தியாகராசன், ஆர்., குணபாடம் (தாது சீவ வகுப்பு), இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, நான்காம் பதிப்பு, 1992, சென்னை.

49. தியாகராசன், ஆர்., சித்த மருத்துவம் சிறப்பு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, இரண்டாம் பதிப்பு, 1995 சென்னை.

50. தியாகராசன், ஆர்., — போகர் அருளிச் செய்த வரும சூத்திரம் 131, சித்த வைத்தியச் சங்கம், தாராபுரம், 1975.

51. தியாகராசன், இரா., மற்றும் பிறர், (தொ.ஆ)., — தேரையர் மருத்துப் பாரதம், (மூலமும் உரையும்), பண்டித எஸ்.எஸ் ஆனந்தம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், இரண்டாம் பதிப்பு, 1975, சென்னை-17.

52. தியாகராசன், இரா., மற்றும் பிறர் (தொ.ஆ)., — தேரையர் தரு, பண்டித எஸ்.எஸ். ஆனந்தம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், 1997, சென்னை.

53. தியாகராசன். இரா., மற்றும் பிறர் (தொ.ஆ)., — அங்காதிபாதம் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நூல் வெளியீட்டுக் குழு, முதற்பதிப்பு, 1976, பழநி.

54. தியாகராசன், இரா., மற்றும் பிறர் (தொ.ஆ).,
எழுநூற்றொகுதி,
பழநி அருள்மிகு
தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில் நூல்
வெளியீட்டுக் குழு,
(ஆ.இ.),
பழநி.

55. தியாகராசன், இரா., மற்றும் பிறர் (தொ.ஆ).,
தேரையர் யமக வெண்பா
(முதல்பாகம்)
பழநி அருள்மிகு
தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில் நூல்
வெளியீட்டுக் குழு,
முதற்பதிப்பு, 1976,
பழநி.

56. தியாகராசன், இரா., மற்றும் பிறர் (தொ.ஆ).,
வர்மவிதி
பழநி அருள்மிகு
தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில் நூல்
வெளியீட்டுக் குழு,
முதற்பதிப்பு, 1976,
பழநி.

57. தியாகராசன், இரா., மற்றும் பிறர் (தொ.ஆ).,
வைத்தியத் திருப்புகழ்
மருத்துவத் தனிப்பாடல்கள்,
பழநி அருள்மிகு
தண்டாயுதபானி சுவாமி
திருக்கோயில் நூல்
வெளியீட்டுக் குழு,
இரண்டாம் பதிப்பு, 1976,
பழநி.

58. திருநாவுக்கரசு, க.சு., சிந்துவெளி தரும் ஒளி,
வள்ளுவர் பதிப்பகம்,
1971,
புதுக்கோட்டை.

59. தேவநாதன் வி.என், (பதி.ஆ)., நாலாயிரத் திவ்விய பிரபந்தம்
வெளியீடு விவரம் இல்லை,
1971,
சென்னை,

60. நச்சினார்க்கினியர், (உ.ஆ)., கலித்தொகை,
கழக வெளியீடு,
மறுபதிப்பு,
ஆகஸ்ட், 1984,
சென்னை.

61. நாராயண வேலுப்பிள்ளை, எம்., ஔவை குறள்,
முல்லை நிலையம்,
முதற்பதிப்பு,
ஆகஸ்ட், 1996,
சென்னை.

62. நாராயண வேலுப்பிள்ளை, எம்., பதிற்றுப் பத்து (தெளிவுரை),
நியுசெஞ்சுரி புக் ஹவுஸ்,
முதற்பதிப்பு,
நவம்பர், 1994,
சென்னை.

63. பலராமய்யா, வி., முப்பூ குரு, அருள்சோதி பதிப்பகம், நான்காம் பதிப்பு, 1981, சென்னை.

64. பலராமய்யா, வி., வாத வைத்தியத்துக்காதி (முதற்பாகம்), அருள்சோதி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, செப்டம்பர், 1980, சென்னை.

65. பூவண்ணன்., கம்பராமாயணம், வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர் வணிகவளாகம், தியாகராய நகர், சென்னை-17.

66. மரியஜோசப், ஆ. (உ.ஆ), வர்மக் கண்ணாடி - 500, மூலமும் உரையும், எ.வி.எம். முத்து வெளியீடு, முதற்பதிப்பு, 2000, மணலிக்கரை.

67. மாணிக்கம், அ., திருக்குறள் தெளிவுரை, தென்றல் பதிப்பகம், மறுபதிப்பு, ஏப்ரல், 2002, சிதம்பரம்.

68. மாணிக்கம், அ., ஏலாதி,
வர்த்தமானன் பதிப்பகம்,
ஏ.ஆர்.ஆர்.வணிக வளாகம்,
தியாகராய நகர்,
சென்னை-17.

69. முகமது இக்பால், ப.அ., சட்டம் சார்ந்த
மருத்துவமும் நஞ்சு
மருத்துவமும்,
தமிழ்நாடு சித்த மருத்துவ
வாரியம்,
முதற்பதிப்பு, 1987,
சென்னை.

70. முருகேச முதலியார், க.ச., பொருட்பண்பு நூல்
(முதல்பாகம் -
மூலிகை வகுப்பு)
தமிழ்நாடு சித்த மருத்துவ
வாரியம்,
நான்காம் பதிப்பு, 1988,
சென்னை.

71. முருகேசன், எம்., மூலிகை வகுப்பு,
முருகேசன் வெளியீடு,
இங்கிலீஸ் சர்ச் ரோடு,
பாளையங்கோட்டை.

72. முனிசாமி முதலியார், (தொ.ஆ)., கைமுறைக் குழந்தைகள்
வைத்தியம்,
கே.ஏ. மதுரை முதலியார்
வெளியீடு,
சண்முகானந்தா புத்தகசாலை,
மூன்றாம்பதிப்பு, 1962,
சென்னை.

73. முனிசாமி முதலியார், (தொ.ஆ)., நோயில்லா வாழ்வு, பி.இரத்தின நாயகர் அன் சன்ஸ் வெளியீடு, 1998, சென்னை.

74. மைக்கேல் டி. (உ.ஆ.)., அகத்தியர் கிரிச நிதானநூல், துளசி பதிப்பகம், முதற்பதிப்பு, ஜூலை, 2002, உதய மார்த்தாண்டம்.

75. வடிவேல் முதலியார், மா., (உ.ஆ)., ஞானவெட்டியான் பி.இரத்தின நாயகர் அன் சன்ஸ் வெளியீடு, 1993, சென்னை.

76. வேணுகோபால், பு.மு., மகளிர் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, மூன்றாம் பதிப்பு, 1995, சென்னை.

77. வேலுச்சாமி, ஆர்.எம்.கே (உ.ஆ)., சட்டமுனி வாத காவியம், தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம், (ஆ.இ), சென்னை.

78. வேங்கடராமன், ஹச். (பதி.ஆ)., நற்றிணை, டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், ஆறாம் பதிப்பு, 1997, சென்னை.

79. ...., தேரையர் சேகரப்பா (மூலமும் உரையும்), மைய ஆயுர்வேத சித்த ஆராய்ச்சிக் கழகம், முதற்பதிப்பு, 1979, புதுடில்லி-24.

இதழ்

1. மணியன், எஸ்.எஸ்., ஞானமணி மாத இதழ், 285, தேசிய நெடுஞ்சாலை, மே, 2002, கோவை.

ஆய்வேடுகள்

1. நிரஞ்சனாதேவி, இரா., தென்னிந்திய மருத்துவ வரலாறு, முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னை பல்கலைக்கழகம், 2004.

2. நெடுஞ்செழியன், ப., தமிழ் மருத்துவ நோக்கில் மரம், செடி, கொடிகள், முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னை பல்கலைக்கழகம், 1992.

3. வெங்கடேசன், க., தமிழ் இலக்கியத்தில் சித்தமருத்துவம், முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னை பல்கலைக்கழகம், 1998.

4. வேதாச்சலம், வி., இலக்கியங்கள் காட்டும் பாண்டிய நாட்டு சமுதாயமும், பண்பாடும், முனைவர் பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1993.

ஆங்கில நூல்கள்

79. அய்ய்ஹய்க்ஹ சஹழ்ஹஷ்ஹய்ஹ ஐஹ்ங்ழ். அ. – அ சர்றங் ர்ய் ஹய் உம்க்ஷழ்ஹர்ப்ர்ஞ்ண்ஸ்ரீஹப், இர்ய்ஸ்ரீங்ல்ற் ர்ச் அய்ஸ்ரீண்ங்ய்ற் ஐய்க்ண்ஹய் ஙங்க்ண்ஸ்ரீண்ய்ங், ட.51. பட்ங் ஙஹக்ழ்ஹள் ஙங்க்ண்ஸ்ரீஹப் ஒர்ன்ழ்ய்ஹப் – 10, அல்ழ்ண்ப், 1995, ஙஹக்ழ்ஹள்.

80. நட்ஹய்ம்ன்ஞ்ஹஸ்ங்ப்ஹய் – நண்க்க்ட்ஹழ்’ள் நஸ்ரீண்ங்ய்ஸ்ரீங் ர்ச் கர்ய்ஞ்ங்ஸ்ண்ற்ஹ் ஹய்க் ஓஹப்ல்ஹ ஙங்க்ண்ஸ்ரீண்ய்ங் ர்ச் ஐய்க்ண்ஹ, ஈண்ழ்ங்ஸ்ரீற்ர்ழ் ர்ச் ஐய்க்ண்ஹய் ஙங்க்ண்ஸ்ரீண்ய்ங் ஹய்க் ஏர்ம்ங்ர்ல்ஹற்ட்ஹ், நங்ஸ்ரீர்ய்க் உக்ண்ற்ண்ர்ய், 1992, இட்ங்ய்ய்ஹண்.

81. நன்க்ஷழ்ஹம்ஹய்ண்ஹய். ந.ய. & ஙஹக்ட்ஹஸ்ஹய். ய.த. (ங்க்.) – ஏங்ழ்ண்ற்ஹஞ்ங் ர்ச் பட்ங் பஹம்ண்ப்ள் நண்க்க்ட்ஹ

ஙங்க்ண்ஞ்ண்ய்ங்,
ஐய்ற்ங்ழ்ய்ஹற்ண்ர்ய்ஹப்
ஐய்ள்ற்ண்ற்ன்ற்ங் ர்ச் பஹம்ண்ப்
நற்ன்க்ஹ்,
ஊண்ழ்ள்ற் உக்ண்ற்ண்ர்ய்,
ஙஹழ்ஞ்ட், 1983,
இட்ங்ய்ய்ஹண்.